வெளியீடு : 19-12-2003 Issued : 19-12-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 23, 2003 - தொகுதி 44 - எண் 1

**Wednesday the 23rd April, 2003 – Volume 44 – No. 1**


...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...ative Assembly Secretariat, Chennai - 600 009

.00] [Price Rs. 3.00

**23-4-2003**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Governor and Council of Ministers | ix-xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii-xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-38 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 16 மற்றும் 17) | 39-106 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| காஞ்சிபுரம் மாவட்டம், பழையசீவரம் கிராமம் அருகே மணல் கொள்ளையைத் தடுத்த வருவாய் ஆய்வாளர் கொல்லப்பட்டது | 107-119 |
| **3. உரிமை மீறல் பிரச்சினை—** | |
| (அ) 'இந்து' நாளிதழ்மீது | 120-121 |
| (ஆ) உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்மீது | 121-122 |
| **4. அறிவிப்புகள்—** | |
| (அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவைகள் மற்றும் மாநில நூலகக் குழுப் பேரவை உறுப்பினர்கள் தேர்வு | 122-123 |
| (ஆ) உறுப்பினர்களுக்கான கணினிப் பயிற்சி வகுப்பு நேரம் மாற்றம் | 191 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 5. | கவன ஈர்ப்பு— | |
| | செயற்கை வைரத்திற்கு பட்டை தீட்டும் தொழில் நலிந்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை | 123,125-127 |
| 6. | தகவல் கோரல்— | |
| | உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள் | 123 |
| 7. | அறிக்கைகள் அளித்தல்— | 127-128 |
| | (அ) பொதுக் கணக்குக் குழு | 127 |
| | (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 128 |
| | (இ) மனுக்கள் குழு | 128 |
| | (ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 128 |
| 8. | மானியக் கோரிக்கைகள் 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| | கோரிக்கை எண் 31 — தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 128-236 |
| | மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா | 138,139-140, 163,173,175, 178,179,191-230 |
| | திரு. கோவை தங்கம் | 138-145 |
| | திரு. கே.எஸ். தென்னரசு | 145-150 |
| | திரு. தி. வேல் முருகன் | 151-165 |
| | திரு. எம். சக்திவேல் முருகன் | 165-171 |
| | *திரு. கே.சி. கருணாகரன் | 171-183 |
| | *திரு. ஏ.எஸ். கண்ணன் | 183-186 |
| | திரு. ஜெக. வீரபாண்டியன் | 187-190 |
| 9. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 236-236 |



## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | .. | **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள, உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன். |
| 2. பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள, நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம, கிராமதானம் மற்றும் கடவுச் ச்ட்டுகள். |
| 3. நிதி அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல். |
| 4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல். |

D
V27I,3' P03
P03" 44'1

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

7. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

10. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
185894
சென்னை-600 008
நூலகம்

11. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

12. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

13. மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

14. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** வணிக வரிகள்.

15. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:** கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

16. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதரன்:
கால்நடை பராமரிப்பு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:
குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:
வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

20. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:
வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

21. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:
பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.



23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:
கைத்தறி மற்றும் துணித் தொழில்.

24. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:
மீன்வளம்.

25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர்:
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including Minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

| | |
|---|---|
| 6. Minister for Health and Education | .. The Hon. Thiru S. Semmalai: Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |
| 7. Minister for Backward Classes | .. The Hon. Thiru A. Papasundaram: Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |
| 8. Minister for Labour | .. The Hon. Thiru A. Anwer Rhazza: Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 9. Minister for Agriculture | .. The Hon. Thiru R. Jeevanantham: Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 10. Minister for Social Welfare | .. The Hon. Tmt. B. Valarmathi: Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 11. Minister for Adi-Dravidar Welfare | .. The Hon. Thiru C. Karuppasamy: Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |



| | |
|---|---|
| 12. Minister for Transport | .. The Hon. Thiru R. Viswanathan: Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| 13. Minister for Electricity and Industries | .. The Hon. Thiru Nainar Nagenthran: Electricity, Non-Conventional Energy Development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |
| 14. Minister for Commercial Taxes | .. The Hon. Thiru Se.Ma. Velusamy: Commercial Taxes. |
| 15. Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection | .. The Hon. Thiru P. Mohan: Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics. |
| 16. Minister for Local Administration | .. The Hon. Thiru M.C. Sampath: Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| 17. Minister for Animal Husbandry | .. The Hon. Thiru P.V. Damodaran: Animal Husbandry. |
| 18. Minister for Rural Industries | .. The Hon. Thiru R. Vadivel: Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |
| 19. Minister for Forests and Environment | .. The Hon. Thiru R. Vaithilingam: Forests & Environment and Pollution Control. |

| | | |
|---|---|---|
| **20. Minister for Housing and Urban Development** | - | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| **21. Minister for Dairy Development** | - | **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |
| **22. Minister for Information and Publicity** | - | **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control. |
| **23. Minister for Handlooms and Textiles** | - | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| **24. Minister for Fisheries** | - | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| **25. Minister for Tourism** | - | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள் *

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

* 28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன்,<br>பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. க. சம்பத்ராஜன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய்,<br>பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம்,<br>பி.எஸ்.சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம்,<br>எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ்,<br>பி.எஸ்.சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன்,<br>எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர்,<br>பி.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு,<br>எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன்,<br>எம்.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன்,<br>பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி,<br>எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம்,<br>எம்.ஏ., பி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி,<br>பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. [illegible]த்ராமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர், போரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். (விடுப்பு) | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீராராகவள், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் |



**பேரவை உறுப்பினர்கள்**

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. | பொணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

| | | |
|---|---|---|
| 21. | ஆறுமுகம், திரு. த. | - திருவொற்றியூர் |
| 22. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 23. | ஆஸ்டின், திரு. | - நாகர்கோவில் |
| 24. | இரவிராஜ், திரு. கோ. | - திருத்தணி |
| 25. | இராசேந்திரன், திரு. சி. | - திருவோணம் |
| 26. | இராசேந்திரன், திரு. சோ. | - கோவில்பட்டி |
| 27. | இராமசாமி, திரு. கே.ஆர். | - திருவாடனை |
| 28. | இராமச்சந்திரன், திரு. எஸ். | - கலசப்பாக்கம் |
| 29. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | - கம்பம் |
| 30. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | - சாத்தூர் |
| 31. | இராமு, திரு. ந. | - உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 32. | இராம் பிரபு, திரு. இரா. | - பரமக்குடி (செ.வ.) |
| 33. | இராஜசேகர், திரு. மா. | - ராஜபாளையம் (செ.வ.) |
| 34. | இராஜரெத்தினம், திரு. ப. | - பெரம்பலூர் (செ.வ.) |
| 35. | இராஜா, திரு. டி.கே. | - திருப்பத்தூர் |
| 36. | இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | - பத்மநாபபுரம் |
| 37. | இராஜேந்திரன், திரு. பி.ஜி. | - ஆலங்குளம் |
| 38. | இலட்சுமணன், திரு. கே.என். | - மயிலாப்பூர் |
| 39. | இளவழகன், திரு. ப. | - அரியலூர் |
| 40. | இளையகண்ணு, திரு. கா.தி. | - ஏற்காடு (ஆ.வா.) |
| 41. | இன்பத் தமிழன், திரு. இரா.தா. | - ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 42. | ஈஸ்வரன், திரு. இரா. | - வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 43. | உசேன், திரு. எஸ்.ஏ.எம். | - திருவல்லிக்கேணி |
| 44. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | - தஞ்சாவூர் |
| 45. | உமாதேவன், திரு. கே.கே. | - திருப்பத்தூர் |
| 46. | உலகரட்சகன், திரு. பி.எஸ். | - செய்யாறு |
| 47. | ஏழுமலை, திரு. வெ. | - செஞ்சி |
| 48. | கணபதி, திரு. ந. | - வானூர் (செ.வ.) |
| 49. | கணேசன், திரு. ஐ. | - எடப்பாடி |
| 50. | கணேசன், திரு. ஆர்.டி. | - தேனி |
| 51. | கண்ணன், திரு. ஏ.எஸ். | - பொன்னேரி (செ.வ.) |
| 52. | கந்தசாமி, திரு. க.ரா. | - சத்தியமங்கலம் |
| 53. | கந்தசாமி, திரு. கா. | - குன்னூர் (செ.வ.) |
| 54. | கருணாகரன், திரு. கே.சி. | - சிங்காநல்லூர் |
| 55. | கருணாநிதி, திரு. மு. | - சேப்பாக்கம் |
| 56. | கருப்பசாமி, திரு. சொ. | - சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 57. | கருப்பணன், திரு. கே.சி. | - பவானி |
| 58. | கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. | - குளத்தூர் (செ.வ.) |
| 59. | கலாவதி, திருமதி கு. | - சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 60. | கனகதாரா, செல்வி சி. | - பேரணாம்பட்டு (செ.வ.) |
| 61. | கனிதா சம்பத், திருமதி எஸ். | - திருப்போரூர் (செ.வ.) |
| 62. | காசாம்பு பூமாலை, திருமதி | - சங்கராபுரம் |
| 63. | காமராஜ், திரு. மே.ப. | - தாரமங்கலம் |
| 64. | கார்த்தி, திரு. மு. | - சேலம்-2 |

65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம் (பே.த.)

66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)

67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)

68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்

69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்

70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்

71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்

72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்

73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி

74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)

75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்

76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்

77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்

79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி

80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்

81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை

82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி

83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை

84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)

85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை

86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்

87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்



88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)

89. சாமி, திரு. ஆர். - மேலூர்

90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்

91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்

92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)

93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை

94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்

95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்

96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி

97. சிவபெருமாள், திரு. அ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)

98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்

99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)

100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்

101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி

102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்

103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்

104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்

105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)

106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்

107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்

108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்

109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி

110. செல்வும், திரு. எஸ்.கே. - வீரபாண்டி

111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ், - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு



133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
136. நடராசன், திரு. வது. - இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி - போளூர்
140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-I
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செவ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு

155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்



177. மணி, திரு. டி. - விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. - கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. - தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. - சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
194. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு. பி.சி. - மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி

200. ராஜா, திரு. எச். - காரைக்குடி

201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்

202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்

203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்

204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்

205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு

206. ஷியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி

207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி

208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்

209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு

210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார் கோவில் (செ.வ.)

211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்

212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்

213. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்

214. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்

215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை

216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி

217. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை

218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி

219. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-I

220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்



221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்

222. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு

223. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி

224. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்

225. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு

226. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்

227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி

228. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்

230. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி

231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி

232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு

233. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி

234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு

235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 10, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034**

**2003 ஏப்ரல் 23, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. அ. அருணாசலம் அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு*
*உரிமை உடைத்தில் வுலகு."*

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.

### 1. வினாக்கள் – விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 281, திரு. கே.என். இலட்சுமணன். மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**281—**

**மதுபானக் கடை**

**•9790—திரு. கே.என். இலட்சுமணன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தடை செய்யப்பட்ட இடங்களுக்கு அருகே மதுபானக் கடைகள் திறந்துள்ளதை மூடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

[2003 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

உரிமம் பெற்றவர் அனுமதிக்கப்பட்ட பகுதிக்குப் பதிலாக தடை செய்யப்பட்ட பகுதியில் மதுபானக் கடை ஏதேனும் நடத்துவது குறித்து உரிமம் வழங்கும் அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் அவர் மீது குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன் இருக்கையில் இல்லை.

வினா எண் 282, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**282—**

**புறவழிச் சாலை**

***18367—திரு. கு. அன்பழகன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வத்தலகுண்டு நகருக்குள் நுழையும் சாலை நெருக்கடியாக உள்ளதால் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள புறவழிச் சாலை அமைக்கும் பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வத்தலகுண்டுக்கு புறவழிச் சாலை அமைப்பதன் நோக்கம் என்னவென்றால் மதுரையில் இருந்து



2003 ஏப்ரல் 23]

கொடைக்கானலுக்குச் செல்ல வேண்டிய வாகனங்கள், திண்டுக்கல்லில் இருந்து கொடைக்கானலுக்குச் செல்ல வேண்டிய வாகனங்கள், அதேபோன்று மதுரை, திண்டுக்கல், இந்தப் பகுதியில் இருந்து கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய வாகனங்கள் மொத்தம் சுமார் 6,000 வாகனங்கள் வத்தலகுண்டு பகுதியில் செல்கின்றன. சாலை மிகவும் குறுகலான சாலை. ஒரு வண்டி நின்றுவிட்டால் பின்னால் வருகின்ற வண்டிகள் 100, 200 வண்டிகள் நின்று விடுகின்றன. எனவே, அங்கே பயணிகளும். பொதுமக்களும் மிகவும் துன்பத்திற்கு உள்ளாகிறார்கள். சமூக விரோதிகள் அதைப் பயன்படுத்திக்கொண்டு பல்வேறு வகையான பிரச்சினைகளிலே ஈடுபடுகின்றார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கூட அந்தக் குறுகிய சாலை வழியாகத்தான் தினம் தினம் சென்றுகொண்டு வருகிறார்கள். அவர்களும் அந்தக் கஷ்டத்தை உணர்வார்கள். ஆகவே முக்கியத்துவம் கருதி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அதை இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டிலாவது பரிசீலனை செய்து, அந்தப் புறவழிச் சாலையை அமைத்துக் கொடுக்க முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வத்தலகுண்டு நகரில் அமைக்கப்பட உத்தேசிக்கப்படும் புற வழிச்சாலை, திண்டுக்கல், வத்தலகுண்டு, பெரியகுளம், தேனி, குமுளி, மாநிலச் சாலை எண் 36-ல் கிலோ மீட்டர் 31/0-ல் இருந்து பிரிந்து இதே சாலையில் கி.மீ. 35/0-ல் இணைவதாக அமையும். மேற்கண்ட சாலைகளைப் புறவழிச் சாலை வகைபாட்டுக்கு மேம்படுத்த தோராயமாக ரூ.40 லட்சம் தேவைப்படும். இப்புறவழிச் சாலையை அமைக்கும் பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இச்சாலையின் அவசியத்தை எடுத்துக் கூறியதால், இப்புறவழிச் சாலை பற்றி ஆய்வு செய்வதற்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அந்த புறவழிச் சாலையைக் கடந்து செல்லும்போது இதுவரை எந்த சமூக விரோத செயலும் நடைபெறவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2003 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம்.

**திரு. வ. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புறவழிச் சாலை என்கின்ற காரணத்தினால், அமைச்சரிடத்திலே நான் தெரிந்துகொள்ள விரும்புவது, திருமங்கலத்தில் இருந்து செக்கானூரணி, சோழவந்தான் தாண்டி தேசிய நெடுஞ்சாலையை இணைப்பதுபோல் ஒரு புறவழிச் சாலை திட்டம் இருந்தது. அதற்கு மத்திய அரசுகூட, அதை ஆய்வு செய்வதற்காக 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். அந்தத் திட்டம் எப்படி இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனி வினா எழுப்பினால் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாரவி அவர்கள்.

**திரு. ராதாரவி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த புறவழிச் சாலை என்பது பொதுவாக போக்குவரத்து நெரிசலுக்காக அமைக்கப்படும் சாலை. ஆனால் புறவழிச் சாலை அமைக்கப்பட்டவுடன் சிற்றுண்டிச் சாலைகள், கடைகள், பல கட்டடங்கள் வருவதனால் மேலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு மற்றொரு புறவழிச் சாலை ஏற்படுத்த வேண்டிய நிலை உள்ளது. அப்படியல்லாமல், எதிர்காலத்தில் புறவழிச் சாலைகள் அமைக்கப்படும்போது இப்படிப்பட்ட சிற்றுண்டிச் சாலைகள், கட்டடங்கள் கட்டக் கூடாது என்று சட்டங்கள் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் புதிதாக ஏற்படுத்தப்படவிருக்கின்ற புறவழிச் சாலையில் மீண்டும் அந்தப் பகுதியில் சிற்றுண்டிச் சாலைகள், உணவு விடுதிகள் அமைக்கக் கூடாது என்பது குறித்துப் பேசினார்கள். பொதுவாகவே,



2003 ஏப்ரல் 23]

போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையிலும், சாலை விதிகளைக் கடைப்பிடிக்கின்ற வகையிலும், அந்தப் பகுதியில் உணவு, சிற்றுண்டி விடுதிகள் ஏற்படுத்துவதற்கு எந்தத் தடையும் இதுவரை இல்லை. இந்த உணவு, சிற்றுண்டி விடுதிகள் அமைக்கப்படுகின்றபோது, போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக இருக்கின்ற பகுதி ஏதாவது ஒன்றை குறிப்பிட்டு அவர்கள் சொல்வார்களேயானால், அந்தப் பகுதியில் நெரிசல் இல்லாமல் இருப்பதற்கு, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 283, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

வினா எண் 284, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**284—**

**சட்டக் கல்லூரி பாட நூல்கள்**

**•13314–அ—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக சட்டக் கல்லூரிகளின் பாடநூல்களை தமிழில் அச்சிட்டு வெளியிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சட்ட நூல்களைத் தமிழில் வெளியிடுவதற்கான அனைத்து முயற்சிகளும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2003 ஏப்ரல் 23

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல பதிலை நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். முதலிலே அதற்காக என்னுடைய வரவேற்பை சொல்லிக்கொள்கிறேன். உலகத்தில் இருக்கக்கூடிய 3000 மொழிகளிலே தொன்மை வாய்ந்த மொழி தமிழ் மொழி. உலகத்திலே 3000 மொழிகளிலே தொன்மை வாய்ந்தவை 5 மொழிகள். அந்த ஐந்து மொழிகளிலே தொன்மை வாய்ந்த, இலக்கண, இலக்கியங்களைக் கொண்டது நம்முடைய தாய்மொழி, தமிழ்மொழி. அந்தத் தாய்மொழியிலேதான் பல்வேறு சட்டங்கள், இப்போதுகூட 60 சட்டங்கள் தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே நம்முடைய சட்டக் கல்லூரி நூல்கள் தமிழிலே இருப்பது பொருத்தமாக இருக்கும். இன்று பாமரர் முதல் படித்தவர்கள் வரையிலே சட்ட நுணுக்கங்களை அறிந்து கொள்வதற்கு குறிப்பாக நீதிமன்றங்களுடைய தீர்ப்புகளை அறிந்து கொள்வதற்கு சட்ட அறிவினைப் பெறுவதற்கு, தமிழ்மொழி தாய்மொழி மிக முக்கியமாக இருக்கின்ற காரணத்தாலேதான் இப்போது 60 சட்டங்களைத் தமிழிலே தமிழாக்கம் செய்ததைப்போல நம்முடைய தமிழக அரசு இந்தப் பாடநூல்களையெல்லாம் தமிழிலே தமிழாக்கம் செய்து வெளியிட வேண்டுமென்ற அவசிய அத்தியாவசியத் தேவையைக் கருதி தமிழிலே கொண்டு வருவதற்கு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே மூத்த தமிழ்க்குடி தோன்றிற்று என்று சொல்வார்கள். அதேபோன்று, 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்கின்ற பாரதியார் பாடலை நான் இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எங்கும், எதிலும், தமிழ் ஒலிக்க வேண்டும் என்கின்ற உயர்ந்த மனப்பான்மையோடு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக சமீபத்திலேகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் நிச்சயமாக அவர்கள் செய்தித்தாள்களைப் பார்த்து அறிந்திருக்க முடியும்.— Central Act— மையச் சட்டங்கள் எல்லாம் இதுவரையிலே தமிழிலே மொழிபெயர்க்க முடியாத சூழ்நிலையிலே, ஒரே நேரத்திலே, 60 மையச் சட்டங்களை மொழி பெயர்த்து வெளியிட்டது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி



2003 ஏப்ரல் 23]

அம்மா அவர்கள் அரசு. எனவே, சட்டக் கல்வியைப் பொறுத்தவரையிலே, தமிழில் ஒலிக்க வேண்டும் என்கின்ற ஒரு மனப்பான்மையோடு 13 சட்டப் புத்தகங்கள் தற்போது இருக்கின்றன. தீங்கியல் சட்டம், ஒப்பந்தச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம், இந்து சட்டம், இஸ்லாமியச் சட்டம், இந்திய அரசியலமைப்புச் சட்டம், சொத்துரிமைச் சட்டம், நிறுவனச் சட்டம், சமூக உரிமை நடைமுறைச் சட்டம், நிர்வாக முறை சட்டம், குற்றவியல் சட்டம், தடுப்பு நிலைச் சட்டம், சர்வதேசச் சட்டம் ஆகிய 13 தமிழ்வழிப் புத்தகங்கள் இப்போது வெளியிடப்பட்டுள்ளன. தமிழில் சட்டப் புத்தகங்கள் இடம் பெறவேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அந்த உத்தரவை ஏற்று, இந்த நிதியாண்டில், நிச்சயமாக 27 பாடங்களுக்கான பாடப் புத்தகங்களை தமிழிலே நாம் உருவாக்க வேண்டும். அடுத்த கல்வியாண்டில் அதாவது 2004-2005-ல் நிச்சயமாக 27 பாடங்களையும் தமிழில் படிக்கின்ற ஒரு நிலைமை உருவாகும் என்பதை மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல பதிலை அமைச்சரவர்கள் தந்திருக்கின்றார்கள். இப்படி பாட நூல்கள் தமிழிலே வருவதோடு, சட்டமன்றத்தினுடைய நடைமுறைகள், தீர்ப்புகள் எல்லாமே தமிழிலே வருவதற்கு அரசு மேலும் முயற்சிக்குமா, கொண்டுவரப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும்கூட, பதில் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன். தீர்ப்புகள் தமிழிலே சொல்லப்பட வேண்டுமென்று ஒரு விதி இருக்கிறது. அது எல்லா மாவட்ட நீதிமன்றங்களுக்கும் பொருந்தும். மாவட்ட நீதிமன்றங்களில் அதைக் கடைபிடிக்கின்றார்கள். உயர் நீதிமன்றத்திலே நம் அரசின் சார்பிலே 1980 ஆம் ஆண்டு நம்முடைய புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது, அன்றைக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டது. ஆனால்

[2003 ஏப்ரல் 23

அதில் உச்ச நீதிமன்றம் மற்றும் மத்திய அரசினுடைய ஒப்புதல் பெறப்படவில்லை என்ற காரணத்தால் அது நிறைவேற்றப்படவில்லை. எனவே, அது பெறப்பட்டவுடன் உயர் நீதிமன்றத்திலும் தமிழில் ஒரு argument செய்து judgement கொடுக்கின்ற ஒரு நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் உலகத்திலே இருக்கின்ற மூவாயிரம் மொழிகளிலே மிகத் தொன்மையான ஐந்து மொழிகள் என்று கூறினார்கள். அந்த மிகத் தொன்மையான ஐந்து மொழிகள் எவை என்பதை உறுப்பினராவது அல்லது அமைச்சராவது விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத்திலே இருக்கக்கூடிய மூவாயிரம் மொழிகளிலே தமிழ், சமஸ்கிருதம், பாரசீகம், இலத்தீன் மற்றும் கிரேக்கம் ஆகிய ஐந்து மொழிகள் தொன்மையானவை. இலக்கண, இலக்கியங்களைக் கொண்டவை. அதிலும் தொன்மை வாய்ந்தது தமிழ் மொழி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'துளு' என்கின்ற தொன்மையான மொழியை மாண்புமிகு உறுப்பினரவர்கள் விட்டுவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 285 மற்றும் 286 ஆகியவை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வினா எண் 287, திரு. ஆ.கு. முருகேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.



2003 ஏப்ரல் 23]

**287—**

## முதுகலை வகுப்புகள்

***9018—திரு. ஆ.கு. முருகேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் மற்றும் தலைவாசல் தொகுதியிலுள்ள ஒரே கல்லூரியான அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் எம்.ஏ., எம்.காம். ஆகிய முதுகலை வகுப்புகள் வரும் கல்வியாண்டில் தொடங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆத்தூர் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி தற்பொழுது பெரியார் பல்கலைக்கழகத்தில் உறுப்புக் கல்லூரியாக இயங்கி வருகிறது. முதுகலை வகுப்புகளை அந்தக் கல்லூரியில் தொடங்குவது குறித்து அந்தப் பல்கலைக்கழகம்தான் முடிவு எடுக்கவேண்டும். இதுவரை அதற்கான முயற்சி எடுக்கப்படவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்தப் பகுதிக்கு இப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்க வேண்டுமென்று இந்தக் கேள்வியின் மூலமாக விரும்புவதால், அந்தக் கல்லூரியில் எம்.காம். எம்.சி.ஏ. ஆகிய இரண்டு முதுகலை பட்டப் படிப்பு பிரிவுகளைத் தொடங்குவதற்கு பல்கலைக்கழகத்திற்கு அறிவுரை விரைவில் வழங்கப்படும்.

**திரு. ஆ.கு. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் மற்றும் தலைவாசல் தொகுதியிலுள்ள ஒரே கல்லூரியான அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி 1972 ஆம் ஆண்டு சுமார் 100 ஏக்கர் நிலபரப்பில் தொடங்கப்பட்டது. ஏறத்தாழ 30 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் (இந்த ஆண்டில்) சுமார் 1,075 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றார்கள். தற்பொழுது B.A. History, B.A. Tamil, B.Com., B.Sc. Physics, B.Sc. Chemistry, B.Sc., Computer Science, மற்றும் B.Sc. Physics Vocational ஆகிய வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், இந்தக் கல்லூரியில் படிக்கும் மாணவ, மாணவிகளின் நீண்டநாள் கோரிக்கையான முதுகலைப் பட்டப் படிப்பு வகுப்புகளான எம்.சி.ஏ., எம்.காம். வகுப்புகள் தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியதற்கு ஆத்தூர் சட்டமன்றத்

[2003 ஏப்ரல் 23

தொகுதியின் சார்பாகவும், தலைவாசல் சட்டமன்றத் தொகுதியின் சார்பாகவும் நன்றியை காணிக்கையாக்கிக் கொள்கிறேன், மேலும் அந்த முதுகலை பட்டப் படிப்பிலே எம்.எஸ்.ஸி-யுடைய கம்ப்யூட்டர் சயின்ஸ் தொடங்கப்படுமா என்பதைக் கேட்பதோடு, அந்தக் கல்லூரியில் 1,075 மாணவ, மாணவிகளிலே 750 மாணவர்களும், 325 மாணவிகளும் அடங்குவர். ஆனால், கல்லூரியில் பேராசிரியர்கள் 15 பேர்தான் உள்ளார்கள். மீதம் 29 பேராசிரியர்கள் Part time அதாவது guest teachers-ஆகத்தான் பணியிலே அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரப் பணியை வழங்க அரசு முன்வருமா என பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே M.Com., M.Sc. ஆகிய இரண்டு பிரிவுகளையும் தொடங்குவதற்கு பல்கலைக்கழகத்திற்கு அறிவுரை வழங்க இருப்பதாகச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இன்னும் கூடுதலாக ஒரு பிரிவையும் இங்கே கேட்டிருக்கிறார்கள். எனவே இப்படி வரவேற்பு அதிகமாக இருக்கிற இதுபோன்ற பிரிவுகளை கல்லூரிகளில் தொடங்கிட இந்த self financing concept இப்போது அனைத்துக் கல்லூரிகளிலும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்த நிலையில் அந்த சுய நிதிக் கொள்கை அடிப்படையில் அடுத்த கல்வி ஆண்டிலேயே— காரணம் இந்த கல்வி ஆண்டு இப்போது முடிவடைய இருக்கிறது, எனவே அடுத்த கல்வி ஆண்டிலேயே—இந்த M.Com., M.Sc. ஆகிய இரு பிரிவுகளைத் தொடங்குவதற்கு நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மேலும் ஒரு கம்ப்யூட்டர் பிரிவையும் தொடங்குவதற்கு பல்கலைக்கழகத்திற்கு அறிவுரை வழங்கப்படும். மேலும் இங்கே பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பற்றாக்குறை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போதைக்கு guest lecturers-களைத்தான் நியமித்து அந்தப் பற்றாக்குறையைச் சரிக்கட்டி வருகிறோம். நிதிநிலைமை சீராகும் வரை, இது தொடரும். நிதிநிலைமை சீரான உடன் பற்றாக்குறை உள்ள இடங்களிலே பேராசிரியர் பணியிடங்களை நிச்சயமாக நிரப்புவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். அதுவரை இந்த முறை தொடரும்.



2003 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனுசாமி அவர்கள்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற அரசு கலைக் கல்லூரிகளில் முதுகலைப் பட்டப் படிப்புகள் குறைவாக இருக்கின்றன. உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியிலும், தருமபுரியிலும், இரண்டு கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளில் முதுகலைப் படிப்பு, வேதியியல், பௌதியியல், வணிகவியல் போன்ற பட்டப் படிப்புகள் இல்லை. இதுபோன்ற பட்டப் படிப்புகளை அனைத்துக் கல்லூரிகளிலும் கொண்டு வருவதற்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஒரு கொள்கை முடிவை எடுத்து அரசுக் கல்லூரிகளில் முதுகலைப் படிப்புகளை நடைமுறையில் கொண்டு வருவதற்காக பல்கலைக்கழகங்களுக்கு உத்தரவு பிறப்பிப்பாரா என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தக் கோரிக்கைகள் எல்லாம் நல்லமுறையிலே நிறைவேற வேண்டும் என்ற அடிப்படையில்தான் இப்போது அனைத்துக் கல்லூரிகளும் உறுப்புக் கல்லூரிகளாக பல்கலைக்கழகங்களோடு இணைக்கப் பட்டிருக்கின்றன. அப்படி பல்கலைக்கழகங்களோடு அந்தக் கல்லூரிகள் உறுப்புக் கல்லூரிகளாக இணைக்கப்படுகிறபோது, அங்கே academic performance நன்றாக இருக்கும். அதேபோல, research-க்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. கல்வியினுடைய தரம் நன்றாக இருக்கும். அதேபோல U.G.C. grant நமக்கு அதிகமாகக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலோசனை செய்து, தீர்க்கமாக நல்ல முடிவெடுத்து, இந்தக் கல்லூரிகளை எல்லாம் பல்கலைக்கழகங்களோடு இன்றைக்கு உறுப்புக் கல்லூரிகளாக இணைத்திருக்கிறார்கள். எனவே அந்த வகையிலே இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன இதுபோன்ற முதுகலைப் பட்ட வகுப்புப் பிரிவுகள் அந்தக் கல்லூரிகளிலே தொடங்கவேண்டுமென்று சொன்னால், அது பல்கலைக்கழகத்தினுடைய பொறுப்பாக இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இந்த self financing concept— சுயநிதிக் கொள்கை அடிப்படையிலே எந்தப் பிரிவை வேண்டுமானாலும் அவர்கள் தொடங்கிக்கொள்ளலாம். நல்ல

வரவேற்பு இருக்கிற அந்த வகுப்புகளைத் தொடங்குவதற்கு ஆட்சேபணையே கிடையாது. எனவே அந்த அடிப்படையில்தான் நாங்கள் பல்கலைக்கழகங்களுக்கு அறிவுரை வழங்கி இருக்கிறோம். மாணவர்களுக்குத் தேவையான தற்காலத்திற்குத் தேவையான பிரிவுகளைத் தொடங்குவதற்கு நாங்கள் அவர்களுக்கு அறிவுரை சொல்லியிருக்கிறோம். ஆகவே, எந்தப் பிரிவுகளை வேண்டுமானாலும் பல்கலைக்கழகங்கள் மூலம் தொடங்கலாம். அதேபோல அந்தந்தக் கல்லூரிகளிலே அந்தந்தப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளைச் சொல்வார்களேயானால், அரசு, மாண்புமிகு உறுப்பினர்களுடைய வேண்டுகோளை ஏற்று பல்கலைக்கழகங்களுக்கு உரிய முறையிலே அறிவுரையும், ஆலோசனையும் வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள்.

முற்பகல் *10-20*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆத்தூர், தலைவாசல் தொகுதியில் இருக்கிற கல்லூரிகளுக்கு கேட்பதைப்போலவே தமிழகம் முழுவதிலும் பல கல்லூரிகளிலே இப்படிப்பட்ட முதுகலை பாடப் பிரிவுகள் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக வைக்கப்படுகிறது. அதிலே ஒன்று எனது தொகுதிக்குட்பட்ட மன்னார்குடி அரசினர் இராஜகோபாலசுவாமி கலைக் கல்லூரியில் M.A., M.C.A., M.Com. போன்ற பாடப் பிரிவுகள் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டு காலமாக வைக்கப்பட்டு அது நிலுவையிலே இருக்கிறது. அரசுக்கும், பல்கலைக்கழகத்திற்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசின் சார்பிலே அதற்கான அனுமதியை இந்த ஆண்டே வழங்கி முதுகலை பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி நல்ல முறையிலே கொடுக்க வேண்டும். அந்த உயர்கல்வியும் தரமான கல்வியாக கொடுக்க வேண்டும் என்றுதான் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு உயர்



கல்விக்கென்று *700* கோடி ரூபாயை இன்றைக்கு ஒதுக்கி இருக்கிறது. அந்த வகையிலே பல்கலைக்கழகங்களுக்கு மட்டும் *100* கோடி ரூபாயை நாங்கள் grant ஆக தந்து கொண்டிருக்கிறோம். எனவே நான் ஏற்கெனவே சொன்னதைப்போல நீங்கள் விரும்புகிற பாடத் திட்டங்களை அங்கே கொண்டு வருவதற்கு அரசு உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். எந்தப் பிரிவுகள் வேண்டும் என்று நீங்கள் சொன்னாலும் அந்தப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு முறையாக பல்கலைக்கழகங்களுக்கு நாங்கள் அறிவுரையை நிச்சயமாக வழங்குவோம். இதிலே எந்தவித பாதிப்பும் இல்லை. இதிலே தடையும் இல்லை. எனவே வரவேற்பு இருக்கிற எந்தப் பிரிவு வேண்டுமானாலும் அங்கே தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையிலே மன்னார்குடி கல்லூரிக்கும் நீங்கள் கேட்கிற அந்தப் பிரிவுகளை அரசாங்கம் நிச்சயமாகத் தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *288*, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**288—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**•18070—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், கண்ணாக்குடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கண்ணாக்குடி கிராமத்தில் உள்ளது ஆரம்ப

சுகாதார நிலையம் அல்ல. அது ஒரு துணை சுகாதார நிலையம்தான். [2003 ஏப்ரல் 23
அந்த கண்ணாக்குடி துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்
கட்டுவதற்கு நபார்டு நிதி உதவி கோரப்பட்டிருக்கிறது. 3-வது திட்டத்தில்
நபார்டினுடைய நிதியுதவி இடைக்கப்பெற்றவுடன் அந்தக் கட்டடப்
பணி நிச்சயமாகத் தொடங்கப்பட்டுவிடும்.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சி
மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனையில் மருத்துவக் கல்லூரி
தொடங்கப்பட்டதால் மாவட்ட மருத்துவமனையை வேறு இடத்திற்கு
மாற்றவிருப்பதாக அறிகிறேன். லால்குடியிலுள்ள அரசு
மருத்துவமனையில் மாவட்ட மருத்துவமனையை இணைத்து
செயல்படவேண்டுமென்பது தொகுதி மக்களின் நீண்ட நாள்
கோரிக்கையாக இருந்து வருகிறது.

அங்கு தண்ணீர் வசதி, இட வசதி மற்றும் போக்குவரத்து வசதி
நன்றாக இருக்கிறது. அதனால் மாவட்ட மருத்துவமனையை லால்குடிக்கு
மாற்ற தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் மாண்புமிகு அம்மா
அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய
விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாவட்டத் தலைமை இடத்தில் மருத்துவக்
கல்லூரியினுடைய மருத்துவமனை இயங்கி வருவதால் திருச்சி
மாவட்டத்திலுள்ள ஏதேனும் ஒரு மருத்துவமனையை மாவட்டத்
தலைமை மருத்துவமனையாக அறிவிக்க வேண்டும். மாவட்ட
மருத்துவமனை அளவிற்கு அதைத் தரம் உயர்த்தவும் வேண்டும்.
அதுகுறித்து இப்போது துறை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. திருச்சி
மாநகரத்திலே ஏற்கெனவே அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
இருப்பதாலே ஏதாவது ஒரு மருத்துவமனையை நாங்கள் மாவட்ட
மருத்துவமனையாக அறிவிக்க வேண்டும். எனவே எந்த
மருத்துவமனையைத் தலைமை மருத்துவமனையாக நாம் தரம்
உயர்த்தலாம் அல்லது மாவட்ட மருத்துவமனையாக கொண்டு வரலாம்
என்று துறை இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. ஆய்வு
முடிந்த பிறகு அந்த ஆய்வின் அடிப்படையிலே அரசு அதற்கு அனுமதி
வழங்கும். ஆனால் இப்போது இந்த நேரத்திலே நான் எந்த
மருத்துவமனையை, நாங்கள் அப்படி மாவட்ட மருத்துவமனையாக
ஆக்க இருக்கிறோம் என்று என்னால் உறுதி சொல்ல முடியாது.



எனவே தகுதியான இடமாக நாங்கள் தேர்வு செய்து முறையாக அரசின் மூலமாக அறிவிப்புச் செய்வோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எம். பாலன்.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், மாவட்ட வடக்குப் பகுதியில் தொட்டியம், தாத்தையங்கார்பேட்டை, முசிறி, மணச்சநல்லூர், உப்பிலியாபுரம், துறையூர், புள்ளம்பாடி, லால்குடி ஆகிய 8 ஒன்றியப் பொதுமக்களும் திருச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் செல்கிறார்கள். அது இடம் மாறுமானால் லால்குடிக்கு வந்தால்தான் கஷ்டமில்லாமல் மக்கள் வரமுடியும். திருச்சியில் போக்குவரத்து நெரிசல் உள்ளது. அதோடு லால்குடி புறநகர்ப் பகுதியிலுள்ளதால் டிராஃபிக் இல்லாமல் நோயாளிகள் வருவதற்கு சுலபமாக இருக்கும். மேலும் மேற்படி ஒன்றியத்திலிருந்து திருச்சி வரும் தூரமும், லால்குடி செல்லும் தூரமும் ஒரே தூரமாகும். எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக, கனவாக இது இருந்து வருகிறது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஆவன செய்யுமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும், அதேநேரத்தில் மாவட்ட மக்களுடைய வசதியும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 289, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**289—**

### சத்துணவுக் கூடங்கள்

***23497—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 23

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மடத்துக்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடங்களை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, மடத்துக்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் 15 சத்துணவுக் கூடங்கள் பழுதடைந்துள்ளதாகக் கண்டறியப்பட்டு ரூ. 1,69,000 செலவில் செப்பனிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை ஒன்றியம், மடத்துக்குளம் ஒன்றியம் ஆகிய இரண்டு ஒன்றியங்களை உள்ளடக்கிய பகுதியாக உள்ளது. அதிலேயும், மடத்துக்குளம் ஒன்றியத்திலுள்ள 59 சத்துணவுக் கூடங்களிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய இடங்கள் போக மீதமுள்ள இடங்களில் ஆத்தூர், நீலம்பூர் கிழக்கு, நீலம்பூர் மேற்கு, போத்தநாயக்கனூர், கண்ணாடிப்புத்தூர், உடையார்பாளையம், தாமரைப்பாடி போன்ற இடங்களிலே கட்டடங்கள் மிகவும் மோசமாக உள்ளன. நடப்பாண்டிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவற்றை செப்பனிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று உங்கள் மூலமாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை தொகுதியிலே உள்ள மொத்த மையங்களின் எண்ணிக்கை 111. மடத்துக்குளம் ஒன்றியத்திலுள்ள மையங்களின் எண்ணிக்கை 59. இவற்றில் 15 சத்துணவுக் கூடங்கள் மட்டுமே மிகவும் பழுதடைந்துள்ளதாகக் கண்டறியப்பட்டு இப்போது அவை செப்பனிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியிலே சில இடங்களைக் குறிப்பிட்டு இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதை எழுத்து மூலமாக எங்களிடத்திலே தருவாரேயானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 23]

[மாண்புமிகு பேரவைத் தலைவர் - தலைமை]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உடுமலைப்பேட்டை தொகுதியிலே அங்கன்வாடி அலுவலகமானது கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு பாதியிலே நிற்கிறது. எங்களது கோவை மாவட்டத்தில் மட்டும் 11 இடங்களிலே அங்கன்வாடி கட்டடங்கள் பாதியிலே நிலுவையிலே உள்ளன. அவை உலக வங்கித் திட்டத்தின் மூலமாக கட்டக்கூடியவை. அதற்கு நிதியுதவி வரவில்லையென்று கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நடப்பாண்டிலே உரிய நடவடிக்கை எடுத்து, அந்தக் கட்டடங்களை இந்த ஆண்டே கட்டிக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிலிருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்றவுடன் பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 290, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**290—**

**மாணவர் விடுதி**

**•20964—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, சேவூர் பகுதியில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி நடப்பு நிதியாண்டில் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிதாக மாணவ மாணவியர் விடுதிகள் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 ஏப்ரல் 23

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதிக்குட்பட்ட சேவூர் பகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. அதிலே ஆதிதிராவிடர் மாணவர்கள் பெரும் பகுதி பயின்று வருகின்றார்கள். வசதியற்ற அடித்தளத்து மக்களின் நலன் கருதி மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அடுத்த ஆண்டிலாவது ஆதிதிராவிட நல விடுதியை அமைத்துத் தர அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ மாணவியரின் கல்வி முன்னேற்றத்திற்காக நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஆதிதிராவிடர் நல மாணவ மாணவியரின் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதற்காக விடுதிகள் ஏற்படுத்தி அவற்றில் தங்கும் இடமும், உணவும் இலவசமாக அரசு வழங்கி வருகிறது. இதன்படி மாநிலத்தில் 1,076 ஆதிதிராவிட நல மாணவ மாணவியர் விடுதிகளும், 26 பழங்குடியினர் மாணவ மாணவியர் நல விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. மேலும் 258 பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகள் மற்றும் உறைவிடப் பள்ளிகள் அனைத்திலும் மொத்தமாக சுமார் 76,932 மாணவர்களும், 44,451 மாணவிகளும் தங்கிப் பயின்று வருகின்றனர். இதுபோக, 49 தொண்டு நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளிலும், மாணவ மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். ஆக, விடுதிகளில் மாணவ மாணவியர்களின் மொத்த எண்ணிக்கை 1,25,000. இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுக் கட்டணத்தை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5-12-2001 முதல் மாதம் 225 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தி வழங்கி வருகிறார்கள். இருந்தாலும், நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். மகாலிங்கம்.

*(முற்பகல் 10-30*

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 10 ஆண்டுகளிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே கல்லாதோர் இல்லை என்ற சூழ்நிலையை



2003 ஏப்ரல் 23]

உருவாக்குவதற்காக பல்வேறு நோக்கங்களிலே மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் அவினாசியிலே, தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். அந்த மாணவர்கள் மேல்படிப்பு படிப்பதற்காக, 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிப்பதற்காக செல்லவேண்டியுள்ளது. அதிக தொலைவு உள்ள கிராமங்களில் உள்ள மாணவர்கள் போக்குவரத்து வசதியும், தங்குமிட விடுதி வசதியும் இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு படிப்பு எட்டாத கொட்டாவியாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அடுத்த ஆண்டிலாவது மறுபரிசீலனை செய்து சேவூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலே ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக மாணவர்கள் விடுதி அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 291, மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**291—**

**சொகுசுப் பேருந்து**

***8726—மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூரிலிருந்து சென்னைக்கு இரவில் ஒரு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

[2003 ஏப்ரல் 23

(அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பொம்பலூரில் இருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ இக்கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு போரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொரம்பலூர் மாவட்டத்தை அறிவித்திருந்தாலும், அந்த மாவட்டத்திலிருந்து அந்த மக்கள் சொகுசுப் பேருந்தில் செல்வதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. ஆனால் 103 நெம்பர் உடைய ஒரே ஒரு பஸ் மட்டும்தான் இரவில் செல்கிறது. ஆகவே, விவசாயிகள், வர்த்தகர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், படித்தவர்கள் இரவிலே சொகுசுப் பேருந்தில் போவதற்கு திருச்சி வழியாகப் போகிற பஸ்ஸை பொம்பலூர் வரை விட்டு, அந்த வழியாகப் போவதற்காவது அரசு ஆவன செய்யுமா என்பதை உங்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக தடம் எண் 103-ல் பொம்பலூரிலிருந்து சென்னைக்கு சாதாரணப் பேருந்து இரண்டு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் திருச்சியிலிருந்து 12 பேருந்துகள் பெரம்பலூர் வழியாக 24 நடைகள் அங்கிருந்து சென்னைக்கு வருகின்றன. இதிலே பயணிகளுடைய விழுக்காடு 85 சதவிகிதம்தான் இருக்கிறது. இன்னும் முழுமையாக பயணிகள், அந்தப் பேருந்து வசதியைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இந்த நிலையில் கூடுதலாக மேலும் ஒரு சொகுசுப் பேருந்தை இயக்கினால் ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற சாதாரண பேருந்தினுடைய வருவாய் பெருமளவு பாதிக்கப்படும் என்பதால் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இருந்தாலுங்கூட, மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க திருச்சியில் இருந்து பொம்பலூர் வழியாகச் செல்கின்ற அந்த 12 பேருந்துகளில் ஒன்றிரண்டு பேருந்துகளை சொகுசுப் பேருந்துகளாக மாற்றி அந்த வழியாக இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இளவழகன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அரியலூரிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து ஒன்று இயக்கப்பட்டு வந்தது. கடந்த ஆட்சிக் காலத்திலே அது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த நிறுத்தப்பட்ட பேருந்தை இயக்கினால் நமது மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களும் அரியலூரில் இருப்பதனால் அடிக்கடி அங்கேயிருந்து புறப்பட்டு சென்னைக்கு வர ஏதுவாக இருக்கும் என்பதனாலும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைத் தலைவர் அவர்களை பஸ்ஸிலே அனுப்புவதற்கு முடிவு பண்ணிவிட்டீர்களா?

**திரு. ப. இளவழகன்:** இல்லை, அவர் கேட்டுக்கொண்டு இருக்கிறார். (சிரிப்பு) மேலும், எங்கள் பகுதி பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் இருக்கும் என்பதால் நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளவழகன் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜரெத்தினம்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் நகரம், பொம்பலூர் மாவட்டத்தின் தலைநகரமாகும். அதுபோலவே, பொம்பலூர் மாவட்டத்திலே அரியலூர் நகரமும், பெரம்பலூர் நகரமும் இரண்டு நகரங்களுமே வளர்ந்து வந்து கொண்டிருக்கிற நகரங்கள் ஆகும். ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து

[2003 ஏப்ரல் 23

அரியலூரிலிருந்து பெரம்பலூருக்கு, பெரம்பலூர் வழியாக சென்னைக்கு சொகுசுப் பேருந்தை விட முன்வருவாரா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்று தெரிவித்திருக்கிறேன். ஆகவே, உங்களுடைய கோரிக்கையும் அதிலே இணைத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 292, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**292—**

**மின் விநியோகம்**

***12010—திரு. பி.எச். பால்மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின் விநியோகத்தில் மின்சாரம் பெரிய அளவில் திருடி பயன்படுத்துவதைத் தடுக்க அரசிடம் சிறப்புத் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் காவல் துறையைச் சேர்ந்த காவல் துறைத் துணைத் தலைவர், விழிப்புப் பணி அவர்களின் தலைமையின்கீழ் தலைமைப் பொறியாளர், மின் திருட்டு தடுப்புக் குழுவில் 16 மின் திருட்டு தடுப்புக் குழுக்கள் மற்றும் தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களின் நேரடிப் பார்வையில் 2 பறக்கும் படைகள் தமிழகம் முழுவதும் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்களில் இரவு, பகலாக திடீர் மின் சோதனைகள் மேற்கொண்டு மின் திருட்டுகளைக் கண்டுபிடித்து வருகின்றன.



2003 ஏப்ரல் 23]

மின்சாரத்தை மையமாகக் கொண்டு இயங்கும் மின் நிறுவனங்களாக இரும்பு உருக்காலைகள், இரும்புக் கம்பி, இரசாயனம், பிளாஸ்டிக், பனிக்கட்டி, மாவு, அரிசி, ஆகியவை தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் நூற்பு ஆலைகள், உணவகங்கள், தங்கும் விடுதிகள் போன்ற இடங்களில் அடிக்கடி மின் திருட்டுகள் நடந்து வருவதால், அந்த வகையைச் சார்ந்த தொழிற்சாலைகளில் மீண்டும், மீண்டும் திடீர் சோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன.

மின் திருட்டுகள் நடக்கா வண்ணம் மின் அளவிகள் — மீட்டர்கள் — பத்திரமான முறையில் முத்திரைகளால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பெரிய அளவு தொழிற்சாலைகளில் மோசடி செய்ய முடியாத முறையில் மின்னணு மின் அளவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும், உயர் மின் அழுத்தம், எல்.டி., சி.டி., மின் இணைப்புகள் பயன்படுத்தும் வளாகங்களில் உள்ள மின் அளவிகளில், மோசடியாக மின் திருட்டு செய்யப்பட்டால், அதைப்பற்றிய தகவல்களை மின் அளவிகளிலிருந்தே பெறலாம்.

மின் திருட்டுகளை உளவு வேலை மூலமாக கண்டுபிடிக்கும் பொருட்டு, காவல் துறை துணைத் தலைவர், விழிப்புப் பணி அவர்களின் நேரடிப் பார்வையில் தனியாக உளவுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவைச் சார்ந்த காவல் துறை ஆய்வாளர் ஒருவரும், உதவி மின் பொறியாளர் ஒருவரும் மின் திருட்டு நடக்கும் இடங்களை ஆய்வறிந்து, மின் திருட்டுத் தடுப்புக் குழு மூலமாக மின் திருட்டுக்களைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மின் திருட்டுகள் நடக்கும் இடங்களைப் பற்றிய தகவல்கள் கொடுப்பவர்கள் எங்கு, யாரிடம் தெரிவிப்பது என்கின்ற நிலைப்பாட்டினைப் பற்றி, தானியங்கி முறையில் தகவல்களைப் பதிவு செய்யும் அமைப்புடன்கூடிய தனியான தொலைபேசி ஒன்று காவல் துறைத் தலைவர், விழிப்புப் பணி அலுவலகத்தில் பொருத்தப்பட உள்ளது. இது பற்றிய விவரமும், தொலைபேசியின் எண்களும் பத்திரிகைகளின் வாயிலாகப் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட உள்ளது.

மற்றும் மின் திருட்டுகளைக் கண்டுபிடித்து, தற்போது உள்ள காவல் நிலையங்களில் புகார் கொடுக்கப்பட்டு, மின் திருட்டு செய்தவரின் மீது நீதிமன்றங்கள் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால், சில காவல் நிலையங்களில் காலதாமதங்கள் ஏற்படுவதைத்

[2003 ஏப்ரல் 23

தடுக்கும் பொருட்டும், மின் திருட்டு செய்தவரின் மேல், குற்றவியல் நடவடிக்கைகள் உடனே மேற்கொள்ள ஏதுவாகவும், தனிப்பட்ட எட்டு காவல் நிலையங்கள், மின் திருட்டு பற்றிய குற்றங்களின் மேல் துரித நடவடிக்கை எடுக்கும் பொருட்டும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மண்டலத்திற்கு ஒன்று என்ற முறையில் எட்டு மண்டலங்களிலும் இயங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவையன்றி, மின் திருட்டுகள் மற்றும் விதி மீறல் போன்ற முறைகேடுகள் பற்றிய தகவல்களை அளிக்கும் பொதுமக்களுக்கும், வாரிய ஊழியர்களுக்கும் ரொக்கப் பரிசு வழங்கும் திட்டம் ஒன்று 1983 ஆம் ஆண்டு முதல் மின்சார வாரியத்தில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. அத்தகவல் மூலம் கிடைக்கப்பெற்ற கூடுதல் வருவாயில் 10 சதவீதம் அல்லது ரூபாய் 10,000-க்கு மேற்கொண்டு போகாமல் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ரொக்கப் பரிசை, கூடுதல் வருவாயில் 10 சதவீதம் அல்லது அதிகபட்ச அளவாக ரூபாய் 1,00,000-ஆக உயர்த்தவும் திருட்டு கண்டுபிடித்தவுடனேயே முதல் பரிசுத் தொகையாக ரூபாய் 5,000 வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2001-2002, 2002-2003 ஆண்டுகள் வரையிலான கண்டுபிடிக்கப்பட்ட மின் திருட்டுக்கள், இதுவரையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு 6 கோடியே 41 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் வசூலிக்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் திருட்டு என்பது அதிகரித்து, அதன் விளைவாக அரசுக்கும், மின்சார வாரியத்திற்கும் அதிகமான இழப்பு ஏற்படுவதன் விளைவாக அதிகமான பாதிப்புகள் ஏற்படுகின்றன.

மின் திருட்டு செய்பவர்கள் மீது Indian Electricity Act பிரிவு 39-ன்படி வழக்கு பதிவு செய்யப்படுகின்றது. கடந்த 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை மின் திருட்டைத் தடுப்பதற்கான தேவையான நடவடிக்கைகளை எடுக்காத சூழ்நிலையில் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்பது எல்லோரும் அறிந்ததே. ஆகவே, 1991 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை மின் திருட்டின் மூலமாக மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2003 ஏப்ரல் 23]

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

முற்பகல் 10-40

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் திருட்டைத் தடுப்பதற்கான முயற்சிகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில்களை அளித்திருக்கிறார்கள். மின் திருட்டோடு லைன் லாஸ் என்பது அதிக அளவிலே தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. ஆகவே, லைன் மூலமாக ஏற்படுகிற அந்த மின் இழப்பை சரி செய்வதற்கான முயற்சியை அரசு எவ்வாறு மேற்கொண்டிருக்கிறது? அதன் மூலமாக எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது? அதனாலே ஏற்பட்ட நஷ்டத்தின் அளவைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, line loss என்பது நமது தமிழகத்தை பொறுத்தமட்டிலே மிகவும் குறைந்த அளவே இருக்கின்றது. மற்ற மாநிலங்களைப் பொறுத்தமட்டிலும் அகில இந்திய அளவில் கிட்டத்தட்ட 27 சதவீதம் சராசரியாக இருந்துகொண்டு இருக்கிறது. தமிழகத்தை பொறுத்தமட்டிலும் 16 சதவீதம் line loss இருக்கிறது. இந்த line loss-ஐ சரிக்கட்ட வேண்டுமென்று சொன்னால் கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு 40,000, 50,000 கோடி ரூபாய்கள் செலவு ஏற்படும். இருந்தாலும், ஆண்டு ஒன்றுக்கு மின்சார வாரியத்தின் மூலமாக ஒரு குறிப்பிட்ட தொகையை இதற்காக செலவழித்து முடிந்த வரையிலும் line loss-ஐ குறைப்பதற்கான முயற்சிகள் மாண்புமிகு தமிழகத்தினுடைய அம்மாவுடைய அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் திருட்டு கண்டுபிடிக்கப்பட்டு அதன் மூலமாக தனியார் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும், இதுவரை மின் திருட்டு செய்தவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை என்பதையும், இந்த மின்

[2003 ஏப்ரல் 23

திருட்டு செய்தவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளில் தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவினுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 6,41,74,000 ரூபாய் அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது. மீதி வழக்குகள் நிலுவையில் இருந்து கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் பெரிய அளவில் தமிழகத்திலே திருட்டு நடக்கிறதாக விவரங்களிலிருந்து தெரிகிறது. பெரிய தொழில் நிறுவனங்கள்கூட திருடுவதாக நம்முடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. இவர்களுக்கு சிறைத் தண்டனை உள்பட உள்ள தண்டனைகள் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா, அதற்குத் தேவையான முறையிலே சட்டத்திலே திருத்தங்கள் தேவைப்படுமேயானால் அதைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிற்சாலையைப் பற்றி குறிப்பிட்டார்கள். எந்தெந்த தொழிற்சாலையில் திருட்டு நடைபெறுகிறது என்று நேரடியாகவே தெரிவித்தால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுக்கும் மேலே கொடுக்கப்பட்ட பரிசுகள் வழங்கப்படும். அதுமட்டுமல்ல, அபராதத் தொகையை வசூலிப்பதற்குத்தான் சட்டத்திலே இடம் இருக்கிறது. அந்த அபராதத் தொகை கட்டமுடியாதவர்கள் நிச்சயமாக சிறைத் தண்டனை அனுபவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்திலே, line loss என்பது தமிழகத்தை பொறுத்தவரையில் 16 சதவீதம் என்று தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது. இது கூடவில்லையா அல்லது குறையவும் இல்லையா?



2003 ஏப்ரல் 23]

அதே நேரத்திலே மத்திய அரசாங்கத்தினுடைய Power Grid Corporation, இதிலே இருக்கக்கூடிய ஒரு முதன்மை அதிகாரி விஸ்வநாதன் என்பவர்கள்கூட ஒரு நிகழ்ச்சியிலே சொல்லும்பொழுதும் 41 சதவீதம் மட்டும்தான் பயனீட்டாளர்களுக்குச் செல்லுகிறது. மீதி 59 சதவீதம் line loss Theft-லே செல்லுகிறது. மிகப் பெரிய தொழிற்சாலை உரிமையாளர்கள் எல்லாம் திருடிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஒரு தகவலையும் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே இது 16 சதவீதம்தானா, கூடுகிறதா, குறைகிறதா இது பற்றிய உண்மை விவரத்தை அரசு கண்டறிவதற்கு முயற்சிகளை எடுத்து வருகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தை பொறுத்தமட்டில் 16 சதவீதம் line loss இருந்து கொண்டிருக்கிறது. இதைக் குறைப்பதற்கான முயற்சிகளைத்தான் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். இது நிச்சயமாகக் கூடாது என்பதை மாண்புமிகு திரு. ஜி.கே. மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். Line loss என்பது ஓர் இடத்திலே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு அது பயன்படுத்தக்கூடிய இடம் sub-station-க்கு கொண்டு வருகின்றபொழுது அந்த மின் கடத்திகளில் வருகின்றபொழுது நிச்சயமாக எவ்வளவுதான் நாம் பணத்தை செலவு பண்ணி, எவ்வளவு முயற்சி எடுத்தாலும் குறைந்தபட்சம் line loss இருக்கத்தான் செய்யும். இருந்தாலும் தொடர்ந்து அதற்கான முயற்சிகளை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு முயற்சித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைத் திருடுபவர்கள் மீது உடனடியாக ஒரு அபராதத் தொகை விதிக்கப்பட்டவுடன் அந்த அபராதத் தொகையை அவர்கள் கட்டி முடித்தவுடன் மீண்டும் பழையபடியே அவர்கள் தொழில் செய்வதற்கு எந்தவிதமான தடையையும் ஏற்படுத்துவதில்லை. ஆதலால், இப்படி தைரியமாக திருட்டுத் தொழிலில் ஈடுபடுபவர்கள் பிடிபட்டால்கூட அபராதத் தொகை கட்டியவுடன் அவர்களுடைய தொழிலில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படுவதில்லை என்பதைக் கருத்தில் கொண்டு, இப்படி திருடுவதைத் தவிர்ப்பதற்காக, கண்டுபிடிக்கப்பட்ட தொழிற்சாலைகளில் உடனடியாக தற்காலிகமாக இரண்டு மூன்று மாதங்களாவது அவர்களுக்குத்

[2003 ஏப்ரல் 23

தருகின்ற மின்சாரத்தைத் துண்டிப்பதற்கு உண்டான நடவடிக்கையை மேற்கொள்ள அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அபராதம் வசூலிக்கப்பட்ட பிறகு அவர்களுக்கு உடனடியாக அந்தக் கனெக்ஷன் கொடுக்கப்படுவதில்லை. அதற்காக காலதாமதத்தை ஏற்படுத்தி, அவர்களுக்கு அந்தப் படிப்பினையை புகட்டிய பிறகுதான் மீண்டும் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுகிறபோது மின் திருட்டைக் கண்டுபிடிக்கக்கூடிய அதிகாரிகளுக்கும், இன்னும் சொல்லப்போனால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்கும் பரிசு வழங்கப்படும் என்கிற தகவலை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக பெரும் முதலாளிகள்தான் இந்த மின் திருட்டிலே அதிகமாக ஈடுபடுவதாகத் தெரிகிறது. இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டதற்குப் பதிலாக இந்த மின் திருட்டைக் கட்டுப்படுத்தினாலே அதை ஈடுகட்டி விடலாம் என்கிற ஒரு கருத்தும் நிலவுகிறது. எனவே இதற்கு அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து மின் திருட்டிலே ஈடுபடுபவர்களை குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, மின்வாரிய ஊழியர்களுக்கும், நமது மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்கும் மட்டும் இந்தப் பரிசுத் தொகை தருவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அதைக் கண்டுபிடித்துக் கொடுத்தால் அவர்களுக்கும் அந்தப் பரிசுத் தொகைத் தரப்படும். அவர்கள் சொன்னதுபோல் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்வதற்கு அரசு நிச்சயமாக பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இளவழகன்.



2003 ஏப்ரல் 23]

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசு எனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எங்களுடைய பகுதியிலே ஒரு தனியார் சிமெண்ட் ஆலை இப்படி மின் திருட்டு செய்து, Anti Power Theft பறக்கும் படையினால் ஒரு கோடியே 50 இலட்ச ரூபாய் தண்டனைத் தொகையாக விதிக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் நீதிமன்றம் சென்று தடை ஆணை வாங்கி வைத்துக்கொண்டு தற்போது சுயமாகவே மின்சாரம் தயாரிக்கக்கூடிய புராஜக்டை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த அனுமதி அவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டால் அந்தத் தண்டனைத் தொகையை நிச்சயமாக அரசுக்குச் செலுத்தமாட்டார்கள். ஆகையினாலே தண்டனைத் தொகையைச் செலுத்தினால்தான் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்கு சுயமாக மின்சாரம் தயாரிக்கக்கூடிய அனுமதி வழங்கப்படும் என்கிற நிபந்தனையை அரசு விதிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளவழகன் பரிசு கிடைக்கும் என்று சொன்னார்கள். இது திருவிளையாடல் சினிமாவில் வந்ததுபோல் எவ்வளவுக்கெவ்வளவு பிழை இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பரிசைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதுபோல் இல்லை. குறிப்பாக ஆதாரத்தோடு சொன்னால், கண்டிப்பாக அவர்களுக்குப் பரிசு உண்டு. அதேநேரத்தில் தடை ஆணை வாங்கி வைத்திருக்கிற யாருக்கும் சுயமாக மின் உற்பத்தி செய்வதற்கான அனுமதிகள் நிச்சயமாக வழங்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் திருட்டு சம்பந்தமான தகவல்களைத் தெரிவிப்பவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசுகள் தருவதாகத் தெரிவித்திருக்கின்றார்கள். எனவே மின் திருட்டு சம்பந்தமான தகவல்களைப் பெறுகின்ற விதமாக ஒவ்வொரு கிராமப் பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் மின் திருட்டுத் தடுப்பு புகார் பெட்டி என்று புகார் பெட்டிகளை ஆங்காங்கே நிறுவ அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகார்ப் பெட்டியை யாராவது தூக்கிக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வது? (சிரிப்பு) திரு. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார திருட்டைக் கண்டுபிடித்தால் பரிசு கிடைக்கும் என்று சொன்னார்கள். பல சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பரிசு கிடைக்கவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைக்கும் என்று நினைக்கிறேன். மால்கோ நிறுவனத்திலே திருட்டு நடைபெற்று இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆகவே, அதைக் கண்டுபிடித்து அதற்குரிய அந்தப் பரிசை எனக்குக் கிடைக்கச் செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்றால் அமைச்சருக்குத்தான் பரிசு கொடுக்க வேண்டும். அவரே வைத்துக்கொள்வார். (சிரிப்பு) திருமதி ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தூத்துக்குடி மாவட்டத்தில் கார்பைடு கம்பெனி என்று வைத்துக்கொண்டு அநேக திருட்டுக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதுகுறித்து புகார்கூட நான் நிதி அமைச்சர் அவர்களிடம் கொடுத்துள்ளேன். கொடுத்து ஓராண்டு ஆகிவிட்டது. ஆனாலும், இன்னும் நன்றாக அந்தக் கம்பெனியை விருத்தி செய்து கொண்டுதான் இருக்கிறார்களேயொழிய அவர்களால் குறைக்க முடியவில்லை.

அதேபோல் தூத்துக்குடி மாவட்டத்தில் அநேக இடங்களிலே அந்தக் கம்பெனி வைத்து மின் திருட்டுக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 293, திரு. கே.எஸ். பழனிசாமி. மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.



2003 ஏப்ரல் 23]

**293—**

**சிப்காட் தொழிற்பேட்டை.**

***27622—திரு. கே.எஸ். பழனிசாமி:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டையில் தொழிற்சாலைகள் சரிவர ஆரம்பிக்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு கடன் உதவி வழங்கி, தொழிற்சாலைகள் விரைவில் தொடங்க ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்தில் 64 தொழிற்சாலைகளுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 20 தொழிற்சாலைகளில் ஏற்கெனவே முழு அளவில் உற்பத்தி தொடங்கி செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 44 தொழிற்சாலைகளில், உற்பத்திக்குத் தேவையான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைத் தொழில் துறையில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக கொண்டுவர தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுத்துவரும் இந்த நல்ல சூழ்நிலையில் 2,800 ஏக்கர் நிலப்பரப்பில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சிறப்பான உள் கட்டமைப்பு வசதிகளுடன் சேலம், கோவை தேசிய நெடுஞ்சாலை 47-ல் அமைந்துள்ள பெருந்துறை சிப்காட் வளாகத்தில் துணி சாயம் இடுதல் மற்றும் தோல் தொழிற்சாலைகளின் தொழில் முனைவோர்களைக் கொண்டு வந்து தொழில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்கும்பொழுது, மாவட்டத்தில் நிலத்தடி நீர் மாசுபடுவதை முற்றிலும் தடுக்க முடியும். மேலும் பெருந்துறை பகுதி அதிகமான பொறியியல் கல்லூரிகளைக் கொண்டுள்ளதால், படித்த இளைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பெருந்துறை சிப்காட்

வளாகத்தில், சென்னையில் உள்ளதுபோல டைடல் பார்க் தொடங்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். பழனிசாமி.

**திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மஞ்சள் வணிக வளாகத்திற்கு 10 ஏக்கர் நிலம் பெருந்துறை சிப்காட்டில் ஒதுக்கப்பட்டு பத்திரமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 40 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ள இந்த மஞ்சள் வணிக வளாகத்தை பெருந்துறை சிப்காட்டில் இந்த நிதியாண்டிலே அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு முன் வருமா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு முயற்சிகளை மேற்கொண்டு தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி, காஞ்சிபுரம் முக்கிய சாலையிலே, மாங்கால் கூட்டுரோடு என்கிற இடத்தில் வந்தவாசி, செய்யார் தொகுதியில் பயன்படுகின்ற வகையில் ஒரு சிப்காட் தொழிற்பேட்டை தொடங்குவதற்கு 1991-96-லே அப்பொழுது ஆட்சியிலே இருந்த அ.இ.அ.தி.மு.க. அரசு அதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டது. அது அப்படியே கிடப்பில் போடப்பட்டு, எந்தவிதப் பயனும் இல்லாமல் நிலம் ஆர்ஜிதம் செய்து அப்படியே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முருகவேல் ராஜன், தனிக் கேள்விதான் போடவேண்டும். இது ஈரோடு மாவட்டம், பெருந்துறையைப் பற்றியது.

வினா எண் 294, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.





**294—**

**கூட்டுறவு வங்கிகள்.**

***6007—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளின் செயல்பாட்டைக் கண்காணிக்கவும், ஆலோசனை கூறவும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு வங்கிகளின் செயல்பாட்டைக் கண்காணிக்கவும், ஆலோசனை கூறவும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை ஏற்படுத்தும் திட்டம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் மட்டுமல்ல, கூட்டுறவு அமைப்புகள் அனைத்துமே மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினாலே சரிவர இயங்காமல் இருந்து கொண்டிருக்கின்றன. கடந்த 1½ ஆண்டுகளுக்கு முன்னாலே கலைக்கப்பட்ட இவற்றிற்கு இதுவரையில் தேர்தல் நடத்தப்பெறாமல் இருக்கின்ற காரணத்தினாலே, இந்த நிர்வாகம் சரியாக இல்லை என்பதை அனைத்து உறுப்பினர்களுமே ஒத்துக்கொள்வார்கள். இந்த நிலையில் அந்தக் கூட்டுறவு வங்கிகளை மேற்பார்வை இடுவதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாவிட்டாலும்கூட இப்பொழுது 'நாமக்கோவைச்' சேர்ந்த Deputy Registrar போன்றவர்களை 3, 4 அமைப்புகளுக்கு சேர்த்து மேற்பார்வை இடுகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. அந்த ரிஜிஸ்ட்ரார்களுக்கு ஏலமே போகாத அல்லது கடை எடுக்காத சாராயக் கடைகளை கவனிக்கின்ற வேலையே பெரும்பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே வங்கிகளுடைய நடைமுறைகளைப்

[2003 ஏப்ரல் 23

பார்ப்பதற்கு அவர்களுக்கு நேரம் இல்லை என்கின்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகின்றது. இந்த நிலையில் fit person என்கின்ற ஒரு பொறுப்பில், ஆலோசனைக் குழு அமைக்கலாம் என்ற ஒரு விதி இருப்பதாக நான் கேள்விப்படுகின்றேன். அது உண்மையானால், சட்டமன்ற உறுப்பினர்களையே fit persons என்கின்ற அளவிலே அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவை அமைப்பதற்கு அரசு பரிசிலனை செய்யுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி சாராயக் கடைகளைக் கண்காணிக்கின்ற பொறுப்பை யாரிடத்திலேயும் விடவில்லை. முதலாவதாக சாராயக் கடைகளே இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதற்குப் பின்னாலே இன்றையதினம் உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி நம்முடைய.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அமைச்சர் அவர்கள் சொல்லிவிடட்டும். ஒன்றும் இல்லை.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** Wine Shop என்று சொல்வதற்குத்தான் சாராயக் கடைகள் என்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மதுக் கடைகளைக் கண்காணிப்பதற்கு என்று அவர்கள் திருத்திச் சொன்னாலும், அதற்கென்று நடைமுறைகளிலே இருக்கிற விதிகளின்படி ஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. என்றாலும், இன்றையதினம் மாவட்ட அளவிலே கூட்டுறவு வங்கிகளில் எல்லாம் கண்காணிப்பு மற்றும் ஆய்வுக் கூட்டங்கள் காலாண்டுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன. அதேபோன்று, கண்காணிப்பை வலுப்படுத்துகின்ற வகையிலே ஒரு மாதத்திற்கு ஒருமுறை ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், இப்படி பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன என்பதனைச் சரியான முறையிலே ஆய்வு செய்திட வேண்டுமென்பதற்காக மத்திய கூட்டுறவு வங்கிகளின் உள் தணிக்கை பட்டயத் தணிக்கையாளர்களை வைத்து செயல்பட்டு,



2003 ஏப்ரல் 23]

இன்றையதினம் தணிக்கையைச் செய்துகொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோன்று, மாதாந்திர கணிப்பாய்வுத் திட்டத்தின்படி அனைத்து கூட்டுறவு வங்கிகளின் பணிகளும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மூலமாக இன்றையதினம் ஆய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, இந்த நடைமுறை ஒரு பக்கம் இருக்க, எவ்வளவு காலத்திற்கு இப்படி நடக்கப் போகின்றது? இதற்கான தேர்தல்களை நடத்துகின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கின்றதா, இல்லையா என்பதைத் தெரிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தமட்டில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தலை நடத்துவதற்குத் தயார் நிலையிலேயே என்றென்றைக்கும் இருக்கிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது இன்றையதினம் நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தால் அதற்கு இப்போது உடனடியாக தேர்தல்களை நடத்த இயலாது என்பதைச் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு யோசனைகளை எல்லாம் பல்வேறு நேரங்களிலே வழங்குவதுண்டு. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தெந்தப் பகுதிகளிலே என்னென்ன தவறுகள் நடைபெறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவார்களேயானால், அவற்றை சிறந்த முறையிலே நிவர்த்திக்கிற வகையிலே நிச்சயமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளுடைய செயல்பாட்டைக் கண்காணிப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஏற்படுத்தப்படுமா என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் விளக்கமாகப் பதிலளித்தார்கள். பொதுவாக, தேர்தலும் நடத்த முடியாத நிலையில், வழக்குமன்றத்தில் பிரச்சினை இருக்கிற காரணத்தினால் கூட்டுறவு அமைப்புகள், குறிப்பாக வங்கிகள், தனி அலுவலர்கள் மற்றும் பதிவாளர்களுடைய நேரடிப் பொறுப்பிலே செயல்படுகின்றன. குறிப்பிட்ட பிரச்சினையைச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொடர்ந்து அமைச்சர் சொல்லி வருகிறார். கூட்டுறவு வங்கிகளில் சில குறிப்பான வங்கிகளில் குறிப்பிட்ட சில குற்றங்களுக்கான புகார்கள் எழுப்பப்பட்டு, 77 இலட்ச ரூபாயிலிருந்து 1 கோடி ரூபாய், வையம்பாளையம் கூட்டுறவு வங்கி ஊழல் பிரச்சினை சம்பந்தமாக எழுப்பப்பட்டு அது முடிவடைந்ததற்குப் பிறகும் அவர்களுக்குப் பணம் கிடைக்காத நிலையைச் சொல்லியும் நடவடிக்கை போதுமானதாக இல்லை. ஆகவே, இதுபோன்ற குறைபாடுகளையும், முறைகேடுகளையும் தடுக்கும் விதத்தில் ஆய்வுக் குழுக்களை சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லாத நிலையில், பொதுஜன பிரதிநிதிகளைக் கொண்டாவது அமைக்கப்படுமா என்பதை நான் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் எழுமேயானால், அந்தப் பகுதியினுடைய அதிகாரிகளை நானே நேரில் அழைத்து அதற்குண்டான நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. (மணியடிக்கப்பெற்றது) மாதத்திற்கொருமுறை...

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாதத்திற்கு ஒருமுறை நானே என்னுடைய அலுவலகத்திலேயே அத்தனை அதிகாரிகளையும் அழைத்து, இப்படித் தவறுகள் நடைபெறுகின்றன என்று சுட்டிக்காட்டுகிற இடங்களிலே அந்தப் பிரச்சினைகளுக்கு நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டிருக்கின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 295, திரு. செ. அண்ணாதுரை, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.



295—

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்

***7447—திரு. செ. அண்ணாதுரை:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் இயங்கிவரும் பல்வேறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதியில் சொந்தக் கட்டடம் இல்லாத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீனக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இப்போது வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளாக மாற்றப்பட்டிருந்தும் வங்கிகளாக மாற்றப்படும்போது அதற்குப் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், அதற்கான கட்டட வசதியைச் செய்து தரும் வகையிலே, வருகின்ற நிதியாண்டிலாவது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அந்த வங்கிகளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் 21 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. அவற்றிலே 18 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் சொந்தக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. மீதம் இருக்கின்ற 3 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு

[2003 ஏப்ரல் 23

வங்கிகள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அந்த வங்கிகளிலே நிதிவசதி இல்லை என்கிற காரணத்தினாலும், நவீன வசதியுடன் கூடிய வங்கிக் கட்டடம் கட்டுவதற்கு கட்டுமானச் செலவினை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் வங்கிகளின் நிதிநிலைமை இல்லை என்கிற காரணத்தினாலும், ஜெயங்கொண்டம் தொகுதியில் செயல்படும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை என்பதைப் பணிந்து தெரிவித்துக்கொள்கின்றேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### பதினாறாவது பட்டியல்

### வாக்குச்சாவடி அமைத்தல்

1—

**வினா எண் 15150—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பெரும்பாலான இடங்களில் 5 கி.மீ. முதல் 6 கி.மீ. வரை நடந்து சென்று வாக்களிக்கும் நிலையுள்ளதால், வாக்குச் சாவடிகளைப் பிரித்து அருகிலிருக்கும் பள்ளிகளிலேயே வாக்குச் சாவடிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

*01-01-2003* ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல்கள் 17-01-2003 அன்று வெளியிடப்பட்டுள்ளன. எனினும், வாக்குச் சாவடிகளை சீரமைப்பது குறித்து இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணை எதுவும் வழங்கவில்லை. எனவே தேர்தல் ஆணையத்தின் அறிவுரை பெறப்பட்டவுடன் இதுகுறித்து மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.



2003 ஏப்ரல் 23]

2—

### வாக்குச் சாவடிகள்

**வினா எண் 17148—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, தாதாபுரம் மற்றும் மெய்யம்பாளையத்தில் தனித்தனியே வாக்குச் சாவடிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

*01-01-2003* ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல்கள் 17-01-2003 அன்று வெளியிடப்பட்டுள்ளன. எனினும், வாக்குச் சாவடிகளை சீரமைப்பது குறித்து இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணை எதுவும் வழங்கவில்லை. எனவே, தேர்தல் ஆணையத்தின் அறிவுரை பெறப்பட்டவுடன் இதுகுறித்து மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

3—

### வாக்குச் சாவடி அமைத்தல்

**வினா எண் 21238—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி, கொத்துபாளையம் பகுதியில் ஒரு தனி வாக்குச் சாவடி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

*01-01-2003* ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம்

[2003 ஏப்ரல் 23

மேற்கொள்ளப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல்கள் 17-01-2003 அன்று வெளியிடப்பட்டுள்ளன. எனினும், வாக்குச் சாவடிகளை சீரமைப்பது குறித்து இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணை எதுவும் வழங்கவில்லை. எனவே, தேர்தல் ஆணையத்தின் அறிவுரை பெறப்பட்டவுடன் இதுகுறித்து மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

4—

## விபூதி கட்டும் திட்டம்

**வினா எண் 20417—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயிலில் வந்து செல்லும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயிலில் நிதிவசதி இல்லாததால் வந்து செல்லும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

5—

## நிதியுதவி

**வினா எண் 20422—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி வீரமாகாளியம்மன் திருக்குட நன்னீராட்டு திருப்பணிக்கு அரசு நிதியுதவி செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?



2003 ஏப்ரல் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில் திருப்பணி வேலைகள் அனைத்தும் உபயதாரர்கள் மூலம் ரூ.9,40,000/- மதிப்பில் செய்யப்பட்டு வருவதால் அரசு மானியம் ஏதும் தேவைப்படவில்லை.

6—

## தடுப்புச்சுவர்

**வினா எண் 20468—திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, அணைப்பட்டி, அனுமார் கோயில் வருடத்தில் 8 மாத காலம் வெள்ளத்தால் சூழ்ந்து பாதிப்புக்குள்ளாவதைத் தடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

நிலக்கோட்டை தொகுதி, அணைப்பட்டி, அருள்மிகு அனுமார் திருக்கோயில் வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ளதால் மழைக்காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது தண்ணீரால் சூழப்படுகிறது. ஆனால் வருடத்தில் 8 மாதங்கள் தண்ணீரால் சூழப்படுவதில்லை. தண்ணீரால் இத்திருக்கோயில் சூழப்படும்போது இதுவரை இத்திருக்கோயிலுக்கோ, சேவார்த்திகள் தரிசனம் செய்வதற்கோ, பாதிப்பு ஏற்படவில்லை. தற்காப்பு கருதி தடுப்புச்சுவர் கட்டுவதற்கு (ஆற்றின் குறுக்கே அணை கட்டுவது போன்று) அதிக அளவில் நிதித் தேவைப்படும் என்பதால் இத்திருக்கோயிலின் நிதிநிலைமையைக் கணக்கிடும்போது இதுபோன்ற தடுப்புச்சுவர் கட்டடம் கட்ட போதிய நிதிவசதி இல்லை. எனவே, மேற்படி திருக்கோயிலுக்கு தற்போது தடுப்புச்சுவர் கட்டுவதற்கான திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

7—

[2003 ஏப்ரல் 23

## [illegible] ஓய்வூதியம்

**வினா எண் [illegible]—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-ம் ஆண்டு இறுதி வரை தமிழக கோயில்களில் எத்தனை பூசாரிகள் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்?

(ஆ) எத்தனை பேர் விண்ணப்பித்தார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) 2001-ஆம் ஆண்டு இறுதிவரை 1,497 கிராமக் கோயில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை 1,623 ஆகும்.

8—

## பட்டா வழங்குதல்

**வினா எண் [illegible]—திரு. கே.சி. [illegible]:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், தொட்டிபாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட சல்லிக்கல்மேடு பவானி செல்லாண்டியம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் [illegible] 50 ஆண்டு காலமாக வீடுகள் கட்டி வசித்து [illegible] அவ்விடத்திற்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?



2003 ஏப்ரல் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், தொட்டிபாளையம் ஊராட்சிக்குட்பட்ட சல்லிக்கல்மேடு பவானி அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் குடியிருந்து வருபவர்களால் வாடகை மூலம் பெறப்படும் வருமானத்தினால்தான் திருக்கோயில் நிர்வாகச் செலவுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் அந்நிலத்தில் வாடகைக்கு குடியிருப்போருக்கு மேற்படி நிலத்தினை இலவசமாக பட்டா செய்து கொடுத்தால் ஆலய நிர்வாகத்தை பாதிக்கும். மேலும் திருக்கோயில் நிலங்களை இலவசமாக அளிக்க அறநிலைய சட்டவிதிகளில் இடமில்லை.

9—

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்

**வினா எண் 11091—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், ஈரோடு, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு எண்ணி உள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம், ஈரோடு, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 2001-2002ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏதும் அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படவில்லை. ஆனால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 படுக்கைகள் கொண்ட ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது என்ற அரசின் கொள்கைக்கேற்ப,

[2003 ஏப்ரல் 23

சேலம் மாவட்டம், காடையம்பட்டி, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி மற்றும் நாமக்கல் மாவட்டம், ஏரையமங்கலம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகளுடன் நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக 2001-2002 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட அரசு ஆணையிட்டு, அதற்கான கட்டுமானப் பணி, பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

10—

## தமிழ்ப் புத்தாண்டு தினம்

**வினா எண் 13309—திரு. ஜி.கே.மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்ப் புத்தாண்டு தினத்தை சிறப்பாகக் கொண்டாட தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை மூலம் அரசு விழாக்களாக நடத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டிலிருந்து செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்ப் புத்தாண்டு நாளை தமிழ் மக்கள் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள். இதன் பெருமையை உணர்ந்து, அதனை அரசு விடுமுறை நாளாகவும் அறிவித்துள்ளது. அரசு நிலையில் புத்தாண்டு பிறப்பு நாள் எதுவும் கொண்டாடப்படுவதில்லை. கொண்டாடும் நிலையும் இதுவரை எழவில்லை. எனவே, அரசு விழாவாக நடத்தும் திட்டம் ஏதும் இல்லை.

11—

## அவசர ஊர்தி உதவியாளர்

**வினா எண் [illegible]—திரு. [illegible]:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 23]

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் (அவசர ஊர்தி) உதவியாளர் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக பணி நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவமனைகளில் தற்போது அவசர ஊர்தி உதவியாளர் பதவி உருவாக்கப்படுவதில்லை. ஏற்கெனவே இருந்த அத்தகைய பதவி மருத்துவமனைப் பணியாளர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு விட்டது. அவசர ஊர்திகளில் உதவியாளர் தேவைப்படும்போது, மருத்துவமனைப் பணியாளர்கள் அப்பணியினை கவனித்துக் கொள்கிறார்கள். எனவே, எடப்பாடி அரசு மருத்துவமனையில் அவசர ஊர்தி உதவியாளர் பதவி உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை.

12—

## மருத்துவமனைகள் தூய்மைப்படுத்துதல்

**வினா எண் 24377—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவமனைகளை அடிக்கடி தூய்மைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஏப்ரல் 23

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது அரசு மருத்துவமனைகளில் பார்வையாளர்கள் கட்டணம் (Visitors Fees) வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையில் தூய்மை பராமரிப்புப் பணிகள் அதிக அளவில் தினந்தோறும் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**13—**

**ஓட்டுநர் நியமித்தல்**

**வினா எண் [illegible]—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனையில் உள்ள அவசர ஊர்திக்கு ஓட்டுநர் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஓட்டுநர் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனையில் உள்ள அவசர ஊர்திக்கு ஊர்தி ஓட்டுநர் பணியிடம் ஒன்று ஒப்பளிக்கப்பட்டு, 7-6-2001 முதல் ஓட்டுநர் ஒருவர் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.



2003 ஏப்ரல் 23]

**14—**

**ஆராய்ச்சி மையம்**

**வினா எண் 27181—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் தமிழ் வளர்ச்சி பண்பாடு ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக்கென்று சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகமும் உருவாக்கப்பட்டுத் தமிழ்ப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, தருமபுரியில் தமிழ் வளர்ச்சி பண்பாடு ஆராய்ச்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**15—**

**சிகிச்சை பெறுநர்**

**வினா எண் 27488—திரு. [illegible]:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தற்போது எவ்வளவு மனநலம் குன்றிய நோயாளிகள் சென்னை அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகிறார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*சென்னை அரசு மனநல மருத்துவமனையில் தற்போது 1,543 மனநலம் குன்றிய நோயாளிகள் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவர்களில் ஆண்கள் 1,049 பேர் பெண்கள் 493 பேர் மற்றும் ஒரு சிறுவன்.*

**16—**

**மண் அரிப்பைத் தடுத்தல்**

**வினா எண் 14418—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் தரிசு நிலங்களில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தரிசு நில மேம்பாட்டு திட்டத்தின்கீழ் இதுவரை சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி வட்டாரம் தேர்வு செய்யப்படாததால் இத்திட்டம் அங்கு செயல்படுத்தப்படவில்லை.*

**17—**

**தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

**வினா எண் 15257—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அரசு செயல்படுத்துமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2002-2003 ஆம் ஆண்டு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பாளையங்கோட்டை, ஆலங்குளம், மானூர் மற்றும் மேலநீலிதநல்லூர் ஒன்றியங்கள் தேர்வு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வரும் நிதி ஆண்டில் அரசு விதிப்படி பத்தமடை பேரூராட்சி தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**18—**

**மானிய விலை**

**வினா எண் 23147—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் தென்னை விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம், மருந்து, விவசாயக் கருவிகள் வழங்கப்படுமா?*

*(ஆ) தேங்காய்க்கு அரசு விலை நிர்ணயம் செய்ய திட்டம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் தென்னை விவசாயிகளுக்கு 2001-2002 ஆம் ஆண்டு* (Macro Management Mode) *செயல் திட்டத்தின்கீழ் உரமிடுதல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு, நுண்ணுயிர் விநியோகம், ஊடுபயிர் சாகுபடி ஆகிய இனங்களுக்கு மானியம் வழங்க ரூ. 48,884/- ஒதுக்கீடு செய்து செயல்படுத்தப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டு மானிய விலையில் விவசாயக் கருவிகள் ஏதும் கடையநல்லூர்*

[2003 ஏப்ரல் 23

வட்டார தென்னை விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. 2002-2003-ல் வேளாண்மை இடுபொருட்கள்/விவசாயக் கருவிகள் தென்னிங்கீகள் மானிய விலையில் வழங்க இத்துறையில் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) தேங்காய்க்கு அரசால் விலை நிர்ணயம் செய்ய திட்டம் ஏதும் வேளாண் துறையில் இல்லை.

19—

### செஸ் அபிவிருத்தித் திட்டம்

**வினா எண் 27723—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் செஸ் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கரும்புக்குக் கிடைக்கும் தொகையை கரும்புச் சாலை மேம்பாட்டிற்குப் பயன்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் (கட்டுப்பாடு) சட்டம், 1949 பிரிவு 14 (1)-ன்படி தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளால் அரைக்கப்படும் உள்ளூர் பகுதி கரும்பைத் தவிர மீதி கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.7- வீதம் கரும்பு செஸ் வரி வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு வசூலிக்கப்படும் தொகையை "செஸ் நிதிக்கு" எடுத்துச் சென்று, ஒவ்வொரு ஆண்டும் அரசின் ஒப்புதலுடன் கரும்புச் சாலை மேம்பாட்டிற்கு செலவிடப்படுகிறது.



2003 ஏப்ரல் 23]

20—

### தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 30576—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தால் இவ்வாண்டு பயன்பெற்ற தனியார் பயனீட்டாளர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகள் பங்கு கொண்டு (Participatory) பயன்பெறும் வகையில் 2002-2003 ஆம் ஆண்டு முன்னோடித் திட்டமாக 10 மாவட்டங்களில் 29 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 360 கிராமங்களில் மொத்தம் 55,000 ஹெக்டேர் பரப்பில் இத்திட்டம் செயலாக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் 15-12-2002 வரை மொத்தம் 29,556 விவசாயப் பெருமக்கள் பயன்பெற்றுள்ளனர்.

21—

### தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மூலம் நிலங்கள்

**வினா எண் 30577—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் இதுவரை தமிழ்நாட்டில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலங்கள் எத்தனை ஹெக்டேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் இதுவரை வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்பட்டு 18,193 ஹெக்டேர் பரப்பு நிலங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

[2003 ஏப்ரல் 23

22—

## ஊட்டச்சத்து மையக் கட்டடம்

**வினா எண் 27803—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி கிராமம், ஒட்டப்பட்டியில் ஒரு ஊட்டச்சத்து மையத்திற்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், செட்டிமாங்குறிச்சி கிராமம், ஒட்டப்பட்டியில் ஊட்டச்சத்து மையம், தற்போது தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தின் ஒரு பகுதியில் வாடகையின்றி இலவசமாக இயங்கி வருகிறது. இம்மையத்திற்குச் சொந்தக் கட்டடம் புதிதாக கட்டுவதற்கு தேவையான நிலம் இலவசமாகப் பெற, மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலம் கிடைக்கப்பெற்றதும் கட்டுமானப் பணி மேற்கொள்வது பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

23—

## கூட்டுறவுச் சங்கங்கள்

**வினா எண் 23359—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தொழிலாளர் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்காகச் செயல்படும் சங்கங்கள் எத்தனை?



2003 ஏப்ரல் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் 15 தொழிலாளர் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்காக கீழ்க்கண்ட 6 சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன:

1. ப்பி. மன்னார்பாளையம் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம்.

2. சேலம் மாவட்ட சுமை தூக்குவோர் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம்.

3. செக்காரப்பட்டி அரிசன தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம்

4. டேனிஷ்பேட்டை அரிசன தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம்

5. ஆர்.சி. செட்டிப்பட்டி அரிசன தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம்

6. பச்சனாம்பட்டி அரிசன தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம்

இவற்றில் மன்னார்பாளையம் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம் மட்டும் தற்போது செயல்பட்டு வருகிறது. பச்சனாம்பட்டி தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம் செயலிழந்த காரணத்தால் கலைக்கப்பட்டு விட்டது. ஏனைய சங்கங்கள் விரைவில் கலைக்கப்படவுள்ளன.

[2003 ஏப்ரல் 23

24—

### அரிசிக் கூப்பன்

**வினா எண் 31276—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திற்கு குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசிக் கூப்பன் எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) இன்னும் வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள அரிசிக் கூப்பன்கள் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1-6-2002 முதல் 30-6-2002 வரை தமிழகம் முழுவதும் அனைத்து சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் அரிசி விருப்ப அட்டைதாரர்களுக்கு இலவசமாக அரிசிக் கூப்பன் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் மேற்கண்ட நாட்களில் 29,573 அந்தியோதயா அன்னயோஜனா திட்டப் பயனாளிகள் மொத்தம் 4,50,687 அரிசி விருப்ப அட்டைதாரர்கள் அரிசிக் கூப்பன் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டனர். 7,400 அந்தியோதயா அன்னயோஜனா திட்டப் பயனாளிகளும் 68,955 அரிசி விருப்ப அட்டைதாரர்களும் அரிசிக் கூப்பன் புத்தகத்தைப பெற்றுக் கொள்ளவில்லை. அந்த 76, 355 அட்டைதாரர்களும் (7400 + 68,955) பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி வாங்க விரும்பவில்லையென்று கருதப்படுகிறது.



2003 ஏப்ரல் 23]

25—

### நியாய விலைக் கடைகள்

**வினா எண் 31548—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மொத்தம் எத்தனை நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

30-11-2002 நிலவரப்படி தமிழகத்தில் மொத்தம் 28,000 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

26—

### அரிசிக் கூப்பன்

**வினா எண் 31549—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிந்த பிரிவு மக்களுக்கு குடும்ப அட்டைக்கு அரிசிக் கூப்பன் இதுவரை எவ்வளவு குடும்பத்திற்கு விநியோகிக்கபபட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

30-9-2002 வரை புழக்கத்திலிருந்த 1,36,48,729 அரிசி விருப்ப குடும்ப அட்டைகளில் 1,20,19,195 அரிசி அட்டைதாரர்கள் அரிசிக் கூப்பன்களை வாங்கியுள்ளனர். இவர்களில் 6,23,769 அந்தியோதயா அன்னயோஜனா திட்டப் பயனாளிகளும் அடங்குவர்.

[2003 ஏப்ரல் 23

**27—**

**புகைப்படம்**

**வினா எண் 31550—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) குடும்ப அட்டைகளில் இரு நபர்கள் புகைப்படத்தை ஒட்டும் முறை கொண்டு வரலாம் என்ற திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* குடும்ப அட்டைகளில் இரு நபர்கள் புகைப்படத்தை ஒட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**28—**

**நிழற்குடை அமைத்தல்**

**வினா எண் 3807—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி ஏ. ஆண்டிக்குப்பத்தில் பயணிகள் நிழற்குடை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2003 ஏப்ரல் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* பண்ருட்டி நகராட்சியின் நிதி நிலைமை திருப்திகாமாக இல்லாததால் ஏ. ஆண்டிக்குப்பத்தில் பயணிகள் நிழற்குடை கட்டும் பணி மேற்கொள்ள இயலவில்லை.

**29—**

**சாலை, குடிநீர், தெருவிளக்கு அமைத்தல்**

**வினா எண் 10234—திரு. எஸ். சண்முகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட 3-வது வார்டு பகுதியில் குடிநீர், சாலை வசதி, தெரு விளக்கு வசதி ஆகிய அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட 3-வது வார்டு பகுதியில் கீழ்க்கண்டவாறு அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:—

**சாலை வசதி**

*(1)* ரூ. 2.90 இலட்சம் மதிப்பீட்டில் சாமி நகர் 1 மற்றும் 2-வது தெருவிற்கு தார்தளம் அமைத்தல்.

*(2)* ரூ. 2.14 இலட்சம் மதிப்பீட்டில் வடக்கு மாடவீதிக்கு தார்தளம் அமைத்தல்.

[2003 ஏப்ரல் 23

(3) ரூ.90,000 மதிப்பீட்டில் கன்னப்பாளையம் குறுக்குத் தெருவுக்கு தார்தளம் அமைத்தல்.

**குடிநீர் வசதி**

(4) ஆழ்துளைக் கிணறுகளுடன் கூடிய கைப்பம்புகள் உபயோகத்தில் உள்ளன. கோயில் பதாகை பகுதி திறந்தவெளி கிணற்றில் ஒரு மின்மோட்டர் அமைத்து 7 சிறிய தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் சமீபத்தில் புதிதாக ரூ.2/-லட்சம் செலவில் ஆழ்துளை அமைக்கப்பட்டு பொதுக்குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. தண்ணீர் தட்டுப்பாடு உள்ள இடங்களில் வாரத்திற்கு இரு நாட்கள், குடிநீர் லாரிகள் மூலமும் குடிநீர் வழங்கப்படுகிறது.

**தெருவிளக்கு வசதி**

இந்த வார்டில் 20 சோடியம் ஆவி விளக்குகளும் 45 குழல் விளக்குகளும் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் புதிதாகத் தோன்றியுள்ள பகுதிகளுக்கு தெருவிளக்கு அமைக்க நடவடிக்கையில் உள்ளது.

**30—**

**சாலை அமைத்தல்**

**வினா எண் 13944—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி - பண்ருட்டி நகரில் லிங்க் ரோடு ஆக்கிரமிப்பை அகற்றிய பிறகு லிங்க் ரோடு 1 கி.மீ. வரையில் சாலையைச் சீர்செய்து அல்லது புதியதாக சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சி லிங்க் ரோடு சாலைக்கு 11-வது நிதிக் குழு திட்டத்தின் கீழ் ரூ.5.00 லட்சம் செலவில் தார்தளம் அமைக்கும் பணி 10-10-2002ல் முடிவடைந்துள்ளது.



2003 ஏப்ரல் 23]

**31—**

**ஊராட்சிகளாக மாற்றுதல்**

**வினா எண் 29504—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

170 பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றுவது வருமான அடிப்படையிலா? ஜனத்தொகை அடிப்படையிலா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நிதிப் பற்றாக்குறையினால் நலிவுற்ற பேரூராட்சிகளை ஊராட்சிகளாகத் தரம் மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**32—**

**புதிய கட்டடம்**

**வினா எண் 20536—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் விஷமங்கலம் கிராமத்தில் அரசு கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) விஷமங்கலம் கிராமத்தில் உள்ள கால்நடை மருந்தகம் ஏற்கெனவே அரசுக் கட்டடத்தில் இயங்கி வருவதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) எழாது.

33—

[2003 ஏப்ரல் 23

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 20648—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சாம்பூர் வடகரை பேரூராட்சியிலுள்ள ஆரம்ப கால்நடை மருத்துவமனையில் கால்நடைகளுக்கு கருவூட்டம் செய்யவும், காளைகளுக்கு கருத்தடை செய்யவும் வசதியாக சாம்பூர் வடகரை கால்நடை மருத்துவமனையில் ஏற்படுத்தித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், சாம்பூர் வடகரை பேரூராட்சியில் உள்ள சாம்பூர் வடகரை கால்நடை கிளை நிலையத்தில் கால்நடைகளுக்கு கருவூட்டலும், காளைகளுக்கு ஆண்மை நீக்கப் பணியும் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

34—

### கோழிப்பண்ணை அமைத்தல்

**வினா எண் 26954—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, குன்னாண்டார் கோயில் ஒன்றியம், அண்டகுளம் பகுதியில் கோழிப்பண்ணை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?



2003 ஏப்ரல் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை தொகுதி, குன்னாண்டார் கோயில் ஒன்றியம், அண்டகுளம் பகுதியில் கோழிப்பண்ணையினை அமைப்பதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், 2002-2003 ஆம் ஆண்டிற்கான திட்டத்தில் இது குறித்து விவரம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. புதுக்கோட்டை தொகுதி, குன்னாண்டார் கோயில் ஒன்றியம், அண்டகுளம் தொகுதி அருகில் அரசு சார்பில் கோழிப்பண்ணை எதுவும் செயல்படவில்லை. இத்தொகுதியில் மாவட்ட கால்நடை பண்ணை மட்டுமே செயல்பட்டு வருகிறது.

35—

### கால்நடை மருந்தகம் அமைத்தல்

**வினா எண் 27354—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், புதுசத்திரம் ஒன்றியம், கதிரநல்லூரில் பகுதிநேர கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :**

நாமக்கல் மாவட்டம், புதுசத்திரம் ஒன்றியம், கதிரநல்லூரில் ஏற்கெனவே பார்வை கிளை நிலையம் உள்ளதால் பகுதிநேர கால்நடை மருந்தகம் அமைக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

[2003 ஏப்ரல் 23

**36—**

**பறவைகள் சரணாலயம்**

**வினா எண் 22310—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி பெரிய ஏரிக்கு பலவகையான பறவைகள் பருவ காலத்தில் வருவதால் பறவைகள் சரணாலயமாக அறிவிக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி பெரிய ஏரியை ஈரோடு மாவட்ட வன அலுவலர் அவர்கள் 11-1-03 அன்று தணிக்கை செய்ததில் சுமார் 200 நபர்கள் பெரும்பாலான பகுதியை ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து வருவது தெரிய வருகிறது. மேலும், தண்ணீர் வரத்தும் இந்த ஏரியில் சிறிதளவே உள்ளது. வெளிநாட்டுப் பறவைகள் மேற்படி ஏரியில் வருகை புரிவதில்லை.

இக்காரணங்களாலும், இந்தப் பகுதி இடையூறுகளுக்கு உட்பட்டிருப்பதாலும், எடப்பாடி பெரிய ஏரியை பறவைகள் சரணாலயமாக அறிவிக்க இயலாத சூழ்நிலை உள்ளது.

**37—**

**தங்கும் விடுதி**

**வினா எண் 25570—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, டாப்சிலிப்பில் தங்கும் விடுதி கட்டுவதற்கு தனியாருக்கு அனுமதி வழங்கப்படுமா?



2003 ஏப்ரல் 23]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**38—**

**பணிகளின் விவரம்**

**வினா எண் 26961—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002ல் புதுக்கோட்டை தொகுதியில் வனத் துறையின் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகளின் விவரம் என்ன?

(ஆ) பயன்பெற்ற பயனாளிகளின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002ல் புதுக்கோட்டை தொகுதியில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை, கீரனூர், ஆலங்குடி மற்றும் அறந்தாங்கி சரகங்களில் 1000 ஏக்டேர் நிலப்பரப்பின்கீழ், நடு மற்றும் மேல் நீர்ப்பிடிப்பு மற்றும் சமுதாய நிலங்களை பசுமையாக்குதல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) மேலும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் வெளிமண்டலத்தின்கீழ் கீழ்க்கண்ட கிராமங்களில் அதற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| வ. எண் | | கிராமத்தின் பெயர் | சரகத்தின் பெயர் | சட்ட மன்றத் தொகுதி | மாற்றுவேலை வாய்ப்பிற்காக வழங்கப்பட்ட தொகை(ம) பயனாளிகளின் எண்ணிக்கை தொகை | | கிராமத்தில் சமுதாயப் பணிக்காக செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2001 | சேந்தாப்பட்டி | புதுக்கோட்டை | குளத்தூர் | ரூ.2,10,000 | 28 | ரூ.90,000 |
| 2. | 2000 | புலவனார்குடி | திருமயம் | திருமயம் | ரூ.1,40,000 | 28 | ரூ.60,000 |
| 3. | 2000 | சித்தாம்பூர் | கீரனூர் | குளத்தூர் | ரூ.1,40,000 | 28 | ரூ.60,000 |
| 4. | 2000 | கருகாம்பட்டி | புதுக்கோட்டை | திருமயம் | ரூ.1,40,000 | 28 | ரூ.60,000 |
| 5. | 1999 | கொள்ளுப் பட்டி | அறந்தாங்கி | திருமயம் | ரூ.70,000 | 14 | ரூ.30,000 |
| 6. | 1999 | சுச்சம்பட்டி | திருமயம் | திருமயம் | ரூ.70,000 | 14 | ரூ.30,000 |
| 7. | 1999 | மலம்பட்டி | புதுக்கோட்டை | திருமயம் | ரூ.70,000 | 14 | ரூ.30,000 |

**39—**

## சுற்றுச்சூழல் மன்றம் தொடங்கும் திட்டம்

**வினா எண் 27201—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் மன்றம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் செயல்பட உள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 53 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் நடப்பு நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் 100 பள்ளிகளில் தேசிய பசுமைப்படை திட்டத்தின்கீழ் மைய அரசு நிதியுதவியுடன் சுற்றுச்சூழல் மன்றங்கள் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

**40—**

## அடுக்குமாடி வீடுகள்

**வினா எண் 6668—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2வது தொகுதி மிட்டாஅய்யம்பெருமாள்பட்டி மற்றும் கன்னங்குறிச்சி கிராமத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அடுக்குமாடி வீடுகள் கட்டுவதற்கு எவ்வளவு நிலங்கள் கையகப்படுத்தியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

சேலம் அய்யம்பெருமாள்பட்டி மற்றும் கன்னங்குறிச்சி கிராமங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அடுக்குமாடி வீடுகள் கட்டுவதற்காக கையகப்படுத்திய நிலங்கள் குறித்த விவரம் பின்வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1. | கையகம் செய்ய தேர்வு செய்யப்பட்ட நிலப்பரப்பு | 256.96 | ஏக்கர் |
| 2. | தீர்வானம் (அவார்டு) வழங்கப்பட்ட பரப்பு | 182.27 | ,, |
| 3. | சுவாதீனம் பெறப்பட்ட பரப்பு | 70.06 | ,, |
| 4. | தீர்வானத்திற்கு பிறகு வழக்குகளில் உள்ள நிலப்பரப்பு | 95.10 | ,, |
| 5. | தீர்வானத்திற்கு முன்னர் வழக்கில் உள்ள நிலம் | 10.62 | ,, |
| 6. | இன்னும் 4 (1) முன்மொழிவு ஒப்புதல் பெற வேண்டிய பரப்பு | 41.07 | ,, |
| 7. | நில எடுப்பு சட்டப் பிரிவு 12ன்படி சுவாதீனம் பெறப்பட வேண்டிய பரப்பு | 10.81 | ,, |

[2003 ஏப்ரல் 23

41—

### கழிவுநீர்க் குழாய்களை மாற்றுதல்

**வினா எண் 19161—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி 7வது வட்டம், சேனியம்மன் நகர் குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளிலுள்ள கழிவுநீர்க் குழாய்களை மாற்றித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ஆம். சென்னை மற்றும் இதர நகரங்களில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.8.93 கோடி செலவில் வாம்பாய் திட்டத்தின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பழுதுபார்க்கும் பணிகள் 2002-2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி, 7வது வட்டம், சேனியம்மன் நகர்ப் பகுதியிலுள்ள 295 அடுக்குமாடிக் குடியிருபபுகளுக்கு பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.7.20 இலட்சம் செலவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சட்டமன்ற வினாவில் கூறப்பட்டுள்ள சேனியம்மன் அடுக்குமாடி குடியிருப்புத் திட்டப்பகுதியிலுள்ள குடியிருப்புகளுக்கு கழிவுநீர்க் குழாய்கள் மாற்றித்தர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

42—

### சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 20755—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 23]

(அ) நகர குடிசைப்பகுதிகளில் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்படி, சேலம் மாநகரில் எத்தனை பேர் பயன் அடைந்துள்ளனர்?

(ஆ) இதற்காக எவ்வளவு செலவு அரசுக்கு ஏற்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகரில் உள்ள குடிசைப்பகுதிகளில் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (Environmental Improvement on Urban Slums) பணிகள் ஏதும் நடைபெறவில்லை. சேலம் மாநகரில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் 129 குடிசைப்பகுதிகளில் வாழும் 10131 குடும்பங்களுக்கு ரூ.4.15 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் சேலம் மாநகரில் 1172 அடுக்குமாடிக் குடியிருப்புகள் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) வினா எழவில்லை.

43—

### பால் உற்பத்தி

**வினா எண் 16527—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில், தற்போது, செயல்படும் சங்கங்கள்

ஏதுமில்லை. ஏற்கெனவே செயல்பட்டு வந்த சங்கமும் அவ்வூரின் பால் உற்பத்திக் குறைவினால் நலிவடைந்துள்ளது. தற்போது திருநெல்வேலி ஒன்றியக் களப்பணியாளர்கள் மற்றும் அலுவலக முதுநிலை ஆய்வாளர் (பால்), துணைப் பதிவாளர் (பால்பதம்), மூலம் நலிவடைந்த சங்கத்தினை புதுப்பித்தோ அல்லது அவ்வூர் மக்கள் மூலமாக புதிய சங்கம் அமைத்தோ பால் உற்பத்தியினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**44—**

**பால் உற்பத்தியை அதிகரித்தல்**

**வினா எண் 16550—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சோள்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோள்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் கீழ்ப்பகுதியில் தற்போது கேசவ சமுத்திரம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. நல்லமுறையில் பால் உற்பத்தியுடன் செயல்படும் இச்சங்கம் நாளொன்றுக்கு சுமார் 1000 லிட்டர் வரை பால் உற்பத்தி செய்து அதிகப்பாலை உள்ளூர் விற்பனைக்குப் பயன்படுத்தி வருகிறது. அங்கு பால் உற்பத்தியை மேலும் பெருக்க அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**45—**

**பால் உற்பத்தி**

**வினா எண் 16573—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் ஆவின் பால்பண்ணையில் என்னென்ன பொருள்கள் பாலிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன?*

*(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் ஆவின் பால்பண்ணையில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள்கள் பாலிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டன:

| | |
|---|---|
| 1. வெண்ணெய் | : 3188.262 மெட்ரிக் டன் |
| 2. பால்பொடி | : 2381.537 மெட்ரிக் டன் |
| 3. நெய் | : 1517.244 மெட்ரிக் டன் |
| 4. உபபொருள் மாறுதலுக்காக ஈரோடு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்ட பாலிலிருந்து பெறப்பட்ட பால்பொடி அளவு | : 868.423 மெட்ரிக் டன் |
| **5. ஏ.பி.எஸ். பிரிவு:** | |
| 1. எஸ்.எம்.1000 மிலி | : 6,24,323 பாக்கெட்டுகள் |
| 2. எஸ்.எம்.200 மிலி | : 2,59,393 பாக்கெட்டுகள் |
| 3. டி.எம். 1000 மிலி | : 1,03,439 பாக்கெட்டுகள் |
| 4. டி.டி.எம். 1000 மிலி | : 17,219 பாக்கெட்டுகள் |
| 5. பிஸ்தா 200 மிலி | : 4,16,943 பாக்கெட்டுகள் |
| 6. கார்டமம் 200 | : 4,73,362 பாக்கெட்டுகள் |
| 7. ஸ்ட்ராபெரி 200 மிலி | : 3,19,747 பாக்கெட்டுகள் |
| 8. சாக்லெட் 200 மிலி | : 2,77,026 பாக்கெட்டுகள் |
| 9. விட்டா கார்டமம் 200 மிலி | : 1,24,872 பாக்கெட்டுகள் |
| 10. அமுல் 1000 மிலி எஸ்டிடி | : 11,13,962 பாக்கெட்டுகள் |
| 11. அமுல் 1000 மிலி டோன்ட் | : 8,82,546 பாக்கெட்டுகள் |
| 12. அமுல் 200 மிலி டோன்ட் | : 11,62,501 பாக்கெட்டுகள் |

(ஆ) அவற்றின் மதிப்பு ரூ.66,40,36,612/-

[2003 ஏப்ரல் 23

46—

## கொள்முதல் நிலையம்

**வினா எண் 22833—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள ஆழியார் நகர், கோட்டூர், வேட்டைக்காரன் புதூர் போன்ற இடங்களில் பால் விற்பனை கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியார் நகரில் பால் விற்பனை மையம் அமைத்து ஏஜெண்ட் மூலம் பால் விற்பனை நடைபெற்று வருகிறது. கோட்டூர் மற்றும் வேட்டைக்காரன் புதூர் ஆகிய இடங்களில் ஏற்கெனவே பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டு சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

47—

## ஆவின் பால் நிலையங்கள்

**வினா எண் 24199—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் எத்தனை தானியங்கி ஆவின் பால் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகரில் தானியங்கி ஆவின் பால் நிலையங்கள் ஏதும் செயல்படவில்லை.



2003 ஏப்ரல் 23]

48—

## பால் பண்ணை உருவாக்குதல்

**வினா எண் 25573—திரு. கோவைதங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு சிறு கடனுதவி வழங்கி பால் பண்ணைகள் உருவாக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு சிறு கடனுதவி வழங்கி பால் பண்ணைகள் உருவாக்கிட சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடை எழவில்லை.

49—

## பால் விற்பனை நிலையங்கள்

**வினா எண் 26945—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் பால் வளத் துறையின் மூலம் செயல்படும் ஆவின் பால் விற்பனை நிலையங்களின் (பூத்) விவரம் என்ன?

(ஆ) இந்த விற்பனை மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை நகரில் 30 ஆவின் முகவர்கள் பால் மற்றும் பால் உபபொருள்களை ஒன்றியத்திலிருந்து பெற்று தங்களது சொந்த இடத்தில் வைத்து விற்பனை செய்து வருகிறார்கள். உழவர் சந்தையில் மட்டும் ஒரு பால் பூத் ஒன்றியத்தின் பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) இந்த பூத் விற்பனை மூலம் புதுக்கோட்டை ஒன்றியத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.3000/- வருவாய் கிடைக்கிறது.

**50—**

**பால் பண்ணை**

**வினா எண் 27344—திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட சர்க்கார்-சாமக்குளம் ஒன்றியம், காளம்பட்டி பேரூராட்சியில் பால் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காளம்பட்டி பேரூராட்சியில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் கடந்த 24 ஆண்டுகளுக்கு முன் பதிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டு முறை செயலிழந்த சங்கத்தை மீண்டும் செயல்படுத்தி, மூன்று ஆண்டுகள் மட்டுமே செயல்பட்டது. மீண்டும் சங்கம் செயலிழந்துவிட்டது. அக்கிராம மக்கள் சங்கம் அமைக்க மீண்டும் முன்வந்தால் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க ஆவன செய்யப்படும். எனவே தற்போது சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட, சர்க்கார்-சாமக்குளம் ஒன்றியம் காளம்பட்டி பேரூராட்சியில் பால் பண்ணை அமைக்க வாய்ப்பு இல்லை.



**பதினேழாவது பட்டியல்**

**சாலை செப்பனிடல்**

**1—**

**வினா எண் 17898—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம் சின்னக்கட்டளை-தும்மக்குண்டு சாலையில் பிரிந்து பெருங்காமநல்லூர் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இச்சாலையில் கி.மீ.0/0-1/6 வரை ரூ. 6.00 இலட்சம் மதிப்பில் 2001-2002-ல் மேம்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள கி.மீ. 1/6-3/2 வரை மேம்பாடு செய்ய ரூ.6.00 இலட்சம் தேவைப்படும். நிதி நெருக்கடி காரணமாக இப்பகுதியைத் தற்போது மேம்பாடு செய்யும் வாய்ப்பு இல்லை.

**2—**

**நூலகக் கட்டடம்**

**வினா எண் 16457—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, நக்கனேரி கிராமத்தில் நூலகக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

[2003 ஏப்ரல் 23

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, நக்கனேரி கிராமத்தில் ஒரு பகுதி நேர நூலகம் செயல்பட்டு வருகிறது. பகுதி நேர நூலகங்களுக்கு நூலகக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**3—**

**சுகாதார நிலையங்கள்**

**வினா எண் 18378—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியில் உள்ள கபிலர்மலை ஒன்றியம், பரமத்தி ஒன்றியம், மோகனூர் ஒன்றியத்தில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?

(ஆ) அவற்றில் 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) கபிலர்மலை ஒன்றியத்தில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்குகின்றன. அதில் கபிலர்மலை முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாகும். வெண்கரை, ஜடாப்பாளையம் இரண்டும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களாகும். பரமத்தி ஒன்றியத்தில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்குகின்றன. அதில் நல்லூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாகும். கடச்சேரி, பரமத்தி இரண்டும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களாகும். மோகனூர் ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்குகின்றன. அதில் பாலப்பட்டி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாகும். ஆலம்பட்டி, மோகனூர், வளையப்பட்டி ஆகிய மூன்றும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களாகும்.



2003 ஏப்ரல் 23]

(ஆ) இவற்றில் பாலப்பட்டி மற்றும் நல்லூர் ஆகியவை 24 மணி நேர சேவையின்கீழ் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களாகும்.

**4—**

**ஓய்வூதியம்**

**வினா எண் 20332—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நலிந்த நாடகக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அரசு வழங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், மாதம் எவ்வளவு தொகை? எத்தனை நபர்களுக்கு வழங்கப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதம் ரூ.500/- நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. நாடகக் கலைஞர்கள் உள்ளிட்ட 5565 கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் வகையில் 1961 ஆம் ஆண்டு முதல் 2002 ஆண்டு முடிய அர்சாணைகள் வெளியிடப்பட்டு தற்போது நாடகக் கலைஞர்கள் உள்ளிட்ட 6063 கலைஞர்கள் நிதியுதவி பெறுகின்றனர்.

**5—**

**நூலகக் கட்டடம்**

**வினா எண் 20811—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர் தொகுதி, திருவெண்ணைநல்லூர் ஒன்றியம் சித்திலிங்கமடம் கிராமத்தில் அமைந்துள்ள மிகவும் பழமையான நூலகக் கட்டடத்தைப் புதிய கட்டடமாகக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

[2003 ஏப்ரல் 23

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநாவலூர் தொகுதி, திருவெண்ணைநல்லூர் ஒன்றியம், சித்திலிங்கமடம் கிளை நூலகம் செயல்படும் கட்டடம், ஊராட்சி மன்றத்தைச் சார்ந்ததாகும். இக்கட்டடம் இன்னும் பொது நூலகத் துறைக்கு ஒப்படைப்புச் செய்யப்படாமல் உள்ளது. இக்கட்டடத்தின் சுவர், வாயிற்கதவு, சன்னல் கதவுகள், மேற்கூரை (தளம்) அனைத்தும் பழுதுபட்டுள்ளன. இக்கட்டடம் 15X11 அடி அளவில் உள்ளதால், இதனை இடித்துவிட்டுக் கட்டினால் மட்டுமே வசதியாக அமையும். இக்கட்டடத்தையும், பின்புறமுள்ள காலிமனையையும் நூலகத்திற்கு ஒப்படைக்கத் தீர்மானம் பெறப்பட்டு உள்ளது. இக்கட்டடம் மற்றும் காலிமனையையும் நூலக ஆணைக் குழுவிற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதும் நிதி வசதிக்கேற்ப கட்டடம் கட்டப்படும்.

**6—**

### புதிய நூலகம்

**வினா எண் 22864—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிபபாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கானஞ்சாவடியில் நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, கானஞ்சாவடி கிராம மக்கள் ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள



2003 ஏப்ரல் 23]

கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாததால், அவ்விடத்தில் நூலகம் அமைக்க இயலவில்லை:—

1. நூலகம் செயல்பட உறுதியான வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.
2. எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 5 செண்ட் முதல் 10 செண்ட் வரை காலிமனை கடலூர் மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாக அளிக்கப்பட வேண்டும்.
3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.
4. ரூ. 2000/- பெறுமானமுள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.
5. ஒருவர் ரூ. 1000/- வீதம் செலுத்தி இரண்டு நபர்கள் புரவலராக சேர்க்கப்பட வேண்டும்.

**7—**

### சாகித்ய அகாடமி விருது

**வினா எண் 22916—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை பேருக்கு சாகித்ய அகாடமி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன?

(ஆ) என்னென்ன நூல்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழில் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கு 1955 ஆம் ஆண்டு முதல் 2002 வரை 43 நபர்களுக்கு சாகித்ய

[2003 ஏப்ரல் 23

அகாடமி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | ஆண்டு | நூலின் பெயர் | நூலாசிரியரின் பெயர் |
|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. |
| 1. | 1955 | தமிழ் இன்பம் (கட்டுரைகள்) | ரா.பி. சேதுப்பிள்ளை. |
| 2. | 1956 | அலை ஓசை (புதினம்) | கல்கி ஆர். கிருஷ்ணமூர்த்தி. |
| 3. | 1958 | சக்கரவர்த்தித் திருமகன் (இராமாயண உரைநடை) | பி. ராஜ கோபாலாச்சாரி. |
| 4. | 1961 | அகல் விளக்கு (புதினம்) | மு. வரதராசன். |
| 5. | 1962 | அக்கரைச் சீமையில் (பயணக் கட்டுரை) | சோமு (மி.ப. சோமசுந்தரம்) |
| 6. | 1963 | வேங்கையின் மைந்தன் (புதினம்) | அகிலன் (பி.வி. அகிலாண்டம்) |
| 7. | 1965 | ஸ்ரீராமானுஜர் (வாழ்க்கை வரலாறு) | பி. ஸ்ரீ.ஆச்சார்யா |
| 8. | 1966 | வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (வாழ்க்கை வரலாறு) | ம.பொ. சிவஞானம் |
| 9. | 1967 | வீரர் உலகம் (இலக்கிய விமர்சனம்) | கே.வி. ஜகன்னாதன் |
| 10. | 1968 | வெள்ளைப் பறவை (கவிதை) | ஏ. சீனிவாச ராகவன் |
| 11. | 1969 | பிசிராந்தையார் (நாடகம்) | பாரதிதாசன் |
| 12. | 1970 | அன்பளிப்பு (சிறு கதைகள்) | ஜி. அழகிரிசாமி |
| 13. | 1971 | சமுதாய வீதி (புதினம்) | நா. பார்த்தசாரதி |
| 14. | 1972 | சிலநேரங்களில் சில மனிதர்கள் (புதினம்) | டி. ஜெயகாந்தன் |
| 15. | 1973 | வேருக்கு நீர் (புதினம்) | இராஜம் கிருஷ்ணன் |
| 16. | 1974 | திருக்குறள் நீதி இலக்கியம் (இலக்கிய விமர்சனம்) | கே.டி. திருநாவுக்கரசு |



2003 ஏப்ரல் 23]

| | | | |
|---|---|---|---|
| 17. | 1975 | தற்கால தமிழ் இலக்கியம் (இலக்கிய விமர்சனம்) | ஆர். தண்டாயுதம் |
| 18. | 1977 | குருதிப்புனல் (புதினம்) | இந்திரா பார்த்தசாரதி |
| 19. | 1978 | புதுக் கவிதை தோற்றமும் வளர்ச்சியும் (விமர்சனம்) | வள்ளிக்கண்ணன் |
| 20. | 1979 | சக்தி வைத்தியம் (சிறு கதைகள்) | டி. ஜானகிராமன் |
| 21. | 1980 | சேரமான் காதலி (புதினம்) | கண்ணதாசன் |
| 22. | 1981 | புதிய உரைநடை . (விமர்சனம்) | எம். இராமலிங்கம் |
| 23. | 1982 | மணிக்கொடி காலம் (இலக்கிய வரலாறு) | பி.எஸ். இராமையா |
| 24. | 1983 | பாரதி காலமும் கருத்தும் (இலக்கிய விமர்சனம்) | டி.எம்.சி. இரகுநாதன் |
| 25. | 1984 | ஒரு காவிரியைப்போல (புதினம்) | திருபுரசுந்தரி 'லட்சுமி' |
| 26. | 1985 | கம்பன்: புதிய பார்வை (இலக்கிய விமர்சனம்) | ஏ.எஸ். ஞானசம்பந்தன் |
| 27. | 1986 | இலக்கியத்துக்கு ஒரு இயக்கம் (இலக்கிய விமர்சனம்) | க.நா. சுப்ரமண்யன் |
| 28. | 1987 | முதலில் இரவு வரும் (சிறு கதைகள்) | ஆதவன் சுந்தரம் |
| 29. | 1988 | வாழும் வள்ளுவம் (இலக்கிய விமர்சனம்) | வ.செ. குழந்தைசாமி |
| 30. | 1989 | சிந்தநாடி (சுயசரிதைக் கட்டுரைகள்) | லா. ச. இராமாமிர்தம் |
| 31. | 1990 | வேரில் பழுத்த பலா (புதினம்) | சு. சமுத்திரம் |
| 32. | 1991 | கோபாலபுரத்து மக்கள் (புதினம்) | கி. இராஜநாராயணன் |
| 33. | 1992 | குற்றாலக் குறிஞ்சி (வரலாற்றுப் புதினம்) | கோ.வி. மணிசேகரன் |

[2003 ஏப்ரல் 23

| | | | |
|---|---|---|---|
| 34. | 1993 | காதுகள் (புதினம்) | எம். வீ. வெங்கடராம் |
| 35. | 1994 | புதிய தரிசனங்கள் (புதினம்) | பொன்னீலன் (சந்தோஷவர பக்தவச்சலம்) |
| 36. | 1995 | வானம் வசப்படும் (புதினம்) | பிரபஞ்சன் |
| 37. | 1996 | அப்பாவின் சிநேகிதர் (சிறு கதைகள்) | அசோகமித்திரன் |
| 38. | 1997 | சாய்வு நாற்காலி (புதினம்) | தோப்பில் முகமது மீரான் |
| 39. | 1998 | விசாரணைக் கமிஷன் (புதினம்) | சா. கந்தசாமி |
| 40. | 1999 | ஆலாபனை (கவிதை) | எஸ். அப்துல் ரகுமான் |
| 41. | 2000 | விமர்சனங்கள், மதிப்புரைகள், பேட்டிகள் (விமர்சனம்) | க. சிவசங்கரன் |
| 42. | 2001 | சுதந்திர தாகம் 3-பகுதிகள் (புதினம்) | சி.எஸ். செல்லப்பா |
| 43. | 2002 | ஒரு கிராமத்து நதி சிரிப்பு (கவிதை) | பாலசுப்பிரமணியன் |

1957, 1959, 1960, 1964 (மற்றும்) 1976 ஆம் ஆண்டுகளில் விருதுகள் வழங்கப்படவில்லை.

8—

**அரசு சுகாதார நிலையம்**

**வினா எண் 23239—திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியத்தில் உள்ள 22 ஊராட்சிகளில் மூன்று இடங்களில் மட்டுமே அரசு சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 ஏப்ரல் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 82,163 (1991 கணக்கெடுப்பு) ஆகும். இங்கு 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் சென்னிமலை, காசிபாளையம், வெள்ளோடு ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. மத்திய அரசின் நெறிமுறையின்படி சமவெளிப் பகுதிகளில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அளவில் அமைக்கபபடுகிறது. எனவே காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியத்தில் தற்போதுள்ள 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால் இந்த ஊராட்சி ஒன்றியத்தில் மேலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

9—

**உடற்பயிற்சி மையம்**

**வினா எண் 27010—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை, மச்சுவாடி, சாந்தயாபுரம் பகுதிகளில் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் உடற்பயிற்சி மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை, மச்சுவாடி, சாந்தயாபுரம் பகுதிகளில் உடற்பயிற்சி மையங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2003 ஏப்ரல் 23

**10—**

## இரத்த வங்கி

**வினா எண் 27965—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசினர் மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கி செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு மருத்துவமனையில் உள்ள குருதி வங்கி செயல்பட அனைத்து துரித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. குருதி வங்கி உரிமத் தொகையான ரூ.7500/- செலுத்தப்பட்டு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் மருந்துக் கட்டுப்பாடு இயக்குநருக்கு அனுப்பியுள்ளார். மேற்காணும் மருத்துவமனையின் குருதி வங்கிக்கு உரிமம் வழங்க வேண்டி மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் அவர்களால் 23-1-2003 அன்று மத்திய உரிம ஒப்புதல் அதிகாரி, புதுடெல்லி அவர்களுக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெற்றவுடன் அரசு மருத்துவமனை குருதி வங்கி, குன்னூருக்கு உரிமம் வழங்கப்பட்டு குருதி வங்கி செயல்படத் தொடங்கும்.

**11—**

## பழுது சரி செய்தல்

**வினா எண் 22129—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள வேளாண்மை கிடங்கு பழுதுபட்டுள்ளதால், அதைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?



2003 ஏப்ரல் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலுள்ள வேளாண்மை கிடங்கின் பழுதினை சரிசெய்ய உரிய மதிப்பீட்டறிக்கையைப் பெற்று முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**12—**

## நீதிமன்ற நடவடிக்கை

**வினா எண் 27730—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தரமற்ற விதைகளை விற்பனை செய்யும் விற்பனையாளர்கள்மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் விதைக் குவியல்கள் அல்லது விற்பனைக்காக எடுத்துச் செல்லப்படும் விதைக் குவியல்கள் அல்லது விநியோகம் செய்யப்பட்ட விதைக் குவியல்களிலிருந்து விதை ஆய்வுப் பிரிவைச் சார்ந்த அறிவிக்கப்பட்ட விதை ஆய்வாளரால் (Notified Seed Inspector) தாம் உறுதி செய்ய விதைமாதிரி எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பி மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விதைத் தரங்கள் இல்லாத பட்சத்தில் விதைகள் சட்டம் 1966 பிரிவு 7 (பி) உடன் 6 (எ) படி விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள்மீது நீதிமன்ற நடவடிக்கை தொடரப்படுகிறது. தரமற்ற விதைகளை விற்பனை செய்வது சம்பந்தமாக ஆதாரங்களுடன் புகார்கள் பெறப்படும் பொழுதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இதுபோன்ற விதைச் சட்டம் மீறல்களுக்காக விதைச் சான்று துறையைச் சார்ந்த விதை ஆய்வுப் பிரிவினரால் கடந்த ஆண்டு

[2003 ஏப்ரல் 23

மட்டும் (2001-2002) 131 வழக்குகள் விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள்மீது நீதிமன்றங்களில் தொடரப்பட்டு, 125 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன. அதில் விதைச் சட்டத்தை முதலில் மீறியவர்களுக்கு ரூ.500/-ம், ஏற்கெனவே மீறியவர்களுக்கு ரூ.1000/-ம் அபராதம் விதித்து, அதன்படி ரூ.1,02,650/- அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது. மீதமுள்ள 6 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

13—

### விரிவாக்க மையம்

**வினா எண் 28850—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சள்நத்தம் ஊராட்சியில் வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சுஞ்சள்நத்தத்தில் புதிதாக வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க போதிய வாய்ப்பு தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

14—

### கொள்முதல் நிலையம்

**வினா எண் 30382—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரில் வேளாண்மைத் துறையினரால் சான்று விதைகள் கொள்முதல் நிலையம் தொடங்கும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2003 ஏப்ரல் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி நகரில் 1975-ஆம் ஆண்டு முதல் ஒரு வேளாண்மை விரிவாக்க மையம் செயல்பட்டு வருகிறது. இந்த வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் வேளாண்மைத் துறையினரால் சான்று பெற்ற நெல், பயறு, மற்றும் மணிலா விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும் துணைக் கிடங்குகள் அறந்தாங்கி வட்டாரத்தில் அத்தானி, சுப்பிரமணியபுரம், சிலட்டூர் மற்றும் மரமடக்கி என்ற நான்கு இடங்களிலும் செயல்பட்டு வருவதால் மேலும் விதைகள் கொள்முதல் நிலையம் அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை.

15—

### பயிர்ப் பாதுகாப்பு

**வினா எண் 30487—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய பயிர் காப்புறுதித் திட்டத்தை தமிழக அரசு எந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது?

(ஆ) இதில் எவ்வளவு விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் தேசிய பயிர் காப்புறுதித் திட்டம் கரிப் 2000 பருவம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் 72154 விவசாயிகளுக்கு ரூ.17,17,88,155.31 கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:

[2003 ஏப்ரல் 23

| வ. எண் | பயிர் விவரம் | பயன்பெற்ற விவசாயிகள் | தொகை வழங்கப்பட்டது. |
|---|---|---|---|
| 1. | நெல்-II *(2000-01)* சம்பா/தாளடி/பிஷானம் | 2160 | 44,82,723.72 |
| 2. | கரீப் (இதா பயிர்கள்) 2000-01 | 22 | 62,412.92 |
| 3. | ரபி (இதா பயிர்கள்) 2000-01 (கம்பு, கேழ்வரகு, சோளம், வேர்க்கடலை) | 819 | 9,83,753.04 |
| 4. | நெல் *(2001-02)* கார்/குறுவை/ சொர்ணவாரி (1) | 5548 | 80,25,167.15 |
| 5. | நெல்-II *(2001-02)* சம்பா/தாளடி/பிஷானம் | 60598 | 15,46,36,333.50 |
| 6. | நெல்-III *(2001-02)* நவரை/கோடை | 643 | 6,67,987.90 |
| 7. | கரீப் (இதா பயிர்கள்) (2001-02) | 41 | 77,820.80 |
| 8. | ரபி (இதா பயிர்கள்) (2001-02) கம்பு, கேழ்வரகு, சோளம், வேர்க்கடலை | 2323 | 28,51,956.28 |
| | மொத்தம் | 72154 | 17,17,88,155.31 |

**16—**

### விதை நெல் விற்பனை

**வினா எண் 30615—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்ற ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் விதை நெல் எத்தனை கிலோக்கள் மானியத்துடன் விநியோகிக்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சென்ற ஆண்டில் (2001-2002) ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 10,80,850 கிலோ விதை நெல் ரூ.21,61,700 இலட்சம் மானியத்தில் விநியோகிக்கப்பட்டது.



2003 ஏப்ரல் 23]

**17—**

### விதை நெல்

**வினா எண் 30617—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்ற நிதியாண்டில் வேளாண்மைத் துறையில் விதை நெல் எத்தனை கிலோக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

சென்ற நிதியாண்டில் (2001-2002) வேளாண்மைத் துறையின் மூலம் 18,799.476 மெட்ரிக் டன் சான்று பெற்ற நெல் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

**18—**

### பணிமனைகள்

**வினா எண் 7777—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனைகள் எத்தனை உள்ளன?

(ஆ) எவ்வளவு பேருந்துகள் இந்தப் பணிமனைகளில் உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்-கோட்டம்-2) தருமபுரியின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் (சேலம் மற்றும் திருப்பத்தூரில் உள்ள பணிமனை நீங்கலாக) 12 பணிமனைகள் செயல்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:-

[2003 ஏப்ரல் 23

| வரிசை எண் | பணிமனை விவரம் | பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | தருமபுரி புறநகர் கிளை | 53 |
| 2) | தருமபுரி நகர் கிளை | 68 |
| 3) | கிருஷ்ணகிரி புறநகர் கிளை | 71 |
| 4) | கிருஷ்ணகிரி நகர் கிளை | 72 |
| 5) | ஓசூர் புறநகர் கிளை | 58 |
| 6) | ஓசூர் நகர் கிளை | 60 |
| 7) | பெண்ணாகரம் கிளை | 35 |
| 8) | அரூர் கிளை | 38 |
| 9) | ஊத்தங்கரை கிளை | 30 |
| 10) | பொம்மிடி கிளை | 10 |
| 11) | பாலக்கோடு கிளை | 27 |
| 12) | தேன்கனிக்கோட்டை கிளை | 23 |
| | மொத்தம் | 545 |

மேலே கண்டுள்ளவாறு அப்பணிமனைகளில் 545 பேருந்துகள் இயங்கி வருகின்றன.

**19—**

**நிரந்தரக் கட்டடங்கள்**

**வினா எண் 14307—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 23]

சேலம், தருமபுரி மாவட்டங்களிலுள்ள அரசுப் பேருந்து பணிமனைகள் தற்காலிகக் கட்டடங்களில் செயல்பட்டு வருவதால், அவற்றிற்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்டித்தர அரசு திட்டங்கள் தீட்டியுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம், தருமபுரி மாவட்டங்களில் இயங்கி வரும் அரசுப் போக்குவரத்துக் கழக அனைத்து பணிமனைகளும் நிரந்தரக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன. இருப்பினும் சேலம் மாவட்டம், ஓமலூரில் உள்ள பணிமனை மட்டும் தனியார் நிலத்தினை வாடகைக்குப் பெற்று பராமரிப்புக் கூடம் அமைக்கப்பட்டு பணிமனை இயங்கி வருகிறது. ஓமலூரில் நிரந்தரமாகப் பணிமனை அமைக்கும் பொருட்டு நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**20—**

**சலுகை**

**வினா எண் 15824—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் அரசுப் பேருந்துகளில் சலுகை அடிப்படையில் பயணம் செய்ய அரசு அனுமதியளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 50 சதவீத பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. எனினும் சுயநிதிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பயணச் சலுகை வழங்கப்படுவதில்லை. அத்தகைய மாணவர்களுக்கு இச்சலுகையை நீட்டிப்பது என்பது கொள்கையளவில் எடுக்கப்பட வேண்டிய முடிவாகும்.

[2003 ஏப்ரல் 23

21—

**முன்பதிவகம்**

**வினா எண் 23162—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் அரசு விரைவுப் பேருந்துகள் முன்பதிவகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இயங்கும் சென்னை-சேலம் தடப் பேருந்துகள் மட்டும் கள்ளக்குறிச்சி வழியாக இயங்குகின்றன. கள்ளக்குறிச்சியிலிருந்து பேருந்து ஏதும் அக்கழகத்தின் மூலம் இயக்கப்படுவதில்லை. எனவே, கள்ளக்குறிச்சியில் முன்பதிவு மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

22—

**கட்டணம்**

**வினா எண் 23199—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் நகரிலிருந்து சேலம் செல்லும் அரசுப் பேருந்துகளில் சீலநாய்க்கன்பட்டி புறவழிச்சாலை பேருந்து நிறுத்தம் வரை செல்லும் பயணிகளிடம் சேலத்திற்கான கட்டணம் வசூல் செய்வதைத் தடுத்து சீலநாய்க்கன்பட்டி வரையுள்ள ஸ்டேஜ் கட்டணம் வசூலிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 ஏப்ரல் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல்-சேலம் வழித்தடத்தில் சீலநாய்க்கன்பட்டி கட்டண நிலை (ஸ்டேஜ்) உள்ளது. சீலநாய்க்கன்பட்டியை அடுத்த கட்டண நிலை சேலம் பேருந்து நிலையம் ஆகும். சீலநாய்க்கன்பட்டி புறவழிச்சாலை பேருந்து நிறுத்தம் நாமக்கல்லிலிருந்து சீலநாய்க்கன்பட்டி கட்டண நிலையைத் தாண்டி சேலம் பேருந்து நிலையம் செல்லும் வழியில் உள்ளது. எனவே, அங்கு இறங்கும் பயணிகளிடம் கட்டணப் பட்டியல் விதிப்படி அடுத்த கட்டண நிலையான சேலம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

23—

**புறநகர் பேருந்து நிறுத்தம்**

**வினா எண் 26424—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மூலப்பள்ளிப்பட்டி ஊராட்சி, ஆத்தூர் - ராசிபுரம் வழித்தடத்திலுள்ள கோரையாறு என்ற இடத்தில் புறநகர் பேருந்து நிறுத்தம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆத்தூர்-ராசிபுரம் வழித்தடத்தில் இயக்கப்படும் அனைத்து பேருந்துகளும் கோரையாறு பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்கின்றன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2003 ஏப்ரல் 23

24—

**உரிம பயிற்சி நிலையம்**

**வினா எண் 26627— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசு ஓட்டுநர் உரிம பயிற்சி நிலையங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) எந்தெந்த இடங்களில் உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 15 அரசு ஓட்டுநர் உரிம பயிற்சி நிலையங்கள் உள்ளன.

(ஆ) சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் கும்மிடிப்பூண்டி, குரோம்பேட்டை, திருச்சி மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து உளுந்தூர்பேட்டை, சேலம், ஈரோடு, மதுரை, பொள்ளாச்சி, திண்டுக்கல், திருநெல்வேலி, நாகர்கோவில், தருமபுரி, காரைக்குடி, விருதுநகர், கும்பகோணம் ஆகிய இடங்களில் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

25—

**குடிநீர்க் குழாய்கள்**

**வினா எண் 10860—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட 13-வது வார்டு பகுதி பிரதான சாலையில் பொது குடிநீர்க் குழாய்கள் அமைத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி, வார்டு 13 பகுதி பிரதான சாலையில் பொது குடிநீர்க் குழாய்கள் அமைத்து பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.



2003 ஏப்ரல் 23]

26—

**மேல்நிலைத் தொட்டி**

**வினா எண் 10892—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பனகுடி பேரூராட்சி, பாம்பன் குளம் கிராமத்திற்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பனகுடி பேரூராட்சி, பாம்பன் குளம் கிராமத்திற்கு புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்து அதிலிருந்து போதுமான குடிநீர் ஆதாரம் இருந்தால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி அதில் குடிநீர் ஏற்றி, பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய தற்போது பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் தற்போது ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

27—

**ஆழ்குழாய்க் கிணறு**

**வினா எண் 11819—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி, 9வது வார்டு விளாக்குளம் அருகில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

[2003 ஏப்ரல் 23

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி, 9-வது வார்டு விளாக்குளம் பகுதியில் குடிநீர் விநியோகம் உள்ளது. எனவே ஆழ்துளைக் கிணறு அமைக்கும் அவசியம் எழவில்லை.

**28—**

**சோடியம் மின் விளக்கு**

**வினா எண் 11905—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தேர்வுநிலைப் பேரூராட்சிக்குட்பட்ட மல்லிகை நகரில் நான்கு சோடியம் மின் விளக்குகள் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சிக்குட்பட்ட மல்லிகை நகரில் 6 டியூப் விளக்குகள் உள்ளன. பேரூராட்சி பகுதியில் புதிய சோடியம் விளக்கு அமைக்க அனுமதியும் இல்லை, போதிய நிதி வசதியும் இல்லை. எனவே தற்போது சோடியம் விளக்கு அமைக்கும் அவசியத் தேவை எழவில்லை.

**29—**

**தார்ச்சாலை அமைத்தல்**

**வினா எண் 11924—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தேர்வுநிலைப் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட மேல 3-ஆம் தெரு, கீழ 3-ஆம் தெரு ஆகிய இடங்களுக்கு தார்ச்சாலை போடுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?



2003 ஏப்ரல் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தேர்வுநிலைப் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட மேல 3-ஆம் தெரு, கீழ 3-ஆம் தெரு ஆகிய இடங்களில் தார்ச்சாலை போட தற்போது பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

**30—**

**தார்ச் சாலை**

**வினா எண் 12012—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, பத்தமடை பேரூராட்சி, மங்கையர்க்கரசி தெருவில் தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி, பத்தமடை பேரூராட்சி, மங்கையர்க்கரசி தெருவில் தார்ச் சாலை அமைக்க போதிய நிதி வசதி இல்லை. எனவே இப்பணியை செய்ய இயலாது.

**31—**

**தார்ச் சாலை**

**வினா எண் 12087—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தேர்வுநிலைப் பேரூராட்சிக்குட்பட்ட கொப்பரைச் சாலையை தார்ச்சாலையாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தேர்வுநிலைப் பேரூராட்சிக்குட்பட்ட கொப்பரைச் சாலையை தார்ச்சாலையாக அமைக்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

**32—**

**சாலை வசதி**

**வினா எண் 12100—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி தேர்வுநிலை பேரூராட்சி, பஞ்சாயத்து யூனியன் சமுதாயக் கூடம் அருகிலுள்ள சாலையை போடுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி தேர்வுநிலைப் பேரூராட்சி, பஞ்சாயத்து யூனியன் சமுதாயக் கூடம் அருகிலுள்ள சாலையை போடுவதற்கு 0.04 மீட்டர் நீளமுள்ள சாலையை அபிவிருத்தி செய்ய ரூபாய் 0.32 இலட்சம் செலவாகும். இதற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.



**33—**

**தெரு விளக்கு அமைத்தல்**

**வினா எண் 12132—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, அண்ணா நகர் பகுதியிலும், ஆவுடையம்மன் கோவில் செல்லும் வழியிலும் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி, அண்ணா நகர் பகுதியில் 4 தெரு விளக்குகள் நல்ல முறையில் பாராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆவுடையம்மன் கோவில் செல்லும் பாதையில் வீடுகள் ஏதும் இல்லை. இரவு நேரங்களில் அப்பகுதி பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லாததால் தெரு விளக்கு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**34—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 12228—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை கிராமம், முத்துக்குட்டியூர் காட்டுவளவு பகுதியில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை கிராமம், முத்துக்குட்டியூர் காட்டுவளவு பகுதியில் ஒரு கைப்பம்பும்,

[2003 ஏப்ரல் 23

விசைப்பம்புடன் குழாய் இணைப்பும் உள்ளது. மேலும் இப்பகுதிக்கு காவிரி குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**35—**

### குடிநீர் கிடைக்கச் செய்தல்

**வினா எண் 12237—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வெள்ளையம்பாளையம் கிராமம், காட்டுக்காடு மூலக்கடை பகுதியில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வெள்ளையம்பாளையம் கிராமம், காட்டுக்காடு மூலக்கடை பகுதியில் கைப்பம்பு ஒன்றும், விசைப்பம்பு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் உள்ளது. மேலும், இப்பகுதிக்கு காவிரி குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**36—**

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 12238—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், நடுவனேரி பகுதியில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், நடுவனேரி பகுதியில் இரு கைபபம்புகளும், விசைப்பம்பு மற்றும் பைப்லைன் வசதியும்



2003 ஏப்ரல் 23]

உள்ளது. மேலும் இப்பகுதிக்கு காவிரி குடிநீர் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இணைப்புக்காக பணிகள் நடைபெற்று வருகின்றன.

**37—**

### குடிநீர் கிடைக்கச் செய்தல்

**வினா எண் 12239—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அதாழையூர் கிராமம், குறவன்காட்டூர் பகுதியில் குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அதாழையூர் கிராமம், குறவன்காட்டூர் பகுதியில் உள்ள கைப்பம்பை விசைப்பம்பாக மாற்றியமைத்து குடிநீர் வசதி பெருக்கப்பட்டுள்ளது. மேலும், ஊராட்சி சாலையோரம் ஒரு கைப்பம்பு இயங்கி வருகிறது. மேலும் இப்பகுதி காவிரி குடிநீர் இணைப்பு கிராமப் பட்டியலில் சேர்க்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

**38—**

### குடிநீர் வசதி

**வினா எண் 12240—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் கிராமம், பண்டாரத்தான் காட்டில் குடிநீர் வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் கிராமம், பண்டாரத்தான் காட்டுப் பகுதியில் ஒரு கைப்பம்பு தற்போது உள்ளது. மேலும் இப்பகுதிக்கு காவிரி குடிநீர் வசதி செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**39—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 13242—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி பகுதியில் அனைத்து பள்ளிகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி பகுதியில் 2 பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளும், 11 தனியார் பள்ளிகளும் உள்ளன. பள்ளிகளுக்கு போதுமான குடிநீர் அந்தந்த நிர்வாகத்தால் தங்களது தேவைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும் பள்ளியின் பக்கத்தில் உள்ள பொது நல்லி மற்றும் ஆழ்குழாய் கிணறுகள் மூலமும் தண்ணீர் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

**40—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 13336—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, செம்மேடு, வடிவேல்கவுண்டனூர் ஆகிய ஊர்களில் போதுமான குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சியில் செம்மேடு கிராமத்தில் ஏற்கெனவே ஒரு ஆழ்துளைக் கிணறும், வடிவேல்கவுண்டனூர் கிராமத்தில், இரண்டு ஆழ்துளைக் கிணறுகளும் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. இதில் வரும் நீர் போதுமானதாக உள்ளது. ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் தற்போது இதைத் தவிர கூடுதல் குடிநீர் வசதி செய்து கொடுக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**41—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 13355—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, ஜக்கம்பட்டி காலனிக்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, ஜக்கம்பட்டி காலனியில் ஒரு ஆழ்துளைக் கிணறும், 1 குடிநீர்க் கிணறும் நல்ல நிலையில் இயங்குகின்றன. இதைத்தவிர கூடுதல் குடிநீர் வசதி செய்து தொடர சாத்தியக்கூறுகள் இல்லை.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 185894 சென்னை-600 008

[2003 ஏப்ரல் 23

**42—**

## குடிநீர் வசதி

**வினா எண் 13363—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைசசர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, பொடாரான்காடு கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, பொடாரான்காடு கிராமத்தில் ஏற்கெனவே ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

**43—**

## குடிநீர் வசதிகள் செய்தல்

**வினா எண் 13365—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, சாமத்தாள் கிராமத்திற்கு நடப்பாண்டில் போதுமான குடிநீர் வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, சாமத்தாள் கிராமத்தில் 2 ஆழ்துளைக் கிணறுகள் நல்ல நிலையில் இயங்குகின்றன.



2003 ஏப்ரல் 23]

**44—**

## குடிநீர் வசதி செய்தல்

**வினா எண் 13375—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, மலையனூர் கிராமத்திற்கு நடப்பாண்டில் குடிநீர் வசதி செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, மலையனூர் கிராமத்தில் ஒரு ஆழ்துளைக் கிணறும், 1 மேல்நிலை தொட்டியும் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. இதுவே போதுமானதாக உள்ளது.

**45—**

## குடிநீர் வசதி செய்தல்

**வினா எண் 13376—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட இராமகொண்டஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சந்தனக்கொடிகால் ஊருக்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, சந்தனக்கொடிகால் ஊரில் இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்குகின்றன.

46— [2003 ஏப்ரல் 23

**குடிநீர் வசதி**

**வினா எண் 13383—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, சந்தைமேடு, காணிக்காடு, அருந்ததியர் காலனி போன்ற ஊர்களுக்கு நடப்பாண்டில் உடன் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, சந்தைமேடு, காணிக்காடு, அருந்ததியர் காலனி ஆகிய இடங்களில் 3 ஆழ்துளைக் கிணறுகள் நல்ல நிலையில் இயங்குகின்றன. இதுவே போதுமானதாக உள்ளது.

47—

**குடிநீர் வசதிகள்**

**வினா எண் 13384—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, கவுண்டனூர், நல்லூர்காடு ஆகிய கிராமங்களுக்கு போதுமான குடிநீர் வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, கவுண்டனூர், நல்லூர்காடு ஆகிய



2003 ஏப்ரல் 23]

கிராமங்களில் ஒரு ஆழ்துளைக் கிணறு நல்ல நிலையில் இயங்குகிறது. இதுவே போதுமானதாக உள்ளது.

48—

**குடிநீர்**

**வினா எண் 13385—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, புதுநாகரை கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி இராமகொண்டஅள்ளி ஊராட்சி, புதுநாகரை கிராமத்தில் 2 ஆழ்துளைக் கிணறுகள் நல்ல நிலையில் இயங்குகின்றன. இதுவே போதுமானதாக உள்ளது.

49—

**சாக்கடை வசதி**

**வினா எண் 14716—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில் முறையான சாக்கடை வசதிகளை மேம்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை. சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சி பகுதியில் தற்போது 4.20 கி.மீ. நீளமுள்ள பக்கா சாக்கடை பராமரிக்கப்பட்டு

வருகிறது. மேலும் இப்பேரூராட்சிக்குட்பட்ட 3, 4-வது வார்டு கே.கே. நகர் பகுதியிலும், 10-வது வார்டு காந்தி நகர் பகுதியிலும், 13-வது வார்டு மோட்டூர் பகுதியிலும் சுமார் 6.00 கி.மீ. நீளம் சாக்கடை அமைக்க தோராயமாக ரூபாய் 36 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. தற்போது பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் தற்போது இப்பணி மேற்கொள்ள வாய்ப்பில்லை.

**50—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 25910—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சி, கிருஷ்ணாபுரம் முதல் பூனைகுண்டு வழியாக நீர்குந்தி வரையிலான சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* பெண்ணாகரம் பேரூராட்சி, கிருஷ்ணாபுரம் பகுதியிலிருந்து தார்ச் சாலையாக அமைக்க ரூ.10 இலட்சமும், கிருஷ்ணாபுரம் பகுதியிலிருந்து நீர்குந்தி பகுதிக்குச் செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைக்க ரூ.10 இலட்சமும் செலவாகும். மேற்கூறிய சாலைகளை தார்ச் சாலைகளாக அமைக்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் பணிகளை செயல்படுத்த இயலவில்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### காஞ்சிபுரம் மாவட்டம், பழையசீவரம் கிராமம் அருகே மணல் கொள்ளையைத் தடுத்த வருவாய் ஆய்வாளர் கொல்லப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காஞ்சிபுரம் மாவட்டம், பழையசீவரம் கிராமத்தின் அருகே மணற்கொள்ளையைத் தடுத்த வருவாய் ஆய்வாளர் கொல்லப்பட்டது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், திரு. சி. ஞானசேகரன் அவர்கள், திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள், திரு. டி. மணி அவர்கள், செல்வி க. பாலபாரதி அவர்கள், திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள், திரு. சோ. இராசேந்திரன் அவர்கள், திரு. ஜி.கே. மணி அவர்கள், திரு. ஐ. கணேசன் அவர்கள் தந்திருக்கின்றார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று திரு. ஜி. பழனிசாமி அவர்கள், திரு. லா. சந்தானம் அவர்கள் அறிவிப்பு தந்திருக்கின்றார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் சுருக்கமாக அரசின் கவனத்திற்கு விளக்கம் அளிக்க வேண்டுகிறேன். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல காலமாக மணல் கொள்ளை நடைபெற்று வருகின்றது. குறிப்பாக காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம் போன்ற பகுதிகளில் இதுபோன்ற புகார்கள் பல காலமாக வந்துகொண்டு இருக்கின்றன. காஞ்சிபுரம் பகுதியிலே இதுபோன்ற புகார்கள் வந்த காரணத்தினாலே வருவாய் அலுவலர்கள் சோதனை நடத்தத் திட்டமிட்டார்கள். காஞ்சிபுரத்தை அடுத்துள்ள பழையசீவரம் பகுதியை ஒட்டியுள்ள பாலாற்றுப்படுகையில் மணல் கொள்ளை நடைபெறுகிறது என்று அவர்களுக்குத் தகவல் வருகிறது. எனவே, சோதனை நடத்துவது என்று முடிவு செய்து அனைவருக்கும் அறிவித்தால், அது வெளியே தெரிந்துவிடுகிறது, அவர்களைப் பிடிக்கமுடியவில்லை என்ற காரணத்தினாலே, வருவாய் அலுவலர்கள் அருகிலே உள்ள ஓர் ஆலைக்குச் சென்று இரவு முழுவதும் கண் விழித்து தங்கியிருக்கின்றார்கள். யாருக்கும் சொல்லாமல், காவல் துறைக்கும்கூட சொல்லாமல், யாருக்குச் சொன்னாலும் செய்தி வெளியே போய்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2003 ஏப்ரல் 23

விடுகிறது, யாரும் கிடைப்பதில்லை என்ற காரணத்தினாலே, எப்படியும் பிடித்தாக வேண்டும் என்று சில உயர் அதிகாரிகள் கட்டளையிட்டுள்ள காரணத்தினால், அவர்கள் அங்கே போய் தங்கி இருக்கின்றார்கள். விடியற்காலை சுமார் 4½ மணி, 5 மணி அளவில் பாலாற்றிலே மணல் அள்ளிக் கொண்டு இருக்கின்றார்கள், லாரிகள் அங்கே அள்ளிக் கொண்டிருக்கின்றன என்ற தகவல் வந்தவுடனே அவர்களுக்கும் தெரிந்து அங்கே போகின்றார்கள்.

*முற்பகல் 11-05*

காலையிலே அவர்களைப் பார்த்தவுடனே, சில லாரிகள் புறப்பட்டு வருகின்றன. ஒரு லாரி விளக்கு போட்டுக்கொண்டு மிக வேகமாக வருகிறது. அந்த லாரி எதிரிலே தாசில்தார் வந்திருக்கிறார், வருவாய் ஆய்வாளர் வந்திருக்கிறார். வருவாய் ஆய்வாளர் குறுக்கிட்டு, அதைத் தடுத்து நிறுத்தச் சொல்ல, வருவாய் ஆய்வாளரைத் தாண்டி அந்த லாரி சென்றுவிட்டது. அதற்குப் பின்னாலே வந்த லாரி, திடீரென்று விளக்கை அணைத்து, இவர் மேலே அடித்துத் தள்ளிவிட்டு, வேகமாகச் சென்றுவிடுகிறது. இந்த நிகழ்ச்சி என்பது பகிரங்கமாக நடைபெற்ற கொலை, இது அரசுக்கு விடப்பட்ட சவால் என்றே நான் கருதுகிறேன். இது ஒன்றும் புதிதல்ல. இந்த மாவட்டங்களிலே கடந்த காலத்திலே நீங்கள் எடுத்துக்கொண்டால், ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் பயணம் செய்த கார் மீதே லாரி இடித்து, கொலை செய்கிற முயற்சி நடைபெற்றிருக்கிறது. அதேபோல மாவட்ட வருவாய் அலுவலர் மீது தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. தாசில்தார் மீது தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் இதுபோன்ற மணல் கொள்ளைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வேலூர் மாவட்டத்திலேகூட நடைபெற்ற கொள்ளைகள் பற்றி, மாமண்டூரிலே வேகாமங்கலத்திலே நடைபெற்ற கொள்ளைகள் பற்றி, நான் இங்கே பேசியிருக்கிறேன். இப்படி தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கின்றன. ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலே இந்த கொலை நடைபெற்றிருக்கிறது. இரண்டு நாட்கள் யாரையும் பிடிக்கவில்லை. காரணம் கேட்டால் தகவல் இல்லை, சரியான தகவல் இல்லை, லாரிகளுடைய எண்களையே எங்களாலே பார்க்க முடியவில்லை என்று தகவல் சொல்கிறார்கள். அதையே காவல் துறை அதிகாரிகள் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இது அரசுக்கு விடப்படுகிற சவாலே தவிர வேறு ஒன்றும் அல்ல. நேற்றையதினம் டிரைவர் கைது செய்யப்பட்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. அவரை ரிமாண்டு செய்திருக்கிறார்கள். ஒரு



2003 ஏப்ரல் 23] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

ஸ்டேட்மெண்ட்கூட, முறையான ஸ்டேட்மெண்ட்கூட வாங்காமல், அவரை ரிமாண்ட் செய்திருக்கிறார்கள். ஏனென்றால் 7 லாரி இருந்ததாக முதலில் செய்தி வருகிறது. இன்றையதினம் அது 6 லாரியாக குறைந்திருக்கிறது. அந்த 6 லாரிகளுக்குக்கூட என்ன நெம்பர் என்று தெரியாது. எனவே, அந்த டிரைவரைப் பிடித்து, அவரிடத்திலே விசாரணை நடத்தி ஒரு ஸ்டேட்மெண்ட் பதிவு செய்து இருக்கவேண்டும். பதிவு செய்யவில்லை. அது மட்டுமல்ல. திடீரென்று நடைபெற்ற ஒரு சம்பவம் அல்ல. தொடர்ந்து நடைபெற்று வருகிற ஒரு கொள்ளைச் சம்பவம், அந்தக் கொள்ளையின் தொடர்பாக இவை எல்லாம் நடைபெறுகின்றன.

Law and order machinery has been broken down என்பதுதான் பொதுவான கருத்து. லாரி நெம்பர்கூட தெரியவில்லை என்று நேற்று காலையில் வந்த பத்திரிகை செய்திகூட உயர் போலீஸ் அதிகாரியே சொல்லியிருக்கிறார். யாரும் தகவல் தரத் தயாராக இல்லை என்று சொல்கிறார். யாருமே தகவல் தரவில்லை என்று சொன்னால், இதில் என்ன செய்வது? அச்சம்தான் காரணம். எல்லோருமே மணல் கொள்ளைக்குத் துணை போகிறார்கள் என்று நிச்சயமாக நான் சொல்ல மாட்டேன். அதிகாரிகளுக்கும் தெரிந்து மணல் கொள்ளை போகிறது என்பது உண்மை. வேறு யாரும் முன்வந்து தகவல் தராததற்குக் காரணம், அச்சம்தான் காரணம். அந்த அளவிற்கு ஒரு மாஃபியா கும்பலாக, அந்தக் கும்பல் வளர்ந்து விட்டிருக்கிறது. ஆகவே, இதனுடைய பின்னணியிலே உள்ள மர்ம முடிச்சுக்களை அவிழ்ப்பதற்கு ஒரே வழி நீதி விசாரணைதான் வழி என்று நினைக்கிறேன். ஒரு நீதி விசாரணைக் கமிஷனை வைத்து, இதை முழுமையாக விசாரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறந்த வருவாய் ஆய்வாளர் சண்முகசுந்தரம் அவர்கள் இந்த மணல் கொள்ளையைத் தடுப்பதில் பல காலமாக முனைப்புக் காட்டி வந்தவர். பல முறை, பலர்மீது அவர் நடவடிக்கை எடுத்து இருக்கிறார். அவர்மீது மணல் கொள்ளைக்காரர்களுக்கு ஆத்திரம் உண்டு. பலருக்கு அபராதம் விதித்த காரணத்தினாலே ஆத்திரம் உண்டு. இந்த முறைகூட அவர்தான் முனைப்புக் காட்டி வந்தார் என்று பலருக்கும் அவர்மீது சந்தேகம். ஏனென்று சொன்னால் யாருக்கும் சொல்லாது, வெளியிலே அலுவலகத்தைவிட்டு மாலையிலே வந்த நேரத்தில்கூட, காலையிலே சோதனை நடத்தப் போகிறோம் என்று யாரிடத்திலேயும்

சொல்லவில்லை. யாரிடத்திலே சொன்னாலும் அது வெளியிலே தெரிந்துவிடுகிறது என்கிற காணத்தினாலே, குறிப்பிட்ட சில நபர்களைத் தவிர யாருக்கும் சொல்லவில்லை. அவர்கள் அதுபோன்று முனைப்புக் காட்டி செயல்பட்டக் காரணத்தால், இன்றைக்குப் பலியாகியிருக்கிறார்கள். அவர் திருமணம் ஆனவர். அவருக்கு மனைவி இருக்கிறார். ஒரு மகளும், ஒரு மகனும் இருக்கிறார்கள். மகளுக்கு அண்மையிலே திருமணம் ஆகியிருக்கிறது. மகன் இன்னும் மேல்நிலைப் பள்ளியைத் தாண்டவில்லை. அவருக்கு வயோதிகப் பெற்றோர்கள் இருக்கிறார்கள். தந்தைக்கு வயது 80-க்கு மேலாகிறது. இரண்டு பேரும் நோய்வாய்ப்பட்டவர்கள். அவர்களைப் பராமரிக்க வேண்டிய கடமையும் அந்தக் குடும்பத்திற்கு இருக்கிறது. பலியான அவருடைய குடும்பத்திற்கு, யாராவது ஒரு நபருக்காவது அரசு வேலை அளிக்க வேண்டும், கொடுக்க வெண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அவருடைய மகனுக்கு மேல்நிலைப் பள்ளியைத் தாண்டாத அவருடைய மகனுக்கு அரசு கல்வி, முறையான கல்வி, தொழில் கல்வியை விரும்புவாரேயானால், தொழில் கல்வி தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவருக்கு வர வேண்டிய பணிக்கொடைகளைத் தவிர, குறைந்தபட்சம் 5 இலட்ச ரூபாய் நஷ்டஈடாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மணல் கொள்ளைக்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், ஆற்றுப்படுகையில் 23 அடிக்குக்கீழே தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். நிலத்தடி நீர் மட்டம் குறைந்துகொண்டே வருகிறது. இதற்கெல்லாம் ஒரு அணை போட்டாக வேண்டும். எனவே, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கண்டிப்பாக, இதனை முழுமையாக விசாரிக்க, இந்தச் சம்பவத்தையும் இதனுடைய தொடர்ச்சியாக இருக்கிற மற்ற சம்பவங்களையும் விசாரிக்க ஒரு நீதி விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்று அரசைக் கேட்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், பழையசீவரம் கிராமத்திலே மணல் கொள்ளையர்களால் லாரியின் மூலமாக வருவாய் ஆய்வாளர் சண்முக சந்தாம் என்பவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். அதிலும், இந்தச் சம்பவம் நடந்தது என்பது லாரிகள் எல்லாம் போராட்டத்தில்





இருக்கக்கூடிய நேரம். இப்படி லாரிகள் எல்லாம் ஸ்டிரைக் செய்கிற நேரத்திலே இருக்கும்போது, மணல் கொள்ளையர்கள் அல்லாமல், யாரோ சில புது திருடர்கள் அங்கே வந்திருக்கிறார்கள், என்ற தகவல் அதிகாரிகளுக்கு அந்த பெரிய மணல் கொள்ளையர்களாலே தகவல் கொடுக்கப்பட்டு, அதன் மூலமாக அதிகாரிகள் சோதனையிடச் சென்றதாக ஒரு பக்கம் தகவல் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இதிலேயிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், மணல் கொள்ளையர்கள் மாஃபியா கும்பலைப்போல கொள்ளை அடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதன் இடையிலே யாரும் ஊடுருவி விடக்கூடாது என்பதற்காகவும் அவர்கள் தூண்டுதலின் பேரிலே நடைபெற்றிருக்கிறது. இப்படி இதைத் தூண்டுதல் என்று சொல்லியோ அல்லது லாரி விபத்து என்று சொல்லியோ, இந்த நடவடிக்கையை சாதாரணமாக விட்டுவிடாமல் இதற்குப் பின்னணி என்ன என்பதை மணல் கொள்ளையர்கள் எப்படியெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. அதே நேரத்திலே ஒரு உயிர் பலியாகிவிட்டது என்ற நிலையிலே மட்டுமல்ல, அரசுக்கு வரக்கூடிய வருமானம் என்பது மிகப் பெரிய இழப்பாகப் போய்க்கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு காஞ்சிபுரம் மாவட்டத்திலே, திருவள்ளூர் மாவட்டத்திலே, அங்கே நடைமுறையிலே இருக்கக்கூடியது ஒரு லாரி லோடுக்கு அரசாங்கத்தினுடைய பர்மிட் கட்டணம் 180 ரூபாய் என்று ரசீது கொடுக்கப்படுகிறது.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவை தலைவர்:** திரு. மணி, குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி சொல்லுங்கள். இதுபற்றி விளக்கவுரையாற்றுவதற்கு நேரம் இல்லை. மானியக் கோரிக்கைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே இந்தச் சம்பவத்தைப்பற்றி திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னார்கள். ஏதாவது அதிலே விடுபட்ட சில பாய்ண்ட்ஸ் இருந்தால் சொல்லலாம். அதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையைச் சொல்வதற்காக எவ்வளவு மோசடி நடந்து கொண்டிருக்கிறது என்பதை - 180 ரூபாய் ரசீது கட்டணம். ஆனால் அவர்கள் வசூலிப்பது 750 ரூபாயிலிருந்து 1000 ரூபாய் வரை...

[2003 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதுபற்றி விரிவாக நாம் வேறு நோத்திலே பேசலாம். இந்தச் சம்பவம்தான் இப்பொழுது முக்கியம்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே 750 ரூபாயிலிருந்து 1000 ரூபாய் வரைக்கும் வசூலிக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டத்திலே ஏறக்குறைய 4 ஆயிரத்திலிருந்து 5000 லோடுகள் வரையிலும் கடத்திச் செல்லப்படுகிறது. அரசாங்கத்திற்கு மாதம் ஒன்றுக்கு எவ்வளவு இலட்சம், கோடிக் கணக்கிலே ஆண்டுக்கு இழப்பு ஏற்படுகிறது என்கின்ற உண்மை இதிலே மறைந்திருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இவ்வளவு அரசுக்கும் இழப்பு. அதே நேரத்திலே மிகப்பெரிய மணல் கொள்ளையர்களாலே தூண்டிவிடப்பட்டு, இந்த அரசாங்க அதிகாரிகள் பலியாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் மனதிலே கொண்டு, இதை சாதாரண நிலையிலே விட்டுவிடக் கூடாது. பாண்டூர் கிராமத்திலே வீடுகளுக்கு 300 ரூபாய் மணல் கொள்ளையர்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் வந்துவிடக்கூடாது தடுத்துவிடக்கூடாது என்றெல்லாம் திட்டமிட்டு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது மிகப்பெரிய கொள்ளைக் கும்பல். இதன் பின்னணி பெரிய அளவிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் மனதிலே வைத்து, இந்த மணல் கொள்ளையைத் தடுப்பதற்கு நேர்மையான நல்ல அதிகாரிகளை அங்கே நியமனம் செய்ய வேண்டும். ஒரு இடத்திலே இல்லாமல் 2, 3 இடங்களிலே செக்போஸ்ட் — சோதனைச் சாவடிகளை அமைக்க வேண்டும். இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்த நோத்திலே வைத்து அரசுக்கு அவ்வளவு பெரிய கடமையும் பொறுப்பும் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதே நேரத்திலே இறந்த சண்முகசுந்தரத்தை நம்பி இருந்த குடும்பம் இன்று மிகப்பெரிய சோதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குடும்பத்திலே ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். 5 இலட்சம் ரூபாய்க்குக் குறையாமல் நஷ்டஈட்டுத் தொகை வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்து, இந்த மணல் கொள்ளையைத் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது காஞ்சிபுரம் மாவட்டத்திலேயோ அல்லது திருவள்ளூர்



2003 ஏப்ரல் 23] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

மாவட்டத்திலேயோ நடந்த நிகழ்ச்சியானாலும் இந்த நிகழ்ச்சி என்பது இன்றைக்கு தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு கடமைப்பட்டிருக்கின்றேன். சென்ற 6, 7 ஆண்டுகளாக தமிழகத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலே இப்படிப்பட்ட மணல் கொள்ளை நடந்து கொண்டிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திலேயே அரசால் கட்டப்பட்டிருக்கிற 80 இலட்சம், 90 இலட்சம் மதிப்புள்ள பாலங்களுடைய தூண்களுக்கு அருகில் மணல் வாரப்பட்டு அந்தப் பாலங்களே இடிந்து விழக்கூடிய முறையிலே இன்றைக்கு நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு நம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகள் பல இடங்களுக்குச் சென்று முயற்சிக்கிற நோத்தில் அவர்கள் தாக்கப்பட்டு அவர்களைக் கொலை செய்வதற்கான முயற்சிகள்கூட நடந்து இருப்பதாக பல்வேறு விவரங்கள் இன்றைக்கு வந்து கொண்டிருக்கின்றன. இப்படி ஒரு மணல் மாஃபியா என்ற ஒரு செட் இன்றைக்கு தமிழகத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. Revenue Department— உடைய அதிகாரிகள் மட்டுமல்ல, கிராமப் பகுதிகளிலே இதைத் தடுத்து நிறுத்துபவர்களையே தாக்கக்கூடிய முறையிலே நிகழ்ச்சிகள் நடந்து கொண்டு இருப்பதாக பல்வேறு விவரங்கள் இன்றைக்கு பத்திரிகைகள் வழியாகவும் நமக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இதை ஒரு சமூகப் பிரச்சினை என்கிற முறையிலே அரசு பார்க்க வேண்டும்.

*முற்பகல் 11-15*

இங்கு மணலை எடுத்து வெளி மாநிலங்களுக்குக் கொண்டு சென்று கோடிக்கணக்கில் சம்பாதிக்கிற ஒரு நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய Mines Department மூலம் லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால், அந்த லைசென்ஸ்-ஐப பெற்றுக் கொண்டு, அவர்கள் எந்த இடத்திலே மணல் எடுக்கவேண்டும் என்று அதிலே நிபந்தனை போடப்பட்டிருக்கிறதோ, அதை உதாசீனப்படுத்தி வேறு பகுதிகளுக்குப் போய் மணல் எடுத்து, அங்கே மக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தக்கூடிய நிலைகூட இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிக்கிற மக்களைத் தாக்குகிறார்கள். இதிலே காவல் துறை போதுமான அளவிற்கு சம்பந்தப்படுகிறார்களா என்ற ஓர் ஐயப்பாடு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. Revenue Department மட்டும் இதனைத் தடுக்க முடியாது. காவல் துறையினுடைய active participation இதிலே இருப்பதன் மூலமாகத்தான் இந்த மாஃபியாவை

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2003 ஏப்ரல் 23

நாம் தடுத்து நிறுத்த முடியும். இது ஒரு சமூகப் பிரச்சினை. இன்றைக்கு அரசு அதிகாரிகள் இப்படி அரசு வேலைக்குச் செல்கிற நேரத்திலே, அவர்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுகிற நேரத்திலே, மற்ற அரசு ஊழியர்கள் இந்த வேலைக்குச் செல்வதற்கு தயக்கம் காட்டுகிற ஒரு நிலை ஏற்படுகிறது. இது நம்முடைய மக்களைப் பாதுகாக்கிற, சமூகத்தைப் பாதுகாக்கிற வேலையிலேயிருந்து, அரசு ஊழியர்களைத் தடுத்து நிறுத்தக்கூடிய முறையிலே உள்ள ஒரு நிகழ்ச்சி என்ற முறையிலே அரசு பார்த்து, இதை எப்படி தடுத்து நிறுத்த முடியுமோ, இந்த மாஃபியாவை எப்படி தடுத்து நிறுத்தி, மக்களைப் பாதுகாக்க முடியுமோ அப்படி பாதுகாக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, பாதிக்கப்பட்ட திரு. சண்முகசுந்தரம் அவர்களுடைய குடும்பத்திற்குத் தேவையான நிவாரணத்தைக் கொடுத்து, அரசு ஊழியர்களைப் பாதுகாக்கக்கூடிய முறையிலேயும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழையசீவரம் பகுதியில், பாலாற்றில் மணல் திருட்டின் காரணமாக கொலை செய்யப்பட்டிருக்கிறார் ஆய்வாளர் திரு. சண்முகசுந்தம். இதன்மீது ஒரு சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். பாலாறு என்ற நல்ல பெயரோடு கூடிய ஆறு, தண்ணீரின்றி இப்போது பாழாய்ப் போய்விட்டது. பாழாய்ப் போய்விட்ட ஆற்றிலே மணல் கொள்ளை என்பது வேகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பது வருந்தத்தக்க ஒன்று. குறிப்பாக, மணல் திருட்டைத் தடுப்பதற்கான முயற்சிகள் அதிகாரிகள் சார்பில், அரசின் சார்பில் தொடர்ந்து எடுக்கப்படுகின்றன. ஆனாலும், மணல் திருடுபவர்களுக்கும், தடுப்பவர்களுக்குமான உடன்படிக்கைகள் தமிழ்நாடு முழுவதிலும் பல இடங்களில் இருக்கிறது என்ற உண்மையை மறுக்க முடியாது. ஆகவே, இதற்குத் தனிக் கவனம் செலுத்தி, அரசு இதைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். குறிப்பாக, தமிழகத்தில் காவிரி ஆற்றிலேகூட மணல் கடுமையான அளவிற்கு திருடப்படுகிறது. ஒரு செய்தியைப் பார்த்தேன்; காவிரி ஆற்றில் மணல் திருடப்பட்டு, கேரளாவிற்குக் கொண்டு சென்று, அங்கே, கேரளாவிலே போர்டு போட்டு விற்பனை செய்கிறார்கள். 'தமிழ்நாட்டு காவிரி ஆற்றிலேயிருந்து எடுத்து வரப்பட்ட மணல்' என்று போர்டு போட்டு, நம்முடைய



2003 ஏப்ரல் 23] [திரு. வை. சிவபுண்ணியம்]

மணல் கேரளாவிலே விற்கப்படுகிறது என்ற செய்தி வந்திருக்கிறது. ஆகவே, இந்த மணல் திருட்டு என்பதற்கு உரிய களமாக நமது தமிழ்நாடு ஆகிவிட்டது என்பது வருத்தமாக இருக்கிறது. குறிப்பாக, மணல் என்பது ஒரு பொக்கிஷமாக, பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் குறைந்து கொண்டிருக்கிற அபாயத்திலே தமிழகம் இருந்து கொண்டிருக்கிறபோது, மணலைப் பாதுகாப்பது என்பது மிக முக்கியமான ஒன்றாகவே நான் கருதுகிறேன்.

ஒரு கணக்கின் அடிப்படையிலே, சற்றேறக்குறைய அது தவறாகவோ, சரியாகவோகூட இருக்கலாம். ஒரு கன அடி மணல் உருவாவதற்கு கிட்டத்தட்ட 200 ஆண்டு காலம் பிடிக்கும் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். ஆகவே, நம்முடைய தமிழகத்தில் இருக்கிற ஆறுகளில் இருக்கிற மணல் பரப்பில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இதிலே ஆய்வுகள் எல்லாம் வேண்டாம். இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தின் மேலே கருத்துகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இப்படி, இவ்வளவு காலம் பிடிக்கிற மணல் என்பது பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. கட்டடத் தேவைகளுக்கு வழங்கலாமே தவிர, ஆனால் இது திருடு போவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்துகிற முயற்சியின் காரணமாகத்தான் இப்படி உயிர்ப் பலி வரையிலும் ஏற்படுகிறது என்ற செய்திக்காக அதைக் குறிப்பிட்டுச் சொன்னேன். இதைத் தடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளவேண்டும். அதேபோல, தூத்துக்குடி துறைமுகம் வழியாகக் கூட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாக ஒரு தகவல் வந்து இருக்கிறது. ஆகவே, மணல் திருட்டு என்ற முறையில் பல கொள்ளையர்கள் இதிலே ஈடுபட்டு, கொலைகளையும் செய்கிற அளவிற்கு இதுபோய்விட்டது என்பது கொடுமையான நிகழ்ச்சி. ஆகவே, உயிரிழந்திருக்கிற திரு. சண்முகசுந்தரத்தினுடைய குடும்பத்தைப் பாதுகாக்கவேண்டும். அவருக்கு 5.00 இலட்சம் ரூபாய் நிதியை அரசு வழங்கவேண்டும். இதற்கு உரிய விசாரணை நடத்தி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

[2003 ஏப்ரல் 23

*முற்பகல் 11-20*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம் பழைய சீவரம் என்கின்ற கிராமத்திற்கு அருகிலே பாலாற்றிலே மணல் திருட்டு நடைபெறுகிறது என்கின்ற தகவலை அறிந்த அந்தப் பகுதியினுடைய தாசில்தார் திரு. ஜெயபால் அவர்களுடைய தலைமையிலே அதிகாரிகள் ஒன்று சேர்ந்து அந்தத் திருட்டைத் தடுக்க வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு அங்கே சென்ற நேரத்தில், அங்கே மணலை ஏற்றிச் சென்ற லாரியை தடுக்கின்ற முகத்தான் ஆய்வாளர் திரு. சண்முகசுந்தாம் அவர்கள் அந்த லாரியை தடுக்கின்ற நேரத்திலே, அந்த லாரி அவர்மீது ஏற்றப்பட்டு மிகக் கொடுமையாக மாரணம அடைந்திருக்கிறார் என்ற செய்தி நமக்கெல்லாம் மிகுந்த வருத்தத்தை அளிக்கின்ற செய்தியாக இருக்கிறது.

இன்றைக்கு இந்த மணல் திருட்டு என்பது இங்கு பேசியவர்கள் அனைவரும் குறிப்பிட்டதுபோல, ஆறுகள் இருக்கின்ற எல்லா இடங்களிலுமே இது மிக அதிகமாக நடந்துகொண்டிருக்கிற நிலை இருக்கிறது. அதைத் தடுக்கின்ற அதிகாரிகளைத் தாக்குகின்ற நிலையும், அவர்களுடைய உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்ற நிலையும் பல்வேறு இடங்களிலே இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால், இதிலே அரசு மிகுந்த கவனத்தோடு இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு இந்த லாரி கைப்பற்றபபட்டு. அதோடு அதனுடைய ஓட்டுநரும் இன்றைக்கு கைது செய்யப்பட்டிருக்கிறார் என்கின்ற தகவல் இருக்கிறது. இருந்தாலும் இந்த ஓட்டுநர்கள் இலகுவாக தப்பித்துக்கொள்வதற்கு சட்டத்திலே பல வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினால்தான் இப்படியெல்லாம் வருகின்ற அதிகாரிகளை அடித்துக் கொலை செய்கின்ற நிலைகூட ஏற்படுகிறது என்கின்ற காரணத்தினால், அந்த ஓட்டுநர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் அரசு இருக்கிறது. அதோடு அதற்குப் பின்னால் யார் இருக்கிறார்கள், எப்படிப்பட்டவர்கள் இந்த மணலையெல்லாம் திருடுகிற நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் கண்டறிய வேண்டிய பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது என்கின்ற காரணத்தினால் அவற்றையெல்லாம் கண்டறிந்து உரியவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்து தண்டிக்க வேண்டும். இன்றைக்கு இந்த மணல் திருட்டைத் தடுககச் சென்ற இடத்திலே உயிர் இழந்த ஆய்வாளர் சண்முகசுந்தரம் அவர்களுடைய குடும்பத்திற்கு உரிய நிவாரணத்தை அரசு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.



2003 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம் - காஞ்சிபுரம் வட்டம் பழைய சீவரம் கிராமத்தில் எஸ்.வி. சுகர்ஸ் கம்பெனி எதிர்புறம் அமைந்துள்ள பாலாற்றில் லாரிகள் மூலம் கள்ளத்தனமாக மணல் கடத்தப்படுவதைத் தடுக்க 19-4-2003 இரவு 11-00 மணியளவில், காஞ்சிபுரம் வட்டாட்சியர் திரு. ஜெயபால், காஞ்சிபுரம் குறுவட்ட வருவாய் ஆய்வர், திரு. சண்முகசுந்தரம், அலுவலக உதவியாளர் திரு. ஏ.எஸ். ராஜு, கிராம உதவியாளர் திரு. வேணுகோபால் ஆகியோருடன் டாடா சுமோ வாகனத்தில் பழைய சீவரம் சென்று மணல் திருட்டு நடக்கிறதா என்பதைக் கண்காணித்துள்ளனர். இரவு அப்பகுதியிலேயே தங்கியிருந்து, 20-4-2003 அதிகாலை 4-00 மணியளவில் திருட்டு மணல் எடுக்க லாரிகள் ஆற்றில் இறங்கியதை தெரிந்து கொண்டு அவர்களைத் தடுக்க குறுவட்ட வருவாய் ஆய்வாளர், திரு. சண்முகந்தரம் மற்றும் அவருக்கு உதவியாக திரு. வேணுகோபால், கிராமக் காவலர் ஆகியோர் எஸ்.வி. சுகர்ஸ் எதிர்புறமுள்ள பாலாற்றிற்கு நடந்துபோய் உள்ளார்கள். வட்டாட்சியரும் மற்றவர்களும் அவர்களைப் பின்தொடர்ந்து ஆற்றில் இறங்கியுள்ளனர். அப்பொழுது ஆற்றில் திருட்டு மணல் ஏற்ற வரதராஜன் லாரி, தனலட்சுமி லாரி, யுவாஞ்சனி லாரி, தேவி கருமாரி லாரி, விஜயலட்சுமி லாரி, செல்வவிநாயகர் லாரி ஆகிய லாரிகள் இருந்துள்ளன. வருவாய் அலுவலர்கள் வருவதைப் பார்த்து மேற்கண்ட லாரிகள் தப்பியோட முயற்சித்துள்ளன. குறுவட்ட வருவாய் ஆய்வர் திரு. ஆர். சண்முகசுந்தரம் கையிலிருந்த டார்ச் லைட் மூலம் சைகை காண்பித்து லாரிகளை நிறுத்தக் கோரியுள்ளார். ஆனால், அந்த லாரிகளில் ஒரு லாரியின் ஓட்டுநர் வருவாய் ஆய்வாளரின் உத்தரவுக்குச் சிறிதும் பணியாமல் அச்சுறுத்தும் வார்த்தைகளையும், கெட்ட வார்த்தைகளையும் பயன்படுத்தி கொலை செய்யும் நோக்கத்துடன், லாரியை நிறுத்தாமல் ஓட்டி, சண்முகசுந்தரத்தின் மீது மோதித் தள்ளிவிட்டுச் சென்றுவிட்டார். மற்ற ஐந்து லாரிகளும், அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டன. சண்முகசுந்தரம், காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக எடுத்துச் செல்லும் வழியில் இறந்துவிட்டார். வட்டாட்சியர் ஜெயபால் அவர்கள் அளித்த புகாரின் பேரில், பாலூர் காவல் நிலைய குற்ற எண் 65/2003, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் சட்டப் பிரிவுகள் 302, 379

மற்றும் 294 (பி) மற்றும் சுரங்கம் மற்றும் கனிமச் சட்டத்தின் பிரிவு 21 உட்பிரிவு (1)-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை முடித்து திரு. சண்முகசுந்தரம் அவர்களின் உடல் அவரது மனைவி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 11-25*

காஞ்சிபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு, இந்த வழக்கில் எதிரிகளையும், எதிரிகளின் வாகனங்களையும் கண்டுபிடிக்க ஐந்து தனிப்படைகள் அமைக்கப்பட்டு எதிரிகள் தேடப்பட்டு வருகின்றனர். புலன் விசாரணையில் ஆறு லாரிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகத்தின்பேரில் மூன்று லாரி உரிமையாளர்கள், மூன்று லாரி ஓட்டுநர்கள் மற்றும் நான்கு நபர்கள் விசாரிக்கப்பட்டனர். லாரி ஓட்டுநர் திரு. குமார் என்பவர் இது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார். அவர் 22-4-2003 அன்று இரவு 11-00 மணிக்கு செங்கல்பட்டு நீதித் துறை குற்றவியல் நடுவர்-1 முன் ஆஜர் செய்யப்பட்டு 15 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவு பெறப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் எட்டு பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அனைவரையும் விரைவில் கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் காவல் துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இந்த துயரச் சம்பவத்தில் கொல்லப்பட்ட வருவாய் ஆய்வர் திரு. சண்முகசுந்தரத்தை இழந்து வாடும் அவரது மனைவிக்கும், அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரது அசாதாரண தைரியம் மற்றும் பணியில் அவருக்கு இருந்த ஈடுபாடு ஆகியவற்றை கௌரவிக்கும் வகையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அவரது குடும்பத்தாருக்கு 5 இலட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே பேசுகின்றபோது, எத்தனை லாரிகள் என்றுகூடத் தெரியவில்லையென்று குறிப்பிட்டார். மொத்தம் 6 லாரிகள். லாரிகளின் நம்பர்கள்கூடத் தெரியவில்லை





என்றார். அது தவறான விவரம். லாரிகளின் பெயர்களைக்கூட காவல் துறையினர் தெரிந்துகொண்டு, அவற்றை நான் குறிப்பிட்டு உள்ளேன். அந்த ஆறு லாரிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்பதையும் இங்கே தெரிவித்தேன். கைது செய்யப்பட்ட லாரி ஓட்டுநர் குமாரிடமிருந்து ஒரு ஸ்டேட்மெண்ட்கூட பெறப்படவில்லை என்று எஸ்.ஆர்.பி. இங்கே குறிப்பிட்டார். அதுவும் தவறான தகவல். காஞ்சிபுரம் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளரிடமிருந்தே தகவலைப் பெற்று விட்டேன். குமார், தான்தான் லாரியை ஓட்டி, சண்முகசுந்தரம் மீது மோதினார் என்பதை ஒப்புக்கொண்டு அவரே ஒப்புதல் வாக்குமூலம்—கன்ஃபஷன் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சிவபுண்ணியம் அவர்களும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் இதைப்பற்றிப் பேசும்போது, தொடர்ந்து இந்த மணல் திருட்டு நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. இதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள், இந்த நேரத்தில் புரட்சித் தலைவர் 'திருடாதே' படத்தில் பாடிய பாடல் ஒன்றைத்தான் நான் நினைவூட்ட விரும்புகிறேன். "திட்டம்போட்டு திருடுற கூட்டம் திருடிக்கொண்டே இருக்குது, அதைச் சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்குது". (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களே இங்கே தெரிவித்தார்கள். அரசு அதிகாரிகள் இந்த மணல் திருடப்படுவதைத் தடுக்கத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே, இத்தகைய கள்ளத்தனமான நடவடிக்கைகள் நடைபெறுவது அரசுக்குத் தெரியும். தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. இனியும் எடுக்கும். ஆகவே, இதைப் பற்றி அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மீண்டும் புரட்சித் தலைவர் பாடிய பாடலையே நான் நினைவூட்டுகிறேன். 'ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொண்டு உரிய நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2003 ஏப்ரல் 23

## 3. உரிமை மீறல் பிரச்சினை

### (அ) 'இந்து' நாளிதழ்மீது

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் கவனத்திற்கு வந்த இரண்டு பிரச்சினைகள் குறித்து, என் தீர்ப்பை இப்போது வழங்க விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்தைப் பொறுத்தமட்டில், பத்திரிகைத் துறை மற்றும் பத்திரிகையாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உரிமைகள், முழுமையான அளவுக்குப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த மாமன்றம் அறியும்; இந்த நாடு அறியும்.

*12-4-2003* நாளிட்ட 'இந்து' பத்திரிகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றி உண்மைக்கு மாறாக, உள்நோக்கம் கொண்டு, அவர்களது புகழுக்கு மாசு கற்பிக்கும் வகையில்,

"Walk-out to protest CM Offensive"

என்ற தலைப்பின்கீழ், கீழ்க்கண்ட வார்த்தைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன:

"...the Chief Minister Jayalalithaa's stinging abuse..."

"...Unrestrained attacks on the Opposition..."

"...Ms. Jayalalithaa fumed..."

"...Incensed Ms. Jayalalithaa alleged in a highpitched tone..."

*13-4-2003* நாளிட்ட 'இந்து' பத்திரிகையில், திரு. ஜெயந்த் என்பவர் எழுதிய கட்டுரையில், கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"...The chastisement they received at the hands of the Chief Minister.."

"...43 other Legislators who raised this issue, were not only evicted, but also removed to the North Beach Police Station here a couple of days ago..."

"...Most of the Congress Legislators are shocked at the epithets the Chief Minister threw at the Opposition for its 'behaviour'..."

"...The conduct of Legislature...."





*23-4-2003* நாளிட்ட 'இந்து' பத்திரிகையில்,

"Jayalalithaa taunts Marxists again"

என்ற தலைப்பின்கீழ், கீழ்க்கண்டவாறு உண்மைக்கு மாறாக திரித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது;

"...Stung by the Chief Minister's diatribe, the Marxist members..."

"...She said education alone would not make a man sane, as leaders like Dr. Ramadoss and Dr. Krishnasamy, were notorious for casteist fanaticism.."

அரசின் செல்வாக்கையும், புகழையும், எந்த அளவிலாவது குறைக்க வேண்டுமென்ற வகையில், ஒரு உள்நோக்கத்தோடு தரங்கெட்ட வார்த்தைகளால், அவை உரிமைகளைப் பாதிக்கின்றவகையில் வெளியிடுவது, அவை உரிமையைப் பாதிப்பதாக உள்ளது. எனவே, இந்த ஆதாரமற்ற, நியாயமற்ற குற்றச்சாட்டுகளை விமர்சனம் செய்திருப்பது, அவை நடவடிக்கைகளைத் துச்சமாக மதித்து, பேரவையின் இறையாண்மையைப் பாதிப்பதால், இதனைப் பேரவை விதி 226-ன்கீழ் ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக, அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்.

### (ஆ) உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் மீது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றைய தினம், திரு. எஸ். ஆர். பி. அவர்கள் பேசிய வார்த்தைகளைத் தொடர்ந்து விவாதம் ஏற்பட்ட சூழ்நிலையில், நான் நீக்கியதை, அவைக் குறிப்பிலே மீண்டும் ஏற்றுகிறேன்.

ஜனநாயக அமைப்பில், சட்டமன்றத்திற்குள்ள மிக உயர்ந்த ஆளுகையையும், மாட்சிமையையும், இறையாண்மையும் காப்பாற்றுகின்ற பொறுப்பு எனக்கு உள்ளது. எனது நடவடிக்கைக்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில், ஆதாரமற்ற, நியாயமற்ற குற்றச்சாட்டுகளை, நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், இங்கு ஒலி வாங்கியை இயக்குவதற்குக் காவல் துறையைச் சேர்ந்த உளவுத் துறையினர் இங்கு இருப்பதாக அபாண்டமான குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

பேரவையின் மரபுகளைப் பேணாமல், உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தி, பேரவையின் உரிமைகளை மறுக்கின்ற வகையிலும், பேரவையின் கௌரவத்தைக்

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 23

குறைக்கும் வகையிலும், பேரவைக்கு மாசு கற்பிக்கும் வகையிலும், அவையின் நடவடிக்கைகளுக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலும் கூறியிருப்பது, அவையின் கண்ணியத்தைக் குறைப்பதாக அமைகிறது. இவர்களது செய்கையினால், சட்டமன்றம் அவதூறு கூற்றுகளுக்கு ஆளாக்கப்படும்போது, சட்டமன்றத்தின் உரிமைகள் பாதிக்கப்படுவது மட்டுமின்றி, ஜனநாயகத்திற்கு ஊறு விளைவிப்பதாகவும் அமைந்துவிடும்.

எனவே, இதனைப் பேரவை விதி 226-இன்கீழ் ஆய்ந்து அறிக்கை அளிக்க உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவைகள் மற்றும் மாநில நூலகக் குழுப் பேரவை உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு ஆறு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களையும், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு நான்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களையும், பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு ஓர் உறுப்பினரையும், மாநில நூலகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரையும் தேர்ந்தெடுக்க வேண்டுமென கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரது பதவிக் காலம், 13-9-2004 வரையாகும்.

மாநில நூலகக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரது பதவிக் காலம், 13-9-2004 வரையாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

நியமனத் தாள் வேண்டுவோர், சட்டமன்றப் பேரவைச் செயலகச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.



2003 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

வேட்பு மனுத் தாக்கல் செய்ய கடைசி நாள்—

30-4-2003-பிற்பகல் 3-00 மணி;

வேட்பு மனுக்கள் பரிசீலனை—

5-5-2003-பிற்பகல் 3-00 மணி;

வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுதல்—

9-5-2003-பிற்பகல் 3-00 மணி;

தேர்தல் நாள், தேவையிருப்பின்—

12-5-2003-முற்பகல் 10-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை.

## 5. கவன ஈர்ப்பு

### செயற்கை வைரத்திற்கு பட்டைதீட்டும் தொழில் நலிந்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடு)

## 6. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விதி 113-இன்கீழ் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு உரிமை மீறல் பிரச்சினை,—முதலமைச்சர் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே, நீங்கள் காலையிலே அவையிலே கேட்டீர்கள். (குறுக்கீடு) காலையிலே, அவையிலே கேட்டீர்கள். அப்போதே சொல்லியிருக்கிறேன்; அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஏற்கெனவே நான் இன்னொன்றையும் கொடுத்திருக்கிறேன். மேலும், இப்போது என்மீது உரிமை மீறல் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்குப் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல; மைக் உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். நான் கேட்க விரும்புவது ஒரு கேள்விதான். பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல், பேரவைத் தலைவருக்கே மைக் வராத காலம், இந்த அவையிலே நடந்திருக்கிறது. அந்தச் சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கும்; தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதில் விவாதமே கிடையாது. ஒரு தீர்ப்புக்குப் பிறகு, விவாதம் கிடையாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொல்வதை கேளுங்கள். (குறுக்கீடு) No, நான் கொடுத்த தீர்மானம் என்ன ஆனது?

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது மாதிரி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானம் போன்றவை எல்லாம் என்னுடைய அறையில் வந்து பேச வேண்டிய பிரச்சினைகள். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பற்றி எல்லாம் என்னுடைய அறையிலே வந்து பேச வேண்டும். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அறையில் பேசினேன்; நான் அறையில் கேட்டேன். எடுத்துக்கொள்ளலாம் என்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு எடுத்துக்கொள்வதாக இல்லை. (குறுக்கீடு) இன்றைக்கு எடுத்துக்கொள்வதாக நான் சொல்லவும் இல்லை. இப்படி அபாண்டமாகச் சொல்லியே உங்களுக்குப் பழக்கம் ஆகிவிட்டது.



## 5. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

### செயற்கை வைரத்திற்கு பட்டை தீட்டும் தொழில் நலிந்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டத்தில் செயற்கை வைரத்திற்கு பட்டை தீட்டும் தொழில் நலிந்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை, அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

புதுக்கோட்டை மாவட்டத்தில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழில்கள் விராலிமலை, இலுப்பூர், அன்னவாசல், பரம்பூர் மற்றும் திருவப்பூர் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வருகிறது. குறிப்பாக இலுப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 2400 பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தரமான செயற்கை வைரக் கற்களை உற்பத்தி செய்வதற்கு உரிய நவீன உயர்வகை பயிற்சியின்மையாலும், போதிய சந்தை வாய்ப்பு வசதியின்மையாலும், இத்தொழிலில் ஈடுபட்டவர்கள் சந்தை வாய்ப்புக்கு தனியார் ஏகபோக வணிகர்களைச் சார்ந்து இருக்க வேண்டியுள்ளதால் அவர்கள் உற்பத்தி செய்யும் செயற்கை வைரக் கற்களுக்கு ஆதாயகரமான விலை கிடைக்காமல் நலிந்துவிட்டனர்.

தற்போது திருச்சியில் செயல்பட்டு வரும் "ஜெம்சர்வ்" என்று அழைக்கப்படும் தொழிற் கூட்டுறவு சேவை சங்கத்தில்

இத்தொழிலாளர்கள் உறுப்பினர்களாக சேர்ந்து, அச்சங்கத்தின் வாயிலாக தமது செயற்கை வைரக் கற்களை நியாயமான விலைக்கு விற்பதன் மூலம் பயனடையலாம். மேலும் ஜெம்சர்வ் தொடங்கவுள்ள உயர் நுட்ப பயிற்சியில் சேர்ந்து தங்களது கைத்திறனை மேம்படுத்திக்கொள்வதின் மூலம் தரமான கற்களை உற்பத்தி செய்து பயனடையலாம்.

இதன் வாயிலாக தரமாக தயாரிக்கப்பட்ட பட்டை தீட்டப்பட்ட செயற்கை வைரக் கற்களுக்கு போதுமான விலை கிடைப்பதன் மூலம் இத்தொழில் நலிவடையாமல் புத்துயிர் பெற்று நடத்த இயலும்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே "ஜெம்சர்வ்" என்று அழைக்கப்படுகின்ற தொழிற் கூட்டுறவு சேவை சங்கத்தில் எத்தனை ஆயிரம் உறுப்பினர்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டு, பயனடைந்து உள்ளார்கள் என்பதையும், தொழிலாளர்கள் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து செயற்கை வைரக் கற்களையும் அந்த நிறுவனமே முழு விலை, நல்ல விலை கொடுத்து வாங்கிக்கொள்ளுமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலில் உள்ள 2400 பேர் சிறுதொழில் துறையில் பதிவுசெய்துள்ளனர். இதுதவிர, சிறுதொழில் துறையில் பதிவு செய்யாமல் இத்தொழிலைச் செய்பவர்கள் பற்றி தனியே சர்வே செய்யப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. எஸ்.எஸ்.ஐ.-யிலே பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுடைய எண்ணிக்கை இங்கே கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் தொழிலில், புதுக்கோட்டை மாவட்டம் மட்டுமல்லாது, திருச்சி மாவட்டம், கரூர் மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம் ஆகிய 4 மாவட்டங்களில் ஏறத்தாழ ஒரு இலட்சம் ஆண்களும், 70 ஆயிரம் பெண்களும், குறிப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்களும் இந்தத் தொழிலிலே ஈடுபட்டு வருகிறார்கள். இன்றைக்கு இந்தத் தொழிலிலே முழுவதுமாக படிப்பு அறிவில்லாதவர்கள் குடிசைத் தொழிலாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற





காரணத்தாலே, எஸ்.எஸ்.ஐ.-யிலே பதிவு செய்யப்படாத தொழிலாளர்களினுடைய நிலையைக் கருத்திலே கொண்டு, ஒரு விரிவான ஆய்வை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் பணிவோடு கேட்டுக்கொள்வது, இந்தத் தொழில் இன்றைக்கு நலிவடைந்துள்ளதற்குக் காரணம், இறக்குமதி காரணத்தால், வெளிநாட்டு மெருகுக் கற்கள் இறக்குமதி ஆகின்ற காரணத்தாலே, இறக்குமதி ஆகக்கூடிய அந்தக் கற்களுக்கு இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ள காரணத்தாலே, உள்ளூர் சந்தையிலே தயாரிக்கப்படக்கூடிய நம்முடைய உள்ளூர் கற்களுக்கு அங்கே மதிப்பு இல்லாமல், அந்தக் கற்கள் அவர்களோடு போட்டி போட இயலாத நிலையிலே இருந்துகொண்டு இருக்கிற காரணத்தாலே, அந்த இறக்குமதியைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலே, உள்ளூர் கற்களுக்கு அதிக விலை கிடைக்கக்கூடிய வகையிலே, உள்ளூர் கற்களுக்கு மார்க்கெட்டிங் கிடைக்கக்கூடிய வகையிலே, இறக்குமதி ஆகக்கூடிய அந்த வெளிநாட்டுக் கற்களை கட்டுப்படுத்த மைய அரசை மாநில அரசு கடிதம் மூலம் வலியுறுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு, பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் வாழ்விலே புத்துயிர் பெற தாயுள்ளத்தோடு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மைய அரசுக்குக் கொண்டு செல்வதற்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஞாபகத்திற்குக் கொண்டு செல்வதற்கும் பரிசீலனை செய்யப்படும்.

## 7. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 146 முதல் 148 வரையிலான 3 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

[2003 ஏப்ரல் 23

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 99 முதல் 104 வரையிலான 6 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2003 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 20 முதல் 24 வரையிலான 5 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2003 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 15 முதல் 18 வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 8. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

முற்பகல் 11-40

### கோரிக்கை எண் 31-தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 31, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



2003 ஏப்ரல் 23]

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.109,31,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 738, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4788, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5184, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5784, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6568, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7074, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7454, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8309, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8517, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு போரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2909, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6024, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8715, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4873, திரு. எச்.எம். ராஜு.





**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6780, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5700, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6856, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6293, திரு. லா. சந்தானம்.

**திரு. வா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8186, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குழந்தைத் தொழிலாளர்கள் முறையை அறவே ஒழிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1302, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6992, திரு. ஆர். கிருஷ்ணன்.



**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருக்கும் தாழ்த்தப்பட்ட அருந்ததியர் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8357, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண். 2215, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு படித்த பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6884, திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4570, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பீடி சுருட்டும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய உதவித் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5348, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தோல் பதனிடும் தொழிலாளர்கள் கணிசமாக உள்ள திண்டுக்கல் சவரியற்பாளையம் மேட்டுப்பட்டி பகுதியில் தொழிலாளர்களுக்கு மாடிக் குடியிருப்பு வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5011, திரு. சோ. இராசேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4702, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகளை, தொழிலாளர்களின் வாழ்வுக்கு உதவும் வகையில் உடன் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000-/ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7593, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மேட்டூர் பகுதியில் உள்ள மேட்டூர் டெக்ஸ்டைல் மற்றும் மைக்கோபாம் கம்பெனிகளைத் திறக்க நடவடிக்கை எடுத்து மீண்டும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6196 திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், திருத்தணி தொகுதியில் அமைந்துள்ள கேட்டர்பில்லர் தொழிற்சாலையில் பல தொழிலாளர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6980, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மூடிய ஆலை மற்றும் தொழிற்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2089, திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4711, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டத்தில் உள்ள தேயிலை எஸ்டேட் நிர்வாகத்தினர் தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்படும் பிராவிடண்ட் மற்றும் ஈட்டுறுதித் தொகைகளை வங்கிகளில் முறையாக செலுத்துவதை கண்காணிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.109,31,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை மாணிக்கக் கோரிக்கையின்மீது, மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் மாணிக்கக் கோரிக்கையாக நினைக்கிறார். (சிரிப்பு)

*முற்பகல் 11-45*

**திரு. கோவை தங்கம்:** இன்று தமிழ்நாட்டில் பல வருடங்களாக மூடிக்கிடக்கின்ற மில்களை, தொழிற்சாலைகளை திறக்க வேண்டும் என்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட முத்தரப்புக் குழுவை நியமித்து, மூடிய மில்களை திறக்க தமிழக அரசு

@ 237 முதல் 316 வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



பெரும் முயற்சியை எடுத்து இருக்கின்றது. இதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் பாராட்டுகின்றேன். இந்தத் திட்டத்தை மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அமைத்து இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூடி மாவட்டந்தோறும் ஏற்படுத்தப்பட்ட முத்தரப்புக் குழுவின் பணியை ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களின் நன்மைக்காக நியாயமான விஷயங்களை அரசு கூறினால்கூட நிர்வாகம் கேட்பது இல்லை. சில நிர்வாகங்கள் வசதி படைத்தவர்களாக இருப்பதால் கேட்பதும் இல்லை, அதிகாரிகளை மதித்து நடப்பதும் இல்லை. உதாரணத்திற்கு வால்பாறையில் உள்ள தேயிலைத் தோட்ட நிர்வாகத்தை அழைத்து பலமுறை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பழைய சம்பளத்தை ரூ.76.85 கொடுத்து விடுமாறு பேசினார். நிர்வாகம் கேட்கவில்லை. அரசு இதில் தலையிட வேண்டும் என்று நான் ஏற்கெனவே இந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையை முடித்து பழைய சம்பளத்தைப் பெற்றுத் தாருங்கள் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் 5 முறை மனு கொடுத்து இருக்கின்றேன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடமும், தொழிலாளர் நலத் துறை செயலாளர் அவர்களிடமும், தொழிலாளர் நலத்துறை ஆணையர் அவர்களிடமும் நேரில் பல முறை பேசி, வற்புறுத்தி உள்ளேன். இந்தப் பேரவையில் ஏற்கெனவே நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசி இருக்கின்றேன். தொழிலாளர் மானியக் கோரிக்கையின் மீதும் சென்ற முறை பேசி இருக்கின்றேன். வற்புறுத்தி இருக்கின்றேன். ஆனாலும் சம்பளப் பிரச்சினை இன்னும் முடியவில்லை. அதற்குரிய பயனும் இல்லை. நிர்வாகம் ஒத்து வராததால்...

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அரசு பாராமுகமாக இருந்துவிட்டதைப்போல சட்டமன்ற உறுப்பினர் பேசுவது சரியல்ல. பலமுறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்று இருக்கின்றன. நடைபெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு, குறைந்தபட்சம் 1250 ரூபாய் சம்பளமாக வழங்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பெற்று அப்படி சம்பளம் தொடர்ந்து இப்போது வழங்கப்பட்டு வருகின்றது ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது டிரிபியூனலுக்கு அவருடைய கோரிக்கையை அரசு பரிந்துரை செய்து டிரிபியூனலுடைய பரிசீலனையில் அந்தக் கோரிக்கை இப்போது இருக்கின்றது. இது தவிர மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள் டிரிபியூனலில் தீர்ப்பு வழங்குவதற்கு தாமதம் ஏற்படும்,

[திரு. அ. அன்வர் ராஜா] [2003 ஏப்ரல் 23

எனவே ஸ்பெஷல் டிரிபியூனலுக்கு இதை refer செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்றுக் கொண்டு Special Tribunal-க்கு இப்போது உத்தரவு வழங்கி இருக்கிறது என்பதை அருள்கூர்ந்து நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான உத்தரவின் நகலை வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள் என்னிடம் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். சுடச்சுட தங்களுக்கு பலன் கிடைத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பாகவும் வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிற்சங்கத் தலைவர்களும், நிர்வாகமும் சேர்ந்து தீர்ப்பாயத்தை ஏற்படுத்தி விட்டார்கள். நான் சிறப்புத் தீர்ப்பாயம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கான காரணம், தீர்ப்பாயத்தில் தீர்ப்பு 7 ஆண்டுகள், 8 ஆண்டுகள் ஆகிவிடும். அப்போது ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளிக்கு 5 ரூபாய் என்று சொன்னால், ஏறத்தாழ 6, 7 ஆண்டு காலம் ஆகி, தீர்ப்பு வருகின்றபோது நிர்வாகம் சுமார் 50 கோடி ரூபாய், 60 கோடி ரூபாய் ஒட்டுமொத்தமாக எல்லாத் தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டிய நிலை வரும்போது தேயிலைத் தோட்ட நிர்வாகமும், அதிபர்களும் தொழிலாளர்களைக் கைவிட்டு விடுவார்கள். ஆகவேதான் நான் இந்த தீர்ப்பாயத்திற்குப் பதிலாக சிறப்பு ஆணையம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அதை அரசு ஏற்றுக்கொண்டதற்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அடுத்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம். வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் கோவையிலிருந்து வால்பாறை செல்வதற்கு 3 மணி நேரம் ஆகும். பொள்ளாச்சியிலிருந்து 2 மணி நேரம் ஆகும். வால்பாறை என்பது ஒரு மலைப் பகுதி. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வால்பாறைக்கு வந்திருக்கமாட்டார்கள் என்று நம்புகின்றேன்...



2003 ஏப்ரல் 23]

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறை சட்டமன்றத்திற்குப் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றபோதும் நான் வால்பாறை தொகுதிக்குச் சென்று, அங்கே தேர்தல் பிரச்சாரம் செய்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதல்வர் அவர்களின் பதிலுக்கு நன்றி. ஆனால் வால்பாறை தொகுதியில் கீழ்ப் பகுதிக்கு வந்திருப்பீர்கள். நான் கூறுவது வால்பாறை மேல் பகுதி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வால்பாறையின் மேல் பகுதிக்கும் சென்றிருக்கிறேன். கீழ்ப் பகுதிக்கும் சென்றிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கோவை தங்கம்:** மிக்க நன்றி. இதை நான் சொல்வதற்குக் காரணம், வால்பாறை மக்கள் மிகவும் நொடிந்துபோன, நலிந்துபோன ஏழை எளிய மக்கள். அவர்களுக்கு இதுவரை அந்த வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் ஒரு கல்லூரி கிடையாது. ஒரு தொழிற்சாலை கிடையாது. அடிப்படை வசதிகள்கூட கிடையாது. அப்படிப்பட்ட அந்தத் தொகுதிக்கு ஒரு கல்லூரியும், தொழிற் பயிற்சி நிலையத்தையும் தாங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நீலகிரி மாவட்டத்திற்குச் செல்வதென்றால் இருவழிப் பாதை உண்டு. சேலத்திலே இருக்கின்ற ஏற்காடு மலைப் பகுதிக்குப் போவதென்றால் இருவழிப் பாதை உண்டு. ஆனால் வால்பாறைக்கு மட்டும் ஒரே ஒருவழிப்பாதைதான் இருக்கிறது. அந்த ஒருவழிப்பாதையை தாங்கள் மாற்றி இருவழிப்பாதையாக உருவாக்கித் தந்தால் மக்கள் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இன்று தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் மில்கள், தொழிற்சாலைகள் பல ஆண்டுகளாக, 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என்று மூடிக்கிடக்கின்றன. இதற்குக் காரணம் மில் நிர்வாகம், தொழிற்சாலை அதிபர்கள் இவர்களின் தவறான போக்கின் காரணமாகத்தான் இந்த நிலை உருவாகி இருக்கிறது. தொழிலாளர்களிடத்திலிருந்து பிடிக்கின்ற வைப்பு நிதியை P.F. பணத்தை அவர்கள் ஒழுங்காக வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில்

கட்டுவது கிடையாது. அதைப்போல E.S.I., L.I.C. பணத்தை முதலாளிகள் பிடிக்கிறார்கள். தொழிலாளியிடமிருந்து பிடித்து, அவர்கள் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் கட்டுவதில்லை. தொழிலாளிகள் இரத்தம் சிந்தி சம்பாதித்து, முதலாளிகளுக்கு இலாபத்தைச் சேர்த்துக் கொடுத்தால், முதலாளிகள் ஒரு மில்லை வாங்குகிறார்கள். மீண்டும் ஆசைப்பட்டு பல மில்களை வாங்கி, ஆடம்பரச் செலவு செய்து, அதனால் ஒரு மில்லையும் கவனிக்க முடியாமல், பல மில்களையும் கவனிக்க முடியாமல், நட்டத்தில் விட்டு விடுகிறார்கள். இதனால் தொழிலாளர்களுடைய குடும்பமும், தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றார்கள். இதற்கு, தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்திலே கட்டவில்லை என்று சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுத்தால், உடனடியாக அந்த நடவடிக்கையின்மீது 100 ரூபாய், 200 ரூபாய் என்று நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கி, தண்டனை விதிக்கிறது. உடனே அந்த 100 ரூபாயை கட்டிவிட்டு மீண்டும் அந்தத் தண்டனையில் இருந்து தப்பித்துவிடுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் மூலமாக நான் கேட்டுக்கொள்வது, அப்படிப்பட்ட முதலாளிகளை அரசு கடுமையாகத் தண்டிப்பதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன், அவர்களுடைய சொத்துக்களைக்கூட அபகரிப்பதற்கு, பறிமுதல் செய்வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-55*

அதைப்போல தொழிலாளர்களுடைய போனஸ். பல்வேறு தொழிற்சாலைகளில் ஒரே வேலையைச் செய்பவர்கள் பலவிதமான போனஸைப் பெறக்கூடிய நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு, ஒரே வேலை செய்கின்ற ஒரு தொழிலாளி ஒரு மில்லில் 20% போனஸ் பெறுகிறார். அதே வேலையை, அதேநேரத்தில் செய்கின்ற தொழிலாளி ஒரு மில்லில் 8.33% போனஸ் பெறுகின்றார். இது எந்தவகையில் நியாயம் என்பதை நாம் எண்ணிப் பார்த்தாக வேண்டும். இதனால் தொழிலாளிகளுடைய மனநிலை மிகவும் பாதிக்கப்படுகின்றது. ஆகவே எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரேமாதிரியான போனஸ் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்று மாவட்டம் முழுவதும் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து இருக்கின்றார்கள். அவர்களுடைய



குடும்பம் பசி, பட்டினி காரணமாக மிகுந்த கஷ்டத்தில் உள்ளது. இன்று பல குடும்பங்களில் தாய், தந்தையர் குடும்ப சூழ்நிலை காரணமாக, கோவையிலே தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். மூடிய மில்கள், மூடிய தொழிற்சாலைகளால் வேலையின்றி கஷ்டப்படும் தொழிலாளர்களுக்கு அரசு ரூ.250 உதவித் தொகை வழங்குகிறது. இந்த ரூ.250/-ஐ வைத்து எப்படி அவர்கள் குடும்பம் நடத்த முடியும்? ஆகவே.................

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** 500 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருப்பதை கவனத்திலேகொண்டு, மூடிய மில்களை வங்கிகளின் மூலமாக கடன் வாங்கி, வயது முதிர்ந்தவர்களுக்கு வி.ஆர்.எஸ்., கொடுத்து விட்டு அந்த புதிய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தால் நிச்சயமாக மில்கள், தொழிற்சாலைகள் நல்லமுறையில் செயல்படும். அதற்குரிய அதிகாரிகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றார்கள் என்று நான் நம்புகின்றேன். வேலையில்லாத இளைஞர்களுடைய எதிர்கால நிலை என்ன? இலட்சக்கணக்கான இளைஞர்கள் இப்படியே இருந்துவிட முடியுமா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். எதிர்காலத்தில் இளைஞர்கள் தவறான பாதையிலே செல்வதற்கு நாமே ஒரு வழி வகுத்துக் கொடுக்கின்ற நிலை உருவாகிவிடும். அரசாங்கத்தின் இன்றைய பொருளாதார நெருக்கடியில் அரசு வேலைகளை உருவாக்குவதற்குரிய சூழ்நிலை இல்லை என்பதால் புதிய திட்டங்களை வகுத்து வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல பேரவைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது) ஐந்து நிமிடம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து நிமிடங்கள் எல்லாம் இல்லை. ஒரு மணித் துளியில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். 15 மணித் துளிகள் ஆகிவிட்டன. ஒரு மணித் துளியில் பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** இளைஞர்கள் சிறுதொழில் செய்வதற்கு வங்கிகளிலே கடன் பெறுவதற்கு வங்கிகளை அணுகினால் அந்த

வங்கிகள் கடன் வழங்க முன்வருவது கிடையாது. 'நாளை வா, நாளை வா' என்று இளைஞர்களை ஏமாற்றி, அவர்கள் எந்தப் பணியையும் செய்ய விடாமல் இருக்கின்ற ஒரு நிலையைத்தான் வங்கிகளில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வங்கிகளில் கடன் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம். அதோடு முடித்துவிடுங்கள் திரு. தென்னரசு.

**திரு. கோவை தங்கம்:** இருங்கள். இருங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற திட்டத்தை அறிவித்து இருக்கின்றார்கள். எனது தொகுதியான வால்பாறையிலுள்ள ஏழையெளிய விவசாய கூலித் தொழிலாளர்கள் இலவச வீட்டுமனை வேண்டுமென்று மிகவும் வற்புறுத்தி வருகிறார்கள். ஆகவே விவசாயக் கூலிகள், நெசவுத் தொழிலாளிகள், கட்டடத் தொழிலாளிகள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா, வீடு, கிடைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சாலைப் பணியாளர்கள் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். திரு. தென்னரசு.

**திரு. கோவை தங்கம்:** ஒரே ஒரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும். (குறுக்கீடு) 16, 17 நிமிடம் ஆகிவிட்டது. சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சத்துணவுப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின் கோரிக்கையை ஏற்று உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பக்கம் 67-ல் தொழிற்சாலைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் ஒன்றை



குறிப்பிட்டிருக்கிறார்கள். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் சிறுநீரக இயல் பிரிவு தொடங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளீர்கள். இதை நான் வரவேற்கின்றேன். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அயனாவரம், கோயம்புத்தூரில் இருதய நோய் இயல் பிரிவுகள் மற்றும் நரம்பியல் பிரிவுகள் தொடங்கும் கருத்துரு தீவிர ஆய்வில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளீர்கள். தொழிலாளர்களின் நன்மைக்காக இதை உடனே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அதைப்போல, கோவை மாநகரத்தில் நகைத் தொழிலாளர்கள், குறிப்பாக மேற்கு நகரத்தில் நகைத் தொழிலாளர்கள் பட்டினியால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். *(மணியடிக்கப்பெற்றது)* அதேபோல ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, மீதியை அவரிடம் கொடுத்துவிடுங்கள். திரு. தென்னரசு.

**திரு. கோவை தங்கம்:** ஒரே ஒரு பாயின்ட். பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறை அமைச்சர் அவர்கள் இம்மாதம் சட்டசபையில் கூறியதுபோல, 51 இலட்சம் இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இது வருடம் 5 இலட்சம் ஆக கூடுகிறது. 20 வருட காலம் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்திருக்கின்றது. 20 ஆயிரம் தொழிலாளர்களுக்கு நேரடியாகவும், 45 ஆயிரம் நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கொடுக்கும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி தொழிற்சாலையைப்போல ஏன் ஒரு தொழிற்சாலையை தாங்கள் உருவாக்குவதற்கு முன்வரக் கூடாது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துகளை இந்த மாமன்றத்தில் பதிய வைப்பதற்கு வாய்ப்பு தந்த மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி அவர்களுடைய திருப்பாதச் சுவடிகளைத் தொட்டு வணங்கி, என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன்.

[திரு. கே.எஸ். தென்னரசு] [2003 ஏப்ரல் 23

'ஆண்டவன் உலகத்தின் முதலாளி, அவனுக்கு நான் ஒரு தொழிலாளி' 'இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படைத்தவன் தொழிலாளி' என்று பாடிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1982 ஆம் ஆண்டு அமைப்பு சாராத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு என்ற சட்டத்தை இயற்றினார்கள்.

அதனைத் தொடர்ந்து, 12 ஆண்டு காலத்திற்குப் பிறகு, குறிஞ்சி மலர் பூப்பது போல, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1-11-1994 ஆம் ஆண்டு கட்டுமானப் பணி தொழிலாளர்கள் நல வாரியத்தை உருவாக்கினார்கள். இந்தக் கட்டுமான பணி தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக 4,56,393 நபர்கள் உள்ளார்கள். இதில் உறுப்பினர் சந்தாத் தொகையாக 1,14,80,825 ரூபாயும், இதுபோக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த எண்ணத்தின் அடிப்படையில், 0.1 சதவீதம் வசூல் செய்யப்பட்டது. இன்றைக்கு அது 0.3 சதவீதமாக உயர்த்தப்பட்டு வாரியத்தின் இருப்புத் தொகையாக 55,85,28,475 ரூபாயாக உயர்ந்துள்ளது.

அதற்குப் பிறகு 17-03-1999 ஆம் ஆண்டு உடல் உழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் தொடங்கப்பட்டு அது ஒரு தேர்தல் விளம்பரத்துக்காக மெரீனா கடற்கரையில் கூட்டத்தைக் கூட்டிவிட்டு முடித்துவிட்டார்கள் முந்தைய ஆட்சியாளர்கள். இதை மீண்டும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் 64 வகையான உடல் உழைப்புத் தொழிலாளர்களை இணைத்து சிறப்பாகச் செயலாற்றுகின்ற வகையில் 3,60,594 பேர் உறுப்பினர்களாகவும், இதில் அவர்களுடைய சந்தாத் தொகையாக 97,86,000 ரூபாயும் நல வாரியத்தில் நிதியாக உள்ளது. இதுபோக, ஆட்டோ மற்றும் வாகன ஊர்தி ஓட்டுனர் தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர்களாக 2,57,988 பேர் பதிவு செய்துள்ளார்கள். இதில் அமைப்புச் சாராத் தொழிலாளர்களுக்கு 2484 பேருக்கு பலவகைகளில் வழங்கிய நலத்திட்ட உதவிகள் ரூ.76,26,500 ஆகும். இதை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு வழங்கியுள்ளது.

பிற்பகல் 12-05

ஆட்டோ மற்றும் வாகன ஊர்தி ஓட்டுனர்கள் நல வாரியத்தில் 722 பேருக்கு ரூ. 21,59,500-ஐ பல நலத்திட்ட உதவிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கி, தொழிலாளர்களின் துயரம் துடைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே



2003 ஏப்ரல் 23] [திரு. கே.எஸ். தென்னரசு]

தெரிவித்துக்கொண்டு, குழந்தையும், தெய்வமும் குணத்தால் ஒன்று என்பார்கள். அந்தக் குழந்தையின் குணத்தைக்கூட அறிந்த தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். தொட்டில் குழந்தை முதல் தொழிலாளர் குழந்தை வரைக்கும் காக்கும் அன்னை தெரசாவாக விளங்குகிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

2001 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கின்படி குழந்தைத் தொழிலாளர்கள் 3.49 இலட்சம் பேர். இதில் 2002 ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் முறை சம்பந்தமாகப் போடப்பட்ட வழக்குகள் 413. மீட்கப்பட்டக் குழந்தைத் தொழிலாளர்கள் 20,044 பேர். இவர்கள் தேசிய குழந்தைத் தொழிலாளர் நலத் திட்டத்தின்கீழ் 472 சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயின்று வருகிறார்கள். இந்தக் குழந்தைகளுக்கு மதிய உணவு, சீருடை, நோட்டுப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதனுடன் மாதா மாதம் உதவித் தொகையும் ரூ.100 வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின்கீழ் ஒருங்கிணைந்த குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பின்கீழ் திருப்பூரில் 2134 குழந்தைத் தொழிலாளர்களும், சிவகாசியில் 814 குழந்தைத் தொழிலாளர்களும் மீட்கப்பட்டு இடைநிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். டிசம்பர் 2002 வரை மாவட்டம் வாரியாக 180 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

தீவிர தொழில் முறை வழிகாட்டிப் பணிகளை மேற்கொண்டு, 2002-2003 ஆம் ஆண்டில் 23 கிராமப்புற பள்ளிகளைத் தத்தெடுத்து தொழில் முறை வழிகாட்டிப் பணிகளைச் செயல்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு முனைந்துள்ளது.

மேலும் 2002-2003 ஆம் ஆண்டில் விழி இழந்த வேலை வாய்ப்பற்றோர் நலனைக் கருத்திற்கொண்டு 27.23 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிறப்புப் பிரிவிலிருந்து 2003 ஆம் ஆண்டு பெறப்பட்ட வேலைவாய்ப்புக்கான மனுக்கள் 14,616 ஆகும். அம்மனுக்களில் 10,541 மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

31-12-2002 நிலவரப்படி வேலைவாய்ப்புக்காக காத்திருப்போர்கள் 50 இலட்சத்து 57 ஆயிரம் பேர்கள். இதில் பெண்கள் 17 இலட்சத்து 20 ஆயிரம் பேர்கள். 2002 ஆம் ஆண்டில் 10,303 மனுதாரர்கள் பணியில் அமர்த்தப்பட்டார்கள். இதில் ஆதிதிராவிடர் இனத்தோர்க்குத் தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி ரூ. 6.72 இலட்சம் செலவில் 1,150 இந்து ஆதிதிராவிட மனுதாரருக்குத் தமிழ்நாடு தொழிற்கல்வி பயிற்சி அளிக்கப்பட்டு இருக்கிறது.

1-1-2002 முதல் 31-12-2002 வரை பல்வேறு நிறுவனங்களின் மூலமாக சுய வேலைவாய்ப்புக்காக 376 மனுதாரர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து 374 இலட்ச ரூபாய் அளவில் கடனுதவி பெற்றுத்தர வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உதவி செய்தன.

பிற்பகல் 12-10

13 மாவட்டங்களில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகளால், உடல் ஊனமுற்றோர்களைப் பணியமர்த்துதல், புனர்வாழ்வு அளிப்பதற்கான முன் முயற்சி மேற்கொள்ளப்பட்டன.

31-12-2002 நிலவரப்படி ஊனமுற்றவர்கள் பட்டியலில் விழியிழந்தோர்கள் 7,460 பேர்களும், 5,866 செவிப்புலன் இழந்தோர்களும் மற்றும் 57,973 உடல் உறுப்பு குன்றியோர்களும் ஆக மொத்தம் 71,299 பேர் ஊனமுற்றோர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளார்கள். இவர்களில் 2003 ஆம் ஆண்டு 896 பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

மொத்தத் தொழிலாளர்களுக்கு அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் 9-ம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை இணைப்புகளில் 1-ம், அரசு மருத்துவமனைகளில் ஒதுக்கப்பட்டவை 1-ம், மொத்தம் 11 மருத்துவமனைகளையும் சேர்த்து 2,363 படுக்கைகள் உள்ளன. இதில் 2001-2002-ல் சிகிச்சை பெற்றவர்கள் எண்ணிக்கை, வெளி நோயாளிகள் 73,44,038 பேர்களும், உள் நோயாளிகள் 3,14,413 பேர்களும் ஆவார்கள். மொத்தம் 76,58,451 பேர்கள் ஆவார்கள்.

மேலும், என்னுடைய தொகுதியிலுள்ள ஒரு சில குறைகளைப் பற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு சொல்லிவிடுகிறேன். என் தொகுதியைப்பற்றி சில வார்த்தைகள் தங்கள் முன் வைக்கின்றேன் தாயே.



ஈரோட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட வேண்டும் என்பது மக்களுடைய நீண்டகால கோரிக்கை. பன்னீர்செல்வம் பார்க் அருகிலே ஒரு மேம்பாலமும், ஜி.எச்., புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சிலை அருகில் ஒரு மேம்பாலமும், ஈரோட்டையும், பள்ளிப்பாளயத்தையும் இணைக்கும் பாலமும், சி.என்.சி. காலேஜ் என்றிருப்பதை ஈரோடு அரசு கலைக் கல்லூரியாக ஆக்கவும், சித்தோட்டில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்தவும், சுகாதார நிலையம் ஏற்படுத்தவும், பவானி செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால், இதைப் புதுப்பிக்கவும், ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகத்தை அமைத்துக் கொடுக்கவும், ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்திக் கொடுக்கவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு 350 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள ஈரோடு ஐ.ஆர்.டி.டி. கல்லூரி வளாகத்தில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பெயரிலே ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர் நல வாரியத்திற்கும், விவசாய தொழிலாளர் நல வாரியத்திற்கும் நிதி சேருவதுபோல், எனது சிறிய யோசனையை நல வாரியத்திற்கு வருவாய் இயற்றுவதற்கு கூறுகிறேன். சுமை தூக்குவோர் தொழிலாளர் சங்கத்தினர்கள் மற்றும் அமைப்புச் சாரா தொழிலாளர்கள்தான் மதுபான பாட்டில்கள் ஏற்றி இறக்குகிறார்கள். இதன்மூலம் 0.3 சதவீதமும் வசூல் செய்யப்படலாம். இரும்புக் கம்பி உற்பத்தியாளர்கள், பெயின்ட், ஆங்கில், தகடு, காகித ஆலைகள், சிமென்ட் ஆலைகள் போன்றவற்றிலிருந்து 0.3 சதவீதம் வசூல் செய்தால்கூட பல கோடி ரூபாய் இந்த வாரியத்திற்கு ஈட்ட முடியும் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்துகொள்கின்றேன்.

தற்போது இந்திய அளவில் நடைபெற்று வரும் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தத்தில் தாங்கள் தலையிட்டால்தான் ஒரு முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். அதேபோல, இந்தியா முழுவதும் பல இலட்சக்கணக்கான விசைத்தறிகள், ஜவுளித் தொழில்கள் கலால் வரியால் பாதிக்கப்பட்டுள்ளன. அதிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் தலையிட்டு தீர்வு கண்டு இந்தியாவுக்கு வழிகாட்ட வேண்டுமாய் தங்கள பொற்பாதம் தொட்டு வேண்டி வணங்கி கேட்டுக்கொள்கிறேன் தாயே.

அம்மா நீங்கள் நல்லா இருக்கணும் நாடு முன்னேற; இந்த நாட்டில் உள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற இன்று நல்லவர்கள் எல்லோரும் உங்க பின்னாலே, நீங்க நினைத்ததெல்லாம் நடக்குது அம்மா உங்க கண்ணு முன்னாலே.

அம்மா நீங்கள் ஆளுகின்ற காலத்தில், நாங்கள் வாழுகின்ற காலம்தான் எங்களுக்கு கிடைத்த பாக்கியம் தாயே.

*பிற்பகல் 12-15*

அம்மா நீங்கள் ஆளுகின்ற காலத்தில் மட்டும் நாங்கள் வாழுகின்ற காலம் இருந்தால் போதும் தாயே. ஏனென்றால் நீங்கள்தானே இனி நிரந்தரமாக ஆள வேண்டும் என்று நாட்டு மக்கள் முடிவு எடுத்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் தமிழ்நாட்டில் உள்ள ஆறு கோடி மக்கள் மட்டுமா, இல்லை, இந்தியாவில் உள்ள நூறு கோடி மக்களும்தான். நெருப்பாற்றில் நீந்தி வந்த உங்களுக்குத் தாயே, நீலக் கடல்கூட நீங்கள் நினைத்தால் சிறியதுதான். சிலர் சொன்னார்கள் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்னை மாற்ற நினைக்கிறது சிறைச்சாலை என்று வசனம் பேசியவர்கள் சிறைச்சாலை என்றுகூட சொல்லவில்லை தாயே. விசாரணை என்றுதான் சொன்னார்கள். எத்தனை அலறல்கள், உளறல்கள், தடுமாறுதல்கள், தள்ளாடுதல்கள் அய்யகோ என்ற கூக்குரல்கள் இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு, செவாலியே சிவாஜி கணேசன் நம்மைவிட ஒரு நடிகர் வந்துவிட்டார் என்று எண்ணி மறைந்துவிட்டார் அம்மா! பாவம். (மேசையைத் தட்டும் ஒலி). அவருக்கும் நீங்கள் மணிமண்டபம் அறிவித்தீர்கள் தாயே! தாயே, ஆனால், நீங்களோ காவல் துறையின் வேனில் ஏறும்போதுகூட என்ன கம்பீரமாகப் போனீர்கள். அதைப்பார்த்து எங்களுக்கு ஒருபுறத்திலே கண்ணீர். மறுபுறத்திலே களம் காணத் தயாரானோம் தாயே! உங்களுக்கு நிகர் எல்லாம் நீங்கள்தான் தாயே! தலைமைச் செயலகக் கட்டடம்கூட வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது என்று யாருக்கும் தெரியவில்லை. இராணி மேரிக் கல்லூரி வளாகத்தில் தலைமைச் செயலகம் கட்ட துணிவான முடிவு, தெளிவான முடிவு, ஆணித்தரமான முடிவு, அற்புதமான முடிவு, நீங்கள் எடுத்த முடிவை நல்லவர்கள் பாராட்டுகிறார்கள். மனம் உள்ளவர்கள் போற்றுகிறார்கள். ஆனால், அரசியலுக்கு மட்டும் சிலபேர் அலறுகிறார்கள். அவர்களை எல்லாம் இந்த நாட்டுமக்கள் புறக்கணித்துவிட்டார்கள் என்பதற்கு நடந்து முடிந்த இடைத்தேர்தல்கள் தெளிவுபடுத்துகின்றது தாயே! தொடரட்டும் உங்கள் பயணம்! வாழட்டும் தமிழ்நாடு !! வழிகாட்டுங்கள் இந்தியாவுக்கு !!! என்று கூறி உங்கள் பொற்பாதம் தொட்டு வணங்கி என் உரையை முடிக்கிறேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன்.





**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்து இந்தத் தொழிலாளர் நலன் மானியக் கோரிக்கையில் பேசுவதற்காகவும் தொழிலாளர்களின் தலைவராக எங்கள் கட்சியின் சார்பாக என்னை அறிவித்து இந்த நேரத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்கள் தமிழ் இனப் போராளி டாக்டர் ஐயா அவர்களுக்கும், எங்கள் சின்ன ஐயா அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியோடு, நன்றியை தெரிவித்து, இன்றைக்கு வேலையின்மையும், வறுமையும் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேல் முருகன், திரு. ஜி.கே. மணிக்குக் கிடையாதா?

**திரு. தி. வேல் முருகன்:** எங்கள் தலைவருக்கு சொல்ல வருகிறேன். பின்னர் பேசுகின்றபோது தலைவருக்கு நன்றி தானாக வந்து விடும். ஞாபகப்படுத்தியதற்கு பேரவைத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து, இன்றைக்கு தமிழகத்திலே வேலையின்மை, வறுமை ஆகியவை நாணயத்தின் இரு பக்கங்கள் போல் உள்ளன. நாட்டில் உருவாக்கப்படும் திட்டங்கள் வேலைவாய்ப்பை அல்லது தீட்டப்படும் உருவாக்குவதற்காகவும், வறுமையை ஒழிப்பதற்காகவும் இல்லையென்று நாங்கள் கருதுகிறோம். தமிழகத்தினுடைய மக்கள் தொகை 6.2 கோடி. ஆனால் வேலைவாய்ப்பு உள்ளவர்கள் எல்லாத் தொகுதிகளிலும் சேர்த்து 45 சதவிகிதம் பேர். அதாவது, 2.87 கோடி பேர். ஆக, மொத்த மக்கள் தொகையின் மீதமுள்ள 55 சதவிகிதம் பேரில் 40 சதவிகிதத்தில் குழந்தைகளாகவும், மாணவர்களாகவும், முதியோர்களாகவும் உள்ளார்கள். மீதமுள்ள 15 சதவிகிதம் பேர், அதாவது 93 இலட்சம் பேர் இன்றைக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் அவர்களில் 51 இலட்சம் பேர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். மீதி 42 இலட்சம் பேர் கிராமப்புறங்களிலே வேலைவாய்ப்பு இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் 6.2 கோடி மக்களில் 35 சதவிகிதம் பேர் அதாவது 2.8 கோடி மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் சமூக நீதி வேண்டாமா? அல்லது இவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நம்முடைய அரசு என்ன முயற்சி செய்திருக்கிறது என்பதை இந்த

நேரத்திலே கேட்க விரும்புகிறேன். அதேபோல் அனைவருக்கும் வேலை, அனைவருக்கும் வருமானம் என்ற நிலையை அரசு உருவாக்க முன்வருமா என்பதோடு வேலையின் தேவையை அறிவதற்கு ஒவ்வோர் ஒன்றிய அளவிலும், குடும்பங்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம் என்று பாட்டாளி மக்கள் கட்சி கருத்து கூற விரும்புகிறது. காரணம், தமிழகத்திலே பல்வேறு கிராமங்களிலே பல்வேறு நிலைகளிலே படித்துவிட்டு இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரணம், 51 இலட்சம் பேர் படித்துவிட்டு வேலைவாய்ப்பு இல்லாமல் பதிவு செய்து இருக்கின்ற இளைஞர்களை காவல் துறை பல்வேறு வழக்குகளிலே கைது செய்கின்றபோது நடவடிக்கை எடுக்கின்றபோது அவர்களுடைய கல்வித் தகுதியைப் பார்க்கின்றபோது, எம்.ஏ., பி.ஏ., பி.எஸ்ஸி., பி.இ., என்று கூறுகிறார்கள். அவர்கள் செய்கின்ற தவறுகளுக்கு நியாயம் கற்பிக்கின்றபோது, நான் எம்.ஏ. படித்து இருக்கிறேன், நான் எம்ப்ளாய்மென்ட் ஆபிசில் பதிவு செய்து 10 ஆண்டுகளாக வேலையில்லாமல் காத்திருக்கிறேன். என்னுடைய தங்கைகளுக்கு திருமணம் செய்து கொடுப்பதற்கு முடியவில்லை. என்னைப் பெற்ற தாய், தந்தையர்க்கு வயிற்றைக் கழுவுவதற்கு முடியவில்லை. நான் திருடினேன். நான் கொலை செய்தேன். நான் கூலிக்கு மாரடித்தேன் என்று வாக்குமூலம் கொடுக்கின்ற அவலநிலை நம்முடைய தமிழகத்திலே நிலவிக் கொண்டிருக்கிறது. ஆக, இந்த நிலைகளைப் போக்க வேண்டுமென்று சொன்னால், நம்முடைய அரசு இன்றைக்கு எல்லா நிலைகளிலும் படித்துவிட்டு இருக்கின்ற இளைஞர்களுக்கு ....

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மட்டும் இப்படி வேலை கிடைக்காமல் இருக்கிறது என்பதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வேலைவாய்ப்பின்மை என்பது இந்தியா முழுவதும் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், உலகம் முழுவதும் இருக்கிறது. அது இப்போது மட்டும் புதிதாக முளைத்துவிட்ட பிரச்சினை அல்ல. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புகூட, ஒரு திரைப்படப் பாடல் உண்டு.



"காலேஜ் படிப்பு காபி ஆத்துதாம்
பி.ஏ. படிப்பு பெஞ்சு துடைக்குதாம்
மேலே போனது நூத்துல ஒண்ணாம்,
மிச்சம் உள்ளது லாட்டரி அடிக்குதாம்"

என்று கவிதை வரிகள் பாடலாக வந்திருக்கிறது. எனவே, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புகூட காலேஜ்லே படித்தவர்களுக்கு வேலை இல்லை. முதுகலைப் பட்டம் படித்தவர்களுக்கு வேலை இல்லை என்கிற நிலைமை தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. ஆனால், அதைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஒவ்வொரு முறையும் அரசு எடுத்து வந்திருக்கிறது. நம்முடைய அரசு மிக முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து, தனியார் துறைகளில் வேலைகளைப் பெற்றுத் தருவது என்கிற முயற்சியில் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தலைசிறந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அதற்கான கலந்தாய்வுக் கூட்டங்களை ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் நடத்தி, அதிலே ஒரு தலைசிறந்த பலன் இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது. எனவே, தனியார் துறைகளில் வேலை அமர்த்தங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேலைகளை வெகுவாகப் பெறுவதற்கான உரிய பயிற்சிகளும் இப்போது அளிக்கப்பட்டு வருகின்றன. எனவே, நீங்கள் சொல்வதைப்போல் பார்த்தால்கூட, வேலைவாய்ப்பின்மை என்கிற சதவீதக் கணக்கை வைத்துப் பார்த்தால்கூட, தமிழகத்திலே வேலைவாய்ப்பு இல்லை என்ற சதவீதம் 11.78 விழுக்காடுதான். ஆனால், கேரளாவிலே வேலைவாய்ப்பின்மை சதவீதம் 20.97 விழுக்காடு. மேற்கு வங்காளத்தில் 14.99 விழுக்காடு. எனவே, இந்தியா முழுவதும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அவ்வப்போது அரசு மிகத் துரிதமாக எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதையேதான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக நம்முடைய தமிழகத்தை ஆக்குவோம் என்று கூறியிருக்கின்றார்கள். நாங்கள் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகம் வரவேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசையும். அந்த வகையில் முதலமைச்சர் அவர்களுடைய இலக்கு, நோக்கம் என்பது மிகச் சிறந்த

ஒரு நிலையை எட்டிக்கொண்டிருக்கிறபோது, தமிழகத்திலே பதிவு செய்துவிட்டு, இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நானும் புள்ளிவிவரங்களைப் படித்திருக்கிறேன். கேரளாவும், மேற்கு வங்காளமும் இருக்கின்றன. மூன்றாம் இடத்தில் நம்முடைய தமிழகமும் இருக்கிறது என்பதை நானும் அறிவேன். அந்த வகையில் நான் வேண்டுவது என்னவென்று சொன்னால், குறிப்பாக எங்களுடைய கடலூர் மாவட்டத்தில், தமிழ்த் தீவிரவாதிகள், தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழ்நாடு மீட்சிப் படை என்றெல்லாம் உருவாக்கப்பட்டு இன்றைக்கு பல்வேறு நிலைகளிலே தவறான செயல்களில் ஈடுபட்டு தீவிரவாதத்தை நோக்கி அந்த இளைஞர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதால், அரசு ஒரு சரியான நடவடிக்கையை எடுக்கின்றபோது, அவர்கள் கூறுகின்ற காரணம், கற்பிக்கின்ற காரணம், இதுபோன்றதாக இருக்கின்றது. ஆதலால், அரசு இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கூறுவதற்காகச் சொன்னேனே தவிர, நான் குற்றம் சொல்வதற்காகச் சொல்லவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்துவிட்டு வேலை இல்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகமாகத்தான் உள்ளது. அதை அரசு அறியும். ஆனால், வேலை இல்லாமல் இருக்கின்ற அனைவருக்கும் அரசே வேலை தரவேண்டும் என்று எதிர்பார்ப்பது சாத்தியமான காரியம் அல்ல. ஆனால், அரசு என்ன செய்ய முடியும் என்றால், அத்தகைய இளைஞர்களுக்குத் தேவையான தொழில் பயிற்சி அளிக்க முடியும். அதற்கு அரசு பல திட்டங்களைச் செயல் படுத்திக் கொண்டிருக்கிறது.

மேலும், தனியார்த் துறையை ஊக்குவித்து, தனியார்த் துறையில் பல புதிய தொழில்களைத் தொடங்கச் செய்து, அவற்றின் மூலம் வேலை இல்லாமல் இருக்கிறவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதுதான் அரசின் நோக்கமாகும். அதை இந்த அரசு முனைப்புடன் செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக்



கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், 10 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழ்நாட்டில் தனியார் துறைகளிலே இடஒதுக்கீடு வேண்டும் என்று, தனியார்த் துறைகளிலே வேலைவாய்ப்பு உருவாக்க வேண்டும் என்று முதன் முதலில் தமிழகத்தில் குரல் கொடுத்த ஒரு தலைவர் என்று சொன்னால் அது எங்கள் தமிழினப் போராளி டாக்டர் ஐயா அவர்கள்தான். அன்றைக்கு சில அரசியல் கட்சிகள் எங்கள் ஐயாவைப் பார்த்து விமர்சனம் செய்தன. ஆனால், இன்றைக்கு இந்த நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களே அதற்கான முனைப்பான நடவடிக்கையை நாங்கள் எடுத்து முன்வருகிறோம் என்று கூறுகின்றபோது, நிச்சயம் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் நன்றி சொல்லியே ஆகவேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல் நம்முடைய அரசு இன்றைக்கு, என்ன சொல்லியிருக்கிறது என்று சொன்னால் எந்த வேலைவாய்ப்புகளுக்கும் இனிமேல் எடுக்கப்போவதில்லை. காவல் துறை, ஆசிரியர் பணி, மருத்துவப் பணி இவற்றை விட்டுவிட்டு, மீதி இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்புகளே இல்லை. இன்றைக்கு Tamil Nadu Public Service Commission என்று சொல்லக்கூடிய தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் என்ற ஒன்று இருக்கிறதே, அதிலே, படித்திருக்கின்ற இளைஞர்களை, அவர்களைத் தேர்வு செய்வதற்கான வாய்ப்புக்களே இன்றைக்கு தமிழகத்திலே இல்லை.

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிற நிலையில் இதைப் போக்க இந்த அரசு இதுபோன்ற வேலைகளை நிரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது எனக்கு நன்றி தெரிவித்தார். எதற்காக நன்றி தெரிவித்தார் என்று சரியாகப் புரியவில்லை. நான் பேசியதோ தனியார் துறையை ஊக்குவித்து தனியார் துறையில் பல புதிய தொழில்களைத் தொடங்கச் செய்து அதன் மூலம் வேலையில்லாமல் இருக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதுதான் அரசின் நோக்கம் என்றேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் துறையிலும் இட ஒதுக்கீட்டைப் பற்றி பேசினார். அதைப்பற்றி நான் எதையும் சொல்லவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் வெற்றியே எங்களுக்கு தனியார் துறைகளிலே வேலைவாய்ப்பை உருவாக்கவேண்டும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கின்றார். அதற்கும் அடுத்தபடியாக இட ஒதுக்கீடும் எங்களுக்கு தனியார் துறையிலே கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே இரட்டிப்பு மகிழ்ச்சியில் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல் இன்றைக்கு சாலைப் பணியாளர்கள், மக்கள் நலப் பணியாளர்கள், ஊட்டச் சத்துப் பணியாளர்கள் இவர்கள் எல்லாம் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டு இருக்கின்றார்கள். இவர்களுக்கு இந்த அரசு மீண்டும் பணி நியமனம் செய்ய வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல் இன்றைக்கு தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நம்முடைய அரசு விரைவு நீதிமன்றங்களை அமைத்திருக்கிறது என்று கருதுகிறேன். அந்த விரைவு நீதிமன்றங்கள் இன்னும் கூடுதலாக அமைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல் இன்றைக்கு தொழிற்சாலைகள் குறிப்பாக என்னுடைய பண்ருட்டி தொகுதியிலே இருக்கின்ற கந்தப்பா பேப்பர் மில்ஸ், வடலூரில் இருக்கின்ற சேசசாயி இண்டஸ்ட்ரீஸ், ஸ்டேண்டர்டு மோட்டார் கம்பெனி, மதுரையிலே இருக்கின்ற நிறுவனங்கள், தமிழகத்திலே பல்வேறு தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கின்றன. அந்த மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்விலே ஒளியேற்றவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல் இன்றைக்கு மிகப் பெரிய பிரச்சினை, முதலமைச்சர் அவர்கள் அவையிலே இருக்கின்றார், அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். நான் தொழிற்சங்கத்தினுடைய தலைவராக இருக்கின்றேன். எங்கள் கட்சியின் சார்பாக, கடந்த மாதம் தொழிற்சங்கத்தின் சார்பாக, போக்குவரத்துத் தொழிலாளர்களின் சார்பாக மிகப் பெரிய ஒரு பேரணி நடத்தி அவர்களுடைய கோரிக்கைகளை, அரசு தனியார் மயமாக பேருந்துகளை ஆக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி கோரிக்கை மனுவை கொடுப்பதற்காக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குடும்பங்களோடு பேரணி நடத்தி, கோட்டை நோக்கி முதலமைச்சரை சந்திப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்களும், கம்யூனிஸ்ட் பேரியக்கத்திலே மார்க்சிஸ்ட் சௌந்தர்ராஜன் போன்றவர்களும் இன்னும் இருக்கின்ற தொழிலாளர் தலைவர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து மனு கொடுக்க வந்தபோது அங்கு இருந்த அதிகாரிகள் அந்த மனுவை முதலமைச்சரிடத்திலே நாங்கள் சென்று சந்தித்துக் கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தாவில்லை. தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்கின்ற இந்த அரசு, தொழிலாளர்களுடைய உரிமையைப் பாதுகாக்கின்ற இந்த அரசு, தொழிலாளர்களுடைய பேரணி வருகின்றபோது பேரணியினுடைய பிரதிநிதிகள் முதலமைச்சரை சந்தித்து மனு தருவதற்கு மறுத்த அதிகாரிகள் மீது முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல் . . . .





**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னறிவிப்போடு என்னைச் சந்தித்து மனு கொடுக்க வந்தால் எந்த நேரத்திலும் யார் மனு கொடுத்தாலும் அதைப் பெற்றுக்கொள்ளத் தயாராக நான் இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற நாளில் நான் கோட்டையில் இருந்தேனா இல்லையா என்பதுகூட தெரியவில்லை. ஆகவே, அதிகாரிகளைக் குறை சொல்வது பொருத்தமற்றது என்று கருதுகிறேன். மேலும், பேருந்துகளைத் தனியார்மயம் ஆக்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசினார். இந்த அரசு பேருந்துகளையும் தனியார்மயம் ஆக்கவில்லை. போக்குவரத்துக் கழகங்களையும் தனியார்மயம் ஆக்கவில்லை. சில பஸ் ரூட்டுகளைத்தான் தனியாருக்கு விடுவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு வந்திருந்தார்கள். அவர்களுக்குச் செய்தி சொல்லவில்லை. நாங்கள் முதலமைச்சர்கூட பிசியாக இருப்பார். பார்க்கவில்லை, பரவாயில்லை என்று எடுத்துக்கொண்டோம். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களைப் பார்ப்பதற்கு வருகின்றோம். ஒரு காவல் துறை உதவி ஆய்வாளர்கூட கிடையாது. ஒரு சாதாரண காவல்துறை ஹெட்-கான்ஸ்டபிள் ஒரு வேனிலே எங்களை அடைத்து கோட்டைக்கு கொண்டு வருகிறார். கோட்டையிலே வந்து நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம் அரை

மணி நேரத்திற்கு மேலாக, நான் சட்டமன்ற உறுப்பினர், முதலமைச்சரிடம் சென்று சொல்லுங்கள் எங்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னோம். அவர் மைக்கிலே அங்கே பேசி விட்டு. இங்கே பேசிவிட்டு இல்லை என்று மழுப்பலாக பதில் சொல்லிவிட்டார். சம்பந்தப்பட்ட அமைச்சரை நான் தனிப்பட்ட முறையிலே எத்தனையோ முறை சந்தித்து இருக்கின்றேன். குறை சொல்லவில்லை. உடனடியாக ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட நான் சென்றால் மரியாதை கொடுத்து அமர வைத்துப் பேசுகின்ற அமைச்சர் பெருமக்கள், ஆனால் ஒரு இலட்சம் தொழிலாளர்களுடைய பேரணி வந்ததால் அன்றைக்கு இந்தக் காவல் துறை அதிகாரிகளோ அல்லது வேறு அதிகாரிகளோ இப்படி தொழிலாளர்களுக்கும், அரசுக்கும் உள்ள இணக்கமான இந்த நிலைமையைத் தடுத்து.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டையில் அமைச்சர்களை சந்திப்பதற்கு காவல் துறையின் அனுமதி தேவையில்லை. பலமுறை, பல அமைச்சர்களை நினைத்த நேரத்தில் நீங்கள் சந்திக்கின்றீர்கள். அந்த முறையில், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் சென்று அமைச்சரை சந்தித்து இருக்கலாமே? யாருமே இதைத் தடுக்க முடியாது.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்த நாள் அன்று இவர்கள் எந்த முன்னறிவிப்பும் எங்களுக்குத் தரவில்லை. நாங்கள் தொழிலாளர்கள், நாங்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது என்று எந்த முன்னறிவிப்பும் கொடுக்கவில்லை. அதிலும் நேரத்தை ஒதுக்கித் தரும்படி கேட்டுக்கொள்ளவில்லை. இருந்தாலும்கூட நேரம் ஒதுக்கவில்லை என்று சொன்னாலும்கூட நாங்கள் சந்திப்பதற்குத் தயாராகத்தான் இருந்தோம். ஆனால் அன்றைக்கு ஏற்கெனவே எங்களுக்கு ஒதுக்கப்பட்ட அலுவல் Maritime Board கூட்டம் அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. தியாகராயநகரிலே இருக்கின்ற அந்த அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்டு இருந்தோம். அந்த நேரத்திலேதான் தகவல் வந்தது. இதுமாதிரி வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்போது நான் உடனடியாக வருகிறேன்;



அந்த மனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு வருகிறேன் என்று சொன்னேன். அதற்கு முன்பாகவே இவர்கள் கூட்டத்தைக் கலைத்துவிட்டு வராமலேயே சென்று விட்டார்கள். ஆகவே, சந்திக்க வருவதற்கு முன்பாக தகவல் தெரிவித்து சந்திக்காமல் இருந்தால்தான், அவர் குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே குற்றச்சாட்டாக எந்தக் கருத்தையும் சொல்ல விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடியுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நான் சப்ஜெட்டுக்கே வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அவ்வளவுதான். இன்னும் இரண்டு மணித்துளிகள்தான்.

**திரு. தி. வேல் முருகன்:** போக்குவாத்துத் தொழிலாளர்கள் ஒரு இலட்சம் பேர் பேரணி நடத்தியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட போலீஸ் கமிஷனரிடம் கொடுத்து பர்மிஷன் வாங்கி இருக்கிறோம். Home Secretary அவர்களைச் சந்தித்து, நானும் தொழிற்சங்கத்தினுடைய பிரதிநிதிகளும் மனு கொடுத்திருக்கிறோம். இந்தத் தேதியில் பேரணி நடைபெறுகிறது, இந்தத் தேதியில் முதலமைச்சரிடத்தில் மனு கொடுக்க வேண்டும், முதலமைச்சர் அவர்களைப் பார்க்கவில்லை என்றால்கூட பரவாயில்லை சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே மனு கொடுக்கப் போகிறோம் என்று. பிறகு கோட்டையை நோக்கி காவல் துறை கமிஷனர், அங்கே இருந்து ஒரு டெபுடி கமிஷனர் எங்களை ஒரு வேனில் ஏற்றி அனுப்புகிறார். இங்கே சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரி எங்களை ரிசீவ் செய்கிறார். ஆனால் இன்றைக்கு அமைச்சர் அவர்களுக்கு தெரியவில்லை என்று சொல்வது -- நான் தனிப்பட்ட முறையிலே அமைச்சரை குற்றம் சொல்லவில்லை -- நாங்கள் வந்திருக்கிற செய்தியை உங்களுடைய அறைக்கு வந்தபோது, அவர்கள் சொல்லாமலேயே எங்களை பேசி அனுப்பிவிட்டார்கள். இதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, நான் சொல்ல வருவது அன்றைக்கு Maritime Board உடைய கூட்டம் நடந்து கொண்டிருந்தது. செயலகத்திலே இல்லை. தி. நகரிலே இருக்கின்ற அலுவலகத்தில்தான் அந்தக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்திலே நான் கலந்து கொண்டிருந்தேன். அந்த நேரத்திலே நீங்கள் வருகின்ற தகவல்கூட எங்களுக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட நேரத்தில், தகவல் சொல்லாமல், முன் அறிவிப்பு இல்லாமல் வந்துவிட்டு குறை சொல்வது நியாயம் அல்ல, நேர்மை அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்திற்கு வரவில்லை. என்னுடைய கருத்தைச் சொன்னேன். அடுத்து விவசாய தொழிலாளர்கள். நான் இந்த சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பேற்றதிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை எப்படியாவது ஈர்க்க வேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கிறேன். ஆண்டாண்டு காலமாக இந்த முந்திரித் தொழிற்சாலை -- இன்றைக்கு தேயிலைத் தொழிற்சாலைக்கு நிவாரணம், இன்னும் பல்வேறு விவசாய தொழிலாளர்களுக்கு நம்முடைய அரசு நிவாரணம் வழங்குகிறது. ஆனால், முந்திரி தொழிற்சாலை -- இந்த முந்திரி இன்றைக்கு மிகவும் -- பேரறிஞர் அண்ணா 'தெற்கே சிந்திரி சிரிக்கின்றது. இங்கே முந்திரி முறிகிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இந்தக் கருத்தைக் கூறி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று பேசியிருக்கிறேன். ஆனால் அந்த விவசாயத் தொழிலாளர்களுடைய பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், அண்ணா சொன்னதை ஒழுங்காகச் சொல்லுங்கள். சொல்லாமல் விடமாட்டேன்.

**திரு. தி. வேல் முருகன்:** வடக்கே, சாரி, வடக்கே. அதனால் நான் எதற்காக கேட்டுக்கொள்கிறேன் என்று சொன்னால்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அண்ணா சொன்னதை ஒழுங்காகச் சொல்லுங்கள். சொல்லாமல் விடமாட்டேன். (சிரிப்பு)

**திரு. தி. வேல் முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கே, தெற்கே, சாரி, நீங்கள் குழப்பிவிட்டீர்கள், நான் அழகாகப் பேசிக் கொண்டுதான் வந்தேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** வடக்கே சிந்திரி சிரிக்கிறது. தெற்கே முந்திரி முறிகிறது என்று குறிப்பிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. சிந்திரித் தொழிலும் சிறக்கிறது வடக்கே, முந்திரித் தொழிலும் சிதைகிறது தெற்கே.

**திரு. தி. வேல் முருகன்:** நான் இங்கே நேரம் இல்லை என்பதால் சுருக்கிச் சொன்னேன் பேரவைத் தலைவர் அவர்களே. அடுத்து, இந்த முந்திரிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சரியான விலையை நிர்ணயித்து தாங்கள் தரவேண்டும். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் காடுகளுக்குச் சென்று முந்திரிக் கொட்டைகளை பொறுக்குகின்றபோது, தேள் கடி, பாம்புக் கடிக்கு ஆளாகி அவர்கள் உயிர் பலியாகின்ற ஒரு அவல நிலை இருக்கிறது. அதனால் அந்த அவல நிலையைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, கொள்கைக் குறிப்பிலே நம்முடைய அரசு பண்ருட்டியிலே ஒரு மருத்துவமனை கொண்டு வரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலேகூட ஒரு சிறு தவறு நடந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சருடைய கவனத்திற்கு இதனை நான் கொண்டு வர விரும்புகிறேன். பண்ருட்டி என்று குறிப்பிட்டுவிட்டு, அது விழுப்புரம் மாவட்டம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பண்ருட்டி கடலூர் மாவட்டத்திலே இருக்கிறது. அந்தத் தவறையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல முந்திரி விவசாயிகளுக்கு 30 கிலோ அரிசியை நம்முடைய அரசு வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கட்டடத் தொழிலாளர்கள் பிரச்சினை. இன்றைக்கு அவர்களுடைய நிலைமை மிகப் பெரிய ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. அவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் பணி செய்து வருகிறார்கள். அவர்களுக்குச் சரியான காப்பீட்டுத் தொகையையும், சரியான உதவித் தொகையையும் வழங்குவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்திவேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** நிறைவு செய்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, குழந்தைத் தொழிலாளர்களை ஒழிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்கு காப்பகங்கள் அமைத்து, கல்வி கொடுத்து, அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறீர்கள். ஆனால் தமிழகத்தில் இன்னும் அனைத்து இடங்களிலும் குழந்தைத் தொழிலாளர்கள் இருந்து வருகிறார்கள். குறிப்பாக, சென்னையிலே பல்வேறு இடங்களிலே - - முதலமைச்சர் அவர்கள் சென்று வருகின்ற மெரினாவிலே இன்றைக்கு சுண்டல் விற்கக்கூடிய இளைஞர்கள்கூட 100-க்கு 99 சதவிகிதம் குழந்தைத் தொழிலாளர்கள். இந்தப் பேச்சை நான் இங்கே வந்து பேசுவதற்கு முன்பாக, இரவு நான் பீச்சிலே போய் சுண்டல் விற்கின்ற இளைஞர்களை அழைத்துப் பேசியிருக்கிறேன். எங்களுக்கு ஒரு முதலாளி இருக்கிறார். இன்றைக்கு இவ்வளவு சுண்டல் விற்றால்தான் உங்களுக்கு 15 ரூபாய் என்று கட்டளையிடுகின்றார். நாங்கள் பல்வேறு கிராமங்களில் இருந்து பிழைக்க வந்து இங்கே தத்தளித்துக் கொண்டிருக்கிறோம் என்று கண்ணீர் மல்க அழுதார்கள். கதறுகிறார்கள். ஆகவே, அந்தக் குழந்தைத் தொழிலாளர்களுடைய வாழ்விலே மறுவாழ்வு ஏற்படுத்துவதற்கு, மறு ஒளி ஏற்றுவதற்கு இந்த அரசு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், பீடித் தொழிலாளர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்திவேல் முருகன். (குறுக்கீடு)

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள்.



பிற்பகல் 12-35

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டுவசதி திட்டத்திற்கு நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 2000 தொகுப்பு வீடுகள் கட்டப்படும் என்று அறிவித்திருக்கின்றார். ஆனால், இந்தக் கொள்கைக் குறிப்பிலே 499 வீடுகள்தான் கட்டப்பட்டு வருகின்றன என்ற செய்தி இருக்கின்றது. இது எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, 10,000 வீடுகள் பீடித் தொழிலாளர்களுக்கு கட்டித் தரவேண்டும்; கட்டித்தரப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அதில் எந்த மாறுதலும் இல்லை. ஏற்கெனவே, 5 ஆண்டுகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 64 வீடுகள் கட்டப்பட்டு, அந்த வீடுகள்கூட அரைகுறையாக இன்னும் முடியாமல் இருக்கின்றன. அந்த வீடுகளைக்கூட முடிப்பதற்கு, முடித்துத் தருவதற்கு நம்முடைய அரசு முனைப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இந்த 10,000 வீடுகளில், இப்பொழுது 499 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அதாவது பேஸ்மெண்ட் எல்லாம் போட்டு மேலே வளர்ந்து வருகின்றன. இன்னும் 2000 வீடுகள் இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும், மீதி இருக்கின்ற வீடுகளும் தொடர்ந்து ஆண்டுக்காண்டு கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைச் சுட்டிக்காட்ட விரும்பினேன். அதேபோல் அந்தத் தொழிலாளர்களுடைய......

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது கடற்கரையில் சுண்டல் விற்கும் குழந்தைத் தொழிலாளர்களைப் பற்றி குறிப்பிட்டார், முதலமைச்சர்கூட கடற்கரை வழியாகச் செல்கின்றபோது இந்த சுண்டல் விற்கும் சிறுவர்களைப் பார்த்திருப்பார் என்று அவர் குறிப்பிட்டார். நான் காலை நேரங்களில் கடற்கரை வழியாக இங்கே கோட்டைக்கு வரும்போது அங்கே யாரும் சுண்டல் விற்று நான் பார்ப்பதில்லை. யாரும் இருப்பதில்லை. பிற்பகல் நேரங்களிலும் யாரும் அங்கே இருப்பதாக நான் பார்க்கவில்லை. மாலை நேரங்களில் மாண்புமிகு உறுப்பினர் கடற்கரைக்குச் செல்லுகின்ற நேரத்தில் நான்

அலுவலகத்தில் அமர்ந்து பணியாற்றிக்கொண்டிருப்பேன். அந்த நேரத்தில் சிறுவர்கள் வேண்டுமானால் சுண்டலை விற்றுக்கொண்டு இருப்பார்கள். அந்தச் சிறுவர்கள் பகல் நேரத்தில் பள்ளிக்குச் சென்று வந்துவிட்டு, மாலை நேரத்தில் கடற்கரைக்கு வந்து அவர்கள் part-time occupation ஆக சுண்டல் விற்றுக் கொண்டிருப்பார்கள். ஆனால், அப்படி உண்மையாகவே குழந்தைத் தொழிலாளர்கள் பள்ளிக்குச் செல்லாமல் இருப்பார்களேயானால் அவர்களைப் பள்ளியில் சேர்ப்பதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி), கடந்த ஆண்டு எனது இல்லத்திலிருந்து நான் கோட்டைக்கு வருகின்ற வழியில் நடுக்குப்பம் என்ற இடத்தில் சில குழந்தைகள் நின்று தினந்தோறும் என்னைப் பார்த்து கையசைத்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது நான் இங்கே Social Welfare Department-இடம் வந்து கேள்வியை எழுப்பி பள்ளிக்குச் செல்ல வேண்டிய நேரத்தில் இந்தக் குழந்தைகள் ஏன் அங்கே நின்றுகொண்டு கையசைத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்ற கேள்வியை எழுப்பி, பள்ளிக்குச் செல்லாத அந்தக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை எடுத்தேன் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், இந்த குழந்தைத் தொழிலாளர்களுக்குத் தொகையை அறிவித்திருக்கின்றார்கள். அதிலே பொறியியல் படிப்பிற்கு, பட்டப்படிப்பிற்கு, மருத்துவ படிப்பிற்கு வெறும் ஆயிரம் ரூபாய், ஆயிரம் ரூபாய், ஐநூறு ரூபாய், நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தில் விலைவாசி, இந்த நாட்டினுடைய நிலைமைகள் எல்லாம் அரசுக்கு நன்கு தெரியும். ஆயிரம் ரூபாய், ஐநூறு ரூபாய் என்று அந்தப் பட்டியலிலே பகுத்து பிரிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கொஞ்சம் கூடுதலாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இந்த விபத்து (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே முடித்து விடுகிறேன். நானே பேச்சை முடித்து விடுகிறேன். அதேபோல் இந்த விபத்து இறப்பிலே புள்ளிவிவரங்களை நமது அரசுக்கு அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். அதிலே, என்ன சொல்லியிருக்கின்றார்கள் என்றால், இந்த ஆண்டு தொழிற்சாலைகளின் எண்ணிக்கைப் பெருக்கத்தின் சதவிகிதத்தை ஒப்பிடுகையில் விபத்து சதவிகிதத்தின் எண்ணிக்கை குறைந்தே உள்ளது. அப்படி ஒரு புள்ளிவிவரம் கொடுத்துவிட்டு, 2001-லே மரண விபத்து எண்ணிக்கை 37, 2002-லே 36, ஒரே ஒரு பர்செண்ட், ஒரே ஒரு நம்பருக்கு ஒரு



புள்ளிவிவரம். எதற்காக இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்று சொன்னால் - - அதேபோல் நம்முடைய அரசு வேலைவாய்ப்பு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீது அம்பாசமுத்திரம், மதுரா கோட்ஸ் ஆலையில் பணிபுரிந்து ஆலைத் தொழிலாளர் குடும்பத்தில் பிறந்து ஆலைத் தொழிலாளியான எனக்கு சட்டமன்ற உறுப்பினர் பதவியையும், இன்று இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பையும் அளித்து உண்மையில் தமிழ் இனத்திற்குப் பாடுபடுகின்ற உண்மையில் சமூக நீதிக்குப் பாடுபடுகின்ற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் எங்கள் அம்மாவிற்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்து முழுக்க, முழுக்க தொழிலாளர் துறையில் மட்டும் எனது சில கருத்துகளைக் கூறி உரையை தொடங்குகின்றேன். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையில் தொழிலாளி முக்கிய பங்கு வகிக்கிறான். "இருப்பதைக்கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படைத்தவன் தொழிலாளி" உருக்கு போன்ற தோள்களைக் கொண்டு உழைப்பவன் தொழிலாளி. தரமான உற்பத்தியோடு உற்பத்தியைப் பெருக்கி செலவினங்களைக் குறைத்து உழைக்கின்ற உன்னதமான தொழிலாளிக்கு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறது என்பதை கொள்கை விளக்கக் குறிப்புகளில் இருந்து நாம் அறிய முடிகிறது. இங்கே பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் சகோதரர் வேல் முருகன் என்னதான் பேசி குறைகூற நினைத்தாலும், அம்மா, தொழிலாளர்கள் இன்று உங்கள் பின்னால் உறுதியாக நிற்கின்றார்கள். அம்மா ஆட்சியில்தான் தொழில் உறவு நன்றாக இருக்கும் என்றும், தொழிலாளி நிம்மதியாக வேலை பார்க்க முடியும் என்றும் நம்புகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உண்மை. ஏதோ ஆளும் கட்சித் தரப்பில் பேசுகின்றபடியால் புகழ்ச்சிக்காகவோ, உயர்த்தியோ பேசவில்லை.

*பிற்பகல் 12-40*

எனது அம்பாசமுத்திரம் தொகுதியி 100 ஆண்டு புகழ்கொண்ட மதுரா கோட்ஸ் ஆலையில், அம்மா அவர்கள் அந்த ஆலைக்கு

தற்சமயம் நமது சங்கத்திற்கு நிர்வாகிகள் அறிவித்தவுடன் இதுவரை இல்லாத அளவிற்கு வேலை பார்க்கின்ற 2100 தொழிலாளர்களில் 1850-க்கும் மேற்பட்ட தொழிலாளிகள் இன்று 100 ஆண்டு மதுரா கோட்ஸ் வரலாற்றில் நமது கழகம் ஆரம்பித்தது முதல் இன்றுதான் அம்மாவின் தலைமையை ஏற்று அனைத்து தொழிலாளர்களும் ஒன்றாகச் சேர்ந்து நமது சங்கம் இன்று முதலிடத்தில் திகழ்கிறது. வேறு சங்கங்களில் நிர்வாகிகள் மட்டும்தான் உள்ளனர் என்று சொல்லுமளவிற்கு ஒட்டுமொத்தமாக தொழிலாளர்கள் ஆதரவு அளித்துள்ளனர். இது இங்கேயுள்ள பெரியவர் என்னுடைய அண்ணாச்சி ஹேமச்சந்திரன் அவர்களுக்கும், என்னுடைய சகோதரர் மகேந்திரன் அவர்களுக்கும்கூட தெரியும். இதை அவர்கள் நேரிடையாகப் பார்த்திருக்கிறார்கள். இது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த அளவுக்கு தொழிலாளர்கள் அம்மாவை இன்று நம்புகிறார்கள். அம்மா அரசில் இந்தத் துறையில் அதற்கு உதாரணமாக சிலவற்றைக் கூற முடியும்.

வேலைநிறுத்தம் மூலமாக மனித இழப்பு நாட்கள் 2001ஆம் ஆண்டு இருந்த புள்ளி விவரப்படி 13 இலட்சத்து 49 ஆயிரத்து 726 நாட்கள் என்று இருந்தது. இன்று, அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, 2002ஆம் ஆண்டில் அது பாதியாகக் குறைந்து, அதாவது 6 இலட்சத்து 65 ஆயிரத்து 262 ஆகக் குறைந்துள்ளது. இது அம்மா அரசின் சாதனை இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் தகாராறுகள் காரணமாக ஏற்படுகின்ற இழப்பு நாட்கள் அம்மா அரசின் சீரிய முயற்சியில் பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது. தொழில் தாவாக்களில் 2001 ஆம் ஆண்டு, தி.மு.க. ஆட்சியிலுள்ள தாவாக்கள் சேர்த்து 2,391-ஐயும் சேர்த்து உள்ள 12,163-ல் அம்மா அரசு பொறுப்பேற்றவுடன் 9,194 தாவாக்களை 2002 ஆம் ஆண்டில் தீர்த்து வைத்தது அம்மா அரசின் திறமைக்கு எடுத்துக்காட்டு இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

போனஸ் சம்பந்தமான தொழிற் தாவாக்கள் குறைந்த கால அளவில் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டதை மனதார வரவேற்கிறேன்.

எந்த அரசிலும் செய்யாத முயற்சியாக, மூடப்பட்டுள்ள நிறுவனங்களை திறக்க மாவட்ட ஆட்சித்தலைவர், தொழிலாளர் அலுவலர், எம்.எல்.ஏ., எம்.பி., ஆலைத் தொழிலாளி, ஆலை முதலாளி ஆகியோரைக் கொண்ட முத்தரப்புக் குழு 12-2-2003-ல் நிறுவப்பட்டது. ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்ட முயற்சியை நாம் யாரும் வரவேற்காமல் இருக்க முடியாது.



பஞ்சாலையில் வேலை பார்த்த தொழிலாளிக்கு ஊதிய உயர்வு உள்ளிட்ட தொழிற் தாவாக்களை விசாரித்து தீர்வு செய்ய வேண்டுமென்ற உயரிய எண்ணத்துடன் ஜி.ஓ. எண் (டி)569, நாள் 19-7-2002-ல் சிறப்புத் தொழில் தீர்ப்பாயம் ஒன்றை அம்மா அரசு அமைத்தது, பஞ்சாலைத் தொழிலாளர்கள் மீது அம்மா கொண்டுள்ள பாசம் புரியும் என்று கூறுவதில் பெருமிதம் அடைகிறேன்.

அம்மா, அந்தத் தீர்ப்பாயத்தின் மூலம் எங்கள் மதுரா கோட்ஸ் ஆலை, நான் வேலை பார்க்கின்ற மதுரா கோட்ஸ் ஆலை, அது ஒரு international factory. Number one factory both in marketing and approach towards labour. தீபாவளிக்கு முன்பாக அதிக போனஸ் தரும் அற்புதமான கம்பெனி. அந்த ஆலையில் இடைக்கால ஊதியப் பிரச்சினையில் நமது அரசிடம் எங்கள் ஆலை முதல் ஆளாக ஒப்புக்கொண்டு ரூ. 260/-ஐ இடைக்கால ஊதியமாக மாதம் வழங்கி வருகிறது. அது தனியே வழங்கப்படுவதால் தொழிலாளர்களுக்குரிய கிராஜுவிட்டி, பி.எஃப். போன்றவற்றில் அப்பணம் சேராமல் உள்ளது. எனவே, அம்மா அவர்கள் அமைச்சர் மூலமாக மேற்படி எங்கள் மில்லுடன் பேச்சு நடத்தி ரூ. 260/-ஐ, அதே தொகையோ அல்லது சிறிது கூட்டியோ எந்தத் தொகை என்றாலும் அதை நிரந்தர ஊதியமாக்கி சம்பளத்துடன் சேர்த்து வழங்க ஆவன செய்ய நமது சங்கத்தின் கோரிக்கையாகவும், எனது கோரிக்கையாகவும் பேரவைத் தலைவர் வாயிலாக அம்மாவை வணங்கி வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடி சுற்றும் தொழிலாளர்கள் இன்று அம்மா ஆட்சியில்தான் முறையான சம்பளம், போனஸ் பெறுகிறார்கள். 2 இலட்சத்து 49 ஆயிரத்து 302 பீடித் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் புகைப்பட அடையாள அட்டை வழங்கியதை வரவேற்கிறேன். இன்று பீடி சுற்றும் தொழிலாளர்கள் அதிகம் உள்ளதே எங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில்தான். பெண்கள் குடிசைத் தொழிலாகவும், சுயமாக ஆண் துணையின்றி குடும்பத்தை வழி நடத்தவும் இந்தத் தொழில் அவர்களுக்கு உதவியாக உள்ளது. கடந்த தி.மு.க ஆட்சியில் பாதியில் விடுபட்ட 64 வீடுகளுக்கும் சேர்த்து அம்மாவின் அரசு அந்த பீடித் தொழிலாளர்களுக்கு 5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 2,000 வீடுகள் வீதம் 10,000 வீடுகள் கட்ட அறிவித்துள்ளதையும், அரசு பங்களிப்பாக ரூ. 5 கோடி மானியத் தொகை வழங்கியுள்ளதையும் வரவேற்கிறேன். பீடி சுற்றும் தொழிலாளர்களும், தாய்மார்களும் இத்திட்டத்தை மிகவும் வரவேற்கிறார்கள் அம்மா. குழந்தைத் தொழிலாளர்களை

பிற்பகல் 12-45

ஒழிக்க அம்மா நேரடியாக ஈடுபடுவதை நாம் இன்று காதார கேட்டோம். அம்மா அரசில் குழந்தைத் தொழிலாளர் முறைகளை ஒழிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து அதற்கான ஒரு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, வேலை செய்யும் குழந்தைகளைக் கண்டறிந்து, குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்; 5 முதல் 7 வயது குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல், மீட்கப்பட்ட குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல், முறை சார்ந்த பள்ளிக் கல்வியை வலுப்படுத்துதல்; 14 முதல் 16 வயது வரை குழந்தைகளுக்குச் செயல் திறன் பயிற்சி அளித்தல், சட்டங்களைத் தீவிரமாக அமல்படுத்துதல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பல முக்கிய அம்சங்களுடன் திட்டம் தயாரித்து 2005 ஆம் ஆண்டுக்குள் ஆபத்தான தொழில்களில் இருந்தும் 2007 ஆம் ஆண்டுக்குள் எல்லாத் தொழில்களில் இருந்தும் குழந்தைகள் தொழிற்சாலைகளில் வேலை செய்வதைத் தடுத்து, அவர்களை முன்னேற்றுவதிலிருந்து, அம்மா என்றாலே அன்பு, அன்பு என்றாலே அது எங்கள் அம்மாதான், எங்கள் அம்மா அரசுதான் என்று எல்லோரும் பாராட்டும் அற்புதமான செயல் திட்டம். அம்மா அதை மனதார வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 58,654 ஹெக்டேர். தொழிலாளர்கள் 94,616 ஆகும். அதில் எனது தொகுதியில் உள்ள தேயிலைக்குப் புகழ் வாய்ந்த, ஏற்றுமதி செய்து வருகின்ற தேயிலைத் தோட்டங்களில் மாஞ்சோலை தேயிலைத் தோட்டமும் ஒன்று ஆகும். அங்கு தொழிலாளர்கள், அம்மா ஆட்சியில் யாருடைய தூண்டுதலும், யாருடைய தலையீடும் இன்றி தொழில் செய்து வருகிறார்கள். அம்மா ஆட்சி வரவேண்டும் என்று விரும்பியவர்கள். காரணம், தி.மு.க. ஆட்சியில் சம்பளம் கேட்டு நடத்தப்பட்ட ஊர்வலத்தில் தி.மு.க. அரசின் அலட்சியத்தால் 17 பேர் தாமிரபரணி ஆற்றில் அடித்துக் கொல்லப்பட்டனர். தொழிலாளர்கள் மீது கடந்த தி.மு.க.விற்கு உள்ள அக்கறை இதுதான். ஆனால், அம்மா ஆட்சி ஏற்பட்டதும் ஊட்டித் தேயிலை ஒன்று ஏற்படுத்தி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வில் ஏற்றம் பெறச் செய்தார்கள். இன்று அம்மா ஆட்சியில் அங்கே வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு தினசரி ரூ. 72 வீதம் மாதம் அட்வான்ஸ் வழங்கப்படுகிறது. அவர்களது சம்பள பேச்சு வார்த்தை விஷயமாக அம்மா அவர்கள் சிறப்பு உத்தரவாக சிறப்பு நடுவர் தீர்ப்பாயம் அமைத்துள்ளதாக இப்போது அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்கு அம்மா அரசிற்கும், அம்மாவிற்கும், பேரவைத்



நன்றியை நான் தலைவர் வாயிலாக என் பணிவான தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் அம்மாவிடம் ஒரே ஒரு வேண்டுகோள் வைக்கின்றேன். மாஞ்சோலை எஸ்டேட்டில் ஊத்து எஸ்டேட் என்ற பகுதி உள்ளது. அங்கே நிரந்தர வேலை பார்த்து வந்தவர் இசக்கியம்மாள் என்ற பெண்மணி. ஐயாகுட்டி ஆசாரி என்பவருடைய மனைவி, அம்மா உங்கள்மீது உயிரையே வைத்திருப்பவர் அந்தப் பெண்மணி. அந்த மலைப் பகுதியிலும் நீங்கள் முதல்வராக வேண்டும் என்று ஓடி உழைத்தவர். அவர் 19-4-2003 சனி அன்று வேலைக்குச் சென்று வொர்க் அலோகேஷன் வாங்கி வேலை ஸ்பாட்டுக்குச் செல்லும் வேளையில் யாரும் எதிர்பாராத வண்ணம், கோடைக்காலம் என்பதால், இதுவரை வாராமல் அந்தப் பகுதிக்கு வந்து காட்டு யானை ஒன்றால் மிதித்து அடித்துக் கொல்லப்பட்டார் அந்தப் பெண்மணி. இன்று அவர்களுக்கு கல்யாண வயதில் ஒரு பெண்ணும், இரண்டு பையன்களும் உள்ளார்கள். அம்மா கருணை கூர்ந்து அந்தப் பெண்மணிக்கு ஏதாவது கருணை உதவி அளித்திட உங்கள் தொண்டன் என்ற முறையில் வணங்கி வேண்டுகிறேன். இந்த மாதிரி நிகழ்வுகள் நடக்கும்பொழுது அவர்களுக்குத் தகவல் சொல்லக்கூட எஸ்.டி.டி. போன் வசதி இல்லை. எனவே, அம்மா அவர்கள் அந்தப் பகுதிக்கு எஸ்.டி.டி. பொது வசதி செய்து தர வேண்டுகிறேன். நான் டெலிபோன் டிபார்ட்மெண்ட்-ஐ அணுகினேன். அவர்கள் மலைப் பகுதி, எஸ்டேட் பகுதி என்பதால் மறுக்கிறார்கள். எனவே, அம்மா அவர்கள்தான் அந்த எஸ்.டி.டி. பொது வசதியை அங்கு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தங்களைப் பணிவோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில்கூட அவர்களுடைய பணியும் இன்று அம்மா அரசில் நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்துள்ளது. உதாரணத்திற்கு சுய வேலைவாய்ப்புத் தொழில்கள் தொடங்க உதவிப் பெற்றவர்கள் எண்ணிக்கை தி.மு.க. ஆட்சியில் 515 பேர்களுக்கு என்று இருந்தது. இன்று அம்மா ஆட்சியில் சீரிய முயற்சியின் காரணமாக 2001-2002-ல் அது 728 ஆகவும், 2002-2003-ல் டிசம்பர் மாதம் முடிய 9 மாதங்களில் மட்டும் அது 736 ஆகவும் உயர்ந்துள்ளதில் இந்த அரசின் அக்கறை அனைவருக்கும் புரியும். வங்கிகளின் கடனுதவிகூட 2000-2001-ல் ரூ. 290 இலட்சமாக இருந்தது. ஆனால், அம்மாவினுடைய அரசின் சீரிய முயற்சியினால், இன்று வங்கிகளின் கடனுதவி 2001-2002-ல் ரூ. 397 இலட்சமாகவும் உயர்ந்து, 2002-2003-ல் ஒன்பதே மாதத்தில் ரூ. 374 இலட்சமாகவும் உயர்த்தி வழங்க வங்கியை அணுகியதில் இருந்து இந்த அரசின் செயல்பாடு, வேகம் அனைவருக்கும் புரியும். அந்த வேகத்தை, முன்னேற்றத்தை வரவேற்கிறேன்.

[திரு. எம். சக்தி வேல் முருகன்] [2003 ஏப்ரல் 23

பிற்பகல் 12-50

அதேபோல் கண் பார்வையற்றவர்களுக்கு 1999-2000-ல், தி.மு.க ஆட்சியில் செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 219.42 இலட்சம் என்று இருந்தது. ஆனால் அம்மாவினுடைய ஆட்சியில் 2001-2002-ல் கண் பார்வையற்றவர்களுக்கு ரூ. 273.33 இலட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஊனமுற்றவர்கள் மீதும், கண் பார்வையற்றவர்கள் மீதும் அம்மா அரசு காட்டும் பரிவு புரியும்.

எனது தொகுதியில் உள்ள சில குறைபாடுகளை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் வாயிலாக, என்னுடைய அம்மாவின் கனிவான பார்வைக்கு நான் கொடுத்துவிடுகிறேன்.

எனவே, இப்படி தொழிலாளர் நலத் துறை மற்றும் வேலைவாய்ப்புத் துறை மூலமாக வழங்கும் உதவிகள், அம்மா அரசில் முடுக்கி விடப்பட்டு சென்ற அரசு கொண்டிருந்த ஆமை வேகத்தை விரைவுபடுத்தி, வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்கின்ற வகையில் பல்வேறு திட்டங்களை அரசு மூலம் உருவாக்கி, தொழிலாளர்கள் வாழ்வில் ஏற்றம் பெற அரசு நடவடிக்கையோடு நிற்காமல், அரசோடு நிற்காமல், அரசுத் துறையோடு மட்டும் நிற்காமல், கருணை உள்ளத்தோடு 52 நலிவடைந்த தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு கழகத்தின் மூலம் ரூ. 25,000/-ஐ மே தின விழாவில் வழங்கி, நலிவடைந்த தொழிலாளர்களின் ஒளி விளக்காகத் திகழ்கின்ற எங்கள் அன்னையே (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள்தான். தொழிலாளர்களின் உண்மையான தலைவர், நீங்கள்தான் தொழிலாளர்களின் உண்மையான தலைவர் என உறுதியிட்டுக் கூறி, உங்கள் பொற்பாதங்களில் நன்றியைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையை தொழிலாளி என்ற முறையில் வரவேற்று, வாய்ப்பு அளித்த என் அன்னைக்கும், என் பேரவைத் தலைவருக்கும் மீண்டும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சக்திவேல் முருகன் அவர்கள் காட்டு யானை மிதித்து இசக்கியம்மாள் என்ற பெண்மணி இறந்துவிட்டார்; அவர்களுக்கு நிதி கொடுக்க வேண்டுமென்று சொன்னார். அம்மா அவர்கள் வனத் துறையின் சார்பாக ஒரு இலட்ச ரூபாய் நிதி கொடுக்கப்படும் என்பதை அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2003 ஏப்ரல் 23]

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்திவேல் முருகன், என்ன சொல்லுங்கள்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** இந்த உலகத்திலே கேட்டதைக் கொடுக்கின்ற ஒரே தாய் என்னுடைய அம்மாதான் என்பதை நான் சொல்லவில்லை, எல்லோரும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அம்மாவின் பார்வைக்கு செல்லாமல்தான் சில விஷயங்கள் விட்டிருக்குமே தவிர, அம்மாவினுடைய பார்வைக்குச் சென்றுவிட்டது என்று சொன்னால் கண்டிப்பாக அவர்களுக்கு விடிவு காலம் கிடைத்துவிடும். நேற்றுகூட என்னிடத்திலே தொலைபேசியில் சொன்னார்கள். நான் அதை நேரடியாகப் பார்த்தேன். உருக்கமானது. இன்றுகூட அதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. எனவே, அப்படிப்பட்ட ஒரு நல்ல குடும்பத்திற்கு, எங்கள் அம்மாவினுடைய விசுவாசி குடும்பத்திற்கு மனிதாபிமானத்தோடு உதவி செய்த, ஒரு இலட்ச ரூபாய் வழங்கிய அம்மாவிற்கு என்னுடைய தொகுதி சார்பிலும், மாஞ்சோலை எஸ்டேட் தொழிற்சங்கம் சார்பிலும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

***திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறை மற்றும் வேலைவாய்ப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளை நான் முன் வைக்கிறேன். இதில் ஏற்கெனவே சொல்லப்பட்ட விஷயங்களைத்தான் திரும்பவும் சொல்ல வேண்டியிருக்கிறது. 2001-லும், 2002-லும், என்ன சொன்னோமோ, அது நீடிக்கிறபோது, 2003-லும் நாங்கள் கேட்கிற கோரிக்கைகளும், பிரச்சினைகளும் நீடிக்கவே செய்யும். அது எங்கள் குற்றம் இல்லை. சென்ற ஆண்டில் வேலை நிறுத்தங்களும், மனித வேலை நாட்கள் இழப்பும் குறைந்திருப்பது சாதனை என்று மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் சொன்னார்கள். அறிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. வேலைநிறுத்தங்கள் நடந்தால், போராட்டங்கள் நடந்தால் நாங்கள்தான் காரணம், எதிர்க் கட்சிகளில் கம்யூனிஸ்ட்கள்தான் காரணம் என்று சொல்லுகிற அரசு இது. வேலைநிறுத்தம் குறைந்து போனால் அரசாங்கத்தின் சாதனை என்கிறீர்கள். நடந்தால் நாங்கள் குற்றவாளிகள் என்று எங்களைச் சொல்கிறீர்கள். ஜனங்கள்தான் இதுபோன்ற விஷயங்களுக்குத் தீர்ப்புச் சொல்ல வேண்டும்.

[திரு. கே.சி. கருணாகரன்] [2003 ஏப்ரல் 23

பிற்பகல் 12-55

2002 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் தேதி தேசிய அரசாணை 133-ன்படி, தமிழ்நாட்டிலே மூடியும், சரியாக இயங்காமலும் இருக்கும்படியான தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, அந்தத் தொழிற்சாலைகளைத் திரும்பவும் திறக்க முயற்சிகளை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு தொழிலாளர் நல ஆணையருக்கு உத்தரவிட்டது. அதற்கான ஆலோசனைக் குழுவினை நியமிக்கவும் கோரியது. அந்த அடிப்படையிலே முத்தரப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அது 3-வது பக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரங்களுக்கு வருவதற்கு முன்னால், சில மூடப்பட்ட ஆலைகள் மற்றும் கம்பெனிகள்—தமிழ்நாடு முழுவதும் ஏராளமாக இருக்கின்றன. நான் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில், ஏற்கெனவே பட்டியலிடப்பட்டது. இப்போது பட்டியலிடுகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, பல ஆண்டுகளாக மூடப்பட்டு இருக்கின்றன. பல, பத்து வருடங்களாக இருக்கின்றன. சில, 4 வருடங்களாக இருக்கின்றன. 4 வருடங்களிலிருந்து 12 வருடங்கள் இருக்கின்றன. அவர் சொன்னதுபோல, வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஒரு சமூக மற்றும் தேசியப் பிரச்சினை என்பதை நாங்களும், நீங்களும், மக்களும் அறிந்துதான் இருக்கிறோம். அதிகாரம் இருக்கிறவர்களிடத்தில்தானே கேட்க வேண்டி இருக்கிறது? இங்கே இருக்கிற தொழிலாளர் நலப் பிரச்சினைகளை மேற்கு வங்கத் தொழிலாளர் நல அமைச்சரிடமோ, கேரள தொழிலாளர் நல அமைச்சரிடமோ நாங்கள் போய் கேட்க முடியாது. ஆகவே, இங்கேதான் கேட்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமைகளைச் சொல்லுகிறபோது நான் வருத்தத்தோடு மீண்டும் நினைவுபடுத்துகிறேன். எவரெஸ்ட் என்ஜினியரிங் ஒர்க்ஸ், கோவை, 28-4-1986-ல் பூட்டப்பட்டது. நியூ சிட்டி என்ஜினியரிங் ஒர்க்ஸ், கோவை—20-12-1986, கெம்ப் இந்தியா லிமிடெட், மலுமச்சம்பட்டி, கோவை—12-5-1991, இராமகிருஷ்ணா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ், காரமடை, கோவை—8-3-1998, லட்சுமி காயத்திரி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், காரமடை, கோவை—28-3-1998, மெட்ராஸ் போர்ஜிங் அண்டு அலைய்ட் இண்டஸ்ட்ரீஸ், கோவை—8-3-1998, துல்யா அலாய் காஸ்டிங்ஸ் ஒர்க்ஸ், கணபதி, கோவை—26-7-2001, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட், கணபதி, கோவை—2-9-2001, இராதாகிருஷ்ணா மில்ஸ் லிமிடெட், பீளமேடு, கோவை—10-8-1986, ஜெயலட்சுமி மில்ஸ், சிங்காநல்லூர், கோவை—25-10-1987, மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், உப்பிலிபாளையம், கோவை—17-6-1998, ஜனார்த்தனா மில்ஸ் லிமிடெட், உப்பிலிபாளையம் கோவை—4-10-1998, கமல் ஸ்பின்னர்ஸ், குரல்குட்டை, உடுமலைப்பேட்டை 2-1-1997, பாலமுருகன் ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட், தாந்தோணி கிராமம், உடுமலைப்பேட்டை—



2003 ஏப்ரல் 23] [திரு. கே.சி. கருணாகரன்]

23-1-1997, பாலமுருகன் டெக்ஸ்டைல்ஸ், தாராபுரம் ரோடு, உடுமலைப்பேட்டை—18-12-1994, ராஜ்கொண்டல் டெக்ஸ்டைல்ஸ், 111ஏ, ஆர்.எஸ்.புரம், கோவை—30-9-1997, சக்தி ஸ்பின்னர்ஸ், குரல்குட்டை, உடுமலைப்பேட்டை—6-9-1998, கொம்மினார் டெக்ஸ்டைல்ஸ், பெதப்பம்பட்டி, உடுமலைப்பேட்டை—31-3-1998, ஸ்ரீ மீனாட்சி பிளாஸ்டிக் இண்டஸ்ட்ரீஸ், கோவை—26-8-1998, சிவானந்தா மில்ஸ் பிரைவேட லிமிடெட், சிவானந்தபுரம், கோவை—18-12-1993, ஸ்ரீ ஹரி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், ஒண்டிபுதூர், கோவை—1-10-1995, கே.ஜி. ஸ்பின்னர்ஸ், காமாட்சிபுரம், ஒண்டிபுதூர், கோவை—8-4-1995, தனலட்சுமி மில்ஸ் லிமிடெட், திருப்பூர்—12-10-1997, ஸ்ரீ அம்பாள் மில்ஸ் லிமிடெட், சோமனூர்—1-4-1998. இவை ஒரு மாவட்டத்தில்...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுது குறிப்பிட்ட அந்தத் தொழிற்சாலைகளில் நான்கைத் தவிர, மற்ற அனைத்தும், தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் மூடப்பட்டன என்பது தெரிய வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துவைத்ததைப்போல, இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான் மூடப்பட்டன. ஆனால் இந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்கு அரசு காரணம் அல்ல. எந்தத் தொழில் தகராறுகளும் காரணம் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அறிவார்கள். இப்பொழுது இருக்கின்ற உலகமயமாக்கல், நிதி நெருக்கடி, பங்குதாரர்களுக்கிடையே வருகின்ற தகராறு, அவர்களுக்கிடையே இருக்கின்ற பிரச்சினை, அந்தப் பிரச்சினையில் அவர்கள் மூடிவிடுகிறார்கள். அப்படி மூடுகிறபோது, அந்தத் தொழிற்சாலைகளில் ஒவ்வொரு தொழிற்சாலையை மூடுவதற்கும் ஒரு சிறப்புக் காரணம் இருக்கிறது. அந்தக் காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலே முத்தரப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதிலே சட்டமன்ற உறுப்பினர்களும் உறுப்பினராக்கப்பட்டு, நீங்களே தெரிந்து பரிந்துரைகள் செய்வீர்களேயானால், அரசு அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு, என்னென்ன காரியங்களிலே அவற்றைத் திருத்தம் செய்து அந்தத் தொழிற்சாலைகளைத் திறக்கலாம் என்று அரசு சிந்திக்கும். ஏற்கெனவே முத்தரப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து இருக்கிறது. அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் எடுத்திருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூடிய ஆலைகளும், இதில் இருக்கிற நெருக்கடிகளும், இரண்டு வருடத்தில் வந்ததாக நான் சொல்லவே இல்லை. நாடறிந்த விஷயம் இது. 10 வருடங்களாக இருக்கிறது. தி.மு.க. ஆட்சியில்தான் நடந்திருக்கிறது என்று தெரியும். அதை எதிர்த்துத்தான் நாமெல்லாம் வெற்றி பெற்றோம். சென்ற பட்ஜெட் கூட்டத்திலும், அதற்கு முந்தைய பட்ஜெட் கூட்டத்திலும், தி.மு.க. அரசு எவ்வாறெல்லாம் தவறு செய்தது. மத்திய அரசாங்கத்திலே இருந்துகொண்டே இதை நிவர்த்தி செய்வதற்கு, 2 பொறுப்புகளையும் இப்படி நிறைவேற்றாமல் இருந்தது என்பதெல்லாம் நிறைய பேசி இருக்கிறோம். ஆகவே நீங்கள்தான் மூடலுக்குக் காரணம் என்று நான் சொல்லவே இல்லை. ஆனால் அதிகாரம்— உங்களுடைய பொறுப்பில் சர்க்கார்—உங்களுடைய கையிலே இருக்கிறபோது, குறைந்தபட்சம் நடவடிக்கையை வேகப்படுத்த வேண்டுமென்று கேட்கிறேன். முத்தரப்புக் குழு போடப்பட்டிருக்கிறது. உண்மைதான். மறுக்கவில்லை. இங்கே பட்டியலிலே 3 ஆம் பக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. "மூடப்பட்ட தொழில் நிறுவனங்களைத் திறப்பது தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய அரசாணை எண் 133, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12-2-2000-ன்படி, குழுக்கள் அமைக்கப்பட்டன." மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிலதிபர்கள் இருக்கிறார்கள். இந்தக் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள நிறுவனங்கள் குறித்து விவாதிக்கும் என்று சொல்லப்பட்டது.

என்னுடைய கேள்வி என்ன என்று சொன்னால், இந்த 15 மாதங்களில் இந்தக் குழுக்கள் எத்தனை முறை கூடியது? இந்தக் குழுக்கள் ஏதாவது அறிக்கையை அரசுக்கு அனுப்பியதா? நீங்கள்தானே உறுப்பினர்; நீங்கள் என்ன செய்தீர்கள் என்று எங்களைக் கேட்டு பிரயோஜனம் இல்லை. அதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பொறுப்பு. தொழிலாளர் நலத் துறை என்ன செய்து கொண்டிருக்கிறது? இந்த அரசாங்கம் இருக்கிறது; தொழிலாளர் நலத் துறை அமைச்சர் இருக்கிறீர்கள்; சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம். நாம் எல்லாம் 2 ஆண்டுகளாக இருந்து கொண்டிருக்கிறவர்கள். இந்தத் துறை தொடங்கிய காலத்திலிருந்து, நீங்கள் சொன்ன 50 ஆண்டு காலமாக துறைகள் இருக்கின்றன. இதை வேகப்படுத்துவதற்கு இந்தத் துறைகள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றன? இதுபற்றி ஏதாவது பரிசீலனை செய்ததா? குறைந்தபட்சம்....



பிற்பகல் 1-00

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் முத்தரப்புக் குழுக்களின் கூட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது. எங்கெங்கே தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கின்றன, அந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று பேச்சுவார்த்தை நடக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையினுடைய விவரங்களை எல்லாம் அரசு கேட்டுப் பெறுகிறது. நான் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். கரூரிலேகூட ஒரு தொழிற்சாலை, நீண்ட நாட்களாக மூடப்பட்டுக் கிடந்த தொழிற்சாலை, 612 பேர் அந்தத் தொழிற்சாலையிலே வேலை செய்து வந்தார்கள். இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மூடப்பட்டது. அதாவது, 23-6-1999-ல் இது மூடப்பட்டது. இது பி.ஐ.எப்.ஆர்.-லேகூட, நலிவடைந்த ஆலை என்று அறிவிக்கப்பட்டது. இந்த ஆலை 30-3-2001-ல், தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விடப்பட்டது. இது சம்பந்தமாக தொழில் தீர்ப்பாயத்திற்கு விடப்பட்டிருந்தாலும்கூட, மாவட்ட ஆட்சித்தலைவர், அங்கிருக்கின்ற குழுக்களை, இந்த முத்தரப்புக் குழுவை அழைத்து, உட்கார்ந்து, அமர வைத்துப் பேசி, செட்டில்மெண்ட் செய்து, ரூபாய் 4.27 கோடி 427 இலட்சங்களுக்கு காசோலைகளாக வாங்கி, அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.சி. கருணாகரன்:** நன்றி. இது சென்ற ஆண்டிலே நடைபெற்றது. எட்டு முறைகள் பேச்சுவார்த்தைகள் நடந்தன. அமைச்சர் அவர்கள் தலைமைப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அதற்கு நன்றி எல்லாம் நாங்கள் ஏற்கெனவே தெரிவித்தோம். இப்போதும் தெரிவித்துக்கொள்கிறேன். இதேமாதிரி இதரப் பிரச்சனைகளிலே கவனம் செலுத்த வேண்டும். அந்த முத்தரப்புக் குழுவிலே மாவட்டங்களில் குறிப்பாக, தொழில் கேந்திரமாக இருக்கக்கூடிய நகரங்களில் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புகளை ஆய்வு செய்வதற்கு, தொழிலாளர் நலத் துறை அமைச்சரும், வணக்கத்திற்குரிய தமிழக முதல்வர் அவர்களும், உரிய கவனம் செலுத்த வேண்டுமென்று தொடர்ந்து நாங்கள் வலியுறுத்துகிறோம். தொழிற்சங்கக் கூட்டுக் குழுகூட முதல்வர் அவர்களை நேரடியாக சந்திப்பதற்கான வாய்ப்புக் கோரி ஒரு கடிதத்தை தொழிலாளர் நல அமைச்சரிடம் கொடுத்ததாகச் சொல்லி, எங்களிடம் ஏற்கெனவே கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வரிடம் அவர்கள்

சந்தித்துப் பேசவேண்டும் என்கிறார்கள். 'முன்கூட்டியே கேட்டுக்கொண்டால், நான் பேசுவதற்குத் தயார்' என்று உறுப்பினர் வேல் முருகன் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நானும் வலியுறுத்துகிறேன். இந்தப் பிரச்சினை மீது அவர் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது...

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தெரிவித்ததுபோல், ஒரு தொழிற்சாலை மூடப்படுகிறது என்று சொன்னால் அதற்குப் பல்வேறு சிக்கலான காரணங்கள் இருக்கலாம். மூடப்பட்ட ஒரு தொழிற்சாலையை மீண்டும் திறப்பது என்பது பேசுவதற்கு எளிதாக இருக்கலாம். நடைமுறையில் அவ்வளவு எளிதான காரியமல்ல.

முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பின்னி மில்ஸ் (பி அண்ட் சி மில்ஸ்) மூடிக் கிடந்தது. 1991-ல் நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு, முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்து, பல மணி நேரம், பல சந்தர்ப்பங்களில் அந்தப் பேச்சுவார்த்தைகளில் நானே அமர்ந்து கலந்துகொண்டு, அரும்பாடுபட்டு பின்னி மில்ஸ்-ஐ மீண்டும் திறக்கச் செய்தேன். திறப்பு விழாவிற்கு நானே சென்றேன். ஆனால், பிறகு, 1996-ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மீண்டும் 1996-க்குப் பிறகு அமைந்த தி.மு.க. ஆட்சியில் மறுபடியும் அதே பின்னி மில்ஸ்-ஐ மூடும்படியாகச் செய்துவிட்டார்கள். ஆகவே, நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சி எல்லாம் வீணாகப் போய்விட்டது. இப்போதும் மூடப்பட்ட தொழிற்சாலைகளை எப்படியாவது திறக்கவேண்டும்; தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு கிடைக்கச் செய்ய வேண்டுமென்று இந்த அரசு அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. நெடுநாட்களாக மூடிக் கிடந்த டன்லப் தொழிற்சாலைகூட அண்மைக் காலத்தில் திறக்கப்பட்டது *என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொடர்ந்து நாங்கள் முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம்; மேற்கொண்டு வருகிறோம். சிலர் என்னைச் சந்திக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்தார். அவர்களை நான் சந்திக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 187-ஆம் பக்கத்தில் திருத்தம் தெரிவித்துள்ளார்கள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள். இன்னும் இரண்டு பேர் பேசவேண்டும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. முக்கியமான பிரச்சினை. தயவுசெய்து ஒரு 5 நிமிடங்கள் நீங்கள் அனுமதிக்கவேண்டும். வேறு வழியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. எல்லோருமே முக்கியமாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ரொம்ப நெருக்கடியான நிலைமைகள். நாங்கள் சொல்லாமல் வேறு யாரும் சொல்லமுடியாது. தயவுசெய்து நீங்கள் அனுமதிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நீண்ட காலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களில் வேலை இல்லை. புதியதாக வேலை கொடுக்கமுடியவில்லை. மில்லை திறக்க முடியவில்லை. அப்படி மூடப்பட்டாலும், வேலையிழந்தவர்களுக்கு, Gratuity உள்ளிட்ட எந்தப் பணப் பயனும் கிடைக்கவில்லை. அப்போது 250 ரூபாய் நிவாரணம் கொடுக்கிற ஏற்பாடு இருந்தது என்று கொள்கை அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது சரிதானா? அது என்ன கணக்கு? அதிகாரிகள், அமைச்சர் அவர்கள் கொஞ்சம் இதை ஸ்தூலமாகப் பார்க்கவேண்டும். 70 தொழில் நிறுவனங்களில் 8,974 பேருக்கு 2002-ஆம் ஆண்டிலே ரூ. 10,51,750/- பட்டுவாடா செய்ததாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. கேள்வி என்னவென்று சொன்னால், ஒரு மாதத்திற்கு 250 ரூபாய் என்று சொல்லி, நீங்களே சொல்லியிருக்கிற 8,974 பேருக்கு என்று சொன்னால், அவர்களுக்கு ஒரு மாதம் 250 ரூபாய் கொடுத்திருந்தாலே ரூ. 22,43,400 கொடுத்திருக்க வேண்டும். கூட்டி கணக்கைப் பார்த்தால் தெரியும், பெருக்கிப் பார்த்தால் தெரியும். ஆனால் ரூ. 10,51,750 மட்டுந்தான் பட்டுவாடா செய்யப்பட்டிருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதிலே 4,207 பேருக்கு மட்டும்தான் கொடுத்திருப்பதாக அர்த்தமாகிறது. பிரச்சினை என்னவென்று சொன்னால், 12 மாதங்களுக்கு நீங்கள் கொடுத்திருந்தால் ரூ. 2,69,20,800 கொடுத்திருக்க வேண்டும். வெறும் 10 இலட்ச ரூபாய் கொடுத்ததாக கணக்கிலே இருக்கிறது.

பிற்பகல் 1-05

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருப்பது 8,974 தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கொடுக்கப்பட்ட தொகை ரூ.10,51,750 தான். ஏனென்றால் அரசு ஆணைகளை வழங்கிவிடுகிறது. அதை வந்து வாங்குவதற்கு அந்தத் தொழிலாளர்கள் வருவதில்லை அல்லது இருப்பதில்லை எனவே, பட்டுவாடா செய்யப்பட்ட பணத்திற்கு மட்டும்தான் இதிலே கணக்கு சொல்ல முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அவர்கள் வாங்கவில்லை என்பது எப்படி சரியாக இருக்கும்? அவன்தான் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறானே, கொடுக்கவில்லையா, வாங்கவில்லையா என்பது..

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** பிராக்டிகலாக இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது மூடப்பட்ட தொழிற்சாலைகளில், (closed industries) தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்குப் பிறகு அந்த ஊரிலேயே அவர்கள் பெரும்பாலும் இருப்பதில்லை. வேறு ஏதாவது தொழில் செய்ய போய் விடுகிறார்கள். போய்விடுகிறபோது இந்த மாதம் பணம் கொடுக்கிறபோது இருக்கிறார்கள். அடுத்த மாதம் பணம் கொடுக்கிறபோது வேறு எங்காவது அவர்கள் தொழில் கிடைத்து, வேலை கிடைத்து போய்விடுகிறார்கள். எனவே, ஆணைகள் வழங்கப்பட்ட பிறகு, அவர்கள் வந்து இந்தப் பணத்தைப் பெறுவதிலே சிக்கல் இருக்கிறது, நடைமுறைச் சிக்கல் இருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** வேறு எங்குமே வேலை கிடைப்பதில்லையே. ஆகவே அவர்கள் வேலை கிடைத்தால் போய்விடுவார்கள். வேலை கிடைக்காமல் வீட்டில்தான் இருக்கிறார்கள். ஆகவே கொடுக்கலாம் என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, திரு. கருணாகரன் நேரத்தை எடுக்க வேண்டாம். அவர் சொல்கிறார்.



**திரு. கே.சி. கருணாகரன்:** அதாவது இதில் அதிக நேரம் நான் விவாதித்துக் கொண்டிருந்தால் பிரயோஜனப்படாது. உண்மையில் வேலை இழந்து மூடப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் மிகப் பெரிய பலகீனம் இருக்கிறது, குறை இருக்கிறது. பாதிப்பேர்களுக்கு, வெறும் 4,000 பேர்களுக்கு மட்டுமே கிடைத்துள்ளது. நீங்களாக சொல்லியிருக்கிற 8,000 பேர்களுக்குக்கூட கிடைக்கவில்லை. ஒரே மாதம் மட்டும்தான் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை மட்டுந்தான் நான் இங்கே பதிவு செய்கிறேன். அது உங்கள் கணக்கில் இருக்கிறது. ஆகவே, அதை ஆய்வு செய்து அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். அதைக் கூடுதலாகவும் கொடுப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இதே அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13-9-2001 தேதியன்று தொழில் தகராறு சட்டம், 10-பி-க்கு ஒரு ஆணையைப் பிறப்பித்தார். இடைக்கால நிவாரணத் தொகைகளுக்கு சம்பள உயர்வு போராட்டம் நடந்தது. அது முடியவில்லை. 10-பி ஆணையைப் பிறப்பித்து இடைக்கால நிவாரணம் அரசு அறிவித்தது. சுமார் 2,000 ஆலைகளில் ஒரு சில ஆலைகளைத் தவிர, எந்த பஞ்சாலை நிர்வாகமும் இந்த ஆணையை அமலாக்கவில்லை. இடைக்கால நிவாரணத் தொகையும் கொடுக்கவில்லை. மாறாக 650-க்கும் மேற்பட்ட ஆலை நிர்வாகங்கள் சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். இப்போது அதிலே தொழிற்சங்கங்கள் என்ன சொல்லி கேட்கிறார்கள் என்று சொன்னால் தடையாணை பெற்றுள்ள சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய அந்த அப்பீலை எதிர்த்து, முறையீட்டை எதிர்த்து, அரசு மேல் முறையீடு செய்ய வேண்டும். இதன்மீது தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, தடையாணை பெற்றார்கள். 30-9-2002 இல், அதற்குரிய தீர்ப்பு வரப்பெற்றது. தீர்ப்பினுடைய நகல் 20-12-2002 இல் அரசுக்குக் கிடைத்தது. உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, 20-1-2003 இல் அரசின் சார்பில் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 ஏப்ரல் 23

**திரு. கே.சி. கருணாகரன்:** நன்றி, அது சங்கங்கள் எதிர்பார்த்தது, அதிலே வெற்றி பெற வேண்டும். நியாயம் கிடைக்க வேண்டும். ஏனென்று சொன்னால், அவர்கள் பேச்சுவார்த்தைக்கும் வரமாட்டேன் என்கிறார்கள். தொழிலாளர்களுடைய போராட்டத்திலும் முடியாது என்று தவிர்க்கிறார்கள். நாமும் நடவடிக்கை எடுக்கிறோம். நாங்கள் பேசி ஒழுங்கு பண்ணுகிறோம் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் ஆணையிடுகிறது. அதையும் அமல் நடத்தமாட்டோம் என்கிறார்கள். தமிழக பஞ்சாலை முதலாளிகள், சின்ன முதலாளிகளாக இருந்தாலும் சரி, பெரிய முதலாளிகளாக இருந்தாலும் சரி, அரசு ஆணைகளை அல்லது அரசு உத்தரவுகளை அல்லது லேபர் இலாக்கா எடுக்கும் முடிவுகளை பெரும்பகுதியான முதலாளிகள் அமல் நடத்த மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் ஒன்றுதான். ஒரு பக்கம் தொழில் நெருக்கடி, ஆலை மூடல் பட்டியலை நான் படித்தது. இன்னொரு பக்கம் தொழில் நடைபெறுகிறது. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது புதிய புதிய ஆலைகள் பல இடங்களிலே உற்பத்தியாகின்றன. திண்டுக்கல் ரோட்டிலிருந்து, தாராபுரத்திலிருந்து, கரூர் ரோட்டிலிருந்து போகக்கூடிய ரூட்டில் பார்த்தீர்கள் என்று சொன்னால், திண்டுக்கல் நோக்கி போகக்கூடிய ரூட்டில் வேடசந்தூர் போன்ற பகுதிகளில் ஏராளமான புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்திலும் நடந்து கொண்டிருக்கிறது. அங்கே எந்தவிதமான சட்ட நியாயமும், சட்ட நடவடிக்கையும் அமலாவது கிடையாது. அத்துமீறுகிறார்கள். தொழிலாளர் இலாக்கா என்ன செய்கிறது என்பதை தொடர்ந்து கேட்டுக்கொள்கிறோம். இப்போதும் கேட்கிறோம்.

பெண்களை வைத்து வேலை வாங்குகிறார்கள். வாங்கக் கூடாது என்பதல்ல. குறைந்த பட்சக் கூலி...

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன், ஒரு மணித் துளிக்குள் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** கான்ட்ராக்ட் கூலி என்கிற முறையிலே, பெண்களைக் கொத்தடிமைகளாக, காம்பவுண்டு சுவர் கட்டி வைத்து வேலை வாங்குகிற நடைமுறை நீடித்துக் கொண்டிருக்கிறது. அதை நம்முடைய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கப் போகிறதா? அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, சட்டபூர்வமாக அவர்களுக்கு சலுகைகளையும், உரிமைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் போகிறதா என்பதுதான் கேள்வி. அடுத்து .....



2003 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதோடு முடித்துவிடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. முடித்து விடுகிறேன். பீடித் தொழிலாளர் பிரச்சினை. இன்னும் இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவருடைய பரிந்துரையில்தான் 5 மணித் துளிகள் கொடுத்திருக்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆண் தொழிலாளர்கள் சம்பந்தமான, பீடித் தொழிலாளர் பிரச்சினை. ஓர் ஆணையம் நமக்கு இருக்கிறது. ஆலோசனைக் குழு இருக்கிறது. தொழிலாளர் நல அமைச்சரிடம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் வழங்க வேண்டும் என்று இருக்கிறது. Minimum Wages ஆலோசனைக் குழு என்ற பெயரிலே உள்ள குழு அறிக்கை தந்து 3 மாதங்கள் ஆகின்றன. 4½ ரூபாய் கூலி உயர்வு கிடைத்திருக்க வேண்டும். 2½ இலட்சத்திற்கும் மேற்பட்ட பீடித் தொழிலாளர்களுக்கு இந்த முடிவு இதுவரைக்கும் அமலாக்கப்பட வில்லை. அதற்கு என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், அரசாங்கம் ஆணையை வெளியிடவில்லை; அரசாணை கிடைக்கவில்லை என்கிறார்கள். இதனால், நாளொன்றுக்கு 20 இலட்சம் ரூபாயை பீடித் தொழிலாளர்கள் இழக்கிறார்கள். பீடி முதலாளிகள் ஆணை வரவில்லை என்று, நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இந்த ஒப்பந்தம் செய்து கடிதம் அனுப்பி 3 மாதம் ஆகிவிட்டது என்று சொல்கிறார்கள். இதன் மீது துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, நலவாரியங்கள் சம்பந்தப்பட்ட வரைக்கும், கட்டடக் கட்டுமானப் பணியின் நல வாரியம் முறையாக இயங்குகிறது. இதர வாரியங்கள் சரியாகச் செயல்படவில்லை என்றும், அரசும், சம்பந்தப்பட்ட நிர்வாக அமைப்புகளும் அதற்குப் பணம் ஒதுக்கி, நிதியை உருவாக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்படுகிறது. பல பகுதிகளிலிருந்தும் புகார்கள் இருக்கின்றன. ஆகையினால், அனைத்து வாரியங்களையும் செயல்பட வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, பெண் தொழிலாளர்கள், குழந்தைத் தொழிலாளர்கள் சம்பந்தமாக. கட்டடத் தொழிலாளர் நல வாரியத்தில் ஏறத்தாழ 50 கோடி ரூபாய் உள்ளது. இந்த வாரியத்தில் பதிவு செய்தவர்களில் 30 விழுக்காடு பெண் தொழிலாளர்களாக இருந்தும், இதுவரை ஒரு குழந்தைகள் காப்பகம்கூட, அவர்களுக்கென்று ஏற்படுத்தப்படவில்லை

என்று சொல்கிறார்கள். உதாரணமாக, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 50,000 பெண்கள், திருமணமானவர்களின் குழந்தைகள், 6 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை ஏறத்தாழ 2,000 இருக்கும் என்றும், 2 காப்பகங்கள் மற்றும் ஒரு தனியார் நிறுவனக் காப்பகம் நடந்து வருகிறது. குறைந்தபட்சம் 2,000 குழந்தைகள் பயனடைய வேண்டிய அந்த இடத்தில், இப்போது பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை வெறும் 110 மட்டுமே. மேலும், இங்கு நடத்தப்படும் மூன்று காப்பகங்களின் தற்போதைய கொள்ளளவு 225 குழந்தைகள் என்பதை மட்டும நினைவில்கொள்ள வேண்டும். அனைத்து தொழிற்பேட்டைகளிலும் அரசு குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து, அமைப்பு ரீதியில் உள்ள பிரிவினருக்கு, உரிய தொழிலாளர்களுக்கு குழந்தை பராமரிப்புச் சேவைகள், மகப்பேறு உதவிகள் வழங்கும் நலச் சட்டங்கள் பயனளிக்க தொழிலாளர் ஆணையர், அரசு இயந்திரங்கள் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டும். தொழிற்சாலை சட்டம் 1948, தோட்டத் தொழிலாளர் சட்டம் 1951, சுரங்கத் தொழிலாளர் சட்டம், 1952, பீடி புகையிலை தொழிலாளர் சட்டம், 1966 போன்ற சட்டங்கள் தொழிலாளர்களின் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குக் காப்பகம் அமைக்க வகை செய்கிறது. தொழிலாளர் ஆணையர், அரசு இச்சட்டத்தின் வசதிகளை நடைமுறைபபடுத்துவதற்கு முன்வரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. முடித்துவிடுங்கள். முடித்து விடுங்கள். கடைசியாக என்று சொல்லிவிட்டு நீங்கள் பேசக்கூடாது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. ஒரேயொரு கோரிக்கை. இல்லை, இல்லை. இது ஒன்றே ஒன்று. திண்டுக்கல், மெகிராஸ் ஸ்டீல் தொழிலாளர்கள், 38 பேர் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வேலையில்லாமல் உள்ளனர். திண்டுக்கல் உதவி ஆணையர் அவர்கள் முன்பு ஒத்துக்கொண்டு கையெழுத்திட்ட நிறுவனம் அதற்குப் பிறகு பேச்சுவார்த்தைக்கு வருவது இல்லை. இதனால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதேமாதிரியாக, அந்த.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன். (குறுக்கீடு)





**திரு. கே.சி. கருணாகரன்:** பெரம்பூர், பி அண்டு சி ஆலை சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய முதல் தவணை; வட்டித் தொகை 12-3-2003-ல் வழங்கப்படவில்லை என்று ஒரு புகார் இருக்கிறது. அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

பிற்பகல் 1-15

**•திரு. ஏ.எஸ். கண்ணன்:** தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாத்தில் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பில், பஞ்சாலைத் தொழிலாளர் கோரிக்கைகளைத் தீர்வு செய்ய, 19-7-2002 இல் சிறப்பு தொழில் தீர்ப்பாயம், மக்கள் நீதிமன்றம் தொடக்கம், கட்டடத் தொழிலாளர்களின் பென்ஷன் அறிவிப்பு போன்ற நடவடிக்கைகளை வரவேற்கிறோம். ஆனால் முறையாகச் செயல்படவில்லையென்பதையும், அரசு நிருவாகம் சுணக்கம் காட்டுகிறது என்பதையும் அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம், 8-ஆம் பக்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தொழிலாளர் நல அமைச்சர், வேலையளிப்போர், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் அடங்கிய உயர்மட்டக் குழுவானது, தொழிலாளர் பிரச்சினை, தொழிலாளர் கொள்கைக் குறித்து விவாதித்து அரசுக்கு ஆலோசனை வழங்குகின்றது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்காணும் உயர்மட்டக் குழு இதுவரையிலும் கூட்டப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், இரண்டு ஆண்டு காலம் கடந்த பின்பும் இன்னும் கட்டடத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உடலுழைப்புத் தொழிலாளர் அல்லது அமைப்பு சாரா நல வாரியம் தொடங்கப்பட்டு 5 ஆண்டு காலம் ஆகிறது. வேலையளிப்பவருடைய பங்களிப்பு இதுவரையிலும் ஏதும் வசூலிக்கப்படவில்லை. ஆனால்,

அமைப்புசாரா தொழிலாளர்கள் 6,15,809 பேர் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டு இருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய பங்களிப்பாக 7 கோடி ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. பதிவு செய்யாத தொழிலாளர்கள் சுமார் 1 கோடி பேர் இந்த அரசை நம்பியுள்ளார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற அதே நேரத்தில், தொழிலாளர்கள் பதிவு செய்ய வாரத்தில் ஒரு நாள் என்பதை மாற்றிட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுடைய வாரியம் செயல்படாமல் உள்ளது. அதைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

கொள்கை விளக்கக் குறிப்பிலுள்ள பல்வேறு சட்டங்கள் அமல்படுத்தப்படவில்லை. உதாரணத்திற்கு, குறைந்தபட்ச ஊதியம், ஒப்பந்தத் தொழிலாளர் குறைந்தபட்சக் கூலி, பெண் தொழிலாளர்கள் மீதான கொடுமைகள், ஆலை மூடல் ஆகிய மேற்காணும் சட்டங்களை அமல்படுத்திட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மூடப்பட்ட ஆலைகளில் பணிபுரிந்த இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு, அவர்களுக்குரிய சம்பள பாக்கி, கிராக்கிப்படி மற்றும் சர்வீஸ் கிராஜுவிட்டி போன்று கிடைக்கவேண்டிய பணம்கூட இதுவரையிலும் கிடைக்காமல் சம்பந்தப்பட்ட ஆலை முதலாளிகள் காலந்தாழ்த்துகிறார்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்து மேற்காணும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

டன்லப் கம்பெனி குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டன்லப் கம்பெனி திறக்கப்பட்டதாகக் கூறினார்கள். தயவு செய்து அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இன்றைக்கு டன்லப் கம்பெனி திறக்கப்படவும் இல்லை, மூடப்படவும் இல்லையென்ற ஒரு மோசமான நிலையில் அந்த 2 ஆயிரம் தொழிலாளர்கள், வீதியிலே இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

குறைந்தப்பட்சக் கூலி, பணிக்கொடை, பிழைப்பு ஊதியம் உள்ள சட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் தரப்பில், ஆயிரக்கணக்கான வழக்குகள் தொடரப்பட்டன. அதில் 6,541 கேட்பு மனுக்கள் பட்டுவாடா செய்யப்பட உத்திரவிடப்பட்டு உள்ளது. மொத்தம் தொகை 33 கோடியே 96 இலட்சத்து 3,452 ரூபாய். உத்தரவுதான் இடப்பட்டுள்ளதேயொழிய,





பட்டுவாடா செய்யப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வருவாய்த் துறை மூலம், மேற்காணும் தொகையினை வசூலிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமகள் திருமணத் திட்டம் என்ற பெயரால் தொழில் செய்யும் முதலாளிகள், பெண் தொழிலாளர்களை ஏமாற்றுகின்ற நிலை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. மில்கள், செங்கற் சூளைகள் போன்ற பல்வேறு தொழில்களில், பெண்களை மூன்று வருட கால ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணி புரியவேண்டுமென்று ஒப்பந்தத்தை செய்து கொள்கிறார்கள். அதற்குப் பின்னால், அவர்களுக்கு திருமணம் நடைபெறுகின்றபோது, அவர்களுக்கு சேர வேண்டிய அத்தனைப் பணங்களையும் செட்டில்மெண்ட் செய்து வெளியே அனுப்புகிறார்கள். வேலை அளிக்க மறுக்கப்படுகிறது. மேற்கண்ட திருமகள் திருமணத் திட்டம் என்ற பெயரில் ஏழைப் பெண் தொழிலாளர்களை, அவர்களுடைய வறுமையைப் பயன்படுத்தி வேலை நீக்கம் செய்யும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அவ்வாறு தொடர்ந்து நடைபெறாமல் அதைத் தடுத்து நிறுத்திடவேண்டுமென்று அன்போடு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலைத் தொழிலாளர் பிரச்சினை, இன்றைக்கு புதிய பொருளாதார கொள்கை அமல்படுத்தப்பட்டதன் விளைவு, தேயிலை உற்பத்தி, விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் அறிவோம். ஆனால், முதலாளி, தொழிலாளி பிரச்சினை எழுகின்றபோது நீதிமன்றங்களுக்குச் செல்லும்போது முதலாளிகளுடைய கோரிக்கைகள் மட்டும் அரசு நீதிமன்றங்களுக்கு அனுப்பியுள்ளதை கவனத்தில் கொண்டு தொழிலாளர்களினுடைய பிரச்சினைகளையும் நீதிமன்றத்திற்கு அனுப்புகின்ற நிலையை அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அரசு பொதுத் துறையிலும் தொழிலாளர் விரோதப் போக்கு கடைபிடிக்கின்றது. தனியார் துறை, கூட்டுத் துறைக்கு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டிய மாநில அரசு பொதுத் துறைத் தொழிலாளர் விரோதப் போக்கை கடைபிடித்து வருகிறது. உதாரணத்திற்கு, குடிநீர் வடிகால் வாரியத்தில், TWAD-Boardஇல் ஊழியர்கள், இனி வருங்காலங்களில், அவர்களுடைய பிரச்சனை சம்பந்தமாக கறுப்பு பேட்ஜ் அணியக்கூடாது; கொடி பிடிக்கக்கூடாது; போஸ்டர் ஒட்டக்கூடாது என்று அவற்றை

[திரு. ஏ.எஸ். கண்ணன்] [2003 ஏப்ரல் 23

தண்டனைக்குரிய குற்றம் என நிர்வாகம் ஆணை பிறப்பித்துள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் கவனத்திற்குக் கொண்டுவந்து, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

அதேபோல, ஆவின் நிறுவனத்திலும், இனி, வருங்காலங்களில், Gate கூட்டம் போடக்கூடாது; கூட்டத்தில் பேசக்கூடாது; சம்பளம் வாங்க மறுத்தாலும் தண்டனை உண்டு என்ற நிலையில் உத்தரவிடப்பட்டுள்ளது. ஜனநாயகபூர்வமான குறைந்தபட்ச இந்தத் தொழிலாளர்களுடைய நடவடிக்கைகள்கூட அரசால் மறுக்கப்படுகிறது என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதைப்போல, மாநில அரசு ஊழியர்கள், V.R.S.இல் செல்கிறபோது, 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் பணிபுரிந்த மாநில அரசு ஊழியர்கள் தானாக விலகும் திட்டத்தின்கீழ் மனு தந்துள்ளார்கள். கடந்த 6 மாதம், 10 மாதங்களாக அவர்களுடைய, தானாக விலகும் அந்த V.R.S. திட்டத்தை அரசு ஏற்றுக்கொள்ளவும் இல்லை; அல்லது, மீண்டும் பணி தரவுமில்லை. மேற்காணும் தொழிலாளர்கள் நிராதரவாக உள்ள நிலையில், சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை அரசு பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நகர்ப்புறங்களில் கோயில்களில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்குச் சம்பளம் மற்றும் சலுகைகள் கிடைக்கின்றன. ஆனால், மாவட்டங்களிலே உள்ள கோயில்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் அளிப்பதற்கான நடவடிக்கைகளையாவது மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு மானியத்தின்கீழ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசைக் கேட்டுக்கொள்வது, மாநில அரசு, தொழிலாளர்களிடம் வன்மம் பாராட்டக்கூடாது; இது தொழிலாளர்களுடைய நம்பிக்கையை இழக்கும் நிலையில் உள்ளது. மாநில அரசு, தொழிலாளர்களை அரவணைத்து, தனியார் துறையிலும் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும், அதிகாரிகளையும் பணிவன்போடு கேட்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்; வணக்கம். (குறுக்கீடு)



2003 ஏப்ரல் 23]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்பு, டன்லப் தொழிற்சாலை திறக்கப்பட்டுவிட்டதாக நான் இங்கே தெரிவித்தேன். இப்போது விவரத்தை நான் கேட்டறிந்தேன். பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் டன்லப் தொழிற்சாலை திறக்கப்படவில்லை. ஆகவே, நான் ஏற்கெனவே சொன்னதை, அவைக் குறிப்பில் திருத்திக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கிற மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும், அவையோருக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, மிகச் சுருக்கமாக சில விஷயங்களை மட்டும் இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறைந்தபட்ச ஊதியச் சட்டம் அத்தியாயம் 3-இல் சொல்லியபடி, ஊதிய மறு நிர்ணயம் செய்து இறுதி அறிக்கை அறிவிக்கப்பட்டதாகச் சொல்கிறீர்கள். கண்டிப்பாக குறைந்தபட்ச ஊதியத்தை, எல்லாத் துறைகளிலும் நிறைவேற்றி அமல்படுத்துவதற்கான முயற்சியை அரசாங்கம் தொடர்ந்து செய்ய வேண்டும்.

அதுபோல, குழந்தைத் தொழிலாளர்கள் முறையை நீக்குவதற்காக, தமிழக அரசு பலவாறு முயற்சி செய்து வருகிறது. அவையெல்லாம் முழுமையாக வெற்றி பெறுவதற்கு அனைவரும் துணை நிற்போம் என்பதைச் சொல்லிக் கொண்டு, தனியார் துறையிலே பணியமர்த்த அரசு எடுக்கிற முயற்சிகளை நான் வரவேற்கிறேன்.

அதுபோல, தொழிலாளர் தொடர்பான வழக்குகளை எல்லாம், 'லோக் அதாலத்' மூலம் விரைவாக முடிப்பதற்கும், அதைப்போல, தொழிலாளர் நல நீதிமன்றங்களை உருவாக்குவதற்கும் என்னுடைய இயக்கத்தின் சார்பாக என்னுடைய வரவேற்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மயிலாடுதுறை முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியிருக்கிற தொகுதி. சிறிய தொழிற்சாலை எதுவும் கிடையாது. மயிலாடுதுறை என்று சொன்ன மாத்திரத்திலேயே, திருமணத்திற்குப்

*176-ஆம் பக்கத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்குத் திருத்தம்.

பயன்படுத்தக்கூடிய கூறை சேலை, ஒரு காலத்திலே மிகவும் புகழ் பெற்றிருந்தது. இப்போது அந்த நெசவுத் தொழில் முற்றிலுமாக நசிந்து, அத்தனை குடும்பங்களிலும் ஒரு தறிகூட இல்லாத அளவுக்கு அந்தக் கூறை சேலை உற்பத்தி ஒரு சதவிகிதம்கூட கிடையாது.

அதற்கு அடுத்தபடியாக, எங்கள் பகுதியிலே உள்ள மிகப் பெரிய தொழிலாக, குடிசைத் தொழிலாகவும் பெரிய தொழிலாகவும் இருப்பது என்பது, ஆபரணத் தொழில்தான். ஏறத்தாழ இரண்டாயிரம் குடும்பங்கள், நகையை அழகாக, கைத்தொழில் மூலமாகச் செய்து, ஒரு புகழ்பெற்ற மையமாக அது இருந்தது. இன்னும் சொல்லப்போனால், அறுபடை வீடுகளிலுள்ள பெரும்பாலான தங்க இரதங்களை எல்லாம், மயிலாடுதுறை நகைத் தொழிலாளர்கள்தான் செய்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது, அந்தத் தொழில் மிகவும் நலிந்த நிலையிலே இருக்கிறது. காரணம், மிகப் பெரிய Jewellers எல்லாம், தற்போது மும்பை, கொல்கத்தா, பூனா போன்ற இடங்களிலே இருந்து, இயந்திரங்களினால் செய்யப்பட்ட ரெடிமேட் ஆபரணங்கள், சந்தைக்கு வந்து, கைத்தொழில் முற்றிலுமாக நசிந்து விட்டது. கடந்த வாரம்கூட ஆயிரம் குடும்பங்கள், மயிலாடுதுறையிலே, ஆபரணத் தொழில் நசிந்து வருவதைக் காப்பாற்றக் கோரி, ஒரு கோரிக்கை வைத்து உண்ணாவிரதம் இருந்தார்கள். என்னைப் பொறுத்தவரை ரெடி-மேட் ஐட்டங்களுக்கு எல்லாம் அரசு கூடுதல் வரி விதிக்க வேண்டும். கையால் செய்கிற கைவினைப் பொருட்களுக்கு ஊக்கம் தர வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-25*

அதேபோல, என்னுடைய தொகுதியில் இருக்கிற பஞ்சாலை முற்றிலும் மூடப்பட்டுவிட்டது. மணல்மேடு நூற்பாலை என்பது ஒரு புகழ்பெற்ற நூற்பாலை; அந்த ஆலை நலிவடைந்த நிலையிலே இப்போது அது சிக் இண்டஸ்ட்ரி ஆக அறிவிக்கப்பட்டுவிட்டது. அதேபோல நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை நலிவடைந்த நிலையில் இருக்கிறது. முத்தரப்புக் குழு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த முத்தரப்புக் குழு என்பது, ஆலை மூடப்பட்டதற்குப் பின்பு, கூட்டப்படுவதைவிட, நலிவடைந்த நிலையிலே சென்று கொண்டிருக்கிற சர்க்கரை ஆலையை மீட்டுத் தருவதற்கு அல்லது அதைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஒரு முன்முயற்சியை எடுக்க அந்த முத்தரப்புக் குழு மயிலாடுதுறையிலே கூடினால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய வேண்டுகோள்.



அதேபோல, மயிலாடுதுறை தொகுதி என்பது நாகை மாவட்டத்திலே மிகச் சிறந்த ஊர். தற்போது நாகை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கோரிக்கை இருக்கிறது. கொள்ளிடக் கரை முதல் கோடியக்கரை வரை ஒரு நீண்ட கடற்கரையை கொண்டிருக்கிற என்னுடைய மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை வருகிறபோது, மயிலாடுதுறையை மாவட்டத் தலைநகராக உருவாக்க வேண்டும் என்பது வடக்கு நாகை மாவட்ட மக்களுடைய கோரிக்கையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெக. வீரபாண்டின், இது தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கை.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை, தொகுதி விஷயத்திற்கு வந்துவிடுகிறேன்; சீக்கிரம் முடித்துவிடுகிறேன். இதை நான் மட்டும் சொல்லவில்லை; மயிலாடுதுறையை மாவட்டத் தலைநகராக மாற்றுவதற்கு ஆளும் கட்சியில் இருக்கிற பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் திரு. ரெங்கநாதன் அவர்களும், குத்தாலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. நடராஜன் அவர்களும், அதுபோல சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் கூட ஒத்துக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். மக்கள் அனைவரும் அத்தனை பேரிடத்திலும் இந்தக் கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். இது நியாயமான கோரிக்கை. காரணம் என்னுடைய தொகுதி மக்கள் எல்லாம் நாகை மாவட்டத்தினுடைய ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்கின்றபோது, பக்கத்து மாநிலத்தினுடைய காரைக்கால் பகுதியைக் கடந்து செல்ல வேண்டும்; அல்லது வேறு மாவட்டத்தை, திருவாரூர் மாவட்டத்தைக் கடந்து செல்ல வேண்டும். ஒரு தீவு போல இந்த வடக்கு மாவட்டம் இருக்கிறது. மிகப் பெரிய அரசியல் கட்சியாக இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்கூட நிர்வாக வசதிக்காக நாகை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து வடக்கு மாவட்டம்; தெற்கு மாவட்டம் என்று அறிவித்து இருக்கிறது. அதேபோல பாரதிய ஜனதா கட்சியும் வடக்கு மாவட்டம், தெற்கு மாவட்டம் என்று அறிவித்து இருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சிகூட இந்தக் கோரிக்கையை ஏற்றிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம்கூட வேதாரண்யம் தொகுதியை இரண்டாகப் பிரித்து அதை திருவாரூர் மாவட்டத்திலே இணைத்து இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையிலே எல்லா வசதிகளையும் கொண்டிருக்கிற மயிலாடுதுறையை மாவட்டத் தலைநகராக மாற்றவேண்டும், அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டிலேயே தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்; புதிதாக கிருஷ்ணகிரி மாவட்டம் உருவாக்கப்படும் என்று இந்த அரசு அறிவித்தது. அதன் பின்னர், நிதி நெருக்கடி இருந்ததால் அதற்கு செயல் வடிவம் கொடுக்க முடியவில்லை. இப்போது இந்த ஆண்டு அந்த மாவட்டத்தைப் பிரித்துவிடலாம் என்று எண்ணிய நேரத்தில், இப்போது தொகுதிகளுக்கான டீ-லிமிட்டேஷன் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அது முடியும்வரை, அதாவது 2004 ஆம் ஆண்டு இறுதி வரை எந்த மாற்றமும் செய்யக் கூடாது என்று இப்போது மத்திய அரசாங்கம் தடை விதித்து இருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட புதிய கிருஷ்ணகிரி மாவட்டத்தைக் கூட இப்போது இந்த அரசால் உடனடியாக உருவாக்க முடியவில்லை. நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே அது சிறிய மாவட்டமாக இருக்கிறது. ஆகவே, அதைப் பிரிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றுதான் இந்த அரசு கருதுகிறது.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இன்று காலை மயிலாடுதுறை தொகுதியிலுள்ள பொறியியல் கல்லூரி மாணவப் பிரதிநிதிகள் தொலைபேசி மூலம் தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சொல்ல கோரி இருக்கிறார்கள். நேற்றைக்கு முதல்தினம் ஒய்.எம்.சி.ஏ.-யில் படிக்கின்ற தேவி என்ற மாணவியை மைக்ரோ பையாலஜி செகன்ட் இயர் படித்துக் கொண்டிருக்கிற அந்த மாணவியை, மயிலாடுதுறை நகரத்திலுள்ள தனியார் விடுதியில் சில மாணவர்கள் வினாப் பட்டி தருகிறேன் என்று தவறாகச் சொல்லி அழைத்துச் சென்று கொலை செய்து இருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன், இது பற்றி எல்லாம் நீங்கள் முதலமைச்சரிடம் மனுவாகக் கொடுத்து விடுங்கள். இதுபற்றித் தகவல் வராத சூழ்நிலையில் இதுபற்றிப் பேசக்கூடாது. உங்களுடைய பேச்சு நிறைவு பெறுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாலையில் பதில் அளிப்பார்கள்.





## 4. அறிவிப்புகள் — தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்களுக்கான கணினிப் பயிற்சி வகுப்பு நேரம் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 4-30 மணிக்கு நடைபெறுவதாக இருந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினிப் பயிற்சி மாலை 6-00 மணிக்கு நடைபெறும்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

---

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 8. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

### கோரிக்கை எண் 31 - தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊனோடும், உயிரோடும், உயிர் மூச்சோடும் கலந்துவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

கடவுள் எங்கே இருக்கிறான் என்று கேட்டார்கள். யூத மதம் சொன்னது "God could not be everywhere. Therefore, he created mothers" என்று. 'எல்லா இடங்களிலும் கடவுள் நேரடியாக வந்து நிற்க முடியாத காரணத்தாலேதான் ஒவ்வொருவருக்கும் அந்தக் கடவுள் தாயாக வந்து நிற்கிறான்' என்று யூத மதம் சொல்கிறது.

**'உண்டாக்கி பாலூட்டி வளர்த்த தாயை**
**உமையவள் என்று அறியீரோ!**

என்று பாரதி சொல்கிறான். பாரதி தன்னுடைய தாயைக் கடவுளாகப் பார்க்கிறான். பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடவுளையே எங்களுடைய தாயாக நாங்கள் பார்க்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நமக்கொரு தாய் இருக்கின்றார். அவர் என்றும் நம்மைக் காக்கின்றார் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற இலட்சக்கணக்கான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களிலே ஒருவனான எனக்கு இரண்டாவது முறையாக இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பினை நல்கிய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்ள விரும்புகின்றேன்.

உழைப்பவரே உயர்ந்தவர் என்ற மிகப்பெரிய தத்துவத்தின் அடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வாழ்ந்து காட்டினார். யார் autograph-ஐ எப்பொழுது தந்தாலும் அதில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'உழைப்பவரே உயர்ந்தவர்' என்று எழுதித்தான் கையெழுத்திடுவார். அதைப்போல, ஒரு நாளைக்கு 18 மணி நேரம் உழைத்து, தன்னையே வருத்திக்கொண்டு, இந்த மக்களுக்காகத் தினமும் பாடுபட்டுக் கொண்டிருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின் பேரில் இந்தத் தொழிலாளர் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, தொழிற்சாலைகள் துறை ஆகிய துறைகளிலிருந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, கடந்த இரண்டாண்டு காலத்தில் இந்தத் துறை ஆற்றியிருக்கின்ற பல்வேறு நலப் பணிகளை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு நான் எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

முதலில் Second National Labour Commission என்பது மத்திய அரசாங்கத்தாலே இப்போது நியமிக்கப்பட்டது. நியமிக்கப்பட்டு, அந்த National Labour Commission தன்னுடைய பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியிருக்கிறது. அப்படி வழங்கியிருக்கின்ற அந்தப் பரிந்துரைகளினுடைய முக்கியமான சாராம்சம், அதனுடைய theme, அதனுடைய மையக் கருத்து என்னவென்றால், அதில் என்ன சொல்லியிருக்கிறது என்றால், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஒரு social security ஒரு சமூகப் பாதுகாப்பை இந்தியா முழுவதும் வழங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அதாவது, இந்தியா முழுவதும் இருக்கின்ற மாநிலங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, அங்கு



இருக்கின்ற தொழிலாளர்களுடைய நிலைமைகளையும் நன்கு அறிந்து, ஆய்வு செய்து, அதற்குப் பிறகு, அந்தக் கமிஷன் தன்னுடைய பரிந்துரையைச் சொல்லியிருக்கிறது.

நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இங்கு இருக்கின்ற உறுப்பினர்களுடைய கவனத்திற்குச் சொல்ல விரும்புவது, இன்றிலிருந்து சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு 1982 ஆம் ஆண்டே இந்தச் சிந்தனை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய கவனத்திற்கு வந்து, அவர்கள் சிந்தித்து, 1982 ஆம் ஆண்டே இந்த அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு வேண்டிய சட்டத்தினைக் கொண்டுவந்தது நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசாங்கம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1982-லே கொண்டுவந்து, அன்றே பாதுகாப்பு அளிக்கப்பட்டது. அந்தப் பாதுகாப்பு அளிக்கப்பட்டதற்குப் பிறகு, அதற்குச் செயல்வடிவம் தந்தது டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முந்தைய ஆட்சி. 1994 ஆம் ஆண்டு கட்டுமானத் தொழிலாளர்களுக்கு என்று தனியாக ஒரு வாரியத்தை உருவாக்கி, 1-11-1994-லே ஒரு வாரியத்தை உருவாக்கி, முழுமையாக அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பு அன்றைக்கே தரப்பட்டது. நான் இதைத் தொகுத்துச் சொல்வதற்குக் காரணம், இந்தியா முழுவதும் இனிமேல்தான் தரப்போகிறார்கள். ஆனால் தமிழகம் எவ்வளவு முன்னாலேயே இதைத் தந்திருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பிற்பகல் 4-35

இன்னொன்று, இதை ஒரு உதாரணத்தின் மூலம் நான் விளக்க விரும்புகின்றேன். தொழிலாளர்களுக்கு எவ்வளவு பாதுகாப்பு இன்று அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் நான் விளக்க விரும்புகின்றேன். Workmen's Compensation Act என்று ஒரு ஆக்ட் இருக்கிறது. இந்த Workmen's Compensation Act-ல் யார் யாருக்கு நன்மை வருகிறது என்றால், அதாவது பி.எப்.-ல் வராத, இ.எஸ்.ஐ.-யில வராத, கவர் ஆகாத எல்லா Workers-க்கும் இந்த Workmen's Compensation Act இன் மூலம் நன்மை வந்து சேரும். அவர் எங்கிருந்தாலும் சரி, இந்தியாவில் எங்கிருந்தாலும் சரி, இந்த Workmen's Compensation Act இன்படி அவர்களுக்கு நன்மை வந்து சேருகிறது. ஆக, இந்த Workmen's Compensation Act-இன்படி அதாவது, வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின்படி அந்த நன்மை வந்து சேருவதுகூட எப்படி சேருகிறது என்றால், பணியில் இருக்கும்போது ஒருவன் இறந்துவிட்டால்தான் அவனுக்கு இந்த வேலையாள் இழப்பீட்டுச்

சட்டத்தின்படி நன்மை போய் சேரும். சாதாரணமாக பணியில் இருக்கும்போது இறக்கவேண்டும். ஆக, இந்தியாவில் எல்லா இடங்களிலும் இருக்கிற தொழிலாளர்கள் பணியில் இருக்கும்போது இறந்தால், அவருக்கு இந்தச் சட்டத்தின்படி சலுகை போய் சேருகிறது. ஆனால் தமிழ்நாட்டிலே உருவாக்கப்பட்டிருக்கின்ற, இந்த கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் உருவாக்கப்பட்டிருக்கின்ற, மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கின்ற, நலத் திட்ட உதவிகள் மூலம் அவர்கள் வேலையில் இருக்கும்போது இறந்தாலும் சரி, வேலையில் இல்லாதபோது இறந்தாலும் சரி, அவர்களுக்கு இந்த நன்மை வந்து சேர்கிறது. இது இந்தியாவிலேயே தமிழகத்தைத் தவிர வேறு எங்கும் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் அன்போடு சொல்லிக் கொள்கிறேன்.

சாதாரணமாக ஒரு கொத்தனார் வேலைக்குப் போகிறார். ஒரு கொத்தனார் வேலைக்குப் போகிறபோது, அவர் வேலை செய்கிற போது, தவறி விழுந்து விபத்து மரணம் ஏற்படுகிறது என்றால், அவருக்கு அந்தப் பலன் கிடைக்கிறது. ஆனால் அதே கொத்தனார் சினிமாவுக்குப் போய்த் திரும்பி வருகிறபோது விபத்து மரணம் நேரிடுகிறது என்றால், அவருக்கும் பணம் கிடைக்கிறது. ஆனால் வேறு எந்த கொத்தனாருக்கும், எந்த மாநிலத்திலும் இப்படி விபத்து மரணத்திற்கு பலன் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கேரளாவைத் தவிர. கேரளாவில் மட்டும் இந்த நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. மேற்கு வங்காளத்திலும் இல்லை, காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களிலும் இல்லை, வேறு எந்த மாநிலத்திலும் இந்தியாவிலே இல்லை. இந்த நலத் திட்ட உதவிகள் இல்லை.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்த Workmen's Compensation Act இன்படி—வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின்படி இயற்கை மரணத்திற்கு எந்த உதவியும் இல்லை. இந்தியா முழுவதும் இயற்கை மரணத்திற்கு எந்த உதவியும் இல்லை. ஆனால் இயற்கை மரணத்திற்கு உதவி அளிக்கின்ற ஒரே மாநிலம், தமிழ்நாடுதான். ரூ.10,000/- இயற்கை மரணத்திற்கு தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.2,000/- ஈமச் சடங்கிற்கு வழங்கப்படுகின்றது. ஆக, தொழிலாளர்களுக்கு எவ்வளவு பெரிய security, social security பாதுகாப்பு என்பது இந்த தமிழகத்திலே இருக்கிறது என்பது தெரிகிறது. இந்த தொழிலாளர்கள் பாதுகாப்பில் அவர்களுக்கு social security வழங்குவதில், முழுமையான பாதுகாப்பு வழங்குவதில்



இந்தியாவில் தமிழகம் முதல் மாநிலமாக விளங்குகிறது என்று சொன்னால், நிச்சயமாக அது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இரண்டுவிதமான நன்மைகள் கிடைக்கின்றன. தமிழ்நாட்டில் இருக்கிற ஒரு தொழிலாளி தன்னை கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திலே பதிந்து கொண்டாலோ, அல்லது அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்திலே பதிந்து கொண்டாலோ, அதே தொழிலாளி எங்காவது ஓர் இடத்தில் வேலைக்குச் சேர்ந்தால், வேலை செய்கிறபோது விபத்து ஏற்பட்டால் அவருக்கு வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின்படியும் நன்மை கிடைக்கிறது, கட்டுமானக் கழகத்திலே அவர் பதிந்திருக்கிறார் என்ற சட்டத்தின்படியும் நன்மை கிடைக்கிறது. இரட்டிப்பு நன்மை என்பது தொழிலாளர்களுக்கு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. நம்முடைய மாநிலத்தில் மட்டும்தான் இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தினுடைய அந்த நன்மைகள் மூலமாக இந்த நன்மைகளெல்லாம் அளிக்கப்படுகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

காலையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் பல்வேறு கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக பலரும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்கள்கூட இங்கே தெரிவித்தார்கள். தொழிலாளர்களின் ஊதியம்பற்றிப் பேசுகிறபோது சில இடங்களில் 18(1) செட்டில்மெண்டு ஏற்படுகிறது. நிருவாகமும் தொழிலாளர்களும் பேசியே அதை முடித்துக்கொள்கிறார்கள், அல்லது 9(எ) இன்படி ஏற்கெனவே இருக்கிற wage ஐக் குறைத்துக்கூட சில இடங்களில் பேசுகிறார்கள். இதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். ஆக இப்படிப் பேசுகிறபோது காலம் கடத்தப்படுகிறது. ஓராண்டு, ஈராண்டு என்று இப்படி காலம் கடத்தப்படுகிறது. இப்படியெல்லாம் காலம் கடத்துவதால் தொழிலாளர்களுக்கு மிகப் பெரிய இழப்பு வருமே என்று இந்தத் தொழிலாளர்களைப்பற்றி இதையும் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் 1982 ஆம் ஆண்டே சிந்தித்து, இதற்கும், அவர்களுக்காக ஒரு சட்டம் வேண்டும். பேச்சுவார்த்தை நடந்து முடிவுக்கு வருவதற்கு முன்பு இடைக்காலமாக ஒரு நிவாரணம்

பிற்பகல் 4-40

தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும். இதற்கு வழிவகை செய்கின்ற ஒரு சரியான சட்டத் திருத்தம் வேண்டும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முடிவெடுத்து 10பி சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். உங்களுக்கு எல்லாம் தெரியும். அந்தச் சட்டத்தின்படி பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும்; ஆனால் இடைக்கால நிவாரணம், ஒரு நிவாரணம் வழங்கவேண்டும் என்று அரசு சொல்லும். பேச்சுவார்த்தை முடிந்ததற்குப் பிறகு அந்த இடைக்கால நிவாரணம், முடிவில் என்ன வருகிறதோ அதிலே சரி செய்யப்படும். தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் டிரிபியூனலுடைய தீர்ப்புக்கு விடப்படும். இதுதான் நடக்கின்ற உண்மை. புரட்சித் தலைவர் எம.ஜி.ஆர். அவர்கள்தான் இதைக் கொண்டு வந்தார்கள். 1985 ஆம் ஆண்டு அவர்கள்தான் இந்தச் சட்டத்தின்படி 10பி சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தார்கள். நடைமுறைக்குக் கொண்டுவந்து டிரிபியூனல் அமைத்து பஞ்சாலைத் தொழிலாளர்களுக்காக நீதிபதி வரதன் அவர்கள் தலைமையில் ஒரு கமிஷன் அமைத்து அதை வரதன் விசாரித்து அவார்டுகளை எல்லாம் தந்து, அந்த அவார்டுகளை எல்லாம் தொழிலாளர் பிரதிநிதிகள், தொழிலாளர் தோழர்கள் நன்றாக அனுபவித்தார்கள். உங்களுக்குத் தெரியும்.

அதற்குப் பிறகு அந்த 10பி சட்டத்தைப் பயன்படுத்தி தொழிலாளர்களுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முந்தைய அரசாங்கம் 1993 ஆம் ஆண்டு 10பி சட்டத்தைப் பயன்படுத்தி தொழிலாளர்களுக்கு இடைக்கால ஊதியம் வழங்க வேண்டும் என்று ஒரு Special Tribunal-ஐ அமைத்தார்கள். அதிலே நீதிபதி நடராஜன் அவர்கள் தலைவராக இருந்தார்கள். நடராஜன் அவர்கள் தலைவராக இருந்து விசாரித்து அறிந்து, நடராஜன் அவார்டு என்ற அவார்டை தந்தார்கள். அந்த அவார்டு 1998 வரை நீடித்தது. 1998-க்குப் பிறகு அப்போது ஆட்சியிலே இருந்தது யார்? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. ஆகவே 1998-ல் அந்த அவார்டு முடிந்துவிட்டது. உடனடியாக பேச்சுவார்த்தையைத் துவக்குங்கள், எங்களுக்கு ஊதிய உயர்வு தாருங்கள் என்று தொழிலாளர் தோழர்கள் எல்லாம் அப்போது அந்த அரசைக் கேட்டார்கள். 1999 முழு ஆண்டு, 2000 முழு ஆண்டு. இந்த 24 மாதங்கள் இதைப்பற்றிப் பேசவே இல்லை. திரும்பவே இல்லை. தொழிலாளர் பக்கம் திரும்பவே இல்லை. எந்தப் பேச்சுவார்த்தையையும் அந்த அரசு நடத்தவே இல்லை. அதற்குப் பிறகு பிப்ரவரி மாதம் 16 ஆம் தேதி 2001 ஆம் ஆண்டு நீங்கள் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றால், எங்களுக்குக் கூலி உயர்வுக்குரிய பேச்சுவார்த்தையை அரசாங்கம் தலையிட்டு தாவில்லை என்றால், நாங்கள் போராட்டம்



செய்வோம் என்று அறிவித்தற்குப் பிறகு, பேச்சுவார்த்தைக்கு அமைச்சர் மட்டத்திலே ஒரு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். நடந்ததற்குப் பிறகு 10பி சட்டத்தை நீங்கள் பிரயோகம் செய்து இடைக்கால உத்தரவை நீங்கள் போடவேண்டும் என்று கேட்டதற்குப் பிறகு, தேர்தல் வந்துவிட்டது, நாங்கள் எலெக்ஷன் கமிஷனைக் கேட்கிறோம் என்றெல்லாம் ஒரு சாக்கு சொல்லி, அவற்றைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதுதான் நடந்த வரலாறு.

அதற்குப் பிறகுதான் 2001 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் தேதி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால். அதற்குப் பிறகு சரியாக நான் சொல்ல வேண்டுமானால், செப்டம்பர் மாதம் 13 ஆம் தேதி, 13-9-2001-ல் 10பி சட்டத்தை இதே அவையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். சரியாக நான்கு மாத இடைவெளி. நான்கு மாத இடைவெளியில் எட்டு முறை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவுரையைப் பெற்று பேச்சுவார்த்தை நடத்தி, தொழிலாளர் தோழர்களை அழைத்து அமர வைத்து, அமைச்சர் மட்டத்திலே நானே எட்டு முறையும் கலந்து கொண்டு அந்தப் பேச்சுவார்த்தையை நடத்தி, பேச்சுவார்த்தையின் முடிவில் இதற்குப் பிறகு 10பி சட்டம் என்று போடப்பட்டிருக்கிறது. அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அதை எதிர்த்து நாம் அப்பீலுக்குப் போயிருக்கிறோம். Special Tribunal போடப்பட்டிருக்கிறது. சௌந்தரபாண்டியன் அவர்கள் தலைமையிலே டிரிபியூனல் போடப்பட்டிருக்கிறது. விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் நலமாகவே நடந்து கொண்டிருக்கிறது.

நான் காலையிலேகூட, மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்களுக்குப் பலமுறை பதில் சொல்லியிருக்கிறேன். நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். நான் எதற்காக இவ்வளவையும் சொல்கிறேன் என்றால், பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு வரலாறு இருக்குமானால், அந்த வரலாற்றில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும்தான் இருப்பார்களே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) வேறு யாரும் இருக்க மாட்டார்கள் என்பதை தயவுசெய்து நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். யாருக்கும் அந்த அருகதை இல்லை. யாரும் நாங்கள்தான் அவர்களைக் காப்பாற்றினோம் என்று மார்தட்டிச் சொல்ல முடியாது என்பதுதான் வரலாறு. இப்போது அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே எந்தப் பிரச்சினையை நீங்கள் எடுத்துக் கொண்டாலும் சரி, பஞ்சாலைப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் சரி, எந்தத் தொழிலாளர் பிரச்சினையை நீங்கள் எடுத்துக் கொண்டாலும் சரி, தோட்டத்

தொழிலாளர் பிரச்சினை எடுத்துக் கொண்டாலும் சரி—காலையிலேகூட மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள் இதைச் சொன்னார்கள். நான்கூட அதற்குப் பதில் சொல்கிறபோது சொன்னேன். ஏறத்தாழ இலட்சம் தொழிலாளர்கள் இதிலே டீ, காப்பி, ரப்பர், முந்திரி அதுபோன்று மிளகு மற்றும் வாசனைத் திரவியங்கள் போன்ற தோட்டத் தொழிலில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. தோட்டத் தொழில் என்பது அஸ்ஸாமிலும், மேற்கு வங்காளத்திலும், தமிழ்நாட்டிலும், கேரளாவிலும்தான் அதிகமாக இருக்கிறது. எனவே நம்மைவிட அஸ்ஸாமிலே கூலி குறைவு. தமிழகத்தைவிட மேற்கு வங்காளத்திலே கூலி குறைவு. தமிழ்நாட்டிலே 72 ரூபாய். மேற்கு வங்காளத்திலே 58 ரூபாய் 80 காசு. அஸாமிலே 65 ரூபாய் 50 காசு. கேரளாவிலேதான் 77.26 என்று ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. இன்னும் அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை. ஏராளமான நிறுவனங்கள் இயங்காமல் இருக்கின்றன என்று தகவல்கள் வந்தன. நான் எதற்காக இதைக் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், எந்தத் தொழிலை எடுத்துக் கொண்டாலும் இந்தத் தொழில் அமைதியாக நடந்து கொண்டிருக்கிறது. 2,192 நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த நிறுவனங்கள் அமைதியாக இப்போது நடந்து கொண்டு இருக்கின்றன. ஒரே ஒரு நிறுவனத்தில் வேஜ் தகராறு இருக்கிறது. அது வால்பாறையில். நம்முடைய அன்புக்குரிய சகோதரருடைய கோரிக்கையை ஏற்று இன்றைக்கு டிரிபியூனலுக்கு அதை ரெஃபர் செய்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உத்தரவைப் போட்டு இருக்கிறது. அவர்கள் சொன்னதைப் போல காலம் கடத்துவார்கள். எல்லாம் தெரியும். அதனாலே அந்தத் தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அதற்குரிய உத்தரவை நாங்கள் வழங்கியிருக்கிறோம் என்பதையும் நான் அன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு குறைந்தபட்ச ஊதியம். அது ஒரு முக்கியமான விஷயம்..

*பிற்பகல் 4-45*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தோட்டத் தொழிலில் உள்ள தொழிலாளிகளுக்கு ஏற்கெனவே கொடுத்திருந்த கூலி குறைத்துக் கொடுக்கப்படுகிற நேரத்திலே 10(பி) வழியாக அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிற கூலி அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்





என்ற கோரிக்கையை ஏற்றுக் கொண்டார் 10(பி) உத்தரவு வழியாக அவர்கள் பெற்றுக் கொண்டிருந்த கூலியை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் என்ன சொல்கிறார் என்றே எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடு) இருங்கள், கொஞ்சம் இருங்கள், நான் பதில் சொல்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாக..

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** நானே பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) நானே பதில் சொல்கிறேன். நான் ஏற்கெனவே துவக்கத்திலேயே இதை விளக்கமாய் சொன்னேன். ஒரு settlement என்பது எப்படி நடக்கிறது என்றால் 18(1) settlement நடக்கிறது. சில இடங்களிலே நடக்கிறது. அவர்களே, நிர்வாகமும், தொழிலாளிகளும் சேர்ந்து பேசி ஏற்கெனவே 90 ரூபாய் வாங்கினோம். இந்த நிர்வாகத்தால் இந்த 90 ரூபாயைத் தர முடியவில்லை. சரி என்ன செய்யலாம்? 70 ரூபாயை வாங்கிக் கொள்வோம். இல்லையென்றால் வேலை கிடைக்காது என்று அவர்களுக்குள்ளேயே பேசி முடித்துக் கொள்கிறார்கள். இதற்கு 18(1) settlement என்று பெயர். அதற்குப் பிறகு 9(ஏ) என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். குறைத்துப் பேசுவது அது எல்லாம் உங்களுக்குத் தெரியும். அந்தச் சட்ட திட்டங்களை எல்லாம் எங்களைவிட நீங்கள் முழுமையாகத் தெரிந்தவர்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. அது எல்லாம் உங்களுக்குத் தெரியும். அப்படி வைத்திருக்கிறபோது minimum wages என்று நாம் ஃபிக்ஸ் பண்ணுகிறோம். minimum wages என்று அரசு ஃபிக்ஸ் பண்ணி அதை அறிவித்ததற்குப் பிறகு அது எல்லாம் செல்லாமல் போய்விடும். சட்டப்படி செல்லாமல் போய்விடும். ஆனால் அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போகிறார்கள். கோர்ட் அதை அனுமதித்துவிடுகிறது. அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போகாமல் இருக்க வேண்டுமானால் அரசியல் சட்டத்தினுடைய 9-வது schedule-ல் இது சேர்க்கப்பட வேண்டும். பலமுறை மாநில அரசாங்கத்தின் சார்பாக மத்திய அரசாங்கத்திற்கு எழுதப்பட்டிருக்கிறது. நீங்கள் அதை இன்னும் சேர்த்துவிட்டால் பிரச்சினை இல்லை. சட்டத்தை அங்கே வைத்துக்கொண்டு, இப்போது நீங்கள் புதிய உறவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்களே அவர்களிடம் கொஞ்சம் சொல்லி, அமைச்சரிடம் சொல்லி, அப்படியாவது நீங்கள்..

[2003 ஏப்ரல் 23

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, யாருக்கு யாரிடம்..

**திரு. கே.சி. கருணாகரன்:** நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் யாரிடமும் புதிய உறவு - ஹேமச்சந்திரன் கொஞ்சம் இருங்கள் - புதிய உறவை நாங்கள் வைத்துக் கொள்ளவில்லை. இன்றைக்குக்கூட நடைபெறுகின்ற கூட்டத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கலந்து கொள்வதில்லை என்று நாங்கள் தெளிவாக முடிவெடுத்து..

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு..

**திரு. கே.சி. கருணாகரன்;** தெளிவுபடுத்த விரும்புகிறேன். இது ஒரு அரசியல் பிரச்சினையாக இருப்பதால் அதற்குக் கொஞ்சம் அனுமதி கொடுங்கள். அதாவது எங்களுடைய நிலைப்பாடு என்பது எங்களுடைய கொள்கைபூர்வமாக தனித்த நிலை எடுத்து சரியாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். நீங்கள் அந்தப் பக்கம் தள்ள நினைத்தாலும் போகக்கூடாது என்று... (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கருணாகரன், அமைச்சரும் அதைத்தான் சொல்கிறார். சேராத இடந்தனிலே சேரவேண்டாம் என்கிறார். (சிரிப்பு)

**THIRU J. HEMACHANDRAN:** Minister was telling that we are now colluding with them. I don't know with whom we are colluding.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதைச் சொல்லாவிட்டால் இந்த விளக்கம் வந்திருக்காதே.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** வந்திருக்காது. அதாவது பார்ப்பதற்கு அப்படி ஒரு க்ளைமேட் உருவாவதைப்போல் தெரிகிறது. (சிரிப்பு) இப்போது நாட்டு மக்களுக்கும் clear ஆகிவிட்டது. இது நல்லதுதானே. குறைந்தபட்ச ஊதியம் என்று ஒரு ஊதியம் இருக்கிறது. இது மிக, மிக முக்கியமான சட்டம். இந்தச் சட்டத்தினுடைய அமலாக்கம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், அதைக் கொஞ்சம் பழனிசாமிக்கும் சொன்னால் பரவாயில்லை. (சிரிப்பு)



2003 ஏப்ரல் 23]

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்கிற க்ளைமேட் எங்களுக்கும் தெரிகிறது, உங்களைப் பார்க்கிறபோது.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** சாதாரணமாக ஓட்டல்களிலே வேலை செய்கின்றவர்கள், சினிமா தியேட்டரிலே வேலை செய்கின்றவர்கள், சின்னக் கடைகளிலே வேலை செய்கின்றவர்கள், சிப்பந்திகள், இவர்களுக்கெல்லாம் minimum wages—குறைந்தபட்ச ஊதியம் என்று அரசு நிர்ணயிக்கிறது. அந்தக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பது சரியாகத் தரப்படுகிறதா, செயல்படுத்தப்படுகிறதா என்பதைப் பார்ப்பதற்கு எங்களுடைய துறையின் சார்பில் அது சரியாக பார்க்கப்படுகிறது. 2429 வழக்குகள் இது தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ளன. 4,82,667 ரூபாய் இந்த வழக்குகளின் மூலம் அரசுக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

*பிற்பகல் 4-50*

இதிலே ஒரு செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறைந்தபட்ச ஊதியம், அதைச் செயல்படுத்துதல், அந்த ஊதியத்தினுடைய நிலை இதுகுறித்து மத்திய அமைச்சர், நம்முடைய தொழிலாளர் துறையினுடைய மத்திய அமைச்சர் சாகிப் சிங் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பாராட்டி எங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்திலே அவர் சொல்லியிருக்கிறார்.

I am glad to know that the lowest minimum wage in the State of Tamil Nadu is more than the national floor level minimum wage of Rs. 50 per day in respect of all scheduled employments.

இது அங்கிருந்து வந்திருக்கின்ற கடிதம். இந்தியாவிலேயே national floor level அதை விட அதிகமாக minimum wages இருப்பது தமிழ்நாட்டில்தான் என்று பாராட்டியிருக்கிறார். அட்டவணையில் உள்ள அனைத்துத் தொழில்களுக்கும் தமிழ்நாட்டில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் தேசிய அடிநிலை குறைந்தபட்ச ஊதியமான ரூ. 50-க்கும் அதிகமாக தரப்படுவதை உண்மையில் நான் பாராட்டுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன் என்று அவர் அங்கிருந்து அந்தக் கடிதத்திலே தெரிவித்திருந்தார். ஆக, அதிலேயும் தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 23

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** என்னுடைய கேள்விக்கு அவர் பதில் சொல்லவில்லை. அதாவது 10(பி)...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் சொன்னார் அவர்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சொல்லவில்லை. அதாவது தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிற தொழிலாளர்கள் ஏற்கெனவே 76 ரூபாய் சம்பளமாக பெற்றுக்கொண்டிருந்தார்கள். மாண்புமிகு Labour Minister—ஆல் கூட்டப்பட்ட Labour Commissioner-ம் Labour Secretary-ம் கலந்து கொண்ட கூட்டத்திலே தொழிலாளர்களால் வைக்கப்பட்ட கோரிக்கை, நாங்கள் ஏற்கெனவே பெற்றுக் கொண்டிருக்கிற கூலியை 10(பி) உத்தரவைப் பயன்படுத்தி எங்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கோரிக்கை என்ன ஆச்சு?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10(பி) சட்டத்தைப் பயன்படுத்தி ஏற்கெனவே பெற்றுக்கொண்டிருந்த கூலியை அப்படியே நீடிக்க வேண்டுமென்று சொல்ல முடியாது. 10(பி) என்பது ஓர் இடைக்கால நிவாரணம். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். 10(பி) என்பது ஓர் இடைக்கால நிவாரணம். இடைக்கால நிவாரணமாக ஒரு தொகையை அரசு சொல்லும். அதற்குப் பிறகு Tribunal- நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு வருகிறதோ அந்தத் தீர்ப்பை பொறுத்து இதில் adjust செய்துகொள்ளப்படும். அப்படித்தான் இப்போது நம்முடைய வால்பாறை எஸ்டேட்டில் உள்ள அவர்களுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் எல்லோருமாக உட்கார்ந்து பேசி 50 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. Special Tribunal-க்கு அது விடப்பட்டிருக்கிறது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்து குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு. இதிலே நம்முடைய அரசு ஒரு மிகப் பெரிய கவனம் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஏனென்றால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 18 அம்ச திட்டத்தில் அம்சமாக இது வருகிறது. எனவே, முழுமையாக குழந்தைத் தொழிலாளர்கள் என்கிற அந்தத் தொழிலாளர்களை நீக்குவது என்பதில் அரசு மிகுந்த கவனமாக இருந்தது. யதார்த்தமாக இப்போது 2.12 இலட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. சர்வ சிக்ஷா அபியான், அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தின் மூலம் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே



[திரு. அ. அன்வர் ராஜா]

2003 ஏப்ரல் 23]

2.12 இலட்சம் குழந்தைகள் பள்ளிக்கு வாராமல் இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதிலே drop outs எல்லாம் சேர்ந்துதான் கணக்கிலே வருகிறது. அதிலே எவ்வளவு பேர் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பது கண்டறியப்பட்டு அதற்கு ஒரு action plan மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையின்படி தயார் செய்யப்பட்டிருக்கிறது. அந்த action plan-ன்படி நிச்சயமாக குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு என்பதை தமிழ்நாட்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில் செய்தே காட்டுவோம் என்பதை அன்போடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் 10 நாட்களுக்கு முன்பு ஒரு கவிதையைப் படித்தேன். பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கவிதையை, புதுக்கவிதை, நீங்கள் குழந்தை தினம் கொண்டாடுகிறீர்கள், ஆனால் குழந்தைகளைக் கொண்டாடவில்லையே என்று ஒரு அருமையான கவிதை வரிகள். ஆக, குழந்தைகளைக் கொண்டாடுவதில்லை. உங்களுக்குத் தெரியும், 'ஈன்று புறந்தருதல் எந்தலைக் கடனே, சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே' என்கிறார்கள். தந்தை தன்னுடைய மகனை சான்றோன் ஆக்குவதில்லை. எங்கே கொண்டுபோய் விடுகிறார்கள்? வறுமையின் காரணமாக கொண்டுபோய் விடுகிறோம் என்கிறார்கள். ஆனால் விடுவதால்தான் வறுமை வருகிறது என்பதை நாம் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். அங்கு போய் இப்படி விட்டால் இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் குழந்தை படிக்காது, ஒன்றும் தெரியாது. அறிவு இருக்காது. உலகத்தோடு போட்டி போட முடியாது. அப்படிப் போட்டி போட முடியாததால் வறுமை வரப் போகிறதே அதை அவர்களுக்கு உணர்த்தி கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்கு கல்வி அறிவைப் புகட்டி, ஆக இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் கொண்டு வந்து அந்தக் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க வேண்டும் என்பதில் நம்முடைய அரசு மிகுந்த தீவிரமாக இருக்கிறது என்பதையும், அதை ஒரு மிகப்பெரிய தலையாய கொள்கையாக நாங்கள் வைத்திருக்கிறோம் என்பதையும் நான் அன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 4-55

அதற்கடுத்து, அமைப்புசாரா தொழிலாளர்கள் பற்றி காலையிலே நம்முடைய உறுப்பினர்கள் பேசினார்கள். அந்த Board-கள் எல்லாம் இயங்காமல் இருக்கின்றன என்றார்கள். Board-கள் எல்லாம் இயங்காமல் இல்லை. இயங்கிக் கொண்டிருக்கின்றன. எல்லா நலத் திட்டங்களும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. எல்லா நலத் திட்டங்களும், எல்லா

Boardகளிலும் இருக்கின்றவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆனால், இந்த Boardகளையெல்லாம் ஒருங்கிணைக்க வேண்டுமென்று அரசு கொள்கை முடிவெடுத்திருக்கிறது. ஏற்கெனவே, அதற்கான காரணங்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், ஒரு Board என்றால் அதற்கு வருமானம் வேண்டும். ஏற்கெனவே டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1994-ல் கட்டுமான வாரியத்திற்கு Board உருவாக்குகின்றபோது, அதற்கு வருமானம் இருந்தது. வருமானத்தை உருவாக்கி வைத்துவிட்டுப் போனார்கள். இன்று அந்த வருமானம் கிட்டத்தட்ட 57 கோடியே 95 இலட்சம் ரூபாய், அந்தக் கட்டுமானக் கழகத்திலே இருக்கிறது. கடந்த 28-11-2002 ஆம் நாள் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3¾ கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட தமிழ்நாடு கட்டுமான வாரியத்தினுடைய அந்தக் கட்டடத்தை தன்னுடைய திருக்கரத்தாலே திறந்து வைத்தார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும். வாரியத்திடம் பணம் இருக்கிறது. அந்த வாரியத்தில் எவ்வளவு நலத் திட்டங்கள், உதவிகளை வேண்டுமானால் நம்மால் வழங்க முடியும். அப்படி நிலைமை இருக்கிறது. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்ட இந்த Boardகள் எந்தவிதமான திட்டமும் இல்லாமல் செயல் திட்டமும் இல்லாமல் உருவாக்கப்பட்டு விட்டன. 9 Boardகள் இப்படி உருவாக்கப்பட்டு இருக்கின்றன. இதிலே ஒரே ஒரு Boardக்குத்தான் வருமானம் இருக்கிறது. ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுனர் சங்கத்திற்கு மட்டும்தான் வருமானம் இருக்கிறதே தவிர, வேறு எந்தச் சங்கத்திற்கும் வருமானம் இல்லை. வருமானம் இல்லையென்பது மட்டுமல்ல, கொள்கையளவிலே இது தவறான ஒன்று.

நான் அன்பிற்குரிய மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களை அன்போடு சிந்திக்கக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு Board என்பது முதலில் உருவாக வேண்டுமானால் employer இருக்கவேண்டும். Employee இருப்பார். Employer இருக்கவேண்டும். Employer இல்லாமல் எப்படி ஒரு Board வர முடியும். வேலை அளிப்போர் இல்லாமல் அவருக்குரிய தொகை எப்படி வர முடியும்? வர முடியாது அல்லவா? முடிதிருத்துவோருக்கு ஒரு Board என்றால், அவர்தான் முதலாளி, அவரேதான் தொழிலாளி. அவருக்கு யார் பணம் கொடுப்பது? சலவைத் தொழிலாளிக்கு ஒரு Board என்றால் சலவைத் தொழிலாளிதான் தொழிலாளி அவருக்கு யார் முதலாளி. அவருக்கு யார் பணம் அளிப்பது? ஆக, இப்படி ஓவியர் என்று தனியாக இருந்து, ஓவியம் வரைகின்றவர் அவர்தான் தொழிலாளி, அவரேதான் முதலாளி.



அப்படியானால் Employer எங்கே இருக்கிறார்? Employer இல்லாமல் எப்படி ஒரு Board வர முடியும்? எப்படி அந்த Board இயங்க முடியும்? எனவே, இது அறிவுக்குப் பொருத்தம் இல்லாத செய்கை. அப்படித்தான் இதைச் சொல்ல முடியும். ஆனால், அறிவுக்குப் பொருந்தாமல் அவசரக் கோலத்தில் தேர்தலில் எல்லோரும் தனக்கே வாக்களிக்க வேண்டுமென்று விளம்பரப்படுத்திக்கொண்டதன் விளைவாக உருவாக்கப்பட்டது Board. 'விளம்பரத்தாலே உயர்ந்தவன் வாழ்க்கை நிரந்தரம் ஆகாது' என்று கவியரசர் கண்ணதாசன் சொல்லி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அப்படி தேர்தலுக்கு முன்பு 2 மாதங்களுக்கு முன்பு அவசர அவசரமாக அறிவிக்கப்பட்டு, அவசர அவசரமாக உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட Board. எனவே, இந்த Board-ஐ நாங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? நாங்களும் வைத்துக் கொள்ள வேண்டுமா? இல்லை. யாருக்கும் இதிலே எந்தவிதமான நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும் இந்த அரசு பின்வாங்கவில்லை. எல்லோரும் ஒற்றுமையாக சேர்ந்து அமைப்புசாரா உடல் உழைப்பு தொழிலாளர் நல வாரியத்தில் இதைச் சேர்த்துவிட வேண்டுமென்று அரசு முடிவு செய்து இருக்கிறது. அதற்குச் சட்டத்திருத்தம் வரப்போகிறது. ஏனென்றால் 1982ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது இந்த Board-ஐ உருவாக்குவதற்குத்தான் சட்டம் வந்ததே தவிர amalgamate செய்வதற்கான சட்டம் வரவில்லை. அதிலே, அந்தத் திருத்தம் இல்லை. எனவே, அதற்குப் புதிய சட்டத்திருத்தம் வரவேண்டியிருக்கிறது. எனவே, அந்தச் சட்டத்திருத்தத்தை அரசு விரைவிலே கொண்டு வரும் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதை வைத்துக் கொண்டு Board இயங்கவில்லை என்று நீங்கள் கருத வேண்டாம். இந்த Board-ஐ அமைப்பதற்கு முன்னால்கூட இரண்டு கமிட்டிகள் போட்டு, அந்தக் கமிட்டியினுடைய பரிந்துரைகளை, (recommendations) எல்லா கட்சிகளுமே அதிலே இருந்திருக்கிறார்கள். அந்த recommendations என்னவென்றால் too many boards வரக்கூடாது என்பதுதான். அந்த recommendation-ஐ நான் உங்களுக்குச் சொல்கிறேன். Formation of too many boards encompassing each target groups individually may not be administratively expedient and financially viable. அது viable இல்லை. அது தேவையில்லை என்றுதான் அந்தக் குழுவின் அறிக்கை சொல்லியிருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கையைத் தூக்கிப் போட்டுவிட்டு, இப்படி அதிகமான Boardகளை ஏற்படுத்தியது வீண் செலவு. இப்படியெல்லாம் இருக்கின்ற நிலைகளைத் தவிர்க்கவேண்டும்

என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மிகுந்த கூர்மையோடு இந்த முடிவை எடுத்திருக்கிறது என்பதை நான் அன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனவே, தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நல வாரியத்தில் அவ்வளவு Boardகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டு, எல்லோருக்கும் உரிய நன்மை கிடைக்கும். அதை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, நான் சில புள்ளி விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். கட்டுமான நல வாரியம். தமிழ்நாடு கட்டுமான நல வாரியம். நீங்கள் கொஞ்சம் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். ஐந்து ஆண்டுகள் முழுமையாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்திருக்கிறது. இப்போது நம்முடைய ஆட்சி, நம்முடைய அம்மா அவர்கள் தலைமையில் 2 ஆண்டுகாலம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த 5 ஆண்டுகளை இன்றைய இரண்டு ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால்கூட அவர்கள் நம்மோடு முன்னால் நிற்க முடியவில்லை என்பதை, எவ்வளவு பெரிய சாதனையை இந்த இரண்டு ஆண்டுகளில் நம்முடைய அரசாங்கம் செய்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-00

அவர்கள் ஐந்து ஆண்டுகளில் கட்டுமானக் கழகத்தில், ஐந்து ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சியில் 1,05,772 பேர்கள் தங்களை உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொண்டார்கள். அதாவது 1,05,772 பேர்கள். அதேசமயம் இந்த இரண்டு ஆண்டுகளில் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு 1,36,578 தொழிலாளர்கள் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாக 30,816 ஊழியர்கள் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். கூடுதலாக இந்த two years-ல்.

இன்னொன்று. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியில் 4,720 பயனாளிகளுக்கு 1,76,70,500 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது; மொத்தம், அந்த ஐந்து வருடத்திலே. ஆனால்; இப்போது இருக்கின்ற இந்த இரண்டு ஆண்டுகாலம், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய



ஆட்சியில், இந்த இரண்டு ஆண்டுகால ஆட்சியில் 10,220 பயனாளிகளுக்கு 5,47,30,074 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). ஐந்து கோடி ரூபாயை நாம் வழங்கியிருக்கிறோம். அவர்களைவிட 3 கோடியே 70 இலட்சத்து 59 ஆயிரத்து 574 ரூபாய் கூடுதலாக நாம் வழங்கியிருக்கிறோம், இந்த இரண்டு ஆண்டுகால ஆட்சியில். தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். தொழிலாளர்கள் பக்கம் நிற்பது எந்த ஆட்சி?

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நல வாரியம். அந்த வாரியத்தைப் பொறுத்தவரையில் ஐந்து ஆண்டுகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், ஐந்து ஆண்டுகாலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 53 பேருக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள்; 53 பேருக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) ஐந்து ஆண்டுகள் இல்லை, 1999-லேயிருந்து. கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நான் சொல்வது சரி. (குறுக்கீடு) நானே சொல்லிவிடுகிறேன். நானே சொல்லிவிடுகிறேன். கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நீங்கள் சொல்வது. (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) இல்லை. கட்டுமானத் தொழிலாளர்களுக்கு என்பது நான் சொன்னது சரி. இப்போது இரண்டு ஆண்டுகளாக, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு என்று நான் சொன்னது சரி. அதிலே தவறு இல்லை.

உடல் உழைப்புத் தொழிலாளர்கள் என்பது அவர்களுடைய ஆட்சியில், அதாவது இரண்டு ஆண்டுகளில். ஏனென்றால் 1999-லேதான் தொடங்கப்பட்டது அவர்களுடைய ஆட்சியில். 53 பேருக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. 53 பேருக்கு இரண்டு இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. நம்முடைய இரண்டு ஆண்டுகால ஆட்சியில் 3,203 தொழிலாளர்களுக்கு 93 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் நலத் திட்ட உதவிகளாக வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தது பீடித் தொழிலாளர்கள். அவர்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டம். இந்தத் திட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிக அருமையாக ஒரு அறிவிப்பினை வெளியிட்டார்கள். ஐந்து ஆண்டுகளில் 10,000 வீடுகள் கட்டித் தரப்படும் பீடித் தொழிலாளர்களுக்கு என்று ஓர் அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதை மிக வேகமாக இப்போது செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே இருந்த நிலை வேறு; இப்போது

[திரு. அ. அன்வர் ராஜா] [2003 ஏப்ரல் 23

இருக்கிற நிலை வேறு. ஏற்கெனவே ஹட்கோ-விலே லோன் வாங்க வேண்டும். அந்த லோனே கிடைக்காமல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், ஐந்து ஆண்டுகால அவர்களுடைய ஆட்சியில், அந்த லோனே வாங்க முடியாமல், மத்திய அரசாங்கத்திடமிருந்து, அங்கேயிருந்து இங்கு வந்து, பணம் எல்லாம் திரும்பப் போயின. மத்திய அரசாங்கத்தினுடைய திட்டத்திற்காக என்று அவர்கள் அனுப்பிய பணத்தை அவர்களால் பயன்படுத்த முடியாமல் திருப்பி அனுப்பிவிட்டார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க முடியவில்லை. ஏனென்றால் ஹட்கோ லோனை வாங்க முடியவில்லை. அந்த லோனை வாங்கி, வீடு கட்டிக் கொடுக்க முடியாமல், அந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியில் 148 வீடுகள்தான் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் மேலப்பாளையத்தில் 148 வீடுகள் மட்டுமே கட்டித் தந்திருக்கிறார்கள். ஆனால், இப்போது 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு என்று, அந்த வீட்டிற்கு மதிப்பீடு செய்து, மத்திய அரசு 20 ஆயிரம் ரூபாய் வழங்குகிறது. 20 ஆயிரம் ரூபாய் கடனாக வரவேண்டும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் 5 ஆயிரம் ரூபாயை மாநில அரசு மானியமாகத் தருகிறது என்று அறிவித்து, 25 ஆயிரம் ரூபாய் மொத்தமாக அந்தத் தொழிலாளிக்கு மானியமாகக் கிடைக்கிறது. பீடித் தொழிலாளிக்குக் கிடைக்கிறது.' அப்படிக் கிடைத்து, இந்த ஆண்டு மட்டும் ஏறத்தாழ 1,285 தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 499 வீடுகள் இப்போது கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்போது கட்டி Basement எல்லாம் தாண்டி, மேலே வந்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டு முடிவில் 1,285 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிலேயும் நம்முடைய அரசு தலைசிறந்த சேவையைச் செய்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். காலையிலே பேசுகிறபோது நம்முடைய அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் ஒரு லிஸ்டைப் படித்தார்கள். மூடிக் கிடந்த ஆலைகளை எல்லாம் போய்ப் பார்த்து வந்தேன் என்றார். என்னிடம் கேட்டிருந்தால் இன்னும் கொஞ்சம் அதிகமாகத் தந்திருப்பேன். இன்னும் ஒரு லிஸ்ட் இருக்கிறது. நிறைய லிஸ்ட்டுகள் இருக்கின்றன. அதையும் நீங்கள் சேர்த்து படித்திருக்கலாம். அதையும் கொடுத்திருப்பேன். அவருடைய மாவட்டத்திற்கு மட்டும் படித்திருக்கிறார். (குறுக்கீடு) படித்திருக்கிறார். மூடிக் கிடந்த மில்களைத் திறப்பது என்பது எவ்வளவு கடினமான ஒன்று என்பது எல்லோருக்கும் தெரியும். அதை மாண்புமிகு



2003 ஏப்ரல் 23] [திரு. அ. அன்வர் ராஜா]

தமிழக முதல்வர் அம்மா அவர்கள் காலையிலே மிக அருமையாக விளக்கினார்கள். ஆனால், அப்படி மூடிய மில்களைக்கூட கடந்த இரண்டு ஆண்டுகளில் சில மில்கள் எங்களுடைய ஆட்சிக் காலத்திலே திறக்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் முயற்சி எடுத்து சில மில்களைத் திறந்திருக்கிறோம். அதுவும் கடந்த தி.மு.க. ஆட்சியின்போது மூடப்பட்ட மில்களை.

*பிற்பகல் 5-05*

இப்போது இந்த இரண்டு ஆண்டு காலம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் நாங்கள் திறந்து இருக்கிறோம்.

1. நாடியம்மாள் டெக்ஸ்டைல்ஸ், புதுக்கோட்டை, அந்த மில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

2. அருணாச்சலேஸ்வரர் மில்ஸ், கோவை ஆகிய இரண்டு பஞ்சாலைகளும்.

அரவிந்த் ஸ்டீல்ஸ் லிமிடெட், துவாக்குடி, திருச்சி என்ற பொறியியல் நிறுவனமும் இப்போது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, நிறைய தொழில் தாவாக்கள்—மில்கள் மூடுவது என்பது வேறு. டிஸ்பியூட் என்பது வேறு. டிஸ்பியூட் வருகிறபோது; தொழில் தாவாக்கள் எங்களுடைய துறைக்கு வருகிறபோது, அந்தத் தொழில் தாவாக்களை நாங்கள் தலையிட்டு தீர்த்து வைக்காவிட்டால் அந்த மில்லை தொடர்ந்து நடத்துவதற்கு முடியாது. அது sick mill ஆகிவிடும். அதை மூடிவிடுவார்கள். எனவே, எங்களது கவனத்திற்கு வந்த தொழில் தாவாக்களில் 11 பெரிய தொழில் தாவாக்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தீர்த்து வைத்து இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(1) **Larson and Toubro Limited, Manapakkam, Chennai**

(2) **L & T De Mech Plastic Machinery, Private Limited, Chennai**

(3) **Ashok Leyland Limited, Unit-2, Hosur**

(4) **Hindustan Power Plus, Hosur**

(5) சென்னை, வேலூர், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள பீடித் தொழில் நிறுவனங்கள்.

(6) Chennai Timber and Plywood Merchants Association, Chennai

(7) Chevro Shoes Private Limited, Porur, Chennai

(8) WIMCO Limited, Tiruvottriyur, Chennai

(9) New Ambani Estate Private Limited, Kulasekaram, Kanyakumari District

(10) Hindustan Motors Limited, Power Production Limited, Hosur

(11) Titan Industries Limited, Hosur

இந்த Titan Industries Limited-ஐப் பொறுத்தவரை 21-4-2003-இல் மூடிக் கிடந்தது. சம்பள ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு இப்போது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதோடு கடந்த இரண்டு ஆண்டுகளில் எழுப்பப்பட்ட 24,844 தொழில் தாவாக்களை கடந்த இரண்டு ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலான இந்த ஆட்சியில் எழுப்பப்பட்ட 24,844 தொழில் தாவாக்களில் 19,484 தொழில் தாவாக்கள் இந்தத் துறையில் சமரச அலுவலர்களால் தீர்த்து வைக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் அன்போடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இவ்வளவு நன்மைகளையும் நாங்கள் செய்திருக்கிறோம். இவ்வளவும் எங்களால் சாத்தியமாகி இருக்கிறது. இரண்டு ஆண்டு காலத்தில் சாத்தியமாகி இருக்கிறது. ஆனால், இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கம் என்ன செய்தது? கொஞ்சம் நான் யோசித்துப் பார்க்கிறேன். அவர்கள் என்னதான் செய்தார்கள்? இதையெல்லாம் செய்திருக்கலாம். அல்லவா? எவ்வளவு காரியம் நடந்திருக்கிறது? அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று நான் யோசித்துப் பார்த்தேன். அவர்கள் என்னதான் செய்தார்கள் என்றால்-அவர்கள் என்னதான் செய்தார்கள் என்று எனக்கே புரியவில்லை. ஒன்று செய்தார்கள் அண்ணா தி.மு.க.-வை எப்படி ஒழிப்பது. டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அரசியலில் இருந்து எப்படி விரட்டுவது, அதற்கு இந்த அரசாங்கத்தை எப்படிப் பயன்படுத்துவது. இதைத்தான் அந்த ஆட்சி செய்தது. தொடர்ந்து செய்தார்கள். வழக்கு என்று போட்டார்கள். எத்தனை வழக்குகள் இந்த நாட்டில் இருக்கின்றன? நான் சொல்லவா? எத்தனை வழக்குகள் இதுவரை விசாரிக்கப்படாமல் இருக்கின்றன? எத்தனை உண்மைகள் இந்த நாட்டுக்குத் தெரியாமல் இருக்கின்றன? ஏறத்தாழ 27 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நான்கு நாட்களுக்கு முன்பு ஒரு வழக்கில் தீர்ப்பு வந்திருக்கிறது.



இந்தத் தமிழ்நாட்டில் 1975-ஆம் ஆண்டு எமர்ஜென்சி நேரத்தில் இந்தத் தமிழ்நாட்டினுடைய தலைமை நீதிபதியாக இருந்த நீதிபதியின் வீடு சோதிக்கப்பட்டு அந்தச் சோதனையின்போது பல்வேறு விதமான ஆவணங்கள் பிடிபட்டன என்று பத்திரிகையிலே செய்தி வந்தது. அப்போது பிடிபட்டிருக்கின்ற அந்தப் பொருட்கள், பிடிபட்டிருக்கின்ற அந்தப் பணம் எல்லாம் அன்றைய முதலமைச்சருக்குத்தான் சொந்தமானது என்று அலையோசை பத்திரிகையிலே செய்தி அந்தக் காலத்திலே வந்தது. அவர்மீது தொடுக்கப்பட்ட வழக்குகூட வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்த்த வழக்குதான். அந்த வழக்கு எவ்வளவு ஆண்டுகள் ஆகிறது? 1975-லே பிடிக்கப்பட்டு 1977-லே வழக்கு தொடுக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேல் வழக்கு நடந்து ஓராண்டுக்கு முன்பு சென்னை உயர்நீதிமன்றம், டெல்லி, சுப்ரீம் கோர்ட் ஒரு ரூலிங்-ஐ கொடுத்தது சி.பி.ஐ-க்கு. இன்னும் ஒரு மூன்று மாத அவகாசம் தருகிறோம். வழக்கை முடித்து விடுங்கள் என்று சொன்னார்கள். அந்த வழக்கில் நான்கு நாட்களுக்கு முன்புதான் சென்னையிலே தீர்ப்பு வந்திருக்கிறது. நீங்கள் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். எவ்வளவு வழக்குகள் இருக்கின்றன? என்னால் வரிசையாகச் சொல்லமுடியும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே லக்குபாய் பதக் என்று ஒரு ஊறுகாய் வியாபாரி. அந்த உறுகாய் வியாபாரி ஒரு இலட்சம் டாலர்களை...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir, how is it relevant to the Labour Demand? (Interruptions) நீதிபதி வீராசாமி வழக்கிற்கும் இதற்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், அவரே, அமைச்சரே சொன்னார்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** It is a relevant point. (குறுக்கீடு) இல்லை, இல்லை It is a very relevant point. அதாவது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் குறுகிய காலத்திலே தொழிலாளர்களுக்கு இவ்வளவு நன்மைகள் செய்திருக்கிறோம். ஆனால், கடந்த ஆட்சி தொழிலாளர்களுக்கு எந்தவித நன்மையும் செய்யாமல் அந்த ஆட்சியை எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதற்கு காரணத்தை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். It is a relevant point.

பிற்பகல் 5-10 [2003 ஏப்ரல் 23

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** I am not denying the fact. அவர்கள் பீரியடில் நிறைய ஆலைகள் மூடியிருந்தன, திறக்கவில்லை, அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லட்டும். அதுபற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இல்லை. அதாவது ஆலைகளைத் திறக்காமல் அவர்கள் ஆட்சிக்காலத்திலே என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதைச் சொல்லுகிறார். இதிலே ஒன்றும் தவறில்லை.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களே, ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களையும் பார்க்கவேண்டும். ஒரு பக்கம் முத்திரை இருந்து இன்னொரு பக்கம் முத்திரை இல்லையென்றால் நாணயம் செல்லுபடி ஆகாது என்பதை தயவுசெய்து நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை பாராட்டவோ, அவர்கள் நல்ல முறையிலே ஆட்சி நடத்தியதாகவோ சொல்லவில்லை. எனக்கு அப்படி எந்தக் கருத்தும் கிடையாது. அவர்கள் இங்கு சரியான முறையிலே (தமிழகத்திலே) ஆட்சி நடத்தவில்லை என்ற காரணத்தாலேதான் அவர்களை மக்களே வெளியேற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹேமச்சந்திரன் அவர்கள் இன்றுவரை அதை ஞாபகத்தில் வைத்திருக்கிறார். அதற்காக நான் பாராட்டுகிறேன். ஏனென்றால் சில நேரங்களில் இவர்களுக்கு மறந்துவிடுகிறது. ஏனென்றால் தேர்தல் நேரத்தில் எதைச் சொல்லி நாம் ஓட்டு கேட்டோம். அம்மா அவர்கள் முதலமைச்சராக வரவேண்டும், நீங்கள் எங்களுக்கு ஓட்டு போடுங்கள் என்று ஓட்டு கேட்டோம் என்பதை சில நேரங்களில் மறந்துவிடுகிறார்கள். ஆனால் ஹேமச்சந்திரன் அவர்கள் ஞாபகம் வைத்திருக்கிறார்கள். உண்மையிலேயே நான் அவரைப் பாராட்டுகிறேன். (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.சி. கருணாகரன்:** பிரச்சினைகளையும் சொல்லி, மூடிய ஆலைகளைத் திறப்போம் என்று சொல்லி, விலைவாசியைக் குறைப்போம்



2003 ஏப்ரல் 23] [திரு. கே.சி. கருணாகரன்]

என்று சொல்லி, நெருக்கடிகளை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்று சொல்லி மதச்சார்பற்ற ஜனநாயக அணிக்கு ஓட்டுப் போட வேண்டும் என்று கேட்டுதான் வெற்றி பெற்றோம்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** உண்மைதான். இதுவெல்லாம் நடந்திருக்கிறதா, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இடையில் கொஞ்சம் குழம்பிப்போய் இப்போது தெளிவுக்கு வந்துவிட்டார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை இந்த நாட்டுக்குச் சொல்ல வேண்டும் என்பதற்காக, உண்மையிலேயே நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். லக்குபாய் பதக் என்ற ஊறுகாய் வியாபாரி ஒரு இலட்சம் அமெரிக்க டாலர்களை பிரிட்டனிலுள்ள ஒரு ஓட்டல் அறையில் அரசியல் சாமி, சந்திராசாமிக்கு நான் கொடுத்தேன் என்று சொல்லி ஒரு வழக்கைத் தொடர்ந்தார். 1983 ஆம் ஆண்டு தொடுக்கப்பட்டது அந்த வழக்கு. அந்த வழக்கு இன்னும் முடியவில்லை. லக்குபாய் பதக்கூட செத்துவிட்டார். ஊறுகாய் வியாபாரி இப்போது உயிரோடு இல்லை. அந்த வழக்கு என்ன ஆனது? தயவுசெய்து கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். இதையெல்லாம் யோசிக்க வேண்டியது நம்முடைய கடமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஊறுகாய்ப் பானையிலே போடப்பட்டிருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு, போபர்ஸ் பீரங்கி பேரம். அந்த வழக்கு என்ன ஆனது? விசாரித்துக்கொண்டே இருக்கிறார்கள். விசாரித்துக்கொண்டே இருக்கிறார்கள். ராஜிவ் காந்தியும் உயிரோடு இல்லை. அன்றைய சுவீடன் நாட்டின் பிரதமர் Olof Palme-மும் உயிரோடு இல்லை. இரண்டு பேரும் இல்லை. அந்த வழக்கு இன்று என்ன ஆனது, தயவுசெய்து எண்ணிப் பாருங்கள்.

1988 ஆம் ஆண்டு செயின்ட் கிட்ஸ் போலி ஆவண மோசடி வழக்கு என்று ஒரு வழக்கு. வி.பி. சிங் அவர்கள் தன்னுடைய மகன் அஜய் சிங்மீது செயின்ட் கிட்ஸ் தீவிலுள்ள ஒரு வங்கியில் 230 இலட்சம் அமெரிக்க டாலர்களைப் போட்டு வைத்திருந்தார் என்று, போலியான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்று தொடுக்கப்பட்ட வழக்கு.

செயின்ட் கிட்ஸ் போலி ஆவண மோசடி வழக்கு என்று அந்த வழக்குக்குப் பெயர். அந்த வழக்கு என்ன ஆனது? இதுவரையில் அந்த வழக்கில் என்ன வந்திருக்கிறது? ஒன்றும் இல்லை.

இந்தியாவைக் கலக்கியது மட்டுமல்ல, இந்த உலகத்தையே கலக்கியது பங்கு பத்திர ஊழல். 1993 ஆம் ஆண்டு நாடாளுமன்றமே நடக்கவில்லை. 15 நாட்கள் நாடாளுமன்றம் ஸ்தம்பித்தது. எந்தப் பிரச்சினையும் நாடாளுமன்றத்திலே நடக்கவில்லை. ஹர்ஷத் மேத்தா தன்னுடைய சூட்கேசில் 50 இலட்ச ரூபாயை எடுத்துக்கொண்டு நானே சென்று கொடுத்தேன் என்று வாக்குமூலம் தந்தார். அந்த வழக்கு என்ன ஆனது? விசாரிக்கப்பட்டதா? அந்த வழக்கு இன்று என்ன நிலையில் இருக்கிறது? தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த பங்கு பத்திர ஊழலிலேதான் நம்முடைய தமிழகத்தினுடைய அமைச்சர், அன்று அமைச்சராக, வர்த்தகத் துறை அமைச்சரான சிதம்பரம் பதவியை ராஜினாமா செய்ய வேண்டிய நிலைமை வந்தது. நீங்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த வழக்கு என்ன ஆனது? (குறுக்கீடு) ஏன் உங்களுக்கு இது புரியவில்லை.

**திரு. ஜெ. ஹேமச்சந்திரன்:** இது பழைய விஷயத்தை எல்லாம்..(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** நான் சொல்கிறேன், நான் என்ன சொல்கிறேன் என்றால், என்னை பேசி முடிக்கவிட்டால் தெரியும். அதற்குப் பிறகு ஹவாலா ஊழல் வழக்கு. ஜெயின் சகோதரர்களுடைய ஹவாலா ஊழல் வழக்கு. அந்த வழக்கு என்ன ஆனது? 133 கோடி ரூபாய் யூரியா இறக்குமதி பேர ஊழல் வழக்கு. அது என்ன ஆனது? ராம் லக்கன்சிங் யாதவினுடைய மகன் நரேஷ் சந்திரா, அவர் அந்த வழக்கிலே சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு என்ன ஆனது? 650 கோடி ரூபாய் சர்க்கரை பேர இறக்குமதி ஊழல். அந்த வழக்கு என்ன ஆனது?

பிற்பகல் 5-15

அதுமட்டுமல்ல நண்பர்களே, 1998 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மேற்கு வங்காளத்தினுடைய புருலியா மாவட்டத்தில் திடீர் என்று ஒரு ஃப்ளைட் பறந்து வந்து ஆயுதங்களைப் போட்டுவிட்டு போனது. அது யார் போட்டது? எங்கிருந்து வந்தது? கராச்சியிலிருந்து வந்தது என்று சொல்லப்பட்டது. கராச்சியிலிருந்து வந்து ஆயுதங்களைப் போட்டுவிட்டு போனார்கள். ஆனால் அந்த வழக்கு என்ன ஆனது? டென்மார்க்கைச்



சேர்ந்த கின் டேவி என்பவர்தான் இதற்குப் பொறுப்பு என்று சொல்லப்பட்டது. அவரும் கைது செய்யப்பட்டார். ஆனால் அந்த வழக்கில் இதுவரை எந்தத் துப்பும் வரவில்லை. நான் எதற்காக இவ்வளவையும் சொல்கிறேன் என்றால், இந்தத் தேசத்திற்கு, இந்த நாட்டிற்கு, இந்த உண்மைகள் எல்லாம் தெரியவில்லை. இவ்வளவு கொள்ளை நடந்திருக்கிறது. இவ்வளவு உண்மைகளும் தெரியவில்லை. ஒன்றுமே நடக்காத ஒரு விஷயத்தை பொய்களை எல்லாம் இட்டுக்கட்டி ஒரு வழக்கைத் தொடுத்து, அதற்கு ஒரு அரசாங்கமே முன்நின்று நீதிபதிகளை நியமித்து, அரசாங்கம் செலவழித்து, தீர்ப்பையும் சொல்லச் சொல்லு என்று சொல்லிய மோசமான அரசாங்கம் கடந்த தி.மு.க. அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**THIRU J. HEMACHANDRAN:** We are not justifying...

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** நான் எதற்காக இவற்றைச் சொல்கிறேன் என்றால், ஒரு அருமையான அரசாங்கத்தை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இது சாதாரணமான விஷயம் அல்ல. காலையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள்கூட தமிழ் மொழியை செம்மொழி ஆக்கவேண்டுமென்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அமைச்சர் பதில் சொன்னார். அறிவியல் தமிழ் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இது என்ன சாதாரணமான விஷயமா! இது ஒரு பெரிய விஷயமாகிவிடும் என்று தானே கருணாநிதி தொல்காப்பியத்தை தலையிலே வைத்துக்கொண்டு அலைந்துகொண்டிருக்கிறார் விற்பதற்கு. இதை மறைப்பதற்காக, இதில் உங்களுக்கு என்ன, இது சாதாரணமான காரியமா, சாதாரணமான விஷயமா?

அறிவியலை தன்னுடைய தாய்மொழியில் படித்தால்தான் ஒரு நாடு முன்னேற முடியும். அமெரிக்காகாரன் முன்னேறுகிறான். அவன் தாய்மொழி ஆங்கிலம். அதிலே அவன் அறிவியலைப் படிக்கிறான். ஜப்பான்காரன் முன்னேறுகிறான். அவன் தாய்மொழியிலேதான் அறிவியலைப் படிக்கின்றான். ரஷியாக்காரன் தாய்மொழியில்தான் அறிவியலைப் படிக்கின்றான். சைனாக்காரன் மேலே வந்து நிற்கிறான். என்ன காரணம்? அவன் தாய்மொழியில்தான் அறிவியலைப் படிக்கிறான். இனிமேல் ஜப்பான் நாட்டின் பொருட்களையே வாங்குவதில்லை என்று அமெரிக்க செனட்டிலேயே ஒரு முறை தீர்மானம்

போட்டார்களாம். அப்படித் தீர்மானம் போடுகிறபோது, தீர்மானம் போடுவதற்கு பயன்படுத்தப்பட்ட பேனா என்ன என்று பார்த்தால் Made in Japan என்று எழுதியிருந்ததாம். அதை எதற்காகச் சொல்கிறார்கள் என்றால் ஜப்பானுடைய பொருட்கள் எவ்வளவு ஊடுருவியிருக்கின்றன என்பதைக் காட்டுவதற்காகச் சொல்கிறார்கள். ஆகவே, எதற்காக அவர்கள் எல்லாம் இப்படி முன்னேற முடிந்தது? அதற்கு என்ன காரணம்? அறிவியலில் அவர்கள் பெற்றிருக்கிற மிகப்பெரிய வளர்ச்சி. அதுதான் அறிவியல் தமிழ் என்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அது ஏதோ இன்று அறிவிக்கப்பட்டது அல்ல. உங்களுக்கெல்லாம் ஒருவேளை இன்று அறிவிக்கப்பட்டதாக தெரிந்து இருக்கலாம். அது இன்று அறிவிக்கப்பட்டது அல்ல. அவர்கள் சிந்தனை எவ்வளவு காலத்திற்கு முன்பு இருந்தது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். கடந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தஞ்சாவூரிலே நடைபெற்றபோது, அன்று அவர்கள் அதை அறிவித்தார்கள். அறிவியல் தமிழ் என்று அறிவித்தார்கள். நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதைப்பற்றி மிகச் சரியாக சொல்லவேண்டுமென்றால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு உதாரணத்தின் மூலம் சொல்ல விரும்புகிறேன்.

சாதாரணமாக 100 ஆண்டுகளுக்கு மேல் நமக்குத் தெரிந்த ஏழைகளின் வாகனம் சைக்கிள். ஒரு சைக்கிள். அந்த சைக்கிளை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் இந்த சைக்கிளுக்கு மிதிவண்டி என்று ஒரு பெயர் வைத்து இருப்பார்கள் அந்தக் காலத்தில். அதற்கு இந்த மிதிவண்டி என்ற ஒரு தமிழ் பெயரைத் தவிர ஏதாவது தமிழ்ப் பெயர், தமிழ்ச் சொல் இருக்கிறதா என்று பாருங்கள். சைக்கிள் என்பது ஆங்கிலம். டயர், டியூப், ஃபோர்க், ரிம், கோன், பால்பியரிங், ஃபிரேம், ஹாண்டில் பார், கேரியர், ஸ்டேண்ட், பிரேக், சீட், ஸ்பிரிங், மட்காட், பெடல், செயின், செயின்கவர், போல்ட், நட், ரிவிட், ஸ்குரு, வாஷர், ப்ரீவீல், டைனமோ, பல்பு, ஒயர், டேஞ்சர் லைட், பெயிண்ட், கிரீஸ், ஓவர் ஹாலிங், ரிப்பேர், பஞ்சர், சொலுஷன், பம்பு, வெல்டிங், வால்வுடியூப், எந்தச் சொல்லாவது தமிழ்ச் சொல் இருக்கிறதா! சரி தமிழ்ச் சொல் இல்லை என்பதற்காக இதை விட்டுவிட்டு, இதற்குத் தமிழிலே மொழி பெயர்த்து இப்பொழுது யாராவது தமிழ்ச் சொல்லை சொன்னோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். இவருக்கு ஏதோ மென்டல் ஆகிவிட்டது என்று சொல்வார்கள். ஏன் என்றால், இதுதான் அவர்களுக்குத் தெரியும். மக்களுக்கு இதுதான் தெரியும். ஆக, சைக்கிளுக்கே இந்த நிலை





என்றால், வருகின்ற ஜெனரேஷனுக்கு எவ்வளவு இருக்கிறது நாம் சொல்லிக்கொடுக்க வேண்டியது. இன்னும் கார் இருக்கிறது. மோட்டார் பைக் இருக்கிறது. ஏரோபிளேன் இருக்கிறது. ஆகாயத்திற்கு செல்கின்ற, ஸ்பேசுக்கு செல்கின்ற ராக்கெட் இருக்கிறது. இவ்வளவையும் அறிவியலில் எப்போது நாம் படிப்பது? ஆக இப்போதே அதற்கு ஒரு நல்ல தொடக்கம், ஒரு good beginning வேண்டுமல்லவா? ஆக ஒரு good beginning-ஐ, ஒரு நல்ல தொடக்கத்தை, தமிழ்கூறும் நல் உலகத்திற்கு வந்திருக்கின்ற, ஒரு மாபெரும் பொக்கிஷத்தைத் தந்திருக்கின்ற, ஒரு வரலாற்றுச் சாதனையைச் செய்திருக்கின்ற, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை உள்ளபடியே இந்த தமிழ்கூறும் நல் உலகம் பாராட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டுமா, இல்லையா? போற்றுமா, இல்லையா? ஆனால் இதைக்கூட அவர்கள் மிக அருமையாகச் சொன்னார்கள்.

பிற்பகல் 5-20

1993 ஆம் ஆண்டு ஜூன் மாதம், 28, 29 ஆம் தேதிகளில் நடைபெற்ற மதுரை மாநாட்டிலே, எங்களுடைய கட்சி மாநாட்டிலே மிகத் தெளிவாக அம்மா அவர்கள் சொன்னார்கள்; மிகத் தெளிவாகச் சொன்னார்கள்.

"We build and defend not for our generation alone;

We build and defend not for our generation alone;

We build a life for generations yet born:

We build a life for generations yet born:"

"நாம் உருவாக்குவதும் பாதுகாப்பதும் நமது தலைமுறைக்கு மட்டுமல்ல, இனி பிறக்கப்போகும் தலைமுறைக்கும் சேர்த்து நாம் ஒரு நல்வாழ்வை உருவாக்குகிறோம்" என்கிறார்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். ஒரு கட்சி மாநாட்டிலே இதையெல்லாம் பேசுவார்களா? எவ்வளவு பெரிய பெரிய சிந்தனை இருந்தால் பேச முடியும்? எவ்வளவு பெரிய தொலைநோக்குப் பார்வை இருந்தால் பேச முடியும்? அப்போது அந்த மாநாட்டிலே அவர்கள் என்ன உட்கருத்தைச் சொன்னார்களோ, அவைதான் இப்போது அரசின் சார்பில் பல்வேறு திட்டங்களாக வெளிவந்து நடந்துகொண்டிருக்கின்றன. நான் இவற்றையெல்லாம் சொல்வதற்குக் காரணம், இந்த அரசை, இப்படிப்பட்ட அரசை, இவ்வளவு நல்ல திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிற அரசை,

மாண்புமிகு ஜி.கே. மணி அவர்கள் வருத்தப்படக்கூடாது, இந்த அரசைக் கவிழ்ப்பதற்குக் காரணம் இருக்கிறது என்று சொல்கிறீர்கள் என்றால், அது என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். (குறுக்கீடு) I am not yielding. Please. Please. (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன். ஜனநாயக ரீதியாக எங்கள் அம்மா அவர்களை எதிர்கொண்டு வெல்ல முடியாதவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் இந்த அரசைக் கலைக்க வேண்டும். அதற்குக் காரணம் இருக்கிறது என்கிறார்களே தவிர இதற்கு வேறு என்ன வழி இருக்கிறது? நான் வேண்டுமானால் உங்களுக்கு ஒரு ஆலோசனை சொல்கிறேன், உங்களால் ஜனநாயக ரீதியாக எதிர்கொள்ள முடியவில்லை என்றால் நீங்கள் அழகாகக் கலைக்கலாம். உங்கள் கட்சியைக் கலைக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 356-வது பிரிவின்கீழ் கலைப்பதற்கு ஏதோ புதிதாக ஒரு காரணத்தைச் சொல்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதுவரையிலும் இந்தியாவிலே 104 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே மட்டும் 4 முறை. ஒரே நாளிலே இந்தியாவிலே ஜனதா தள ஆட்சிக் காலத்திலே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 9 முறை, 10 முறை, 10 மாநில அரசுகளை, 9 மாநில அரசுகளைக் கலைத்த வரலாறு இருக்கிறது. சட்டம் ஒழுங்குப் பிரச்சினை மட்டும் இல்லை. இப்போதிருக்கிற சமீபத்திலே மத்திய அரசே கொண்டு வந்திருக்கிற அரசியல் சட்ட மறு ஆய்வுக் கமிஷன், அதனுடைய தலைவராக இருக்கிற, வெங்கடாசலைய்யா கமிஷனிலேகூட சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மாநிலத்திலே அசாதாரண சூழ்நிலை நிலவுகிறது என்று சொன்னால், அதையும்கூட காரணம் என்று சொல்லலாம். இப்படி பல்வேறு காரணங்களை வைத்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகை நிருபர்கள் கேட்கின்ற நேரத்திலே சொல்கிறார்கள். அதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. மணி.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இல்லை, இல்லை, திரு. மணி, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணி அவர்கள் சொன்னதுபோல பிரிவு 356-ஐப் பயன்படுத்தி பல ஆட்சிகள் கலைக்கப்பட்டு இருக்கின்றன. அது, அந்த ஆட்சிகளெல்லாம் காரணத்தோடு கலைக்கப்பட்டன. ஆனால், இந்த ஆட்சியில், எந்தவித



காரணமும் இல்லாமல், டாக்டர் இராமதாஸ் அவர்கள் கலைக்கச் சொல்கிறார்கள். அதுவும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி சொல்லி கலைக்கச் சொல்கிறார் என்பதுதான் எங்களுக்கு வருத்தம்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது கோரிக்கையாக வைத்தோ அல்லது வலியுறுத்திச் சொல்லப்பட்டதோ அல்ல. பத்திரிகை நிருபர், தமிழ்நாட்டிலே இப்படி சூழ்நிலை இருக்கிறதே, இதற்காக நீங்கள் சொல்வீர்களா என்று கேட்ட நேரத்திலே, அப்படிச் செய்தால் மக்கள் சந்தோஷப்படுவார்கள் என்று சொன்னார்களே தவிர, அது கோரிக்கையாக வைக்கவும் இல்லை, வலியுறுத்தவும் இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, சொல்கிறேன், நான். வெளிப்படையாகச் சொல்கிறேன், உண்மையைச் சொல்கிறேன். யாரோ ஒருவர் சொல்லிச் சொன்னதாகவும் இல்லை. பத்திரிகை நிருபர்கள் அதைக் கேட்கிறார்கள். கேட்கின்ற நேரத்திலே அதைச் சொல்கிறாரே தவிர, வலியுறுத்தவோ, கோரிக்கையாக வைக்கவோ இல்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரை நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய டாக்டர் ஐயா சொல்வதை நான் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஏன் என்றால், திடீரென்று ஒரு நாள் டாக்டர் ஐயா வந்தார்கள். இந்த மாநிலத்தை இரண்டாகப் பிரியுங்கள் என்றார்கள். அதையெல்லாம் நாம் ஒரு சீரியஸாக எடுத்துக்கொள்ள முடியுமா? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துக்கொள்ள முடியாது. எனவே, நான் அதை சீரியஸாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள்? நீங்கள் எங்களோடு இருந்தீர்கள், உறவாக இருந்தீர்கள்; எல்லோரும் அம்மா அவர்கள் முதலமைச்சராக வருவதற்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்டீர்கள். ஆனால், இப்போது திடீரென்று இப்படியொரு கருத்தை நீங்கள் சொல்கிறபோது (குறுக்கீடு) என்ன, மணி...

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ அவருக்குத்தான் பேசத் தெரியும் என்று நினைத்து பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) இல்லை, இல்லை, ஒரு மாவட்டம்—காலையிலே முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள், தருமபுரி

[திரு. ஜி.கே. மணி] [2003 ஏப்ரல் 23

மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கிருஷ்ணகிரியை ஒரு மாவட்டமாக ஆக்குவது பற்றி. எதற்காகப் புரிக்கிறோம்? நிர்வாக வசதிக்காக. பரந்த மாவட்டம், பரப்பிலே பெரியது, பிரிக்கச் சொல்லி சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவிலே மற்ற மாநிலங்களைப் பிரிக்கவில்லையா? இப்போது 7 மாநிலங்களில் அந்தக் கோரிக்கைகள் இருக்கின்றன. என்ன தவறு இருக்கிறது? இதை எல்லாம் கொச்சைபபடுத்திப் பேசக் கூடாது.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** இல்லை, இல்லை, இல்லை...

**திரு. ஜி.கே. மணி:** ஏதோ அமைச்சருக்குத்தான் பேசத் தெரியுமா? எதற்காகப் பிரித்திருக்கிறோம். ஒரு பரந்த மாவட்டம், மாநிலம், அதைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னால்....

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** இல்லை, இல்லை, மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது ரொம்பத் திசைமாறிப் போய்க் கொண்டிருக்கிறது. உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மணி, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

*பிற்பகல் 5-25*

**திரு. ஜி.கே. மணி:** தேர்தலிலே கூட்டணி ஏற்படுவது இயல்பு. (குறுக்கீடு) நான் தெளிவாகச் சொல்கிறேன்; தேர்தலிலே கூட்டணி ஏற்படுவது இயல்பு. எந்தக் கட்சி கொள்கையோடு தமிழ்நாட்டிலே கூட்டு வைத்திருக்கிறார்கள் சொல்லுங்கள். நாங்கள் மட்டும் கொள்கை மாறிப் போய் விட்டோமா? தேர்தலுக்காக வைக்கப்படக்கூடிய கூட்டே தவிர, கொள்கைக் கூட்டு அல்ல. ஒரு கட்சித் தலைவர்கூட என்னிடத்திலே சொன்னார். இந்தத் தேர்தல் கூட்டு என்பது 2001 சட்டமன்றத் தேர்தலுக்கான கூட்டணி என்று உங்களுக்குத் தெரியாதா மணி, அதனால்தான் பிரிந்து விட்டோம் என்றார். ஆகவே, கூட்டணியிலே உங்களாலே நாங்கள் வெற்றி பெற்றோம்; எங்களாலே நீங்கள் வெற்றி பெற்றீர்கள்; அதுதான் உண்மை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. அன்வர் ராஜா:** இது ஒன்றை மட்டும் ஏற்றுக் கொள்ள முடியாது.



2003 ஏப்ரல் 23]

**திரு. ஜி.கே. மணி:** யாருடைய உதவியும் இல்லாமல் (குறுக்கீடு) இல்லை, இல்லை, எல்லோரும் ஓட்டு போட்டார்கள்; எல்லோரும் வெற்றி பெற்றோம்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** சரி, ரைட். உடகாருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுபபினர் மணி அவர்கள் வருந்துகிற அளவிற்கு நான் எந்தக் கருத்தையும் சொல்லவில்லை. அவர்கள் தலைவர் சொன்னதை இபபடிச் சொன்வார் என்றுதான் சொன்னேனே தவிர, அதிலே என்னுடைய அபிப்பிராயத்தையும் சொல்லவில்லை, நான் எதையும் சொல்லவில்லை.

அடுத்தபடியாக, நம்முடைய அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம். ஓ.எம்.சி. ஓ.எம்.சி. என்பது ஒரு அருமையான நிறுவனம். தமிழர்கள் தமிழ்நாட்டிலே மட்டும் இல்லை. தமிழ்நாட்டிலே மட்டும் தமிழர்கள் இல்லை. இந்த உலகத்திலே இருக்கின்ற எல்லா இடங்களிலும் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். தமிழன் இலங்கையிலே இருக்கிறான். மலேசியாவிலே இருக்கிறான். சிங்கப்பூரிலே இருக்கிறான். தென் மொரிஷியஸ்-லே இருக்கிறான்; பிஜி தீவிலே இருக்கிறான். தென் ஆப்பிரிக்காவிலே இருக்கிறான், குவைத், சவுதி அரேபியா, ஐக்கிய அரேபிய எமிரேட்ஸ், மாலத் தீவுகள், பிரான்ஸ், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற எல்லா நாடுகளிலும் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆக, தமிழ்நாட்டில் இருக்கின்ற தமிழர்களுக்குக்கூட பல பேர் அவர்களுடைய வாழ்க்கை, பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளிப்பதில்லை. ஆனால், கடல் கடந்து இருக்கின்ற இந்தத் தமிழர்களுக்கு எல்லாம் அங்கிருக்கின்ற தமிழர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு வேண்டும்; அவர்களுக்கும் ஒரு சோஷியல் செக்யூரிட்டி தா வேண்டும்; அவர்களுக்கும் ஒரு பாதுகாப்புத் தா வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு விரும்புகிறது. ஏனென்றால், பல நாடுகளைத் தமிழன்தான் உருவாக்கியிருக்கின்றான். பல நாடுகள் உருவாவதற்கு தமிழன்தான் காரணமாக இருந்திருக்கின்றான். நீங்கள் கூட பார்க்கலாம்; 'சிங்களத் தீவின் கடற்கரையை எங்கள் செந்தமிழ் தோழர் அழகு செய்தார்; எகிப்திய நாட்டின் நதிக் கரையை எங்கள் இளந்தமிழ் வீரர் பவனி வந்தார்' என்று கவியாசு கண்ணதாசன் அவர்கள், தமிழர்களால் எந்தெந்த தேசம் எப்படியெல்லாம் வளம் பெற்றிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக தன்னுடைய பாடல்களில் இந்த வரியைச் சேர்த்தார். ஆக, அப்படி கடல் கடந்து தமிழன் கூலிக்காக போகிறான்; வேலை கிடைக்காமல் போகிறான்; ஆகவே, கூலிக்காக, வேலை கிடைக்காமல் வேலை தேடிச் செல்கின்ற

[திரு. அ. அன்வர் ராஜா] [2003 ஏப்ரல் 23

தமிழன் அங்கு கூலி வேலை செய்கிறான். அப்படி கூலி வேலை செய்கிறவர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. எந்த செக்யூரிட்டியும் இல்லை. சோஷியல் செக்யூரிட்டியும் இல்லை. இவர்கள் திடீரென்று அங்கு இறந்து போய் விட்டால் அவர்களை அங்கேயே அடக்கம் செய்வதுதான்; வேறு வழி இல்லை. அங்கேயிருந்து ஒரு தந்தி வரும். எங்களுடைய இராமநாதபுரம் பகுதியிலே எல்லாம்—இங்கேயிருக்கின்ற உறுப்பினர் பெருமக்களுக்கு தெரியும். அன்பிற்குரிய மாண்புமிகு அண்ணன் இராமசாமி இருக்கிறார்; அன்பிற்குரிய மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அவர்களுக்கெல்லாம், அந்தக் காலத்தில் ஒரு தந்தி வந்தால் போயிற்று. தந்தி வந்தால், யாரோ செத்து இருக்கிறார்கள், தந்தி வருகிறது, அப்படித்தான் நினைப்பார்கள். அங்கிருந்து ஒரு தந்திதான் வரும், உட்கார்ந்து அழுது விட்டு, முடிந்துவிட்டது என்பார்கள். ஆனால், அப்படியெல்லாம் இருக்கின்ற அந்தத் தமிழர்களையும் பாதுகாக்க வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரும்பி ஒரு அருமையான திட்டத்தினை இங்கு உருவாக்கி இந்த நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்களே தன்னுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் இப்பொழுது முழுமைப் பெற்றிருக்கிறது.

இரண்டு திட்டங்கள். விபத்துக் காப்புறுதித் திட்டம் என்ற ஒரு திட்டம். குடும்ப நல காப்புறுதித் திட்டம் என்று இன்னொரு திட்டம். இந்த இரண்டு திட்டத்தில் one time payment ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஒருவர் இந்தத் திட்டத்தில் சேர்ந்து கொண்டால் போதும். தொடர்ந்து பாலிசி கட்ட வேண்டியதில்லை. 990 ரூபாய் கட்டுகிறவர்களுக்கு 5 இலட்சம் ரூபாயும் ப்ளஸ் 3 இலட்சம் பெனிபிட்ஸ் கிடைக்கிறது. 1,000 ரூபாய் கட்டிச் சேர்ந்தவர்களுக்கு 10 இலட்சம் ரூபாயும் 3 இலட்ச ரூபாயும் பெனிபிட்ஸ் கிடைக்கிறது. இந்தத் திட்டத்தில் கல்வி மானியத்தில் அவர்களுடைய பிள்ளைகளுக்காக 50 ஆயிரம், 50 ஆயிரம். திருமணத்திற்கு 50 ஆயிரம் கிடைக்கிறது. உறவினர்கள் இந்தியாவில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தால் அவர்களை வந்து அவர் பார்த்துவிட்டு திரும்ப வேண்டும் என்றால் இதற்கு 50 ஆயிரம் கிடைக்கிறது. அவருடைய மனைவி இந்தியாவில் இறந்து விட்டால் அவர் இங்கு வந்து பார்த்துவிட்டுப் போவதற்கு ரூபாய் 50 ஆயிரம் கிடைக்கிறது. அவரே இறந்து விட்டால்,



2003 ஏப்ரல் 23] [திரு. அ. அன்வர் ராஜா]

அவர் இங்கு வந்து சேருவதற்கு அவருக்கு 50 ஆயிரம் கிடைக்கிறது. இது ஒரு அருமையான ஸ்கீம். இந்த ஸ்கீமை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடக்கி வைத்திருக்கிறார்கள். இந்த ஸ்கீமை O.M.C.-நடத்துகிறது. Overseas Man-power Corporation என்று எங்களுடைய டிபார்ட்மெண்ட்டிலே இருக்கிற அந்த O.M.C. நடத்துகிறது. இது ஒரு Corporate Insurance Agency. இந்த Corporate Insurance Agency கடந்த மார்ச் மாதம் 10 ஆம் தேதி தமிழக அரசிற்குக் கிடைத்திருக்கிறது. Insurance Regulatory Development Authority என்ற அந்த அத்தாரிட்டியிலிருந்து எங்களுக்கு அது வழங்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பிறகு இந்தப் பணி வேகமாக நடைபெறும். அப்படி நடைபெறுகிறபோது வெளிநாட்டில் வாழ்கின்ற சுமார் 40 லட்சம் தமிழர்களுக்குமேல் இதில் சேர்ந்து பயன்பெறுகின்ற ஒரு மிகப் பெரிய வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 5-30

இது தவிர, அரசுப் பணிகளில் வருகிற நியமனங்களைத் தவிர, இரண்டாண்டு கால மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், தனியார் துறைகளில் பணியமர்த்தம். நான் காலையிலேகூட குறிப்பிட்டேன். இந்தத் தனியார் துறைகளிலே பணியமர்த்தம், ஏறத்தாழ 3,214 பேர் தனியார் துறையில், கடந்த 2 ஆண்டு கால ஆட்சியில், நம்முடைய அரசு, வேலை பெற்றுத் தந்திருக்கிறது. இதற்காக அவர்களுக்கு 7.88 இலட்சத்தில் ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தனியார்களுக்கு ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டு, யார், யார் எங்கிருக்கிறார்கள், எங்கு வேலையிருக்கிறது, எங்கு வேலை இல்லாதவர்கள் இருக்கிறார்கள் என்பது உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமை தனியார் பணியமர்த்தம் நாளாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

போட்டித் தேர்வுகளில் போட்டியிடும் மாணவர்கள். இப்போது மாணவர்கள் படிக்கிறார்கள், படித்து முடித்துவிட்டு அவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கு எப்படிப் போவது; எங்கே போவது; என்ன படிப்பது என்பதற்கான proper guidance அவர்களுக்குக் கிடையாது. ஆகவே, இதைத் தருவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே, ஏற்கெனவே இருந்தது— பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே, 5 மாநகராட்சிகளிலும், கடந்த ஆண்டு 6 ஊராட்சி

[திரு. அ. அன்வர் ராஜா] [2003 ஏப்ரல் 23

ஒன்றியங்களிலும் தொடங்கப்பட்டது. இதன் பயனாக இரண்டாண்டுகளில் 201 பேர் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மாணவர்களுக்கு கடந்த ஆண்டில் ரூ. 6.72 இலட்சம் செலவில் 1150 ஆதிதிராவிட மாணவர்களுக்கு தொழிற் கல்லூரி நுழைவுத் தேர்வுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதில் 254 மாணவர்கள் தேர்ச்சி பெற்று, பல்வேறு தொழிற் கல்லூரிகளில் சேர்ந்துள்ளார்கள் என்பதை அன்போடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1964 ஆம் ஆண்டு முதல் அகில இந்திய அளவில் தேர்ச்சி பெற்ற தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு மத்திய அரசால் நடத்தப்பட்ட 38 திறனாய்வுப் போட்டித் தேர்வுகளில் 2001 ஆம் ஆண்டு உட்பட தமிழ்நாடு 19 முறை சிறந்த மாநிலமாக அறிவிக்கப்பட்டு, இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் கேடயம் பெற்றுள்ளது. சிறந்த மாணவர்களுக்கான தமிழ்நாட்டிலிருந்து தேர்வு செய்யப்பட்ட 4 பயிற்சியாளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 13-12-2002 அன்று தன்னுடைய திருக்கரத்தாலே விருதுகளை வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1999 ஆம் ஆண்டில், தி.மு.க. ஆட்சியில் மொத்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 27,999. நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த ஆட்சியில் தொழிற்சாலைகளினுடைய எண்ணிக்கை கூடியுள்ளது. ஏறத்தாழ 32,723 தொழிற்சாலைகள் இப்போது இருக்கின்றன என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தி.மு.க. ஆட்சியில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 11,62,411. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 12,37,653. இங்கே தொழிலாளர்களின் எண்ணிக்கை கூடியிருக்கிறது. ஆனால் தொழிலாளர்களின் எண்ணிக்கை கூடியிருப்பதற்கு நேர்மாறாக விபத்துக்கள் குறைந்திருக்கின்றன. விபத்துக்கள் குறைந்து இருக்கின்றன. இது ஒரு மிகப் பெரிய சாதனை. 1999-2001 வரை, 2 ஆண்டு கால தி.மு.க ஆட்சியில் 2,647 விபத்துக்கள் நடந்துள்ளன. இது மாண்புமிகு அம்மா அவர்களுடைய 2 ஆண்டு கால ஆட்சியில் 2,136 ஆக குறைந்துள்ளது. இதன் மூலம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் தொழிற்சாலைகளில் விபத்துப் பாதுகாப்பு,



2003 ஏப்ரல் 23] [திரு. அ. அன்வர் ராஜா]

சட்ட அமலாக்கம், பாதுகாப்பு விதிகளும் சிறப்பாக அமல்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதோடு தொழிலாளர்களைப் பாதுகாப்பதில், தொழிற்சங்க விதிகளை நடைமுறைப்படுத்துவதில் இந்த அரசு மிகச் சிறந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை நான் இங்கிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு எடுத்து வைத்தேன்.

இப்போது நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சில அறிவிப்புகளை வெளியிடச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிவிப்புகளை நான் இப்போது வெளியிடுகிறேன்.

**அறிவிப்பு** (1) குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான செயல் திட்டம்: குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கு பல்வேறு அரசுத் துறைகள், பிற நிறுவனங்கள், குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்கள் மற்றும் பொது மக்களின் கூட்டு முயற்சி தேவைப்படுகிறது. ஒருங்கிணைந்த கூட்டு முயற்சியுடன் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்காக ஒரு செயல் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும்.

**அறிவிப்பு** (2) தகவல் தொழில் நுட்பத் துறைக்கு ஊக்கமளித்தல்: இது ஒரு மிகப் பெரிய அருமையான அறிவிப்பு. இந்த அறிவிப்பை கணினி-தகவல் தொழில் நுட்பத் துறையில் நம்முடைய சகோதரர்கள் மிகப் பெரிய பயன் பெறுவதற்குரிய அருமையான வாய்ப்பு இந்த அறிவிப்பிலே இருக்கிறது. ஏனென்றால் அமெரிக்காவிலிருந்தோ அல்லது வெளி நாடுகளிலிருந்தோ நாம் அங்கிருந்து அந்த வேலையைப் பெற்று, கணினி மூலம் அந்த வேலையைச் செய்து, நாம் அவர்களுக்கு அனுப்பி வைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பு வருகின்றபோது, நாம் காலையிலே 8.00 மணிக்குக் கடையைத் திறக்கிறோம், 10.00 மணிக்கு மூட வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. நமக்கு 10.00 மணியென்றால் அமெரிக்காவிலே காலை 8.00 மணி. நாம் கடையை மூடிவிட்டுப் போனால் அவன் கடையைத் திறந்து வைத்திருப்பான். ஆகவே நமக்கும் அவனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாமல் போய்விடும். எனவே கடையைத் திறப்பதில், கடையை மூடுவதில் இந்த கணினி கடையைத் வைத்திருப்பவர்களுக்கு சலுகையை வழங்க வேண்டுமென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் மிகுந்த நுண்மான் நுழை புலத்தோடு இந்த அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை நான்

தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அறிவிப்பு தகவல் தொழில்நுட்பத் துறைக்கு ஊக்கமளித்தல்.

பிற்பகல் 5-35

தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி மென்பொருள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு 1947 ஆம் வருடத்திய தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் மூன்றாவது அத்தியாயத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும். இதன் காரணமாக, இந்நிறுவனங்கள் திறக்கும் நேரம், மூடும் நேரம் மற்றும் வேலை நேரம் ஆகியவற்றை, அவர்களின் வசதிக்கேற்றபடி அமைத்துக்கொள்ளலாம். மேலும், இந்நிறுவனங்கள் 1947 ஆம் வருடத்திய தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1948 ஆம் வருடத்திய சம்பளப் பட்டுவாடா சட்டம், 1970 ஆம் வருடத்திய ஒப்பந்தத் தொழிலாளர் (வரையறுத்தல் மற்றும் ஒழித்தல்) சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் பராமரிக்கப்பட வேண்டிய படிவங்கள், பதிவேடுகள் தொடர்பாக சுயச் சான்று அளிக்க அனுமதி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அறிவிப்பு** (3) படிவங்களை எளிமையாக்குதல்: பல்வேறு தொழிலாளர் சட்டங்களின்கீழ் காலமுறை அறிக்கைகள் தாக்கல் செய்வதை எளிதாக்கும் வகையில், ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையை நிர்ணயிக்க அரசு கருதியுள்ளது. ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையானது, தமிழ்நாடு சம்பளப் பட்டுவாடா விதிகள் 1937, தமிழ்நாடு ஒப்பந்தத் தொழிலாளர் விதிகள் 1975 குறைந்தபட்ச ஊதிய (தமிழ்நாடு) விதிகள் 1953 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 ஆகிய விதிகளின்கீழ் தாக்கல் செய்ய வேண்டிய அதிக எண்ணிக்கையிலான காலமுறை அறிக்கைகளுக்கு மாற்றாக அமையும்.

**அறிவிப்பு** (4) புதிய தொழிற் பிரிவுகள் தொடங்குதல் : 2003-2004 ஆம் ஆண்டில் பின்வரும் தொழிற்பயிற்சி நிலையங்களில், கீழ்க்கண்ட புதிய தொழிற்பிரிவுகளைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(அ) இன்டஸ்ட்ரியல் எலக்ட்ரானிக்ஸ், சேலம், கிண்டி, அம்பத்தூர்.

(ஆ) கம்ப்யூட்டர் ஹார்டுவேர், கோயம்புத்தூர், ஓசூர், அம்பத்தூர்.

(இ) மெக்கானிக் மெக்காட்ரானிக்கஸ், ஓசூர், கோயம்புத்தூர், மதுரை.



இத்திட்டத்திற்காகும் தொடராச் செலவு ரூ. 180 இலட்சங்கள். தொடரும் செலவு ரூ. 40.5 இலட்சங்கள் ஆகும்.

**அறிவிப்பு** (5) அரசினர் தொழிற்பயிற்சி நிலைய அலுவலகங்களை கணினிமயமாக்குதல் : அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மொத்தம் 53 உள்ளன. இந்நிலைய அலுவலகங்களில் கணினி இல்லை. எனவே, இந்த அலுவலகங்களை படிப்படியாக கணினிமயமாக்கக் கருதப்பட்டுள்ளது. 2003-2004-ல் ரூ. 40 இலட்சங்கள் தொடரா மற்றும் ரூ. 10 இலட்சங்கள் தொடரும் செலவினத்தில், 10 நிலையங்களில் கணினி நிறுவப்படும்.

**அறிவிப்பு** (6) ஊராட்சி ஒன்றியங்களில் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் தோற்றுவித்தல்: வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் போட்டியிடும் திறனை மேம்படுத்துவதற்காக, அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் செயல்படுகின்றன. இந்த வசதிகளை, 2002 ஆம் ஆண்டில் முதல் முறையாக ஆறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்த அரசு விரிவுபடுத்தியது. கிராமப்புற இளைஞர்களின் பயனுக்கான இந்தத் திட்டம் எஞ்சியுள்ள 379 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ரூ. 34.11 இலட்சங்கள் தொடரா மற்றும் ரூ. 54.48 இலட்சங்கள் தொடரும் செலவில் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 54 என்று நான் வாசித்ததை 45.48 என்று மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**அறிவிப்பு** (7) புதுப்பித்தலுக்கான சிறப்புச் சலுகை: வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்தவர்கள், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பதிவினைப் புதுப்பிக்கத் தவறினால், பதிவு காலாவதியாகிவிடும். இதன் விளைவாக, வேலைவாய்ப்பற்ற பதிவுதாரர்கள் உரிய காலத்தில் புதுப்பிக்கத் தவறியதால், சிரமத்திற்கு உள்ளாகி இருப்பதாக அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளன. இந்த இடர்ப்பாடுகளைக் களைய சிறப்புச் சலுகையாக 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு, பதிவினை புதுப்பித்துக்கொள்ள சிறப்புச் சலுகை வழங்கப்படும். வேலைவாய்ப்பகத்தில் பதிவினை புதுப்பித்துக் கொள்வதற்காக மூன்று மாத கால அவகாசம் அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. அ. அன்வர் ராஜா] [2003 ஏப்ரல் 23

**அறிவிப்பு** (8) மகளிருக்கான புதிய தொழிற்பயிற்சி பிரிவுகள் தொடங்குதல்: 6 மாவட்டங்களில் மகளிருக்கென தனியாக தொழிற்பயிற்சிப் பிரிவுகள் தொடங்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவு செய்துள்ளது. மூன்று மாவட்டங்களில் மகளிருக்கான புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படும். மேலும் மூன்று மாவட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றில் மகளிருக்கான தனிப் பிரிவு ஆரம்பிக்கப்படும். இந்த ஆறு மாவட்டங்களிலும், மகளிருக்கு அதிக வேலைவாய்ப்புள்ள 3 பாடத் திட்டங்களில் பயிற்சி அளிக்கப்படும். நடப்பாண்டில் இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 2.73 கோடியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-40

**திட்டங்கள்** : 2003-2004 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்களாக கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன:

(1) தலைமைச் செயலகத்தில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையில் ரூ. 1.05 இலட்சம் செலவில் கணினி நிறுவப்படும்.

(2) தொழிலாளர் ஆணையர் தலைமை அலுவலகத்திலும் மற்றும் 12 மாவட்ட அலுவலகங்களிலும் ரூ. 13.60 இலட்சம் செலவில் கணினி அமைப்பு நிறுவப்படும்.

(3) சென்னை, தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மற்றும் தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் அலுவலகங்களில் ரூ. 5.00 இலட்சம் செலவில் 6 கணினிகள் வாங்கி நிறுவப்படும்.

(4) கூடுதல் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகம் மற்றும் தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக ரூ. 4.38 இலட்சம் செலவில் மொத்தமாக 4 ஜெராக்ஸ் இயந்திரங்கள் அளிக்கப்படும்.

(5) தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் அலுவலகங்களுக்கு ரூ. 1.62 இலட்சம் செலவில் 6 தொலைநகல் செய்தி இயந்திரங்கள் அளிக்கப்படும்.



2003 ஏப்ரல் 23] [திரு. அ. அன்வர் ராஜா]

(6) 4 தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகங்களில் ரூ. 1.17 இலட்சம் செலவில் 4 தொலைபேசி இணைப்புகள் ஏற்படுத்தப்படும்.

(7) சென்னை-4, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-18 ஆகிய அலுவலகங்களில் ரூ. 7.80 இலட்சம் செலவில் கணினி அமைப்பு மேம்படுத்தப்படும்.

(8) சிவகங்கை, கரூர், பெரம்பலூர் மற்றும் உதகமண்டலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ரூ. 16 இலட்சம் செலவில் கணினி மயமாக்கப்படும்.

(9) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையரகத்தில் ரூ. 2.00 இலட்சம் செலவில் மின்னணு தொலைபேசி இணைப்பகம் அமைக்கப்படும்.

(10) வேலைவாய்ப்புத் துறையில் 4 மண்டல துணை இயக்குநர் அலுவலகங்களில் ரூ. 2.80 இலட்சம் செலவில் பேக்ஸ் கருவிகள் நிறுவப்படும்.

(11) கிண்டி, மதுரை மற்றும் நாகர்கோவில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ. 36 இலட்சம் செலவில் டெஸ்க்டாப் பப்ளிசிங் ஆப்பரேட்டர் தொழிற்பிரிவு புதிதாக தொடங்கப்படும்.

(12) சி.என்.சி. இயந்திரங்களுக்கு குளிர் பதன வசதியுடன் தூசு புகாத அறை, ரூ. 32.27 இலட்சம் செலவில் 8 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் கட்டப்படும்.

(13) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அலுவலகத்திற்கும் மற்றும் மண்டல அலுவலகங்களுக்கும் ரூ. 5 இலட்சம் செலவில் இண்டர்நெட்டுடன் கூடிய கணினி வசதி ஏற்படுத்தப்படும்.

(14) திருவண்ணாமலை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ரூ. 40 இலட்சம் செலவில் மாணவர் விடுதி கட்டப்படும்.

(15) நீடாமங்கலம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ரூ. 142 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

(16) 8 மருத்துவமனைகளுக்கும், 4 மண்டல மருத்துவ நிர்வாக அலுவலர் அலுவலகங்களுக்கும், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி) அலுவலகத்திற்கும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் ரூ. 9.81 இலட்சம் செலவில் கணினி வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் 7 மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களுடைய கருத்துகளை எடுத்து வைத்தார்கள். முடிந்த அளவிற்கு அதற்கு வேண்டிய விளக்கங்களை அளித்திருக்கிறோம். 40 மாமன்ற உறுப்பினர்கள் 163 வெட்டுத் தீர்மானங்களை இங்கே தந்திருக்கிறார்கள். அதற்கும் முடிந்த அளவு எல்லா வெட்டுத் தீர்மானங்களையும் கவனத்திலே எடுத்துக்கொண்டு, அதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கண்டிப்பாக எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவு செய்து தரும்படி அன்போடு கேட்டு அமைகிறேன். (குறுக்கீடு) உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவுசெய்து தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, என்ன?

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே இருக்கிற அரசு ஊழியர்கள் பொதுவாக விருப்பத்தின் பேரிலே, ஆயிரக்கணக்கான பேர் வி.ஆர்.எஸ்.-லே வெளியே சென்றிருக்கிறார்கள். கடந்த 10 மாதங்களாக, 6 மாதங்களாக அவர்களுக்கு எந்த பெனிபிட்-ம் இல்லாமல், அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. சம்பளமும் இல்லாமல், வி.ஆர்.எஸ்-ல் சென்றிருக்கக்கூடிய அந்த அரசு ஊழியர்களுக்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இல்லை, வி.ஆர்.எஸ்.-லே அவர்களை வெளியே அனுப்புவதற்கு அரசிடத்திலே திட்டமிருக்கிறதா? அல்லது மீண்டும் அவர்களை வேலையிலே அமர்த்துவதற்கான திட்டமிருக்கிறதா? கடந்த 10 மாத காலமாக சம்பளம் இல்லாமல் காத்துக் கொண்டிருக்கிற அரசு ஊழியர்கள் சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 31, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.



திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை. திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

*பிற்பகல் 5-45*

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு கே.சி. கருணாகரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம் :** இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை. செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை. திரு கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 31-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 178,10,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 109,31,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24-4-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

169. தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2003-2004.* (தமிழ், ஆங்கிலம்).

170. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2003-2004.* (தமிழ்)

171. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2003-2004.* (தமிழ், ஆங்கிலம்)

172. மானியக் கோரிக்கை எண் 31—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. *(2003-2004)* (தமிழ், ஆங்கிலம்)

173. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் வரவு-செலவுத் திட்ட செயலாக்கம், *2003-2004.* (தமிழ், ஆங்கிலம்)

174. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஆறாவது அறிக்கை. *(2001-2003)*

175. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஏழாவது அறிக்கை. *(2001-2003)*

176. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து எட்டாவது அறிக்கை. *(2001-2003)*

[2003 ஏப்ரல் 23

177. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை (2001-2003)

178. பொது நிறுவனங்கள் குழுவின் நூறாவது அறிக்கை (2001-2003)

179. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை. (2001-2003)

180. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை. (2001-2003)

181. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று மூன்றாவது அறிக்கை. (2001-2003)

182. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நான்காவது அறிக்கை. (2001-2003)

183. மனுக்கள் குழுவின் இருபதாவது அறிக்கை. (2001-2003)

184. மனுக்கள் குழுவின் இருபத்தி ஒன்றாவது அறிக்கை. (2001-2003)

185. மனுக்கள் குழுவின் இருபத்தி இரண்டாவது அறிக்கை. (2001-2003)

186. மனுக்கள் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை. (2001-2003)

187. மனுக்கள் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை. (2001-2003)

188. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2001-2003)

189. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2001-2003)

190. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2001-2003)

191. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2001-2003)

192. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல். (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

193. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல். (பதினேழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)



# இணைப்பு

(136-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு

2003-2004

மானியக் கோரிக்கை எண்—31

*தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்*
*மெய்வருத்தக் கூலி தரும்*

### முன்னுரை

பொருளாதார நடவடிக்கைகளின் மேம்பாட்டிற்கு தொழிலாளர் ஒரு முக்கியமான பங்காளர் ஆவார். உற்பத்தியைப் பெருக்கவும். பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும் நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு அவசியமாகிறது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தொழில் உறவுகள், தொழிலாளர்களின் பாதுகாப்பு, தொழிலாளர் நலன், வேலை வாய்ப்பகங்கள் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவற்றை நிர்வகித்து வருகிறது. இத்துறையின்கீழ் மூன்று துறைத் தலைவர்கள் உள்ளனர். தொழிலாளர் ஆணையர் தொழில் உறவுகள் மற்றும் தொழிலாளர் நலன் ஆகியவற்றைக் கவனித்து வருகிறார். தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு குறித்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையர் இரு பிரிவுகளுக்கு தலைமைப் பொறுப்பு வகிக்கிறார். வேலைவாய்ப்புப் பிரிவு, பல்வேறு வேலைவாய்ப்பகங்கள் மூலம் வேலைவாய்ப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது. பயிற்சிப் பிரிவு, தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் இவை போன்ற நிறுவனங்கள் மூலம் தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் ஆகிய இரு மத்திய அமைப்புகள் மூலம் பெருமளவில் சமூகப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மாநில தொழிலாளர் நல வாரியம், அமைப்பு

சார்ந்த நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு நலப் பணிகள் ஆற்றி வருகிறது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம், மற்றும் இதர வாரியங்கள், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நலப் பணிகளை ஆற்றி வருகின்றன. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், தொழிலாளர் மேலாண்மை தொடர்பான படிப்புப் பிரிவுகளை நடத்துவதுடன், நிர்வாகத்தினர், பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு சிறப்புப் படிப்புப் பிரிவுகளையும் நடத்தி வருகின்றது. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், வெளிநாடுகளில் பணிபுரிய விருப்பமுள்ள தொழிலாளர்களுக்கு பணியமர்த்தம் பெற உதவி புரிகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு அரசின் முக்கியமான ஓர் இலக்காகும். இவையனைத்தும் பின்வரும் அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.





## அத்தியாயம்-1

### தொழில் உறவுகள்

1.1. சமுதாயத்தின் பொருளாதாரத் தேவைகளை மேம்படுத்த வேலையளிப்பவர்-வேலையாள் உறவு முக்கியமான ஒரு கூட்டாண்மையாகும். எனவே, உற்பத்திப் பெருக்கம், தர மேம்பாடு, செலவினக் குறைப்பு ஆகியவற்றை எய்திட, வேலையளிப்பவர்-தொழிலாளர்களுக்கிடையே அனைத்து மட்டங்களிலும் மிக நெருங்கிய அளவில் ஒத்துழைப்பு இருக்க வேண்டும். நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களுக்கிடையிலான தாவாக்களைத் தீர்த்து வைப்பதற்கான அமைப்பு மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் ஆகியன குறித்து தொழிற் தகாராறு சட்டம் 1947 மற்றும் அதன் கீழுள்ள விதிகளில் கூறப்பட்டுள்ளன. தொழிலாளர் துறை, தொழிலாளர் மற்றும் நிர்வாகங்களுக்கிடையிலான சுமுகமான நல்லுறவின் மூலம், வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர்களின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகிய இலக்குகளை அடைய வழிவகுப்பது தொழிலாளர் துறையின் பணியாகும். தகுந்த தருணத்தில் தலையிட்டு சமரச உடன்பாடு ஏற்படுத்தி, தொழிற் தாவாக்களைத் தீர்த்து வைப்பதன் மூலம் தொழிலாளர் துறை அலுவலர்கள் முக்கியமான இப்பணியை ஆற்றி வருகின்றனர். தொழிலாளர் துறை அலுவலர்களின் திறமையான தலையீடுகள் மூலம் பல வேலைநிறுத்தங்கள் மற்றும் கதவடைபபுகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

2002-ஆம் ஆண்டில் வேலைநிறுத்தம், கதவடைப்பினால் ஏற்பட்ட மொத்த மனித இழப்பு நாட்கள் 2001-ஆம் ஆண்டை விடக் குறைக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ் வருமாறு:—

| வருடம் | மனித இழப்பு நாட்கள் | | மொத்தம் |
|---|---|---|---|
| | வேலை நிறுத்தம் | கதவடைப்பு | |
| 2001 | 13,49,726 | 7,95,131 | 21,44,857 |
| 2002 | 6,65,262 | 11,88,502 | 18,53,764 |

வேலைநிறுத்தம் மூலமாக மனித இழப்பு நாட்கள் குறைந்துள்ள நிலையில், கதவடைப்புகள் மூலமாக மனித இழப்பு நாட்கள் அதிகரித்துள்ளன. ஆனால், அதிக கதவடைப்புகள், நிதிப் பிரச்சினைகள்

காரணமாக ஏற்பட்டுள்ளதேயன்றி; தொழிற் தகராறுகளால் அல்ல. இவ்வாண்டில் தீர்த்து வைக்கப்பட்ட மொத்த வேலைநிறுத்தங்கள் மற்றும் கதவடைப்புகள் முறையே 48 மற்றும் 40 ஆகும்.

1.2. 2002-ஆம் ஆண்டில், கடந்த ஆண்டு எழுப்பப்பட்டவையும் சேர்த்து மொத்தம் 12,163 தொழிற் தாவாக்களில் 9,194 தொழிற் தாவாக்கள் தீர்த்து வைக்கப்பட்டன.

1.3. 2002-ஆம் ஆண்டில், போனஸ் தொடர்புடைய தொழிற் தாவாக்களை, தொழிலாளர் துறையின் சமரச அலுவலர்கள் மிகுந்த கவனத்துடன் கையாண்டுள்ளனர். இதன் விளைவாக, போனஸ் தொடர்புடைய பெரும்பாலான பிரச்சினைகள் குறைந்த கால அளவில் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டு, போனஸ் காலத்தில் அமைதி நிலவியது.

## முத்தரப்புக் குழு

1.4. மூடப்பட்ட தொழில் நிறுவனங்களைத் திறப்பது தொடர்பான சாத்தியக் கூறுகளை ஆராய, அரசாணை (டி) எண் 133, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12-02-2002-ல் மாவட்டந்தோறும் முத்தரப்புக் குழுக்களை அமைத்திட அரசு ஆணையிட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பார். இதன் உறுப்பினர்-செயலாளர் அம்மாவட்டத்தின் தொழிலாளர் அலுவலர் ஆவார். சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் சட்டப்பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொழிலாளர், வேலையளிப்போர் சார்பில் 3 பிரதிநிதிகள் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர். இக்குழு, 3 மாதங்களுக்கு ஒருமுறை கூடி, மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள நிறுவனங்கள் குறித்து விவாதிக்கும்.

## நீண்ட காலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கான நிவாரணம்

1.5. நீண்ட காலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு ரூ.250/- மாதாந்திர உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்தது. 70 தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 8,974 தொழிலாளர்களுக்கு இந்த நிவாரணத் தொகை வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 2002 ஆம் ஆண்டில் ரூ.10,51,750/- பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.



## பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு சிறப்பு தொழில் தீர்ப்பாயம்

1.6. பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகள் தொடர்பான தொழிற் தாவாக்களை விசாரித்து தீர்வு செய்வதற்காக, அரசாணை எண் (டி) 569, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 17-07-2002-ல் சிறப்பு தொழில் தீர்ப்பாயத்தினை அரசு அமைத்துள்ளது.

## மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்)

1.7. தமிழ்நாடு அரசு தொழிலாளர் துறை, தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவுடன் இணைந்து, வேலையாள் இழப்பீடு சட்டம் 1923-ன்கீழ் எழுப்பப்பட்டு, நிலுவையில் உள்ள வழக்குகளில் மிக விரைவாக நீதி கிடைக்க 'லோக் அதாலத்' என்ற மக்கள் நீதிமன்றத்தை அமைத்துள்ளது. அது 07-08-2002 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. இதுவரை 26 வழக்குகள் முடிக்கப்பட்டு, கேட்புரிமைதாரர்களுக்கு ரூ.47,77,824/- ஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## துறையை கணினிமயமாக்கல்

1.8. தலைமை அலுவலகத்திலும், நல வாரியங்களிலும் மற்றும் இதர மாவட்ட அலுவலகங்களிலும் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் தலைமை அலுவலகத்தில் கூடுதலாக இரண்டு கணினிகளும், சார்நிலை/மாவட்ட அலுவலகங்களில் கூடுதலாக 12 கணினிகளும் நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் துறைக்கென தனியாக இணையதளம் ஒன்று விரைவில் உருவாக்கப்படவுள்ளது.

## தொழில் நல்லுறவுப் பரிசுத் திட்டம்

1.9. பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க நிர்வாகத் தரப்பில் 4 பிரதிநிதிகளும், தொழிற்சங்கத் தரப்பில் 4 பிரதிநிதிகளும் கொண்ட முத்தரப்புத் தேர்வுக் குழு அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 1978 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பிரிவிற்கும் முதல் பரிசாக ஒரு கேடயமும், ரூ.2,000/- ரொக்கப் பரிசும், இரண்டாவது பரிசாக ஒரு கேடயமும், ரூ.1,000/- ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது.

[2003 ஏப்ரல் 23

**தொழிலாளர் நீதிமன்றங்கள்**

1.10. தொழிற்தகராறுகள் சட்டம், 1947 அட்டவணை இரண்டில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்கள் மீது தீர்ப்பு வழங்க மாநிலம் முழுவதும் 10 தொழிலாளர் நீதிமன்றங்கள் உள்ளன.

1.11. சென்னையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தொழில் தீர்ப்பாயம் இயங்கி வருகின்றது. தொழிற்தகராறுகள் சட்டம், 1947 அட்டவணை இரண்டு அல்லது மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் மீது தொழிற் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்குகிறது.



2003 ஏப்ரல் 23]

## அத்தியாயம்-2

### அமலாக்கம்

2.1. தொழில் செயல்பாடுகள் மற்றும் வகைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி காரணமாக தொழிலாளர் நிர்வாகம் மிகவும் கடினமாகியுள்ளது. ஒவ்வொரு நிலையிலும், புரிந்து கொள்ளுதல், கூர்உணர்வு, துரிதம் மற்றும் திறமை தேவைப்படுகிறது. தற்போதைய நிலையில், தொழிலகங்களை போட்டிக்குரியதாக்கவும், அதே சமயத்தில், தொழிலாளர்கள் உரிமைகளைப் பாதுகாத்திடவும் தொழிலாளர் நிர்வாகம் பயனுள்ள தொழில் உறவு முறையை உருவாக்க வேண்டியுள்ளது. அமலாக்கத்தைப் பொறுத்தவரை, தொழிலாளர் நிர்வாகம் தொழிலாளர் சட்டங்களைத் திறம்பட அமல்படுத்த வேண்டியுள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர், தொழிலாளர் நலன்களைக் காக்கவும், அவர்களது உரிமைகளைப் பாதுகாத்திடவும், தொழிற்தகராறுகள் சட்டத்துடன் இதர பல சட்டங்கள் நாடாளுமன்றத்தாலும், சட்டப்பேரவையாலும் இயற்றப்பட்டுள்ளன. பெரும்பாலான சட்டங்கள் தொழிலாளர் துறையால் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. அவை குறித்த சுருக்க விவரம் பின்வருமாறு:

**தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947**

2.2. மாநிலத்தில் மொத்தம் 3,10,559 கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. இந்த ஆண்டில் 3,02,584 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மொத்தம் 45,694 வழக்குகள் முடிக்கப்பட்டன. அவற்றுள் 35,443 வழக்குகளில் இணக்கக் கட்டணத் தொகையாக ரூ.22,10,054/- துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 10,251 வழக்குகளில், நீதிமன்றங்கள் ரூ.1,81,540/- அபராதத் தொகை விதித்துள்ளன.

**தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958**

2.3. மாநிலத்தில் மொத்தம் 27,112, உணவு நிறுவனங்கள் உள்ளன. இந்த ஆண்டில், வேலையளிப்பவர்களிடமிருந்து ரூ.7,77,444/- பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. 41,931 ஆய்வுகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. 4,659 வழக்குகள் முடிக்கபபட்டு, ரூ.2,84,325/- இணக்கக் கட்டணத் தொகையாக துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களால் ரூ.43,350/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை) நாட்கள், சட்டம் 1958

2.4. இந்த ஆண்டில் மொத்தம் 99,021 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 7,255 வழக்குகள் முடிக்கப்பட்டு, 6,403 வழக்குகளில் ரூ.3,55,620/- இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களில் தொடரப்பட்ட 852 வழக்குகளில் ரூ.39,220/- அபராதத் தொகையாக விதிக்கப்பட்டுள்ளது.

### தொழிற்சங்கங்கள் சட்டம், 1926

2.5. இந்த ஆண்டில் 401 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, ரூ.56,850/- பதிவுக் கட்டணமாகவும், திருத்தக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டுள்ளது. இதுவரை, 9,317 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### சம்பளப் பட்டுவாடாச் சட்டம், 1936

2.6. இந்த ஆண்டில், சம்பளப் பட்டுவாடாச் சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டு அலுவலர் முன்பு தாக்கல் செய்யப்பட்ட கேட்பு மனுக்களின் மீது ரூ.1,44,16,229/- பட்டுவாடா செய்ய உத்தாவிடப்பட்டுள்ளது.

### தொழிலக வேலைவாய்ப்பு (நிலையணைகள்) சட்டம், 1946

2.7. இந்த ஆண்டில் 356 தொழில் நிறுவனங்களின் நிலையாணைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

### தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951

2.8. தமிழ்நாட்டில் உள்ள மொத்தத் தோட்ட நிறுவனங்களின் பாப்பளவு 58,654 ஹெக்டேர் மற்றும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 94,616 ஆகும். (38,687 ஆண்கள் மற்றும் 55,929 பெண்கள்) மொத்தம் 661 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்களும், 1,531 பதிவு பெறாத தோட்ட நிறுவனங்களும் உள்ளன. இந்த ஆண்டில் 3,612 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 332 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.1,26,150/- அபாராதத் தொகை நீதிமன்றங்களால் விதிக்கப்பட்டுள்ளது.



### உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனை மற்றும் இதரப் பிரிவுகள்) சட்டம், 1955

2.9. இந்த ஆண்டில், அமலாக்க அலுவலர்களால் 91 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961

2.10. 2002 ஆம் ஆண்டின் இறுதியில், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் எண்ணிக்கை 1,828 ஆகும். அந்நிறுவனங்களில் 1,27,896 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். பதிவுக் கட்டணமாக ரூ.4,22,943/- வசூலிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், 6,188 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 537 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு, ரூ.1,61,910/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

### பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966

2.11. மாநிலத்தில் 2,027 பீடி நிறுவனங்கள் உள்ளன. இந்த ஆண்டில், 4,886 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 468 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு, ரூ.75,325/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 2,49,302 பீடித் தொழிலாளர்களுக்கும் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

### பீடித் தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டம்

2.12. தமிழக அரசு, இத்திட்டத்தின்கீழ் ஐந்தாண்டுகளில் 10,000 வீடுகள் கட்டப்படும் என அறிவித்துள்ளது. மாநில அரசு, ஐந்தாண்டுகளில் ரூ.5 கோடி மானியத் தொகையை தனது பங்களிப்பாக வழங்க உள்ளது. 499 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

### ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970

2.13 இந்த ஆண்டில், 71 நிறுவனங்கள் முதன்மை வேலையளிப்பவர்களாகப் பதிவு செய்யப்பட்டன. 159 ஒப்பந்ததாரர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்த அந்தஸ்து வழங்கல்) சட்டம், 1981**

2.14. இந்த ஆண்டு இந்தச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட 607 மனுக்கள் முடிக்கப்பட்டு, இதன் காரணமாக 1,631 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) சட்டம், 1985**

2.15. இந்த ஆண்டில், 7,35,980 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 35,123 வழக்குகள் முடிக்கப்பட்டன. இவற்றில் 35,048 வழக்குகளில் ரூ.75,82,985/- இணக்கக் கட்டணம் துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. 75 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு, ரூ.60,925/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

**மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்**

2.16. மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம், வேலையளிப்போர் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கி, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலைமையில் இயங்கி வருகிறது. இது உயர்மட்ட முத்தரப்புக் குழுவாகும். இந்த வாரியம் தொழிலாளர்கள் பிரச்சினைகள் குறித்தும், தொழிலாளர் கொள்கை குறித்தும் விவாதித்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்குகின்றது.



## அத்தியாயம்-3

### குறைந்தபட்ச ஊதியங்கள்

3.1. சுருட்டு தயாரிக்கும் தொழில் மற்றும் டைமக்ஸன் தொழில் ஆகியவை 2002 ஆம் ஆண்டில் குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.

3.2. 2002 ஆம் ஆண்டில், அரசு கீழ்க்கண்ட ஐந்து தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்து இறுதி அறிக்கை வெளியிட்டுள்ளது.

(1) பாலிதீன் ப்ராஸஸிங், ஃபோம் வகை மற்றும் பிளாஸ்டிக் தயாரிக்கும் தொழில்.

(2) பொதுப் பொறியியல் மற்றும் கட்டமைப்புத் தொழில்.

(3) காகிதம் மற்றும் காகிதம்சார்ந்த தொழில் இனத்தின்கீழ் இயந்திரத்தால் காகிதம் தயாரிக்கும் தொழில்.

(4) வனத் தொழில்.

(5) உணவு பதப்படுத்துதல் தொழில்.

3.3. 2002 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்வதற்கான முதனிலை அறிவிக்கைகளை அரசு வெளியிட்டுள்ளது.

1. மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ இல்லங்கள் தொழில் (அரசு மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் நீங்கலாக).
2. பட்டாசு தயாரிக்கும் தொழில்.
3. லாண்டரீஸ் மற்றும் துணி துவைக்கும் தொழில்.
4. தங்கம் மற்றும் வெள்ளி பொருட்கள் தயாரிக்கும் தொழில்.
5. அரிசி ஆலைகள், மாவு ஆலைகள் மற்றும் பருப்பு ஆலைகள்.
6. கயிறு தயாரிக்கும் தொழில்.
7. கடல் உணவு பதப்படுத்தும் தொழில்.

8. ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் டாக்ஸி தொழில்.

9. அப்பளம் தயாரிக்கும் தொழில்.

10. ஜவ்வரிசி தயாரிக்கும் தொழில்.

11. புகையிலை (பீடி சுற்றுதல்) தயாரிப்புத் தொழில்.

12. புகையிலை (வாசனை மற்றும் மெல்லும் புகையிலை) தயாரிப்புத் தொழில்.

13. செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் தொழில்.

14. பொது போக்குவரத்து நிறுவனங்கள் தொழில்.

15. சோப்பு தயாரிக்கும் தொழில்.

16. காபி பதப்படுத்தும் தொழில்.

17 மரம் அறுக்கும் தொழில்.

18. தகர கொள்கலன்கள் தயாரிக்கும் தொழில்.

19. பாத்திரங்கள் தயாரிக்கும் தொழில்.

20. காற்றூட்டப்பட்ட நீர் தயாரிக்கும் தொழில்.

21. கையினால் காகிதம் தயாரிக்கும் தொழில்.

22. சலனப்படங்கள் தயாரிக்கும் தொழில்.

23. கட்டுமானம் அல்லது சாலைப் பராமரிப்பு அல்லது கட்டடத் தொழில்.

24. முந்திரிக் கொட்டைத் தொழில்.

25. தேங்காய் உரித்தல் தொழில்.

26. எண்ணெய் தொழில்.

27. சினிமா தொழில்.

28. பட்டு முறுக்கேற்றும் தொழில்.

29. காட்டன் ஜின்னிங், பிரஸ்சிங் மற்றும் காட்டன் வேஸ்ட் தொழில்.

30. ஓட்டல் மற்றும் உணவகங்கள் தொழில்.



3.4. 2002 ஆம் ஆண்டில், அரசு கீழ்க்கண்ட தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யும் பொருட்டு ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது.

1. திரவ வாயுப் பொருள் அடங்கிய சிலிண்டர்களை விநியோகிக்கும் தொழில்.

2. நிட்டிங் தொழில்.

3. மண்பாண்டங்கள் தயாரிக்கும் தொழில்.

4. காலணி தயாரிக்கும் தொழில்.

3.5. இந்த ஆண்டில், இச்சட்டத்தின்கீழ் 1,857 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டன. கேட்பு மனுதாரர்களுக்கு ரூ.1,67,13,560/- தொகை அளிக்க உத்தரவிடப்பட்டது.

[2003 ஏப்ரல் 23

## அத்தியாயம்-4

### சமூகப் பாதுகாப்பு

**வேலையாள் இழப்பீட்டுச் சட்டம், 1923**

4.1. இந்த ஆண்டில், வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட 2,936 கேட்பு மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, கேட்பு மனுதாரர்களுக்கு ரூ.29,44,42,999/- இழப்பீடுத் தொகை பட்டுவாடா செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**மகப்பேறு நலச் சட்டம், 1961**

4.2. இந்த ஆண்டில், 8 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்வு செய்யப்பட்டு, ரூ.19,150/- அபராதத் தொகையாக விதிக்கப்பட்டுள்ளது.

**போனஸ் வழங்குதல் சட்டம், 1965**

4.3. இச்சட்டம், 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும். போனஸ் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட நிறுவனங்களில், தொழிலாளர்கள் எண்ணிக்கை 10-க்குக் குறையும் நேர்வுகளிலும், இந்நிறுவனங்கள் தொடர்ந்து போனஸ் வழங்க வேண்டும். நஷ்டத்தில் இயங்கினாலும் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச போனஸ் (8.33%) வழங்க வேண்டும். இச்சட்டத்தின்கீழ் அதிகபட்சமாக 20% போனஸாக வழங்க வேண்டும்.

**பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், 1972**

4.4. இந்த ஆண்டில், இச்சட்டத்தின்கீழ் 1,403 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, ரூ.2,31,82,348/- மனுதாரர்களுக்கு பட்டுவாடா செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**சம ஊதியச் சட்டம், 1976**

4.5. இந்த ஆண்டில், 9,906 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 18 வழக்குகள் தொடரப்பட்டதில், ரூ.5,750/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 23]

**தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981**

4.6. இந்த ஆண்டில், இச்சட்டத்தின்கீழ் 337 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, ரூ.52,65,395/- மனுதாரர்களுக்கு பட்டுவாடா செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

**மக்கள் சாசனம்**

4.7. தொழிலாளர் ஆணையம் மக்கள் சாசனம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த மக்கள் சாசனத்தில் இத்துறையின் செயல்பாடுகள் குறித்தும், இத்துறையால் அமலாக்கம் செய்யப்படும் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் குறித்தும், இந்தச் சட்டங்கள் மற்றும் திட்டங்களின் பயன்களை எவ்வாறு பெறுவது என்பது குறித்தும் பொதுமக்கள் தெளிவாக அறிந்து கொள்ள விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

[2003 ஏப்ரல் 23

# அத்தியாயம்-5

## குழந்தைத் தொழிலாளர்

### தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழித்தல்

5.1. மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்கீழ், தமிழ்நாட்டைச் சிறந்த மாநிலமாக்குவதற்கான திட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் ஒரு முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது. இந்தக் குறிக்கோளை அடைய, சட்டங்கள் அமலாக்கம், ஒருங்கிணைந்த நடவடிக்கை, மீட்டல், குழந்தைத் தொழிலாளர் கல்வி மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு, சமூக மனப்பான்மையை உருவாக்குதல் ஆகியன தேவைப்படுகின்றன. இந்நடவடிக்கை வழிகாட்டுதலுக்கு செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

### குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு முறை தொழிலாளர் சட்டங்கள் அமலாக்கம்

5.2. கடந்த 2002 ஆம் ஆண்டில் குழந்தைத் தொழிலாளர்கள் முறை ஒழிப்பு சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 413 ஆகும்.

5.3. சட்ட அமலாக்க அலுவலர்கள், குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கமர்த்தும் வேலையளிப்போரைத் தண்டிக்க நடவடிக்கை எடுப்பதுடன், ஆய்வின்போது கண்டுபிடிக்கப்படும் குழந்தைத் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்காகவும் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

### தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்

5.4. விருதுநகர், சேலம், புதுக்கோட்டை, தருமபுரி, வேலூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மைய அரசின் நிதி உதவியுடன் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட 20,044 குழந்தைத் தொழிலாளர்கள் 472 சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயின்று வருகின்றனர். இக்குழந்தைகளுக்கு மதிய உணவு, இலவச சீருடை மற்றும் படிப்பதற்கான உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மாதாமாதம் ரூ.100/- உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகின்றது.



2003 ஏப்ரல் 23]

### தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான செயல்திட்டம்

5.5. ஊறுவிளைவிக்கும் தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறையை 2005 ஆம் ஆண்டுக்குள்ளும், ஊறுபாடற்ற பணிகளில் குழந்தைத் தொழிலாளர் முறையை 2007 ஆம் ஆண்டுக்குள்ளும் ஒழிக்கும் முக்கிய குறிக்கோளுடன் தயாரிக்கப்பட்ட மாநில அளவிலான செயல் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையிலுள்ளது. அவ்வரைவு செயல் திட்டத்தில் கீழ்க்குறிப்பிட்ட வழிமுறைகள் இடம் பெற்றுள்ளன.

* வேலை செய்யும் குழந்தைகளைக் கண்டறிதல்
* குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்
* 5 முதல் 7 வயது வரையிலான குழந்தைகளை பள்ளிகளில் சேர்த்தல்
* மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களை முறையான பள்ளிகளில் சேர்த்தல்
* முறை சார்ந்த பள்ளிக் கல்வியை வலுப்படுத்துதல்
* 14 வயது முதல் 16 வயது வரையிலான குழந்தைகளுக்கு செயல் திறன் பயிற்சி அளித்தல்.
* குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தொடர்பான சட்டங்களைத் தீவிரமாக அமல்படுத்துதல்
* விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
* முன்னோடித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் அமலாக்க இலக்கை நிர்ணயித்தல்
* பயிற்சிகள்
* பல்வேறு துறைகளுக்கிடையேயான பணி ஒருங்கிணைப்பு ஏற்படுத்துதல்
* சமுதாய பங்கேற்பு

[2003 ஏப்ரல் 23

# அத்தியாயம்-6

## நல வாரியங்கள்

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

6.1. இந்த வாரியம், 1-1-2002 முதல் 31-12-2002 வரை 9,396 தொழிலாளர் மற்றும் தொழிலாளர்களைச் சார்ந்தவர்களுக்கு ரூ.35,15,895/- உதவித் தொகை அளித்துள்ளது.

6.2. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தமிழகம் முழுவதும் 71 தொழிலாளர் நல மையங்களில் தையற்பயிற்சி வகுப்புகள், குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் படிப்பகங்கள் நடத்தி வருகின்றது. இவ்வாண்டில் 19 தொழிலாளர் நல மையங்களில் குழந்தைகள் காப்பகங்களும், 64 மையங்களில் படிப்பகங்களும் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

6.3. தொழிலாளர் நல மையங்களில் உள்ள குழந்தைகள் காப்பகங்களில் தொழிலாளர்களின் இரண்டு முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு தினமும் இலவச சத்துணவு மற்றும் பால் வழங்கப்படுகிறது. அத்துடன் வாரம் இரு தினங்கள் பழம் மற்றும் முட்டை வழங்கப்படுகிறது. குழந்தைகள் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு வருடத்திற்கு இரண்டு ஜோடி டெரிகாட்டன் சீருடை வழங்கப்படுகிறது. குழந்தைகள் காலமுறையாக மருத்துவரால் மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகின்றனர்.

6.4. மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தாரும் தங்குவதற்கு குறைந்த செலவில் ஓய்வு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மேற்கண்ட ஓய்வு இல்லங்களை 6,121 தொழிலாளர்களும் அவரைச் சார்ந்தவர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

6.5. சென்னையில், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்கள் தங்குவதற்கு, தேனாம்பேட்டை டி.எம்.எஸ். வளாகத்தில் ஓய்வு இல்லம் செயல்பட்டு வருகிறது. ஒருவருக்கு நாளொன்றுக்கு மிகக் குறைந்த வாடகையாக ரூ.20/- வசூல் செய்யப்படுகிறது. இந்த ஆண்டில், 7040 நபர்கள் இந்த ஓய்வு இல்லத்தை தங்குவதற்குப் பயன்படுத்தினர்.

6.6. கீழ்க்கண்ட அரசு மருத்துவமனைகளில் தொழிலாளர் நலனுக்காக தனியே காசநோய் பிரிவுகள் உள்ளன. தாம்பரம் (26 படுக்கைகள்),



2003 ஏப்ரல் 23]

ஆசாரிப்பள்ளம் (30 படுக்கைகள்), திருப்பூர் (26 படுக்கைகள்), ஆஸ்டின்பட்டி (20 படுக்கைகள்) மற்றும் கீழ்ப்பெண்ணாத்தூர் (24 படுக்கைகள்).

6.7. தொழிலாளர்கள், வேலையளிப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் நன்மைக்காக 'உழைப்பவர் உலகம்' என்ற மாத இதழை வாரியம் வெளியிடுகிறது. இந்த இதழுக்கு 4046 ஆயுட்கால சந்தாதாரர்களும், 249 ஆண்டு சந்தாதாரர்களும் உள்ளனர்.

6.8. இவ்வாரியத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் அவற்றால் பயனடைந்தவர்கள் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

### 1-1-2002 முதல் 31-12-2002 முடிய

1. தொழிலாளர் நல மையங்கள் (குழந்தைகள் காப்பகம், தையற்பயிற்சி பிரிவு மற்றும் படிப்பகம் இணைந்தது) 71
2. பயன் பெற்ற தையற் பயிற்சியாளர்கள் 2,726

   பயன்பெற்ற தொழிலாளர் குழந்தைகள் 2,781
3. தொழிலாளர்களின் குழந்தைகள் படிப்பிற்காக உதவித் தொகை வழங்கிய விவரம் (1-01-2002 முதல் 31-12-2002 முடிய)

| | பயன் பெற்றவர்கள் | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| அ. பொறியியல் பட்டப் படிப்பு | 138 | 1,65,600 |
| ஆ. பொறியியல் பட்டயப் படிப்பு | 117 | 84,240 |
| இ. மருத்துவப் பட்டப் படிப்பு | 24 | 25,800 |
| ஈ. மருத்துவப் பட்டயப் படிப்பு | 5 | 3,600 |
| உ. சட்டப் படிப்பு | - | - |
| ஊ. வேளாண்மைப் பட்டப் படிப்பு | 2 | 2,400 |
| எ. தொழிற் பயிற்சிக் கல்வி | 34 | 17,000 |
| ஏ. மேல்நிலைக் கல்வி | 128 | 76,800 |
| ஐ. கல்வி ஊக்கத் தொகை | 97 | 78,500 |

4. ஏனைய நலத் திட்டங்கள் மூலம் பயன் பெற்றவர்கள்

| | பயன் பெற்றவர்கள் | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை திரும்ப அளித்தல் | 1350 | 2,68,045 |
| (ஆ) தொழிலாளர் பிள்ளைகளுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்துக் கல்வி, மற்றும் தேர்வுக் கட்டணத் தொகை ஈடுசெய்தல் | 12 | 1,745 |
| (இ) பாட நூல் உதவித் தொகை | 1433 | 76,995 |
| (ஈ) ஈமச் சடங்கு உதவித் தொகை | 233 | 1,16,500 |
| (உ) காது கேட்கும் கருவிகள் வழங்குதல் | 1 | 1,000 |
| (ஊ) ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல் | 1 | 3,050 |
| (எ) குழந்தைகள் காப்பகம் | 2781 | 10,06,601 |
| (ஏ) தையற் பயிற்சி வகுப்பு | 2726 | 8,93,873 |
| (ஐ) தையல் இயந்திரம் பரிசு | 314 | 6,94,146 |
| மொத்தம் | 9,396 | 35,15,895 |

**தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்**

6.9. 1-1-2002 முதல் 31-12-2002 வரையிலான காலத்தில், இவ்வாரியத்தில் பங்களிப்புத் தொகையாக ரூ.14,16,63,908/- பெறப்பட்டுள்ளது.

6.10. 31-12-2002 வரை இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 4,44,461.

6.11. ஒரு தொழிலாளருக்கு ரூ. 25/- என்ற அடிப்படையில் ரூ. 1,11,11,525/- பதிவுத் தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்து கொண்ட ஒவ்வொரு தொழிலாளியும் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை ரூ. 10/- செலுத்தி தனது பதிவினைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். பதிவு செய்து கொண்ட அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் இலவசமாக அடையாள அட்டை வழங்கப்படுகிறது.



**வாரியத்தினால் அமலாக்கப்படும் நலத் திட்டங்கள்**

**(1) தனி நபர் குழு விபத்து காப்பீட்டுத் திட்டம்**

6.12. இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்கள் தனி நபர் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வருடமும் இந்தக் காப்பீட்டினை மீண்டும் புதுப்பிப்பதற்கான கட்டணம் வாரியத்தால் செலுத்தப்படுகிறது.

6.13. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர் ஒருவர் விபத்தின் காரணமாக இறந்தால், அவருடைய நியமனதாரருக்கு ரூ.1 இலட்சம் அளிக்கப்படுகிறது. உடல் உறுப்புகள் இழப்பு மற்றும் பார்வை இழப்பு மற்றும் இதர இழப்புகளுக்கு, இழப்பின் சதவிகிதத்தின் அடிப்படையில் ரூ.1 இலட்சம் வரை ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

**(2) கல்வி உதவித் தொகைத் திட்டம்**

6.14. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் ஆகியோருக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 10ஆம் வகுப்பு தேர்ச்சி | .. | ரூ.1,000/- |
| 12ஆம் வகுப்பு தேர்ச்சி | .. | ரூ.1,500/- |

| வ.எண் | படிப்பு பற்றிய விவரம் | கல்வி உதவித் தொகை | |
|---|---|---|---|
| | | வெளியிலிருந்து படிப்பவர்கள் ரூ. | விடுதியில் தங்கிப் படிப்பவர்கள் ரூ. |
| 1 | இளங்கலை (கலை, விஞ்ஞானம் மற்றும் சட்டம்) | 1,500 | 1,750 |
| 2 | பொறியியல், மருத்துவம், சட்டம், கால்நடை விஞ்ஞானம் மற்றும் அவை போன்ற படிப்புகள் | 2,000, | 4,000 |
| 3 | ஐ.டி.ஐ. மற்றும் பாலிடெக்னிக் படிப்புகள் | 1,000 | 1,200 |
| 4 | பட்ட மேற்படிப்புகள் | 2,000 | 3,000 |
| 5 | தொழிற் கல்வி பட்ட மேற்படிப்பு | 4,000 | 6,000 |

[2003 ஏப்ரல் 23

### (3) திருமண உதவித் திட்டம்

6.15. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் திருமணத்திற்கும் மற்றும் அவரது மகன்/மகள் திருமணத்திற்கும் திருமண உதவித் தொகையாக ரூ.2,000/- வழங்கப்படுகிறது.

### (4) மகப்பேறு உதவித் திட்டம்

6.16. பதிவு பெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளிக்கு மகப்பேறு/ கருச்சிதைவு/கருக்கலைப்புக்கு ரூ.2,000/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

### (5) இயற்கை மரண உதவித் திட்டம்

6.17. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இயற்கை மரணமடைந்தால், அன்னாரது நியமனதாரருக்கு ரூ.10,000/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

### (6) ஈமச் சடங்கு உதவித் திட்டம்

6.18. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர் மரணமடைந்தால், (இயற்கையாகவோ அல்லது விபத்தினாலோ) அவருடைய நியமனதாரருக்கு ரூ.2,000/- ஈமச் சடங்கிற்காக உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

### (7) மூக்குக் கண்ணாடி வாங்கிய தொகையினை ஈடு செய்தல்

6.19. ஒவ்வொரு வருடமும், மூக்குக் கண்ணாடி வாங்கிய தொகையை ஈடு செய்வதற்காக ஒரு தொழிலாளிக்கு ரூ.250/- வீதம் 1,000 தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும்.

6.20. 1-01-2002 முதல் 31-12-2002 முடிய கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வாரியத்தால் அளிக்கப்பட்ட நலத் திட்டங்களின் விவரம் பின்வருமாறு:—



2003 ஏப்ரல் 23]

| வரிசை எண். | நலத் திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மரண விபத்து | 99 | 99,00,000/- |
| 2 | இயற்கை மரணம் | 926 | 91,60,000/- |
| 3 | ஈமச்சடங்கு உதவித் தொகை | 1009 | 20,18,000 |
| 4 | காய விபத்து | 23 | 3,65,000/- |
| 5 | கல்வி உதவித் தொகை | | |
| | 10-ஆம் வகுப்பு | 1105 | 11,05,000/- |
| | 12-ஆம் வகுப்பு | 753 | 11,29,500/- |
| | உயர் கல்வி | 150 | 2,94,750/- |
| 6 | திருமண உதவித் தொகை | 796 | 15,92,000/- |
| 7 | மகப்பேறு உதவித் தொகை | 28 | 56,000/- |
| | மொத்தம் | 4889 | 2,56,20,250/- |

### ஓய்வூதியத் திட்டம்

6.21. வாரியத்தில் பதிவு பெற்ற, தகுதியுடைய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர நல வாரியங்கள்

6.22. அரசு, அமைப்புசாரா தொழிலாளர் நலனுக்கென கீழ்க்கண்ட நல வாரியங்களையும் அமைத்து ஆணையிட்டுள்ளது.

1. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.
2. தமிழ்நாடு ஆட்டோ மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.
3. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.
4. தமிழ்நாடு முடி திருத்துவோர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.
5. தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.

[2003 ஏப்ரல் 23

6. தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.

7. தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.

8. தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பு மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.

9. தமிழ்நாடு ஓவியர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.

10. தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.

6.23. இவ்வாரியங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு கீழ்க்கண்ட நலத் திட்ட உதவிகள் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. (அ) விபத்து இறப்பு | ரூ. | 1,00,000/- |
| (ஆ) இரு உறுப்புகள் இழப்பு | ரூ. | 1,00,000/- |
| (இ) ஒரு உறுப்பு இழப்பு | ரூ. | 50,000/- |
| 2. இயற்கை மரண உதவி | ரூ. | 10,000/- |
| 3. ஈமச் சடங்கு உதவி | ரூ. | 2,000/- |
| 4. கல்வி உதவித் தொகை: | | |
| (தொழிலாளர்களின் இரு குழந்தைகளுக்கு) | | |
| 10-ஆம் வகுப்பு தேர்ச்சி | ரூ. | 1,000/- |
| 12-ஆம் வகுப்பு தேர்ச்சி | ரூ. | 1,500/- |
| முறையான இளநிலை பட்டப் படிப்பு (ஒவ்வொரு கல்வியாண்டிற்கும்) | | |
| வெளியிலிருந்து படிப்பவர்களுக்கு | ரூ. | 1,500/- |
| விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு | ரூ. | 1,750/- |
| முறையான முதுநிலை பட்டப் படிப்பு (ஒவ்வொரு கல்வியாண்டிற்கும்) | | |
| வெளியிலிருந்து படிப்பவர்களுக்கு | ரூ. | 2,000/- |
| விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு | ரூ. | 3,000/- |
| சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் மற்றும் அதுபோன்ற தொழில்நுட்பப் படிப்பு (ஒவ்வொரு கல்வியாண்டிற்கும்) | | |
| வெளியிலிருந்து படிப்பவர்களுக்கு | ரூ. | 2,000/- |
| விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு | ரூ. | 4,000/- |
| முதுநிலை தொழில்நுட்பப் படிப்பு (ஒவ்வொரு கல்வியாண்டிற்கும்) | | |
| வெளியிலிருந்து படிப்பவர்களுக்கு | ரூ. | 4,000/- |
| விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு | ரூ | 6,000/- |
| ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிபபு (ஒவ்வொரு கல்வியாண்டிற்கும்) | | |
| வெளியிலிருந்து படிப்பவர்களுக்கு | ரூ. | 1,000/- |
| விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு | ரூ. | 1,200/- |
| 5. திருமண உதவி | | |
| (தொழிலாளி/மகன்/மகள் திருமணத்திற்கு இரு முறை) | ரூ. | 2,000/- |
| 6. மகப்பேறு உதவி (இரு குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ. | 2,000/- |





6.24. உடலுழைப்புத் தொழிலாளி பதிவின்போது ரூ.100/-ஐ பதிவுத் தொகையாக செலுத்த வேண்டும். இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ரூ.10/- செலுத்தி பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும்.

6.25. 01-01-2002 முதல் 31-12-2002 வரை 21,893 தொழிலாளர்கள் வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ளனர். 31-12-2002 வரை, தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 6,15,809 தொழிலாளர்கள் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

6.26. 01-01-2002 முதல் 31-12-2002 வரையுள்ள காலத்தில், தகுதியுடைய தொழிலாளர்களுக்கு பின்வருமாறு உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன:—

[2003 ஏப்ரல் 23

| வரிசை எண் | உதவித் தொகை திட்டங்கள் | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்தம் ரூ. |
|---|---|---|---|
| 1 | கல்வி உதவித் திட்டம் | 1,015 | 11,98,000 |
| 2 | மகப்பேறு நலத் திட்டம் | 179 | 3,58,000 |
| 3 | திருமண உதவித் திட்டம் | 503 | 10,06,000 |
| 4 | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் திட்டம் | 125 | 15,00,000 |
| 5 | ஈமச் சடங்கு உதவித் திட்டம் | 1 | 2,000 |
| 6 | குழு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் | 19 | 19,38,000 |
| | மொத்தம் | 1,842 | 60,02,000 |

6.27 ஒன்பது நல வாரியங்களை, முதன்மை வாரியமான தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்துடன் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2003 ஏப்ரல் 23]

# அத்தியாயம்-7

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

7.1 இக்கல்வி நிலையம், தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைத் துறை அலுவலர்களுக்கும், பொதுத் துறை மற்றும் தனியார் துறை தொழிலகங்களில் நிர்வாகப் பணியாற்றுபவர்களுக்கும், தொழிலாளர் சம்பந்தப்பட்ட பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகளை தொடர்ந்து நடத்தி வருகிறது. மேலும், இக்கல்வி நிலையம் ஓராண்டு பகுதிநேர தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டயப் படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ.) ஒன்றினையும், தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப்படிப்பு (பி.எல்.எம்.) தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப்படிப்பு (எம்.எல்.எம்.), ஆகிய முழுநேர பட்டப்படிப்புகளையும் நடத்தி வருகிறது. இவ்விரு படிப்புகளும் சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்றவையாகும். மேலும், 2001-2002-ம் ஆண்டு முதல் இக்கல்வி நிலையம் பகுதிநேர மற்றும் முழுநேர பி.எச்.டி. ஆராய்ச்சி வகுப்புகள் நடத்தவும் சென்னை பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முனைவர் பட்டம் பெற இதுவரை 3 பேர் பகுதிநேர அடிப்படையிலும், 6 பேர் முழுநேர அடிப்படையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்கல்வி நிலையத்தால் நடத்தப்படும் நுழைவுத் தேர்வின் வாயிலாக 2002-ம் ஆண்டில், தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பில் 47 மாணவர்களும், தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப் படிப்பில் 31 மாணவர்களும், தொழிலாளர் நிர்வாக முதுகலை பட்டயப் படிப்பில் 43 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

7.2 இக்கல்வி நிலையம், 2002-ஆம் ஆண்டில் தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள வணிகர்கள் ஆகியோருக்காக 31 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகளை நடத்தியுள்ளது. இதன்மூலம் மொத்தம் 1,930 நபர்கள் இப்பயிற்சிகளில் பங்கேற்று பயனடைந்துள்ளனர்.

7.3 2002-ஆம் ஆண்டில் இக்கல்வி நிலையத்திலிருந்து பட்டப்படிப்பு/ பட்டயப்படிப்பு முடித்து வெளிவந்துள்ளவர்களின் விவரம் பின்வருமாறு:-

[2003 ஏப்ரல் 23

| வ. எண் | பயிற்சி | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப்படிப்பு | 47 |
| 2. | தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப்படிப்பு | 31 |
| 3. | தொழிலாளர் நிர்வாகம் முதுகலை பட்டயப்படிப்பு | 36 |
| | மொத்தம் | 114 |



2003 ஏப்ரல் 23]

# அத்தியாயம்-8

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை

### நிர்வாகம்

8.1 தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை, பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல் நலன், நல வசதிகளை உறுதி செய்தல் ஆகிய மாநில அரசின் முக்கியமான கொள்கைகளைச் செயல்படுத்துவதில் முக்கிய பங்கினை வகிக்கிறது. இத்துறை, தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர 13 தொழிலாளர் நலச் சட்டங்களை அமுல்படுத்துகிறது. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை நிர்வகித்து, அமுல்படுத்தும் இத்துறைக்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் தலைவர் ஆவார்.

8.2 இத்துறையின் முக்கிய செயல்பாடுகள் கீழ்க்கண்ட இரண்டு ஆகும்:—

1. முறைப்படுத்தும் செயல்பாடுகள் (சட்ட அமுலாக்கம்).

2. உடல்நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகள்.

### முறைப்படுத்தும் செயல்பாடுகள்

### தொழிற்சாலைகள் பதிவு செய்தல்

8.3 2002-ஆம் ஆண்டில் பல தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு, 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன. அதன் விளைவாக, பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு:-

[2003 ஏப்ரல் 23

| விவரங்கள் | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|
| தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்தத் தொழிற்சாலைகள் எண்ணிக்கை | 29,080 | 31,343 | 32,723 |
| தொழிற்சாலைகள் சட்டம் 1948-ன் கீழ் பயனடைந்த மொத்தத் தொழிலாளர்கள் | 11,86,448 | 12,23,060 | 12,37,653 |

31-12-2002 முடிய 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் விவரங்கள் மண்டல வாரியாக.

| வ. எண் | மண்டலம் | பதிவு பெற்ற தொழிற்சாலைகள் எண்ணிக்கை | தொழிலாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சென்னை | 10,169 | 5,14,450 |
| 2 | மதுரை | 11,527 | 4,00,227 |
| 3 | கோயம்புத்தூர் | 11,027 | 3,22,976 |
| | மொத்தம் | 32,723 | 12,37,653 |

**வருவாய்**

8.4 2002-ஆம் ஆண்டில் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் தொழிற்சாலைகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட கட்டண விவரங்கள்:-

| வ. எண். | 2002-ஆம் ஆண்டில் கட்டணம் வசூலிக்கப்பட்ட இனங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தொழிற்சாலைகள் உரிமக் கட்டணம் | 10,95,74,847 |
| 2 | உரிமக் கட்டணம் அல்லாதவை | 2,36,570 |
| 3 | அழுத்தக்கலன்கள் சோதனைக் கட்டணம் | 2,63,17,300 |
| 4 | மருத்துவ பரிசோதனைக் கட்டணம் | 29,55,780 |
| | மொத்தம் | 13,90,84,497 |



2003 ஏப்ரல் 23]

**ஆய்வுகள்**

8.5 தொழில் நுட்பம் நிறைந்த தொழிற்சாலைகள் சட்டம், 1948, பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல்நலம், நல வசதிகள் போன்றவற்றை உறுதி செய்கிறது. தொழிலாளர் நலச் சட்டங்களின் பயன்கள் தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்து பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களையும் முழுமையாகச் சென்றடையும் வண்ணம், அனைத்து முயற்சிகளும் துறை அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன், அபாய செயல்முறைகள் இல்லாத, சிறு தொழில் நிறுவன சான்று பெற்ற தொழிற்சாலைகள், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்படாத நிலையில், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. உடல்நலம், மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டி, அபாய செயல்முறைகள் அடங்கிய தொழிற்சாலைகள், சிறு தொழில் நிறுவன சான்று பெற்றிருந்தாலும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் உள்ள அபாயத்தைக் கருத்தில் கொண்டும், குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்துவதைக் கண்டறியவும், இத்தொழிற்சாலைகள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும், பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் நல வசதிகள் குறித்து, சீரான கண்காணிப்பு மேற்கொள்ள சிறப்பு ஆய்வுகள், விடுமுறை நாள் ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆய்வுகள் மூலம் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை மேற்கொள்ளும் திறம்பட்ட நடவடிக்கைகள் காரணமாக தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சுமுகமாக பணிச் சூழ்நிலை உறுதிப்படுத்தப்படுகின்றது.

8.6 2002-ஆம் ஆண்டில், தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் விவரம் பின்வருமாறு:-

| முறை ஆய்வுகள் | சோதனை ஆய்வுகள் | சிறப்பு ஆய்வுகள் | திடீர் ஆய்வுகள் | விடுமுறை ஆய்வுகள் | இரவுநேர ஆய்வுகள் |
|---|---|---|---|---|---|
| 26,274 | 1,118 | 4,721 | 124 | 434 | 167 |

[2003 ஏப்ரல் 23

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் மண்டலம் வாரியான ஆய்வுகளின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | மண்டலம் | முறை ஆய்வுகள் எண்ணிக்கை | சோதனை ஆய்வுகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சென்னை | 5,688 | 386 |
| 2 | மதுரை | 11,452 | 348 |
| 3 | கோயம்புத்தூர் | 9,134 | 384 |
| | மொத்தம் | 26,274 | 1,118 |

**குழு ஆய்வுகள்**

8.7. பட்டாசுத் தொழிற்சாலைகளில், தீபாவளிப் பண்டிகை காலத்தில் அதிக உற்பத்திச் செயல்பாடுகளின் காரணமாக வெடி விபத்துகள் நிகழ்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, இதுபோன்ற காலங்களில் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பான பணிநிலையையும், வேலை முறையையும் கண்காணித்து சீர்ப்படுத்துவதற்காக சிறப்புக்குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் "சிறப்புக் குழுக்கள்" அமைக்கப்பட்டு, தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்படுவதை முழுமையாக தடுக்கும் பொருட்டு, சிறப்புக் குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**விபத்துக்கள்**

8.8. இத்துறையின் ஆய்வாளர்கள், பாதுகாப்பு அளவீடு மற்றும் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் போன்ற பாதுகாப்பு மேம்பாட்டு பணிகளில் ஈடுபட்டு செயல்படுவதால், இந்த ஆண்டு தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பெருக்கத்தின் சதவீதத்துடன் ஒப்பிடுகையில், விபத்து சதவீத எண்ணிக்கை குறைந்தே உள்ளது. விபத்துகளின் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு:-



2003 ஏப்ரல் 23]

| வருடம் | மொத்தத் தொழிற்சாலைகள் எண்ணிக்கை | மொத்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கை | மரண விபத்து எண்ணிக்கை | மரணமற்ற விபத்து |
|---|---|---|---|---|
| 2001 | 31,343 | 12,23,060 | 37 | 2,140 |
| 2002 | 32,723 | 12,37,653 | 36 | 2,136 |

**வரைபடங்கள்**

8.9. தொழிற்சாலைகள் நிர்வாகத்தினரிடமிருந்து பெறப்படும் வரைபடங்கள் இத்துறையால் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டு வருகின்றன. 2002 ஆம் ஆண்டில், 2,697 தொழிற்சாலைகளுக்கு வரைபடங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**வழக்குகள்**

8.10. ஆய்வின்போது, கடுமையான முரண்பாடுகள் காணப்பட்டால் தொழிற்சாலை நிர்வாகத்தின் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. சுட்டிக்காட்டப்பட்ட முரண்பாடுகளுள் பெரும்பாலானவற்றை நிர்வாகத்தினர் சரிசெய்துவிட்டால் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. உரிமம் எடுக்காமை, உரிமம் புதுப்பிக்காமை, தொழிற்சாலை வரைபட ஒப்புதல் பெறப்படாமை, வருகைப் பதிவேடு பேணப்படாமை, நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதிய விகிதம் வழங்கப்படாமை, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விதிகள் அனுசரிக்காமை, பாதுகாப்பு விதிகளை கடைபிடிக்காமை காரணமாக ஏற்படும் மரண விபத்துகள் போன்ற கடுமையான முரண்பாடுகளுக்கு நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டு, கடும் முரண்பாடுகள் காணப்பட்ட நிர்வாகத்தினர் மீது, 1,969 வழக்குகள் தொடரப்பட்டு, ரூ.43,03,525/- நீதிமன்ற அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

8.11. பல்வேறு சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் விவரங்கள் பின்வருமாறு:—

[2003 ஏப்ரல் 23

| வ. எண் | தொழிலாளர் நலச் சட்டத்தின் பெயர் | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | விதிக்கப்பட்ட அபராதத் தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1. | தொழிற்சாலைகள் சட்டம், 1948. | 1,747 | 40,21,800 |
| 2. | ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப் படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970. | 29 | 9,750 |
| 3. | தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம், 1958 | 27 | 875 |
| 4. | ஊதியம் வழங்கும் சட்டம், 1936. | 31 | 8,500 |
| 5. | குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948. | 376 | 25,350 |
| 6. | தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுதி வழங்குதல்) சட்டம், 1981. | — | — |
| 7. | சிறு தொழில் நிறுவனங்கள் (ஆண்டறிக்கைகள் மற்றும் பதிவேடுகள் பராமரிப்பதில் விதிவிலக்கு) சட்டம், 1988. | 1 | — |
| 8. | *குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986. | 96 | 2,37,000 |
| 9. | தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம், 1972 | — | — |
| 10. | மகப்பேறு நலச் சட்டம், 1961. | — | — |
| 11. | சம ஊதியச் சட்டம், 1976. | — | — |
| | மொத்தம் | 1,969 | 43,03,525 |



2003 ஏப்ரல் 23]

*குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் பிரிவு 3-ன்படி சட்ட மீறல்களுக்கு குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் பிரிவு 14-ன்படி தண்டனை விதிக்கப்படலாம். தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 67-ன்படி சட்ட மீறல்களுக்கு குழந்தைத் தொழிலாளர் சட்டப் பிரிவு 14-ன்படி தண்டனை விதிக்கப்படலாம். தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 67-ன்படி, சட்டமீறல்களுக்கு தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 92-ன்படி தண்டனை விதிக்கப்படலாம்.

**புகார்**

8.12. தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, குறைபாடுகளுக்கு தீர்வு காண உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளரால் சென்னையிலும், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் மாவட்ட அலுவலகங்களிலும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் மாதாந்திரக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அக்கூட்டங்களில் எழுப்பப்படும் குறைபாடுகள் குறித்து தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**2002 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்ட புகார்களின் விவரம்**

2002 ஆம் ஆண்டு பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை 533.

2002 ஆம் ஆண்டு விசாரித்து முடிக்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை 533.

**1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டச் செயலாக்கம்**

8.13. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதிய நிலையினை பாதுகாக்கும் பொருட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படாத நேர்வுகளில் கோரிக்கை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதுடன், சட்ட விதிகளை பின்பற்றத் தவறிய நிர்வாகங்கள் மீது வழக்குகளும் தொடரப்பட்டன. 2002 ஆம் ஆண்டில், குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் 36 நீதிமன்ற வழக்குகளும், 15 கோரிக்கை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

[2003 ஏப்ரல் 23

**2002 ஆம் ஆண்டில் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு தீர்வு காணப்பட்ட கோரிக்கை மனுக்களின் விவரம் பின்வருமாறு:—**

1. தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கை மனுக்களின் எண்ணிக்கை 15
2. சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் எண்ணிக்கை 15
3. கோரிய தொகை ரூ.2,70,646/-
4. தீர்வு செய்யப்பட்ட கோரிக்கை மனுக்கள் எண்ணிக்கை 133
5. பயனடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 864
6. பட்டுவாடா செய்யப்பட்ட தொகை ரூ.3,85,000/-

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு பணிநிரந்தரத் தகுதி வழங்குதல்) சட்டம், 1981-ன்கீழ் ஆய்வு செய்தல்**

8.14 இச்சட்டம், 24 மாதங்களில் தொடர்ச்சியாக 480 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளருக்கு பணி நிரந்தரம் பெறுவதற்கான தகுதியை அளிக்கிறது. 2002 ஆம் ஆண்டில் இச்சட்ட செயலாக்க விவரம் பின்வருமாறு:—

| ஆய்வுகளின் எண்ணிக்கை | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | நிரந்தாம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 11,400 | 4,144 | 23,575 |

**இதரச் சட்டங்கள்**

8.15 மேற்குறிப்பிட்ட சட்டங்களைத் தவிர, பதிவு பெற்ற தொழிற்சாலைகளில், சம்பளப் பட்டுவாடாச் சட்டம், தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைச் சட்டம், தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம், பிழைப்பூதியச் சட்டம், ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (நிரந்தாத் தகுதி வழங்குதல்) சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் செயல்படுத்தப்படுகின்றன.



2003 ஏப்ரல் 23]

**ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழில்கள்**

8.16 1988 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட "பெரும் விபத்து மற்றும் பேரபாய தடுப்புக் குழு" அபாயம் விளைவிக்கக்கூடிய செயல்முறைகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் பேரபாயத்தை தடுக்கக் கூடிய செயல்முறைகளை உருவாக்குவதற்கு வழிகாட்டுவதுடன், அவை நிறைவேற்றப்படுவதற்கான தொடர் நடவடிக்கைகளும் இக்குழுவால் மேற்கொள்ளப்படுகின்றன.

8.17 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் அட்டவணை-1-ன்படி 29 செயல்முறைத் தொழில்கள் ஊறு விளைவிக்கும் செயல்முறை தொழில்களாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தொழில்களில் தனிக்கவனம் செலுத்தப்படாவிடில், இத்தொழில்களில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களால் தொழிலாளர் மற்றும் பொது மக்களின் உடல் நலத்திற்கும், சுற்றுச் சூழல் தூய்மைக்கும் பெரும் அளவில் பாதிப்பு ஏற்படும் அபாயநிலை உள்ளது. இத்தகைய தொழிற்சாலைகளில் தொழிலியல் பாதுகாப்பினை உறுதி செய்யும பொருட்டு, அவை அதிகப்படியான கவனத்துடன் ஆய்வு செய்யப்படுகின்றன. சில இரசாயனத் தொழிற்சாலைகளில், கட்டுப்படுத்த இயலாத அளவில் செயல்முறைகள் மேற்கொளளப்படுவதால், அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், அருகில் வசிக்கும் பொது மக்களுக்கும் அபாயத்தை விளைவிப்பதுடன், சுற்றுச்சூழலையும் பாதிக்கிறது. இத்தகைய தொழிற்சாலைகள் 'பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள்' என பகுக்கப்பட்டு, இவற்றின் செயல்முறைப் பாதுகாப்பு குறித்து ஆய்வகத் துறை தனிக் கவனம் செலுத்துகிறது. நமது மாநிலத்தில் இதுபோன்ற 113 தொழிற்சாலைகள் இனம் காணப்பட்டுள்ளன.

8.18 2002 ஆம் ஆண்டு வரை, பெரும் விபத்து மற்றும் பேரபாய தொழிற்சாலைகளிலிருந்து 113 உள்ளிருப்பு அவசரகால ஆயத்த நிலைத் திட்டங்கள் பெறப்பட்டு, அவற்றில் 81 திட்டங்கள் சில நிபந்தனைகளுக்குட்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான அவசரகால ஆயத்த நிலைத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்பாளர்களாகவும், தொழிற்சாலைகள் உள்ளிருப்பு அவசரகால ஆயத்த நிலைத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசாணை (நிலை) எண் 109, தொழிலாளர்

மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23-04-1998-ல் மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நெருக்கடி நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளில் ஏற்படக்கூடிய விபத்து மற்றும் பேரபாய அழிவுகளைத் தடுத்து, கட்டுப்படுத்துவதற்கான வழிவகைத் திட்டங்களை உருவாக்க அரசுக்கு இக்குழுக்கள் உதவுகின்றன. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் அலுவலர்கள் மாவட்ட அளவிலான நெருக்கடி நிலைக் குழுக்களில் உறுப்பினர் செயலாளர்களாகவும், மாநில அளவிலான நெருக்கடி நிலைக் குழுவிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உறுப்பினர் செயலாளராகவும் செயல்படுகின்றனர்.

8.19 அபாயநிலை அவசர காலகட்டத்தில் தேவைப்படும் ஏற்பாடுகள் குறித்து ஆவன செய்வதற்கு, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை அலுவலர்களின் மேற்பார்வையில் தொழிற்சாலைகளில் காலமுறை மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டு, ஆயத்த நிலைத் திட்டங்கள் சீர்படுத்தப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டில், இதுபோன்ற 72 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டன. மேலும், பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த, மேம்பட்ட கண்காணிப்பு கருதி, ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழிற்சாலைகளிலிருந்து பாதுகாப்பு அறிக்கைகள் கோரப்பட்டு தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

8.20 தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 41-அ-வில் குறிப்பிட்டுள்ளபடி அமைக்கப்பட்டுள்ள மனை மதிப்பீட்டுக் குழு, "பெரும் விபத்து மற்றும் பேரபாயம்" விளைவிக்கக்கூடிய செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்து, இத்தொழிற்சாலைகள் அமைப்பதற்கான மனைப் பொருத்தம் மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் குறித்து ஆராய்ந்து ஒப்புதல் வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது. 2002 ஆம் ஆண்டில் இது தொடர்பான மூன்று விண்ணப்பங்கள் மனை மதிப்பீட்டுக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டன. இந்தவகை ஒப்புதலில் அரசு விதிக்கும் நிபந்தனைகளைக் கடைபிடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் மேற்கொள்ளப்பட்டு, தொடக்க நிலையிலிருந்தே ஆலைப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது.





## குழந்தைத் தொழிலாளர் முறை நீக்குதல்

8.21 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் பல்வேறு சட்ட விதிமுறைகளுள் ஒன்றான பிரிவு 67-ன்படி, தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் பணிமுறையை நீக்குதல் தொடர்பாக இத்துறை மிகவும் சீரிய முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி, சட்ட விதிகளை கடைபிடிக்கத் தவறிய தொழிற்சாலை நிர்வாகங்கள் மீது, தொழிற்சாலை சட்டப் பிரிவு 92-ல் விதிக்கப்பட்ட தண்டனையை விட கடுமையானதாகக் கருதப்படும் குழந்தைத் தொழிலாளர் சட்டம் பிரிவு 14 மற்றும் 15-ன் கீழ் தண்டனை விதிக்கும் வகையில் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறாக, 2002 ஆம் ஆண்டு 96 வழக்குகள் தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 67-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ரூ.2,37,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கமான ஆய்வுகளைத் தவிர, கல்வி அறிவற்ற தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களில், பிரதி மாதமும் சிறப்பு ஆய்வுகள் நடத்தி, கேடு விளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணிக்கமர்த்துவதை தடுப்பதற்கு சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறாக சட்ட விதிகளை சீரிய முறையில் செயல்படுத்துவதால், பதிவு பெற்ற பட்டாசு தொழிற்சாலைகளிலும், தீப்பெட்டி தொழிற்சாலைகளிலும் குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதில்லை. மேலும், பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில், குழந்தைத் தொழிலாளர்கள் பணியில் இல்லை என்பதை ஆய்ந்தறிந்து சான்று வழங்கும் பொருட்டு, இரு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களுக்கு விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் தலைவராகவும், வேலையளிப்போர் பிரதிநிதிகள், பணியாளர்களின் பிரதிநிதிகள், மத்திய சுங்க இலாகா பிரதிநிதிகள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாகவும் உள்ளனர். சிவகாசி, தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் இக்குழுக்களின் உறுப்பினர் செயலாளர் / கூட்டுநர் ஆவார். சிவகாசியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளையும் இக்குழுக்கள் ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கும்.

8.22 இந்திய உச்ச நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தாவின்படி, தமிழ்நாட்டில் விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர் ஆகிய 4 மாவட்டங்களில், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளின்

தொழிலாளர்களுக்கு மட்டும் நல நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழு மாவட்ட நீதிபதியின் தலைமையில் செயல்படுகிறது. இந்த நலநிதிக் குழுவின் முக்கிய செயல்திட்டம், பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பொழுதுபோக்கு, மருத்துவ மற்றும் நல வசதிகள் அமைத்துத் தருவதே ஆகும். இத்திட்டம் அத்தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் குடும்பத்தினருக்கும் பயன்படும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது.

8.23 இந்த நலநிதிக் குழுவின் நோக்கம் நிறைவேற்றப்படுகிறதா, அதன் பயன்கள் பதிவு பெற்ற பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரை சென்றடைகின்றனவா என்பனவற்றை இத்துறை கவனத்துடன் கண்காணித்து வருகிறது. தூத்துக்குடி மாவட்ட நலநிதிக் குழு, தொழிலாளர்களைச் சார்ந்தோருக்கு தையல் வகுப்புகள் நடத்தி சான்றிதழ்கள் அளிப்பதுடன், பயிற்சியின் முடிவில் தையல் இயந்திரங்களும் வழங்குகின்றது.

8.24 மேலும், பொது மக்கள், தொழில்முனைவோர் மற்றும் பெற்றோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம், குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாக காணப்படும் சிவகாசி, திருப்பூர் மற்றும் தூத்துக்குடி போன்ற இடங்களில் மாவட்ட நிர்வாக ஒருங்கிணைப்புடன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**உடல்நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாடு, உடல்நல மேம்பாடு செயல்பாடுகள்**

8.25 இரசாயனத் தொழிற்சாலைகளில் கையாளப்படும் இரசாயனப் பொருட்களின் நச்சுத் தன்மையால் தொழிலாளர்களின் உடல் நலத்திற்கு ஏற்படும் பாதிப்பை கட்டுப்படுத்தவும், உடல் நலம் மற்றும் சுகாதார மேம்பாடு குறித்து கண்காணிக்கவும், சீர்படுத்தவும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் மருத்துவப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. மருத்துவ அலுவலர்கள், தொழிற்சாலைகளில் சுகாதார அளவீடுகள் மேற்கொண்டு, அதன்வழி தொழிலாளர்களின் உடல்நல மேம்பாடு குறித்து தக்க தடுப்பு நடவடிக்கைகளையும் அவர்தம் நல மேம்பாட்டு வழிவகைகளையும் தெரிவித்து வருகிறார்கள்.

8.26 இத்துறையில் இயங்கிவரும் தொழில் நலவியலகம், சுற்றுச் சூழல் மற்றும் சுகாதார சீர்கேடு விளைவிக்கும் தன்மையுள்ள





அமோனியா, குளோரின் சல்பர்-டை-ஆக்ஸைட், ஹைட்ரஜன் சல்பைடு போன்ற இரசாயனப் பொருட்களால் தொழிலாளர்களின் உடல் நலம் பாதிக்கப்படுவதை கண்காணிக்கிறது. இரசாயனப் பொருட்களினால் ஏற்படக் கூடிய உடல் நலம் மற்றும் சுகாதாரக் கேடுகளை. காற்றுச் சோதனை மற்றும் அளவீட்டின் வழி கண்டறிந்து, தேவையான தீர்வு ஆலோசனைகள் இந்த ஆய்வகத் துறையால் வழங்கப்படுகின்றன. ஒலி, தூசி மற்றும் காற்றோட்டம் போன்ற பௌதீக காரணிகளால் உண்டாகக் கூடிய விளைவுகள் குறித்தும் இந்தத் தொழில் நலவியல் ஆய்வகம் ஆய்வு மேற்கொள்கிறது.

8.27 தொழிற்சாலைகளில் ஏற்படும் அதிகப்படியான இரைச்சல் காரணமாக அதில் பணிபுரியும் தொழிலாளர்களது காதுகள் செவிடாகும் வாய்ப்பு ஏற்படுவதுடன், அவர்களின் மனநிலை பாதிக்கப்படுவதும் பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள இத்துறை சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தொழிற்சாலைகளின் பல்வேறு இயந்திரங்களில் ஏற்படும் சப்தத்தினை அளவீடு செய்ய, தொழிற்சாலைகள் ஆய்வாளர்களுக்கு ஒலி அளப்பான் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதிக இரைச்சலால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற தொழிற்சாலைகளில் இத்துறை ஆய்வாளர்கள் அந்த சப்தத்தினை இந்த அளவீட்டுக் கருவிமூலம் கண்காணித்து, தொழிலாளர்களை அந்த இரைச்சலிலிருந்து பாதுகாக்க வழிமுறைகள் தெரிவித்து வருகின்றனர்.

**சோதனை மற்றும் பாதுகாப்புப் பணிகள்**

**அழுத்தக்கலன் சோதனை**

8.28 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின்படி, தொழிற்சாலைகளில் கையாளப்படும் ஒவ்வொரு அழுத்தக் கலனும் இத்துறையின் சோதனை மற்றும் பாதுகாப்பு அலுவலர்களால், நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் சோதிக்கப்பட்டு, சான்றிதழ் பெறப்பட்ட பின்னரே பயன்படுத்தப்பட வேண்டும். தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் 10 சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களும் இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும், அதிக அழுத்தத்தில் இயங்கும் அழுத்தக் கலன்களின் இயக்கப் பாதுகாப்பை உறுதி செய்வதே சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களின் முதன்நிலை பணியாக வகுக்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 23

**2002 ஆம் ஆண்டு சோதனை செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்ட அழுத்தக் கலன்களின் விவரம் பின்வருமாறு:—**

| | | |
|---|---|---|
| 1. வெளிப்புறச் சோதனை | : | 58,135 |
| 2. உட்புறச் சோதனை | : | 781 |
| 3. நீரழுத்தச் சோதனை | : | 9,313 |
| 4. அதிர்வு ஒலி ஆய்வு சோதனை | : | 2,597 |

2002 ஆம் ஆண்டு, அழுத்தக்கலன்கள் சோதனைக் கட்டணமாக ரூ.2,63,17,300/- வசூலிக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் மற்றும் பாதுகாப்பு அளவீடுகள்

8.29 தொழிற்சாலையில் தொழிலாளர் மற்றும் நிர்வாக பிரதிநிதிகளுக்கு, பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தும் பொறுப்பும் இக்கோட்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. விபத்துகள் அதிகம் ஏற்படும் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் செயல் நிறைவேற்றங்கள் குறித்த காலமுறை பாதுகாப்பு அளவீடுகள் இக்கோட்டங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 2002 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை | : | 261 |
| பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளினால் பயனடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை | : | 7,757 |
| 2002 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பாதுகாப்பு அளவீடுகளின் எண்ணிக்கை | : | 28 |

### மருத்துவ அலுவலர்கள் (தொழிற்சாலைகள்)

8.30 இக்கோட்டங்களின் 8 உதவி மருத்துவ அலுவலர்கள் அபாய செயல்முறை உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய உடல் நலப பாதுகாப்பு குறித்து கண்காணிப்பு மேற்கொள்கின்றனர். சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள மருத்துவ அலுவலர்கள் (தொழிற்சாலைகள்) 2002 ஆம் ஆண்டில் 2,839 தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு கீழ்க்கண்ட விபரங்களின்படி சான்றிதழ்கள் வழங்கியுள்ளார்கள்.



2003 ஏப்ரல் 23]

| | | |
|---|---|---|
| அ. | அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட மருத்துவச் சோதனை சான்றிதழ்கள் | 20,670 |
| ஆ | வளர் இளம் பருவத்தினருக்கு வழங்கப்பட்ட உடல் தகுதி சான்றிதழ்கள் | 17,763 |
| இ. | சிற்றுண்டி விடுதி தொழிலாளர்களுக்கு செய்யப்பட்ட மருத்துவச் சோதனைச் சான்றிதழ்கள் | 3,532 |

மேலே கூறப்பட்ட சோதனைகளுக்காக 2002 ஆம் ஆண்டில் மருத்துவ சோதனைக் கட்டணமாக ரூ.29,55,780/- வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் உடல்நலம் குறித்து இத்துறை மருத்துவ அலுவலர்களால் தொழில் சுகாதார அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டில், 25 தொழிற்சாலைகளில் 25 தொழில் சுகாதார அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. நச்சுத்தன்மை வாய்ந்த பொருட்களைக் கையாளும் தொழிற்சாலைகளில், முறையான காற்றுச் சோதனை மேற்கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பினையும் தொழிலாளர் உடல் நலத்தினையும் மேம்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் தொழில் நலவியல் ஆய்வகம் வழங்குகிறது.

### மாநில பாதுகாப்பு விருதுகள்

8.31 தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிர்வாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு ஆண்டுதோறும், பாதுகாப்பு விருதுகள் வழங்கி வருகிறது. தொழிற்சாலைகள் செயல்பட்ட மனித நேரங்கள் அடிப்படையில், அவை 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முந்தைய ஆண்டினை ஒப்பிடுகையில் விருது வழங்கும் ஆண்டில் மேற்கொண்ட சீரிய முயற்சிகள் விளைவாக ஏற்பட்ட, பணிபுரிந்த மனித நேரங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்ட விபத்து நிகழ்வு எண்ணிக்கை விகிதம் குறைவு, நடப்பு ஆண்டில் ஏறபட்ட குறைவான விபத்து நிகழ்வு எண்ணிக்கை, மிக அதிகமாக விபத்து நிகழா மனித நேரங்கள் போன்ற காரணிகளின் அளவீடுகளை சீர்தூக்கி, இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், முதல் பரிசாக ரூ.2,500/- மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கும், இரண்டாம் பரிசாக ரூ.1,500/- மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

8.32 மேலும், விபத்து தடுப்பு நடவடிக்கையில் முக்கியப் பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசின் "உயர்ந்த உழைப்பாளர்" விருது வழங்கப்படுகிறது. தொழிற்சாலையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றைப் பற்றி பயன்மிக்க கருத்துகள் தரும் தொழிலாளர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

**தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்**

8.33 தமிழ்நாட்டில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு விபத்து காரணமாக பார்வை, கை, கால் இழப்பு அல்லது இறப்பு நேரிட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதிப் பயன், தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு மட்டுமின்றி, 24 மணிநேர அடிப்படையில் மற்ற விபத்து நேர்வுகளுக்கும் அளிக்கப்படும். 2002 ஆம் ஆண்டில், தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 1,09,633 தொழிலாளர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ், இறப்பு நேரிட்டால் காப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/- வழங்கப்படும். 2002 ஆம் ஆண்டில் ரூ.16,50,000/- ஈட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

**மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு மற்றும் மாநில அளவிலான உழைப்புப் படை / வல்லுநர் குழு**

8.34 1988 ஆம் ஆண்டு முதல், மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு மற்றும் மாநில அளவிலான உழைப்புப் படை / வல்லுநர் குழு ஆகிய இரண்டு குழுக்கள் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் தரத்தில் உறுப்பினர் செயலாளரைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

8.35 மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரசுத் துறைகளின் பிரதிநிதிகள், அபாயகரமான தொழிற்சாலை நிர்வாகங்களின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள்,



தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள், இரசாயன பொறியியல் வல்லுநர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் / உறுப்பினர் செயலாளர் அவர்களை உறுப்பினர் செயலாளராகவும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இக்குழு, 30-6-2003 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

8.36 மாநில அளவிலான உழைப்புப் படை / வல்லுநர் குழு அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அவர்களைத் தலைவராகவும், அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த பிரதிநிதிகள், தொழில் நிறுவன கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற்சாலைப் பாதுகாப்பு வல்லுநர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் / உறுப்பினர் செயலாளர் அவர்களை உறுப்பினர் செயலாளராகவும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இக்குழு, 30-06-2003 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

8.37 மேலும், மாநில அளவிலான பாதுகாப்பு தணிக்கைக் குழு, பெரும் விபத்து இடர்தரும் தொழிற்சாலைகளிலிருந்து பெறப்பட்ட 22 பாதுகாப்பு அறிக்கைகளை கூர்ந்தாய்வு செய்து தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

8.38 அனல் மின் நிலையங்களுக்காக அமைக்கப்பட்ட துணைக் குழு பல்வேறு அனல் மின் நிலையங்களுக்குச் சென்று, பாதுகாப்பு, உடற் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வுகளை நடத்தி, இதற்கான அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

8.39 பெரும் விபத்து இடர்தரு தொழிற்சாலைகளில் துரித அளவீடு மேற்கொள்வதற்கான துணைக் குழு, நூற்பாலைகளுக்கான துணைக் குழு மற்றும் சிமெண்ட் தொழிற்சாலைகளில் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து ஆய்வு நடத்துவதற்கான துணைக் குழு ஆகிய மூன்று குழுக்கள் அரசால் அமைக்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பயிற்சி**

**பாதுகாப்புப் பயிற்சிப் பணிகள்**

8.40 தொழிலகங்களில் விபத்துக்களின் நிகழ்வுகளைத் தடுத்திட, சட்டச் செயலாக்க பணிகளுடன் பயிற்சிப் பணிகளை மேற்கொள்வதும்

[2003 ஏப்ரல் 23

இன்றியமையாததாகிறது. விபத்துக்களைத் தடுத்திட, தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் பாதுகாப்பு பற்றிய சரியானதொரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இத்தகைய பயிற்சிகளை இத்துறையின் சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்கள் ஏற்று செயல்படுத்தி வருகின்றன.

8.41 தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்புப் பயிற்சி அளிக்கவும், பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தொழிற்சாலை வளாகத்திலேயே, கட்டணம் ஏதுமின்றி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தமிழில் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புகள் தொழிலாளர்களாலும், நிர்வாகத்தினராலும் பெரிதும் வரவேற்கப்பட்டு, தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினரிடையே பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை மேம்படுத்தி அதன்மூலம் விபத்துக்களைக் குறைப்பதற்கு துணை புரிந்துள்ளன. 2002 ஆம் ஆண்டில், 261 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 7,757 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். சிவகாசியில் இதுபோன்று பயிற்சி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. 2002 ஆம் ஆண்டில் இப்பயிற்சி மையத்தினால் நடத்தப்பட்ட 17 பயிற்சி வகுப்புகள் மூலம் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளைச் சார்ந்த 1,929 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**கருத்தரங்குகள்**

8.42 தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை, தொழிலக பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய பாதுகாப்புக் குழுமம் போன்ற அரசு சாரா தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து, தொழிற்சாலை நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் பாதுகாப்பு விழிப்புணர்வு பெறும் வண்ணம் கருத்தரங்குகள் நடத்தி வருகின்றது.

**மாநில அளவிலான உற்பத்தித் திறன் பிரிவு**

8.43 மாநில அளவிலான உற்பத்தித் திறன் பிரிவின் மூன்று முக்கிய செயல்பாடுகளாவன:-

1) வேலை அளிப்பவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்குத் தக்க பயிற்சியும், ஆலோசனையும் தந்து இவர்களுக்கிடையே சுமுகமான, இயல்பான சூழ்நிலையை உருவாக்கி அதன்



2003 ஏப்ரல் 23]

அடிப்படையில் உற்பத்தித் திறன் பற்றிய இவர்களுடைய மாறுபட்ட சிந்தனைகளுக்கு இடையே ஏற்படும் பெரிய இடைவெளியைக் குறைத்தல்.

2) வேறுபட்ட சிந்தனை தாக்கங்களைக் கொண்ட உற்பத்தியின் இரண்டு முக்கிய கோட்பாடுகளான பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவை ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல என்பதையும் மாறாக அவை ஒன்றை ஒன்று சார்ந்திருப்பவை என்பதையும் வலியுறுத்தி ஒருங்கிணைப்பது.

3) அரசு, நிர்வாகங்கள், தொழிலாளர்கள் மற்றும் உற்பத்தித் திறன் குறித்து இயங்கும் இயக்கங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து இந்த நடவடிக்கையை ஒவ்வொரு வருடமும் விரிவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

8.44 மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை சிறப்பான முறையில் ஆற்றுவதற்கு, மாநில அளவிலான உற்பத்தித்திறன் குழு, அரசாணை எண் 1866, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 04-09-85-ல் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்துத் தொழிற்சாலைகளிலும் உற்பத்தித் திறன் குறித்த பயிற்சி வகுப்பு நடத்த போதுமான வசதிகள் இல்லாதிருந்த போதிலும், இக்குழு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

| ஆண்டு | நடத்தப்பட்ட உற்பத்தித் திறன் வகுப்புகளின் எண்ணிக்கை | பயனடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2000 | 24 | 767 |
| 2001 | 31 | 871 |
| 2002 | 32 | 1,008 |

**மேம்பாட்டுப் பணிகள்**

**நவீனமயமாக்குதல்**

8.45 பன்னாட்டு நிறுவனங்களின் அந்நிய முதலீடு மற்றும் நவீன தொழில்நுட்பங்களுடன் பல்வேறு தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் தொடங்கப்படுகின்றன. இச்சூழ்நிலையில், ஆலைப் பாதுகாப்பும், தொழிலாளர் பாதுகாப்பும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியுள்ளது. இத்துறையில் பணியாற்றும் பொறியியல் கல்வித் தகுதி பெற்றுள்ள அலுவலர்கள் தற்கால தொழில்நுட்ப மேம்பாட்டுக்கேற்ப தங்களுடைய தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இக்குறிக்கோள்களுடன் இத்துறையின் செயல்பாடுகள் கணினி, தகவல் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் பயிற்சி முறைகள் மூலம் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், நிர்வாகம், தொழில் நுட்பத் திறமை, பயிற்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, தொலைநோக்குப் பார்வையுடன் நவீன செயல்பாடுகள் குறித்த எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

**எதிர்காலத் திட்டங்கள்**

8.46 மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட "கட்டிட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணிவரன்முறைப்படுத்துதல்) மற்றும் (பணி நிலைமைகள்) சட்டம்" 1996-ன் கீழ் மாநில விதிகள் இயற்றிட நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. இவ்விதிகள் அறிவிக்கை செய்யப் பெற்ற பின்னர் இவ்விதிகளின்கீழ் கட்டட மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடற் சுகாதாரம் மற்றும் இதர நலன்களை உறுதி செய்திட அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**குறிப்பிடத்தக்க சாதனைகள்**

8.47 ஆய்வகத் துறையின் அனைத்துப் பணிகளிலும் பாராட்டத்தக்க வகையில் வளர்ச்சியை இத்துறையின் செயலாக்க அறிக்கையில் காண முடிகிறது. 2001 ஆம் ஆண்டில், 12,23,060 தொழிலாளர்களுடன், 31,343 ஆக இருந்த பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, 2002 ஆம் ஆண்டில், 12,37,653 தொழிலாளர்களுடன், 32,723 ஆக அதிகரித்துள்ளது. அதிக அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2002 ஆம் ஆண்டில் 26,274 முறையான ஆய்வுகளும், 124 திடீர் ஆய்வுகளும், 1,118 சோதனை ஆய்வுகளும், 5,322 சிறப்பு, விடுமுறை மற்றும் இரவு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



# அத்தியாயம் — 9

## வேலைவாய்ப்புப் பணிகள்

**வேலைவாய்ப்பகங்களின் பணிகள்**

9.1 வேலைநாடுநர்களைப் பதிவு செய்தல், அறிவிக்கப்படும் பணிக்காலியிடங்களுக்கு அவர்களைப் பரிந்துரைத்தல், வேலை வாய்ப்பற்றோருக்கும், மாணவர்களுக்கும் தொழில்முறை வழிகாட்டிப் பணிகள் ஆற்றுதல், வேலைவாய்ப்புகள் மற்றும் வேலைவாய்ப்பற்றோர் பற்றிய காலமுறைப் புள்ளிவிவரங்களைச் சேகரித்து அறிக்கைகள் தயார் செய்தல் போன்றவை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் வேலைவாய்ப்புப் பிரிவின் முக்கியப் பணிகளாகும்.

**வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக அமைப்பு**

9.2 வேலைவாய்ப்புப் பிரிவில், ஆணையருக்கு உதவியாக இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), இணை இயக்குநர் (வேலைவாய்ப்புத் திட்டங்கள்) மற்றும் இணை இயக்குநர் (தொழில் ஆராய்வு) ஆகிய மூன்று இணை இயக்குநர்கள் உள்ளனர். வருவாய் மாவட்ட அளவில் ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வீதம் தமிழ்நாட்டில் 29 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உள்ளன. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களைத் தவிர, 15 சிறப்பு அலுவலகங்கள் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்காக நான்கு மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.

**2002 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்புப் பணிகளின் செயல்பாடுகள்**
**பதிவு மற்றும் பரிந்துரைப் பணிகள்**

9.3. 31-12-2002 நிலவரப்படி, வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் 50.57 இலட்சம் மனுதாரர்களில் 17.20 இலட்சம் பெண்கள். 2002 ஆம் ஆண்டில், 10,303 மனுதாரர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

**வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாயக் காலியிட அறிவிக்கை) சட்டம் 1959-ஐ அமல்படுத்துதல்**

9.4 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாயக் காலியிட அறிவிக்கை) சட்டம் 1959-ன் கீழ், வேலையளிப்போரிடமிருந்து வேலை நிலவரத்

தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. 31-3-2001 மற்றும் 31-3-2002-ல் இயங்கி வந்த பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் அந்நிறுவனங்களில் பணியாற்றிய மொத்த பணியாளர்களின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | இனம் | 31-3-2001 உடன் முடிவுற்ற ஆண்டு | | 31-3-2002 உடன் முடிவுற்ற ஆண்டு | |
|---|---|---|---|---|---|
| | | பொதுத் துறை | தனியார் துறை | பொதுத் துறை | தனியார் துறை |
| 1. | புள்ளி விவரங்கள் பெற தொடர்பு கொள்ளப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 12,116 | 13,009 | 12,242 | 13,258 |
| 2. | புள்ளி விவரங்கள் பெறப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 12,101 | 12,075 | 12,214 | 12,460 |
| 3. | மொத்த வேலை வாய்ப்பு (நபர்கள்) | 15,86,290 | 9,19,484 | 16,12,297 | 9,04,061 |

### மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு அளிக்கப்படும் தொழில்முறை வழிகாட்டுதல் பணிகள்

9.5 தமிழ்நாட்டில் மொத்தம் 18 தொழில்நெறி வழிகாட்டும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 2002 ஆம் ஆண்டில் 641 மனுதாரர்கள் பயிற்சிப் பணியில் அமர்த்தப்பட்டனர். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களால, 1373 தொழில் முறை வழிகாட்டி சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. 27 தொழில்நெறி கண்காட்சிகள் நடத்தப்பட்டன.



### ஆதிதிராவிடர் இனத்தோர்க்கு தமிழ்நாடு தொழிற் கல்விகள் நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி

9.6 2002 ஆம் ஆண்டில், ரூ.6.72 இலட்சம் செலவில 1150 இந்து ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்கு தமிழ்நாடு தொழிற்கல்விகள் நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி அளிக்கப்பட்டது. 251 மனுதாரர்கள் தேர்ச்சி பெற்றனர்.

### சுய வேலைவாய்ப்பு

9.7 01-01-2002 முதல் 31-12-2002 வரை, பல்வேறு நிறுவனங்களின் மூலமாக சுய வேலைவாய்ப்புக்காக 736 மனுதாரர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து ரூ.374 இலட்சம் கடன் உதவி பெற்றுத்தர வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உதவி செய்தன.

### உடல் ஊனமுற்றோருக்கான பணியமர்த்தல்/புனர்வாழ்வு

9.8 சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் 13 மாவட்டங்களில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகள், உடல் ஊனமுற்றோருக்கு பணியமர்த்துதல் மற்றும் புனர்வாழ்வு அளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டன. 31-12-2002 நிலவரப்படி, 7,460 விழியிழந்தோர், 5,866 செவிப்புலன் இழந்தோர் மற்றும் 57,973 உடல் உறுப்பு குன்றியோர், ஆக மொத்தம் 71,299 உடல் ஊனமுற்றோர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டுள்ளனர். 2002 ஆம் ஆண்டில், 896 உடல் ஊனமுற்றோர் பணியமர்த்தப்பட்டனர்.

### கிராமப்புறப் பள்ளிகளைத் தத்தெடுத்து தொழில்நெறி வழிகாட்டிப் பணியினை அப்பள்ளிகளில் தீவிரமாக செயல்படுத்துதல்

9.9 இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில், 23 பள்ளிகள் தத்தெடுக்கப்பட்டு, அப்பள்ளிகளில் தீவிர தொழில்முறை வழிகாட்டிப பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

### விழி இழந்தோருக்கான வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்குதல்

9.10 2002-2003 ஆம் ஆண்டில், ரூ.27.23 இலட்சம் விழி இழந்த மனுதாரர்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டது.

[2003 ஏப்ரல் 23

**பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டங்கள்**

**சிறப்பு தொழில்முறை வழிகாட்டும் மையங்கள்**

9.11 உதகமண்டலம், சங்கராபுரம், திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய 4 இடங்களிலும் பழங்குடியினருக்கான சிறப்பு வழிகாட்டி மையங்கள் இயங்கி வருகின்றன. பழங்குடியினரின் உறைவிடங்களுக்குச் சென்று பதிவு செய்தல், உயர் கல்வி, பயிற்சிகள் மற்றும் கல்வி உதவித்தொகை பற்றிய விவரங்களை அளித்தல் ஆகியவை இம்மையங்கள் ஆற்றி வரும் முக்கியப் பணிகளாகும்.

**சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள்**

9.12 தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் கடலூர் ஆகிய 5 இடங்களில் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மனுதாரர்களுக்கு உயர் கல்வி மற்றும் பயிற்சிகள் பற்றிய விவரங்களை அளித்தல், போட்டித் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்துதல் போன்றவை இம்மையங்களின் முக்கியப் பணிகளாகும்.

**வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகளைக் கணினிமயமாக்குதல்**

9.13 1986 ஆம் ஆண்டு முதல் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே 29 வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள் கணினி மயமாக்கப்பட்டு விட்டன.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்புப் பிரிவிலிருந்து பெறப்படும் மனுக்கள் மீதான நடவடிக்கை**

9.14 2002 ஆம் ஆண்டில் (31-12-2002 முடிய) மாண்புமிகு முதலமைச்சர் சிறப்புப் பிரிவிலிருந்து பெறப்பட்ட 14,616 மனுக்களுள், 10,541 மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



2003 ஏப்ரல் 23]

**மாவட்டங்களில் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் அமைத்தல்**

9.15 24 மாவட்டத் தலைநகரங்களில் செயல்பட்டு வந்த தன்னார்வப பயிலும் வட்டங்கள் 2001 அக்டோபர் மாதத்தில் ஐந்து மாநகராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டன. பின்னர், 2002 ஜூன் மாதத்தில், ஆறு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டன. 31-12-2002 வரை, 9,492 மனுதாரர்கள் தன்னார்வப் பயிலும் வட்டங்களில் உறுப்பினர்களாகியுள்ளனர். 2002-2003 ஆம் நிதி ஆண்டில் ரூ.18.48 இலட்சம் செலவு செய்யப்பட்டது. இதுவரை, 376 மனுதாரர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**தனியார் துறையில் பணியமர்த்தம்**

9.16 பொதுத் துறை நிறுவனங்களில் பணியமர்த்தல் குறைந்து வரும் நிலையில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள மனுதாரர்களுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பினை பெற்றுத் தரும் பணியினை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மேற்கொண்டுள்ளன. வேலைதேடுபவர்களையும், வேலையளிப்பவர்களையும் வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்திலேயே சந்திக்கச் செய்து, பணியமர்த்தம் செய்யப்பட்டு வருகிறது. 31-12-2002 வரையில், 3,214 மனுதாரர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டனர்.

**தனியார் துறையில் பணியமர்த்தலை ஊக்குவிக்க இணையதளம் அமைத்தல்**

9.17 தனியார் துறையில் பணியமர்த்தலை ஊக்குவிக்க ஏதுவாக, உயர் கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ள மனுதாரர்களின் விவரங்களை ரூ.7.88 இலட்சம் மதிப்பீட்டில் அமைந்த இணையதளத்தில் அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இணையதளம் விரைவில் செயல்பட உள்ளது.

# அத்தியாயம்-10

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

10.1 அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது 30-11-1978 அன்று பதிவு செய்யப்பட்டது. இது முற்றிலும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானதாகும். இந்நிறுவனத்தின் தலையாய நோக்கம், வேலை தேடும் இந்திய தொழிலாளர்கள் அயல்நாடுகளில் தகுந்த பணியமர்த்தல்களைப் பெற உதவி புரிவதாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும்; வழங்கப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சம் ஆகும்.

10.2 இலாபம் ஈட்டும் நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும். 31-3-2002 இல் உள்ளபடி இதன் மொத்த இலாபம் ரூ.14.84 இலட்சமாகும்.

10.3 இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் 31-1-2003 வரை, 5735 பதிவுதாரர்களுக்கு அயல்நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத் தந்துள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் பயன் பெற்றோர்களில் பெரும்பாலோர் முழுத் திறன் அல்லது ஓரளவு திறன் படைத்த பணியாளர்களும் மற்றும் மருத்துவத் துறையைச் சார்ந்தோர்களும் ஆவர். சவுதி அரேபியாவின் சுகாதார அமைச்சகம் தமது துறைக்குத் தேவையான மருத்துவர்களையும், மருத்துவத் தொழில்நுட்பப் பணியாளர்களையும் தேர்வு செய்வதற்கு சார்ந்திருக்கும் நிறுவனங்களில் இந்நிறுவனமும் ஒன்றாகும்.

10.4 தன் செயல்பாடுகளைப் பலமுனைப்படுத்தும் நோக்கில், இந்நிறுவனம் பின்வருவனவற்றையும் செய்து வருகிறது:—

1. சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலரின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் மனுதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பாஸ்போர்ட் தொடர்பான பணிகளை அளிப்பது.

2. வெளிநாடுகளில் உள்ள வேலையளிப்போரால் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கும், தம் சொந்த முயற்சியால் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெறும் மனுதாரர்களுக்கும் விசா பெற்றுத்தருவது தொடர்பான பணியைச் செய்து தருவது.



3. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமானப் பயணச் சீட்டுகளை விற்பனை செய்வது இந்நிறுவனம், முழுமை பெற்ற ஒரு பயணப் பிரிவைக் கொண்டுள்ளது. பன்னாட்டு விமான போக்குவரத்துக் கழகம் என்ற அமைப்பின் அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்நிறுவனம், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமானப் பயணச் சீட்டுகளையும் கையிருப்பு வைத்துள்ளது. மேலும், இந்தியன் ஏர்லைன்ஸ் மற்றும் அயல்நாட்டு விமானச் சீட்டுகளை கணினி மூலம் முன்பதிவு செய்யும் வசதிகளைப் பெற்றுள்ளது. இந்நிறுவனம் 31-3-2001-ம் நிதியாண்டில் ஈட்டிய வருவாய் ரூ.2.62 இலட்சம் ஆகும். 31-3-2002-ம் நிதியாண்டில் ஈட்டிய வருவாய் ரூ.3.55 இலட்சம் ஆகும்.

10.5 இந்நிறுவனம் அயல்நாட்டில் வாழும் தமிழருக்கான சமூக பாதுகாப்புத் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே செலுத்தவேண்டிய எளிய பிரிமிய தொகையின் மூலம் 5 ஆண்டுகளுக்கு தொடர்ச்சியான பாதுகாப்பு பெற இத்திட்டம் வகை செய்கிறது.

10.6 இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 13-5-2002 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 31-1-2003 அன்று வரை 100 காப்புறுதி பத்திரங்களை அளித்து, ரூ.4.20 இலட்சம் பிரிமியமாகப் பெற்றது. இந்நிறுவனம், இத்திட்டத்தின்கீழ் 31-1-2003 நிலவரப்படி வரிவிதிப்பிற்கு முன்னர் ரூ.1.10 இலட்சம் வருமானம் ஈட்டி உள்ளது.

10.7 இந்நிறுவனம் 31-3-2002 நிதியாண்டு முடிய ரூபாய் 1.08 இலட்சம் நிகர வருமானமாகப் பெற்று தமிழக அரசுக்கு 7 விழுக்காடு இலாபப் பங்கு அளித்துள்ளது. கடந்த ஆண்டு அளிக்கப்பட்ட இலாபப் பங்கு 2 விழுக்காடு ஆகும். இந்நிறுவனம், ரூ.3.62 இலட்சம் கடனாக மாற்றி அமைக்கப்பட்ட பங்குத் தொகைக்கு வட்டியாக அரசுக்கு அளித்து, அதன்மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகையையும் செலுத்தி, அரசு கணக்கை நேர் செய்து உள்ளது.

[2003 ஏப்ரல் 23

## அத்தியாயம்-11

## தொழில்நுட்பப் பயிற்சி

### கைவினைஞர் பயிற்சித் திட்டம்

*11.1* தொழில் நிறுவனங்களின் சிறப்பான செயல்பாட்டிற்குத் திறமையான மனித ஆற்றல் தேவைப்படுகிறது. உள்நாடு மற்றும் வெளிநாட்டு தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப முறையான தொழிற் பயிற்சியின் மூலம் பல்வேறு தொழிற் பிரிவுகளில் திறமை வாய்ந்த செயல்திறன்மிக்க பயிற்சியாளர்களை உருவாக்க, கைவினைஞர் பயிற்சித் திட்டம் இத்துறையால் செயல்படுத்தப்படுகிறது. தொழிலகத்தின் உற்பத்தித் திறனுக்கேற்ப இப்பயிற்சி தொழிலக உற்பத்தியின் அளவையும், தரத்தையும் உறுதி செய்கிறது. பயிற்சி பெற்ற இளைஞர்கள் உலக அளவில் வேலைவாய்ப்பினைப் பெருக்கிக்கொள்ளும் அளவிற்கு இத்திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. தொழிற் பயிற்சி நிலையங்களால் உருவாக்கப்படும் கைவினைஞர்கள் தொழிலகங்களின் முதுகெலும்பாகத் திகழ்கின்றனர். தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக உள்ள 53 தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் தற்கால மற்றும் எதிர்கால தேவைக்கேற்ற கைவினைஞர்களை இம்மாநிலம் உருவாக்கி வருகிறது. இம்மாநிலத்தின் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சி குறிப்பாக சிறப்புரிமை இல்லாத ஏழ்மை மற்றும் நலிவடைந்த நிலையில் உள்ள பள்ளிக் கல்வி பயின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெருக்கிக் கொள்ளும் தொழில் திறனை அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

*11.2* கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் ஆரம்ப மற்றும் நீண்ட கால குறிக்கோள்கள் கீழ்வருமாறு:—

1. பள்ளிக் கல்வி பயின்ற ஏழை, எளிய இளைஞர்கள் வேலைவாய்ப்புகள் பெற்று பயனடையும் வகையில் தொழிற் பயிற்சி அளித்தல்.

2. செயல்திறன் முன்னேற்றப் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான உள்ளமைப்புகளை உருவாக்குதல்.

3. தொழிலகங்களின் தேவைக்கேற்ப பல்வேறு தொழிற் பிரிவுகளில் திறன் பெற்ற பணியாளர்களை உருவாக்குதல.



2003 ஏப்ரல் 23]

4. ஊரக இளைஞர்கள் தொழில்நுட்பத் திறன் பெறவும், வேலைவாய்ப்புப் பெறவும் ஊரகப் பகுதிகளில் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைப்பதை ஊக்குவித்தல்.

5. தொழிலகங்கள் மற்றும் பயிற்சியாளர்கள் ஒருவருக்கொருவர் பயன் கருதி, பணிமனைகளில் தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவத்தினைப் பரிமாற்றம் செய்ய தொழிலகங்களுடன் நெருங்கிய தொடர்பினை தோற்றுவித்தல்.

6. தொழிற் பயிற்சி பெறாத நபர்களின் திறமையினை மேம்படுத்த, கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் செயல்படுத்தப்படாத தொழிற் பிரிவுகளில் அடிப்படை பயிற்சி அளித்தல்.

7. தொழிற் துறையின் முன்னேற்றத்தில் மகளிர் பங்கேற்பினை அதிகரிக்கச் செய்தல்.

### அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள்

*11.3.* தமிழ்நாட்டில் 53 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்களில், 37 பொறியியல் தொழிற் பிரிவுகளிலும், 15 பொறியியல் சாரா தொழிற் பிரிவுகளிலும் ஓராண்டு முதல் 3 ஆண்டுகள் வரை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தொழிற் பயிற்சி நிலையங்களில் மொத்த இருக்கைகளின் எண்ணிக்கை 17,564 ஆகும். 53 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுள், 1,800 இருக்கைகள் கொண்ட 10 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் மகளிருக்காக இயங்குகின்றன. மேலும் இம்மாநிலத்தில், ஆதிதிராவிடருக்கென சிதம்பரத்தில் ஒரு தொழிற் பயிற்சி நிலையமும், மலைவாழ் மக்களுக்கென சங்கராபுரத்தில் ஒரு தொழிற் பயிற்சி நிலையமும் இயங்குகின்றன. ஆகஸ்ட் 2002-ல், 10,778 மாணவ மற்றும் மாணவியர் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்போது முதுநிலை பயிற்சியாளர்களையும் சேர்த்து மொத்தம் 16,077 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 2002-2003-ல், ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளில் 92 விழுக்காடு இருக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பயிற்சியின் முடிவில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தில் அகில இந்திய அளவில் தொழிற் தேர்வு நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழிற் பிரிவுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

11.4 தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்குக் கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது:—

| | | |
|---|---|---|
| (அ) ஆதிதிராவிடர் | - ரூ.150/- | மாதந்தோறும் |
| (ஆ) பழங்குடியினர் | - ரூ.175/- | ,, |
| (இ) சீர்மரபினர் | - ரூ.140/- | ,, |
| (ஈ) பர்மா, ஸ்ரீலங்கா, வியட்நாமிலிருந்து தாயகம் திரும்பியோர் | - ரூ.175/- | ,, |
| (உ) மொத்தப் பயிற்சியாளர்களில் 1/3 பகுதியினருக்குப் பெற்றோர் வருமானம் ஆண்டிற்கு ரூ.16,100/-க்கு மிகாமல் இருந்தால் | - ரூ. 50/- | ,, |

**அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள்**

11.5 சமுதாயத்தில் கீழ்நிலையில் உள்ளவர்களுக்குப் போதுமான வாய்ப்பினை ஏற்படுத்தவும், எளிதில் வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கவும், மாநிலத்தில் உள்ள தொழிலகங்களுக்குத் தேவையான மனித ஆற்றல் உற்பத்தியில் மாநில அரசின் முயற்சியில் துணை நிற்கவும், தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்குவதில் தனியாரின் பங்கேற்பு ஊக்குவிக்கப்படுகிறது. தேசிய வாழ்வியல் கல்வி பயிற்சித் திட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 603 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் 58,805 இருக்கைகளுடன் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

**தொழிற் பள்ளிகள்**

11.6. அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் தவிர, தமிழ்நாட்டில் 28,460 இருக்கைகள் கொண்ட 324 தொழிற் பள்ளிகள் இயங்குகின்றன. 8 ஆம் வகுப்பு முதல் எஸ்.எஸ்.எல்.சி. (தேர்ச்சி/தோல்வி) வரையில் கல்வி பயின்றவர்கள் பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10,500 நபர்கள் பயிற்சி முடித்துச் செல்கின்றனர். இத்துறையால் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் தேர்வுகள் நடத்தப்பட்டு



தேர்ச்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு மாநில அரசின் தொழிற் பள்ளிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 324 தொழிற் பள்ளிகளுள், 49 பள்ளிகள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன.

**தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம்**

11.7 பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்கள், தம் செயல்திறத்தை வெளிப்படுத்த வாய்ப்பளிக்கும் வகையில், தொழிற் பழகுநர் சட்டம் 1961-ன்கீழ், 1997 தொழில் நிறுவனங்களில் 13,825 தொழிற் பழகுநர்களுக்கு ஆறு மாதம் முதல் நான்கு ஆண்டுகள் வரை தொழிற் பழகுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழிற் பயிற்சி நிலையங்களால் உருவாக்கப்படும் அனுபவம் குறைந்த தொழிலாளர்களை, தொழிற் பழகுநர் பயிற்சி அனுபவம்மிக்க திறமையான தொழிலாளர்களாக மாற்றுகின்றது. இப்பயிற்சிக் காலத்தில், தொழிற் பழகுநர்களுக்குப் பணிமனை செய்முறை திறன் தொழில் நிறுவனங்களிலும், கருத்தியல் பாடத் திறன் தொடர் அறிவுரை மையங்களிலும் வழங்கப்படுகின்றன. பயிற்சிக் காலத்தில், தொழிற் பழகுநர் ஒவ்வொருவருக்கும் உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ.820/- முதல் ரூ. 1230/- வரை சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன. அகில இந்திய தொழிற் தேர்வு ஆண்டுதோறும் இருமுறை நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்ற தொழில் பழகுநர்களுக்கு தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

11.8 தொழில் நிறுவனங்களால் அமர்த்தப்படும் தொழிற் பயிற்சியில்லா தொழிற் பழகுநர்களுக்கு அடிப்படைப் பயிற்சி தேவைப்படுகிறது. மேலும் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் இடம் பெறாத தொழிற் பிரிவுகளுக்கான அடிப்படைப் பயிற்சியினை, தொழிற் பழகுநர் திட்டத்தின்கீழ் உள்ள அடிப்படைப் பயிற்சி மையத்தில் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உணவகம், உணவாக்கல் மற்றும் பரிமாறுதல் தொழிற் பிரிவிற்கான அடிப்படைப் பயிற்சி மையம் அம்பத்தூரிலும், இரசாயன தொழிற் பிரிவிற்கான அடிப்படைப் பயிற்சி மையம் இராணிப்பேட்டையிலும் தொடங்கப்பட்டுள்ளன. உணவாக்கம் மற்றும் இரசாயன தொழிற் பிரிவுகளில் தொழிற் பழகுநர் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் மேற்கண்ட மையங்களில் பயிற்சி பெற்று பயன் அடைகின்றனர்.

[2003 ஏப்ரல் 23

**ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டம்**

11.9. கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் ஆதிதிராவிடர் வகுப்பினருக்கென்று தனியே ஒரு அரசின் தொழிற் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. இதில் 96 இருக்கைகளுடன் மூன்று தொழிற் பிரிவுகளில் பயிற்சி நடத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்கென 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ. 18.95 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

11.10 விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் பழங்குடியினருக்கென தனியாக ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. 80 இருக்கைகளுடன் மூன்று தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இத்திட்டத்திற்கென 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ. 14.81 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, அனைத்து அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் 18 விழுக்காடு இருக்கைகள் ஆதிதிராவிடர் வகுப்பினருக்காகவும், ஒரு விழுக்காடு இருக்கைகள் பழங்குடியினருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**அகில இந்தியத் தொழிற் தேர்வு மற்றும் சாதனைகள்**

11.11 இத்துறை, அகில இந்தியத் தொழிற் தேர்வின் முடிவுகளை 25-10-2002 அன்று இணையதளத்தில் வெளியிட்டது. கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் அகில இந்தியத் தொழிற் தேர்வு முடிவுகளை இணையதளத்தில் வெளியிடுவது இதுவே முதன் முறையாகும். மேலும் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்குக் கணினி மூலம் தற்காலிகச் சான்றிதழும், தோல்வியுற்ற பயிற்சியாளர்களுக்குக் கணினி மூலம் மதிப்பெண் தாளும் முதன் முறையாக வழங்கப்பட்டன. கைவினைஞர் பயிற்சித் திட்டம் மற்றும் தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டத்தின்கீழ், ஆண்டுதோறும் சுமார் 76,000 பயிற்சியாளர்கள் அகில இந்தியத் தொழிற் தேர்வில் பங்கு கொள்கின்றனர்.

**அகில இந்தியத் திறனாய்வுப் போட்டி**

11.12 பல்வேறு மாநிலங்களில் பயிலும் தொழிற் பயிற்சியாளர்களுடன் போட்டியிடும் திறமையை ஏற்படுத்தும் வகையில், அகில இந்தியத் திறனாய்வுப் போட்டி 1964 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும், அகில இந்தியத் திறனாய்வுப் போட்டிகள் 10 தொழிற் பிரிவுகளில் நடத்தப்பெற்று, ஒவ்வொரு தொழிற் பிரிவிலும் வெற்றி பெறும் பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 10,000/- ரொக்க தொகையும் நற்சான்றிதழும் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன.



2003 ஏப்ரல் 23]

11.13 இதுவரை நடைபெற்ற 38 அகில இந்தியத் திறனாய்வுப் போட்டிகளில், சிறந்த மாநிலத்திற்கான பரிசினை தமிழ்நாடு 19 முறை வென்று, குடியரசுத் தலைவர் கேடயத்தை 19 ஆண்டுகள் பெற்றுள்ளது. 38-வது அகில இந்தியத் திறனாய்வுப் போட்டியில், தகுதி பெற்ற நான்கு பயிற்சியாளர்களுக்கு ரொக்கத் தொகை மற்றும் நற்சான்றிதழ்கள் முதன்முறையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 13-12-2002 அன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வழங்கப்பட்டன. இச்சாதனை, தமிழ்நாட்டில் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் சிறந்த பயிற்சியையும் பயனடைந்த பயிற்சியாளர்களின் திறமையையும் எடுத்துக் காட்டுகின்றது.

**மாண்புமிகு முதலமைச்சர் விருது**

11.14 பயிற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு, ஆண்டுதோறும் மாநில அளவில் 14 தொழிற் பிரிவுகளில் திறனாய்வுப் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் தேர்ச்சி பெறும் சிறந்த பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் ரொக்கத் தொகையாக ரூ. 5000/-ம், நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. சிறந்த பயிற்சியாளரை உருவாக்க காரணமாக இருந்த பயிற்றுநர்களுக்கும் ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது. இரண்டாவது மற்றும் மூன்றாவது இடம் வகிக்கும் பயிற்சியாளர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது**

11.15 பயிற்சியாளர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சியளித்து தனித்து விளங்கும் பயிற்றுநர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் 10 பயிற்றுநர்கள் (பயிற்சி அலுவலர்-4, இளநிலை பயிற்சி அலுவலர்-2, உதவிப் பயிற்சி அலுவலர்-4, இளநிலை பயிற்சி அலுவலர்-4) மற்றும் இரு முதல்வர்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் ரூ. 500/-க்கான கிசான் விகாஸ் பத்திரமும், நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

**வாழ்வியல் முன்னேற்றப் பயிற்சித் திட்டம்**

11.16 தொழிலகத் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்துவதற்காக, வாழ்வியல் முன்னேற்றப் பயிற்சி அம்பத்தூர் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படுகிறது. கணினியுடன் இணைந்த நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளின்

செயல்பாட்டினைத் தொழிலகத் தொழிலாளர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வரை இப்பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சி, தொழிலாளர்களுக்கு நவீன தொழில்நுட்ப அறிவினை அளிக்கின்றது.

### உயர் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டம்

11.17 உயர் தொழில் நுட்பத் திறனின் தாக்கம் தொழில் வளர்ச்சியிலும் தானியங்கி கருவிகளிலும் முக்கியமானதாக ஆகி வருகிறது. எனவே, புதிய தலைமுறை தொழிலாளர்களுக்கு நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளைப் பழுதுபார்த்தல், பராமரித்தல், இயக்குதல் ஆகிய செயல்திறனைப் போதிக்கும் பொருட்டு அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் நான்கு தொழிற் பிரிவுகளில் உயர் தொழில் நுட்பப் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

### மின் கம்பி உதவியாளர் தகுதிகாண் தேர்வு

11.18 மின்சார ஒப்பந்ததாரர்களிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றி, குறைந்தது 5 வருட முன் அனுபவம் பெற்ற 21 வயதை அடைந்தவர்கள் இத்தேர்விற்குத் தகுதியுடைவர்கள் ஆவர். இத்தேர்வு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. அடுத்த தேர்வு செப்டம்பர் 2003-ல் நடைபெற உள்ளது. தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு, "மின் கம்பி உதவியாளர் தகுதி" சான்றிதழ் வழங்கப்படுகிறது.



## அத்தியாயம்-12

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி

### முன்னுரை

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஒதுக்கச் சட்டத்தின்கீழ் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திடம் மூன்று சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அத்திட்டங்கள் கீழ்வருமாறு:

1. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952
2. தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம், 1976
3. தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1975

சமூகப் பாதுகாப்பு அளிப்பதும், தொழிலாளர்கள் பணியாற்றும் காலத்திலேயே அவர்களிடம் சேமிப்பு உணர்வினைத் தூண்டுவதும், அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் பயன்பெறவும், அவர்கள் பணியிலிருக்கும்போது இறந்தால் அவர்களுடைய குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்வதும் இம்மூன்று திட்டங்களின் முதன்மையான நோக்கங்களாகும். தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களுக்காக தமிழ்நாட்டிலுள்ள மண்டல அமைப்பு நிதி நிறுவனம் சேவை செய்து வருகிறது. அது, வருங்கால வைப்பு நிதி மண்டல ஆணையர் (நிலை-I) தலைமையில் இயங்குகிறது.

### தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952

12.1 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டமானது, குறிப்பிட்ட 180 தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு, அவை 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணிக்கமர்த்தியிருந்தால் பொருந்தும். முன்னர் இச்சட்டம், 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டு செயல்பாட்டிலுள்ள தொழிற்சாலைகள்/ நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. இந்தத் திட்டத்திற்கு 22-9-1997 முதல் கொண்டு வாபபட்ட திருத்தத்தின்படி அறிவிக்கை வெளியிடப்பட்ட தொழிற்சாலைகளின் பட்டியலின் கீழுள்ள,

[2003 ஏப்ரல் 23

20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள தொழிற்சாலைகள்/ தொழில் நிறுவனங்கள் அவை அமைக்கப்பட்ட நாள் முதல் இச்சட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

12.2 தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மண்டலத்தில் 31-1-2003 அன்றுள்ளபடி இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கை 49,022 ஆகும். உறுப்பினர்களின் எண்ணிக்கை 45,06,874 ஆகும்.

12.3 தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம், 1952-ன்கீழ் செலுத்துத் தொகையும் மற்றும் முழுமையடைந்த மொத்தத் தொகைகளும் கீழ்வருமாறு:-

**பிரதிமாதம் செலுத்தப்பட உள்ள பங்குத் தொகை விதம்**

| பணியாளரின் பங்கு | அமர்த்துநரின் பங்கு | ஆண்டு | செலுத்துத் தொகை மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | | 1998-1999 | 90,099.59 |
| 12.00% | 3.67% | 1999-2000 | 98,789.01 |
| | | 2000-2001 | 1,04,266.64 |
| | | 2001-2002 | 1,30,429.25 |
| | | 2002-2003 (12/2002) | 84,614.40 |

**12.4 சந்தாதாரர்களுக்கு சேவை**

(அ) ஒவ்வொரு தொழிலாளருக்கும், அவரது கணக்கில் நிலுவையிலுள்ள அவரது சந்தாத் தொகைக்கு (வேலையளிப்போர் பங்கு உட்பட) ஆண்டு வருமானப் பங்கீட்டுப் பங்கு வட்டியாக வழங்கப்படுகிறது. 1952-1953-ல் ஆண்டுக்கு 3 ரூபாயாக இருந்த வட்டி வீதம், 1-4-2001 முதல் 9.5 ரூபாயாக உயர்ந்துள்ளது.



2003 ஏப்ரல் 23]

(ஆ) வருங்கால வைப்பு நிதியில் குறைந்தபட்ச உறுப்பினர் காலத்தைப் பூர்த்தி செய்த பின்னர், உறுப்பினர்களுக்குக் கீழ்க்கண்ட காரணங்களுக்காக வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன்பணம் வழங்கப்படுகிறது.

1. உறுப்பினரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கு சந்தா செலுத்துவதற்காக
2. உறுப்பினர் மற்றும் அவருடைய குழந்தைகள், சகோதரர்/ சகோதரி ஆகியோரின் திருமணச் செலவுக்காக
3. குழந்தைகளின் உயர்கல்வி
4. வீடு அல்லது வீட்டு மனை வாங்க
5. வீடு கட்டுவதற்காக பெற்ற கடன்களைத் திரும்பச் செலுத்த
6. உடல் நலமின்மைச் செலவுக்காக
7. தற்காலிகமாக வேலையில்லாதபோது ஏற்படும் செலவை ஈடுகட்ட
8. உடல் ஊனமுற்ற உறுப்பினர் அவருக்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்காகும் செலவிற்காக
9. இயற்கைக் காரணங்களினால் ஏற்படும் சேதத்திற்கு ஈடுகட்ட ஆகும் எதிர்பாராத செலவிற்காக

(இ) இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள ஒருவர் கீழ்க்காணும் நேர்வுகளில் அவருடைய பங்குத் தொகையை இறுதியாக, முழுவதுமாக திரும்பப் பெற உரிமையுடையவராகிறார்.

1. 56 வயதான பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது
2. நிரந்தரமாக மற்றும் முழுவதுமாக பணி செய்ய இயலாதபோது
3. தானாக முன்வந்து பணி ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் பணி முடிவு செய்யப்படும்போது அல்லது ஆட்குறைப்புச் செய்யப்படும்போது
4. சில சூழ்நிலைகள் காரணமாக உறுப்பினர் தகுதியை இழந்துவிடும்போது

[2003 ஏப்ரல் 23

12.5 தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952-ன்கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் தீர்வு செய்யப்பட்டுள்ள நேர்வுகள் குறித்த விவரம் கீழ் வருமாறு:-

| | 1998-99 | 1999-2000 | 2000-01 | 2001-02 | 2002-03 |
|---|---|---|---|---|---|
| இறுதியாக தீர்வு செய்யப்பட்ட வருங்கால வைப்பு நிதி நிலுவைகள் | | | | | |
| தீர்வு செய்யப் பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | 222667 | 254570 | 269218 | 293919 | 258269 |
| தீர்வு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | 35490.73 | 42867.87 | 48403.90 | 59151.35 | 52731.18 |
| பகுதி திரும்பப் பெறுதல்/முன்பணம் | | | | | |
| ஒப்புதல் அளிக்கப் பட்ட நேர்வுகள் | 75063 | 60766 | 77919 | 80800 | 60552 |
| ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | 9402.14 | 9391.14 | 16411.67 | 22957.09 | 20994.68 |
| கணக்கு மாறுதல்கள் | | | | | |
| மாறுதல் செயயப் பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | 23001 | 35784 | 38891 | 31693 | 16137 |

வழங்கப்பட்ட ஆண்டுக் கணக்குப் பட்டியல்கள்

12.6 கடந்த நான்கு ஆண்டுகளில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கணக்குப் பட்டியல்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| 1998-99 | 1999-2000 | 2000-01 | 2001-02 | 2002-03 (1/3 வரை) |
|---|---|---|---|---|
| 12,35,171 | 39,63,615 | 15,34,377 | 41,50,731 | 55,07,762 |



2003 ஏப்ரல் 23]

## தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம், 1976

### செயல்வரம்பு

12.7 இத்திட்டம் 1-8-1976 முதற்கொண்டு செயலுக்கு வந்தது. இது 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டம் பொருந்தக்கூடிய அனைத்துத் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கும் பொருந்துகிறது.

### பங்களிப்பு

12.8 காப்புறுதி நிதிக்கு, தொழிலாளர்கள் சந்தாத் தொகை செலுத்த வேண்டியதில்லை. வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களின் ஊதியத்தில் 0.5 சதவீதம் என்ற வீதத்தில வேலையளிப்போர் சந்தாத் தொகை செலுத்த வேண்டும். மத்திய அரசும் இந்தக் காப்புறுதி நிதிக்கு சந்தா செலுத்துகிறது. இது வேலையளிப்போர் சந்தாத் தொகையில் பாதிக்கு சமமான தொகையாக இருக்கும்.

### பயன்

12.9 தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் உறுப்பினராக இருக்கும் ஒருவர் பணியில் இருக்கும்போது இறந்து விடும் நேர்வில், இத்தொகையைக் கோரும் நபருக்கு, இறந்து விட்டவரின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் முந்தைய 12 மாத கால அளவில் இருப்பில் இருந்த சராசரித் தொகைக்கு சமமாக கூடுதல் தொகை வழங்கப்படும். இது அதிகபட்சமாக ரூ.60,000/- ஆகும்.

12.10 கடந்த நான்கு ஆண்டுகளில், இறந்துவிட்ட உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டப் பயன் வகையில், கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொகைகள் வழங்கித் தீர்க்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 23

| | 1998-99 | 1999-2000 | 2000-01 | 2001-02 | 2002-03 (1/3 வரை) |
|---|---|---|---|---|---|
| தொகை வழங்கித் தீர்க்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை. | 3222 | 3519 | 3258 | 3076 | 2728 |
| பட்டுவாடா செய்யப் பட்ட பணம் (ரூபாய் இலட்சத்தில்). | 306.38 | 320.97 | 348.82 | 497.77 | 410.04 |

## தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995

12.11 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை மாற்றிவிட்டு உருவாக்கப்பட்ட 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டத்தின்கீழ் 16-11-1995 அன்று வகுக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் கீழ்க்காணும் பயன்களுக்கு வகை செய்கிறது:

| வ. எண் | தகுதி | ஓய்வூதிய வகை |
|---|---|---|
| அ. | பணியில் இருந்தாலும் இல்லாவிடினும் 58 வயது நிரம்பியுள்ளதன் பேரில். | வயது முதிர்வு ஓய்வூதியம். |
| ஆ. | 50 வயதிற்கு மேல், 58 வயதிற்குக் கீழ் பணியை விட்டுச் சென்றுவிட்டிருந்தால். | குறைக்கப்பட்ட ஓய்வூதியம். |
| இ. | முழுமையாக மற்றும் நிரந்தரமாக இயலாமை அடைந்ததன் பேரில் பணியை விட்டுச் சென்று விட்டிருந்தால். | இயலாமை ஓய்வூதியம். |
| ஈ. | உறுப்பினர் இறந்து விடுவதன் பேரில் | விதவை-குழந்தைகள் ஓய்வூதியம். |



2003 ஏப்ரல் 23]

| வ எண் | தகுதி | ஓய்வூதிய வகை |
|---|---|---|
| உ. | பெற்றோர் இறந்து விடுவதன் பேரில்; அல்லது உறுப்பினர் இறந்த பிறகு தம்பதியர்களில் ஒருவர் மறுமணம் செய்து கொள்வதன் பேரில். | அனாதை ஓய்வூதியம் |
| ஊ. | உறுப்பினர் இறந்து விடுவதன் பேரில்; உறுப்பினர் இறந்து விடும் நாளன்று தம்பதியரில் ஒருவர் அல்லது 25 வயதுக்குக் குறைவாக உள்ள தகுதி வாய்ந்த குழந்தைகள் இல்லாதபோது. | நியமனதாரர் ஓய்வூதியம். |

12.12 31-1-2003 அன்று ஓய்வூதியதாரர் எண்ணிக்கை கீழ்வருமாறு.

| உறுப்பினர் ஓய்வு ஊதியம். | விதவை/ மனைவியை இழந்தவர் ஓய்வு ஊதியம். | குழந்தை ஓய்வு ஊதியம். | அனாதை ஓய்வு ஊதியம். | நியமன தாரர் ஓய்வு ஊதியம். | ஊன முற்றோர் ஓய்வு ஊதியம். | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 104225 | 50246 | 40826 | 797 | 977 | 109 | 207160 |

12.13 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், ஆண்டுதோறும் ஓய்வூதிய நிதியை மதிப்பிட வகை செய்கிறது. ஆண்டுதோறும் மதிப்பீடு செய்வதன் விளைவாக, ஓய்வூதியம் பெறுபவர்கள் அவர்களுடைய ஓய்வூதியத்தில் 16-11-96 முதல் 4 விழுக்காடும், 16-11-98 முதல் 5.5 விழுக்காடும், 1-4-99 முதல் 4 விழுக்காடும், 1-4-2000 முதல் 4 விழுக்காடும் இடைக்கால நிவாரணத் தொகையாகப் பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

12.14 நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள இந்தியன் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகிய வங்கிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. தபால் அலுவலகங்கள் மூலம் ஓய்வூதியம் வழங்கும்வண்ணம் தபால் துறையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 23

12.15 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், நிறுவனம் ஒன்றை விட்டுச் செல்லும் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியப் பயன்களுடன், திட்டச் சான்றிதழ்கள் வழங்கவும் வகை செய்கிறது. வேறொரு நிறுவனத்தில் பணியில் சேரும்போது, அவர்களுடைய ஓய்வூதிய உறுப்பினர் தகுதியும் தொடரும். 10 ஆண்டுகளுக்குக் குறைவாகப் பணிபுரிந்த உறுப்பினர்கள், அவர்கள் பெற்ற சம்பளம் அவர்கள் பணியை விட்டுச் சென்ற நாளில் அவர்களுடைய பணிக்கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் ஓய்வூதியப் பயனைத் திரும்பப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

12.16 கடந்த நான்கு ஆண்டுகளில், திரும்பப் பெறும் பயனை அடைந்த/திட்டச் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | 1998-99 | 1999-2000 | 2000-01 | 2001-02 | 2002-03 ஜனவரி 2003 வரை |
|---|---|---|---|---|---|
| தீர்வு செய்யப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை. | 155246 | 207787 | 215861 | 233919 | 288263 |
| தீர்வு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்). | 3217.82 | 6233.57 | 7173.06 | 8548.83 | 8251.76 |



2003 ஏப்ரல் 23]

## அத்தியாயம்-13

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

13.1 இந்திய அரசின் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது, அமைப்பு சார்ந்த துறைகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் ஒருங்கிணைந்த திட்டமாகும். தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஏற்படும் நோய்கள், மகப்பேறு, மரணம், பணியின்போது ஏற்படும் விபத்து, காயம் காரணமாக ஏற்படும் இயலாமை போன்ற நிகழ்வுகளில் இத்திட்டம் அவர்களுக்கு உதவுகிறது. அதன் விவரம் கீழ் வருமாறு:—

| | |
|---|---|
| 1. மருத்துவ உதவி | மருத்துவ வசதிகள் காப்பீட்டாளர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு திட்டத்தில் சேர்ந்த நாள் முதல் அளிக்கப்படுகிறது. ஆரம்பகால சிகிச்சை, சிறப்பு சிகிச்சை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை ஆகியவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகள் மூலம் அளிக்கப்படுகின்றன. |
| 2. உடல்நலமின்மை | உடல்நலமின்மை உதவி. காப்பீட்டாளர் உடல் நலமின்றி பணிக்குச் செல்ல இயலாத நிலை ஏற்படும்போது அரசினால் நியமிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில், பணமாக வழங்கப்படுகிறது. |
| 3. பேறுகால உதவி | மகளிர் காப்பீட்டாளருக்கு, பேறுகாலத்தில் அல்லது கருக்கலைப்பு காலத்தில் பேறுகால அல்லது அது தொடர்பான நோய்களுக்கான சிகிச்சைக்கு உதவி அளிக்கப்படுகிறது. (அதிகபட்சம் 85 நாட்கள்). |
| 4. இயலாமை-யுற்றோருக்கான உதவி (பணமாக) | இயலாமையுற்றோருக்கான உதவி. காப்பீட்டாளர்கள் பணிபுரியும்போது ஏற்படும் விபத்தினால் விளையும் உடல் குறைகளுக்கும். தொழில் வழி நோய்களுக்கும் வழங்கப்படுகிறது. இதைத் தவிர, காப்பீட்டாளருக்கு வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின் பயனும் கிடைக்கும். |

| | |
|---|---|
| 5. சார்ந்துள்ளோர்கள் நலஉதவி (பணமாக) | வேலை செய்யும்போது ஏற்படும் விபத்தினால் அல்லது தொழில் வழி நோயினால் காப்பீட்டாளர் இறந்து விட்டால், அவரைச் சார்ந்துள்ளவர்களுக்கு இந்த உதவி வழங்கப்படுகிறது. |
| 6. உடல்நலமின்மைக்-கான கூடுதல் உதவி (பணமாக) | நீண்டக் கால சிகிச்சை தேவைப்படும் குறிப்பிட்ட 34 வகை நோய்களில் ஏதேனும் ஒன்றினால் பாதிக்கப்படும் காப்பீட்டாளருக்கு, மருத்துவச் சான்றிதழ் மற்றும் மருத்துவ ஆலோசனையின் பேரில், விடுப்பிலிருக்கும் நாட்களுக்கு பண உதவி வழங்கப்படுகிறது. |
| 7. உயர்த்தி வழங்கும் உடல்நல மின்மைக்கான உதவி (பணமாக) | தகுதிவாய்ந்த வயதில் உள்ள காப்பீட்டாளர்கள் கருத்தடை (வாசக்டமி/ட்யூபக்டமி) செய்து கொள்ளும்போது, பண உதவி உயர்த்தி வழங்கப்படுகிறது. |
| 8. தற்காலிக இயலாமை உற்றோருக்கான உதவி (பணமாக) | காப்பீட்டாளர்களுக்கு தற்காலிக இயலாமை ஏற்படும்போது, 70 விழுக்காடு ஊதியம் தற்காலிக இயலாமை தொடரும் வரை, அரசால் நியமிக்கப்பட்டுள்ள காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில், பணமாக வழங்கப்படுகிறது. |
| 9. நிரந்தர இயலாமை உற்றோருக்கான உதவி (பணமாக) | நிரந்தர இயலாமையுற்ற காப்பீட்டாளருக்கு வாழ்நாள் முழுவதும் பணமாக வழங்கப்படுகிறது. |
| 10. இறுதிச் சடங்கிற் குரிய உதவி (பணமாக) | காப்பீட்டாளரின் இறுதிச் சடங்கிற்கு அதிகபட்சமாக ரூ.2,500/- வழங்கப்படுகிறது. |

13.2 இத்திட்டத்தில், சக்கர நாற்காலி, மூக்குக் கண்ணாடி, காலிழந்தோர் பயன்படுத்தும் ஊன்றுகோல் போன்ற உதவி சாதனங்கள் காப்பீட்டாளருக்குப் பயன்படும் வகையில் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், வருமுன் காக்கும் திட்டங்களாக நோய்த் தடை காப்பு, குடும்ப நலப் பணிகள், எச்.ஐ.வி./எய்ட்ஸ் கண்டுபிடித்து



சிகிச்சை அளித்தல் போன்ற வசதிகளும் உள்ளன. காப்பீட்டாளரின் மனைவி மற்றும் பெண் காப்பீட்டாளர்கள் பேறுகாலத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சிகிச்சை பெறாதிருந்தால், மருத்துவ ஊக்கத் தொகையாக ரூ.250/- அளிக்கப்படுகிறது.

13.3 இத்திட்டம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டம், 1948-ல் உள்ள விதிமுறைகளின்படி இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்குறிக்கோளை அடைய, தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு உடல்நலக் காப்பீடு முழுமையான மருத்துவ வசதிகளை அளிப்பதுடன், ஊதிய இழப்பு அல்லது உழைக்க இயலாத நிலை ஏற்படும்போது ஈடுசெய்யும்வண்ணம் பண உதவியையும் வழங்குகிறது.

13.4 இத்திட்டம், 1948 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தில் உள்ள விதிமுறைகளின்படி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் எனும் கூட்டாண்மை அமைப்பினால் நிர்வகிக்கப்படுகிறது.

13.5 இத்திட்டத்தினால் கவரப்பட்டுள்ள நிர்வாகங்கள் மற்றும் அமைப்புகளில் பணிபுரியும் ரூ. 6,500/- வரை ஊதியம் பெறும் பணியாளர்கள் இந்த பலநோக்கு சமூகப் பாதுகாப்பு பயன்களைப் பெறுகின்றனர். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் நிதியில், தொழிலாளர்கள் ஊதியத்தில் 1.75 சதவிகிதம் தொழிலாளர்கள் பங்காகும். 4.75 சதவிகிதத்திற்கு ஈடான தொகை வேலையளிப்போர் பங்காகும்.

13.6 தமிழ்நாட்டில் 180 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், 9 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள். 5 நடமாடும மருந்தகங்கள், 2 பயனீட்டாளர் மருந்தகங்கள் மூலம் மருத்துவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது. மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 2,363 ஆகும்.

13.7 பயனீட்டு மருந்தகங்கள், வேலையளிக்கும் நிறுவனத்தினரால் நடத்தப்படுகின்றன. அந்த மருந்தகங்கள் காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு மருத்துவ வசதிகள் அளிக்க உகந்தவைதானா என அரசு கருதிப் பார்க்கின்றது. உகந்தவையாக இருப்பின், காப்பீட்டாளர்களுக்கு மருத்துவப் பயன்கள் வழங்க அந்த மருந்தகங்களைப் பயன்படுத்த நிறுவனத்துடன் அரசு ஒப்பந்தம் செய்து கொள்கிறது. இம்மருந்தகங்களில் அளிக்கப்படும் மருத்துவ வசதிகள்

மாநில அரசால் நடத்தப்படும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் வழங்கப்படும் மருத்துவ வசதிகளுக்கு இணையாக இருக்க வேண்டும். நிறுவனத்திற்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் நிர்ணயித்துள்ளபடி தலைவீதக் கட்டணம் ஒரு காப்பீட்டாளருக்கு, செலுத்தப்படுகின்றது. தற்போது தலைவீதக் கட்டணம் ஆண்டொன்றுக்கு ரூ.60/- ஆகும். தமிழ்நாட்டில் தற்போது இரண்டு பயனீட்டாளர் மருந்தகங்கள் உள்ளன.

1. பயனீட்டாளர் மருந்தகம், டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட், டால்மியாபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
2. பயனீட்டாளர் மருந்தகம், ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்.

*13.8* மருத்துவ வசதிகளுக்காகும் செலவினை முதலில் மாநில அரசு ஏற்றுக் கொள்கின்றது. பின்னர், செலவினத்தில் 7/8 பங்கினை, காப்பீட்டாளர் ஒருவருக்கு ரூ.600/- என்ற உச்சவரம்பிற்குட்பட்டு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மாநில அரசுக்கு திரும்பச் செலுத்துகின்றது.

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கே.கே. நகர் (தொழில் நோய் அறியும் ஆராய்ச்சி மையம்).**

*13.9* சென்னை, கே.கே. நகரில் அமைந்துள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தென்மண்டலத்திலுள்ள தொழில் வழி நோய் அறியும் ஆராய்ச்சி மையம் இங்கு நிறுவப்பட்டுள்ளது. இந்த தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையின் படுக்கைகளின் எண்ணிக்கை 330.

*13.10* இத்திட்டத்தில் சேர்ந்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் மருத்துவ சிகிச்சை பெற தகுதியுடையவர் ஆகிறார்கள். அதுமட்டுமின்றி, காப்பீட்டாளர்களுக்கு எதிர்பாராத விளைவுகளால் ஊதிய இழப்பு மற்றும் ஈட்டும் திறன் குறைவு ஏற்படும்போது, அவர்கள் பணப் பயனுக்கு தகுதியுடையவர்களாகிறார்கள். பெண் காப்பீட்டாளர்கள் பேறுகாலத்தின்போது பேறுகால உதவி பெறுகின்றார்கள். மேலும், காப்பீட்டாளர் தன் வேலையின் காரணமாக அடைந்த காயத்தினாலோ, தொழில் வழி நோய்களினாலோ மரணமடைந்தால் அவரைச் சார்ந்தோர் குடும்ப ஓய்வூதியம் பெற உரிமையுடையவராகின்றனர்.



*13.11* 2002 ஆம் ஆண்டில் புதிதாக 11 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறக்கப்பட்டன. அவை குறித்த விவரம் கீழ் வருமாறு:—

| வ. எண் | திறக்கப்பட்ட இடம் | மாவட்டம் | திறக்கப்பட்ட தேதி |
|---|---|---|---|
| 1. | நல்லாட்டிப்பாளையம் | கோயம்புத்தூர் | 1-12-2002 |
| 2. | சென்னிமலை | ஈரோடு | 1-6-2002 |
| 3. | தென்காசி | திருநெல்வேலி | 1-10-2002 |
| 4. | நாங்குநேரி | திருநெல்வேலி | 1-12-2002 |
| 5. | கழுகுமலை | தூத்துக்குடி | 1-8-2002 |
| 6. | வானூர் | விழுப்புரம் | 1-8-2002 |
| 7. | பேர்நாயக்கன்பட்டி | விருதுநகர் | 1-11-2002 |
| 8. | சங்கரலிங்கபுரம் | விருதுநகர் | 1-12-2002 |
| 9. | வக்கணன்குண்டு-காரியாப்பட்டி | விருதுநகர் | 1-12-2002 |
| 10. | ஆமத்தூர் | விருதுநகர் | 1-2-2003 |
| 11. | காரைக்குடி | சிவகங்கை | 1-3-2003 |

**13.12** சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிங்கம்புணரியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை அமல்படுத்த மருத்துவ ஏற்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளன. மைய அரசிதழில் அறிவிக்கை வெளியானதும் மருந்தகம் செயல்படத் தொடங்கும்.

**13.13** தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம். கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல்லடம் புறநகர் பகுதிக்கு விரிவுப்படுத்தப்பட்டு காப்பீட்டாளர்களை ஏற்கெனவே இயங்கி வரும் நாரணபுரம் மற்றும் பல்லடம் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைத்து 1-3-2003 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

13.14 2003-2004-ல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களை, [2003 ஏப்ரல் 23 கீழ்க்கண்ட புதிய பகுதிகளில் திறக்க இந்திய அரசு ஒப்புதலளித்துள்ளது:

| வ.எண் | திறக்கப்பட உள்ள இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீபெரும்புதூர் | காஞ்சிபுரம் |
| 2. | பண்ருட்டி | கடலூர் |
| 3. | வடுகந்தாங்கல்-பள்ளிகொண்டா | வேலூர் |
| 4. | திண்டிவனம் | விழுப்புரம் |
| 5. | பரமக்குடி | இராமநாதபுரம் |
| 6. | சிவகங்கை | சிவகங்கை |
| 7. | சேஷன்சாவடி, வாழப்பாடி மற்றும் காரிப்பட்டி | சேலம் |
| 8. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |

13.15 மேலும், கீழ்க்கண்ட புதிய பகுதிகளுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, அருகிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைப்பது தொடர்பான கருத்துரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் ஆய்வில் உள்ளது:

| வ.எண் | விரிவுபடுத்தப்படவுள்ள இடங்கள் | இணைக்கப்படும் மருந்தகம் |
|---|---|---|
| 1. | உத்தமசோழபுரம் (நாகப்பட்டினம் மாவட்டம்) | நாகப்பட்டினம் (இம்மருந்தகம் நாகூருக்கு மாற்றப்படுகிறது). |
| 2. | ஈஞ்சார் (விருதுநகர் மாவட்டம்) | சிவகாசி |
| 3. | ஆர். வாடிப்பட்டி மற்றும் பாப்பம்பட்டி புற எல்லைக் கிராமங்கள் (திண்டுக்கல் மாவட்டம்) | நெய்க்காரப்பட்டி |
| 4. | பொள்ளாச்சி, புற நகர், சோழவன் பாளையம் மற்றும் சோழனூர் (கோயம்புத்தூர் மாவட்டம்) | ஒத்தக்கால் மண்டபம் மற்றும் பொள்ளாச்சி. |



2003 ஏப்ரல் 23]

| வ. எண் | விரிவுபடுத்தப்படவுள்ள இடங்கள் | இணைக்கப்படும் மருந்தகம் |
|---|---|---|
| 5. | களிக்கம்பட்டி கிராமம் (திண்டுக்கல் மாவட்டம்) | பேகம்பூர் |
| 6. | நிலவாரிப்பட்டி (சேலம் மாவட்டம்) | அன்னதானப்பட்டி (சீலநாயக்கன்பட்டிக்கு மாற்றப்படுகிறது). |
| 7. | திருமுடிவாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்) | பல்லாவரம் |
| 8. | வேடசந்தூர் புறநகர் (திண்டுக்கல் மாவட்டம்) | வேடசந்தூர் |

**மேம்படுத்தப்பட்ட சிறப்புச் சிகிச்சை**

13.16 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் சிறுநீரகவியல் பிரிவு தொடங்கத் தேவையான பணியாளர்கள் மற்றும் உபகரணங்கள் வாங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கென மருத்துவ வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. மருத்துவ ஏற்பாடுகள் முடிக்கப்பட்டு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் அறிவிக்கை வெளியானதும் சிறுநீரகவியல் பிரிவு தொடங்கப்படும்.

13.17 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் இருதய நோய் இயல் பிரிவுகள் மற்றும் நரம்பியல் பிரிவுகள் தொடங்கும் கருத்துரு தீவிர ஆய்வில் உள்ளது.

**சித்த மருத்துவம்**

13.18 சித்த மருத்துவப் பிரிவு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. சித்த மருத்துவப் பிரிவினை சேலம், வேலூர், ஓசூர், சிவகாசி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் தொடங்குவதற்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

## நோய் அறியும் மையங்கள்

13.19 நோய் அறியும் மையங்களை முதற்கட்டமாக அம்பத்தூர், பல்லாவரம், இராஜபாளையம், துடியலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் தொடங்குவதற்கான செயற்குறிப்பு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

## யோகா

13.20 முறையான யோகா பயிற்சியின் மூலம் பல நோய்கள் குணமடைகின்றன. எனவே, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் யோகா பிரிவு தொடங்க செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன.

## மருத்துவச் செலவு செய்த பணம் திரும்ப அளித்தல்

13.21 2002-2003-ல் இருதய அறுவை சிகிச்சைகள், சிறுநீரகவியல், நரம்பியல் தொடர்பான சிகிச்சைகள் மற்றும் புற்றுநோய் ஆகிய பல்வேறு சிகிச்சைகளுக்காக காப்பீட்டாளர்கள் செலவழித்த தொகையான ரூ.1100,171-ஐ திரும்ப வழங்க செயல் முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## சுழற்சி நிதி

13.22 தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவ உதவி பெறும் காப்பீட்டாளர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர் செய்யும் மருத்துவச் செலவினை திரும்பச் செலுத்தும் நடைமுறையினை அரசு ஆராய்ந்தது. தாமதத்தைத் தவிர்ப்பதற்காக, ஒரு சுழற்சி நிதியை உருவாக்கி செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இந்தச் சுழற்சி நிதியை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மண்டல இயக்குநர் நிர்வகித்து, காசோலையை ஈட்டுறுதி மருந்தகத்தின் மருத்துவ அலுவலர் மூலம் காப்பீட்டாளருக்கு வழங்குவார். மேலும் செலவினத்தைத் திரும்பச் செலுத்துவதைப் பொறுத்தவரையில், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (தொ.அ.ஈ) அவர்களின் பண ஒப்பளிப்பு அதிகாரத்தினை காப்பீட்டாளர் ஒருவருக்கு ரூ.5000/-லிருந்து ரூ.75,000/-ஆக உயர்த்தியும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, காப்பீட்டாளர் மருத்துவச் செலவு செய்யும் தொகை விரைவில் திரும்ப வழங்கப்படுகிறது. மேலும் அரசாணை எண்.259, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19-2-2003-ல், மருத்துவச் செலவு திரும்பப் பெறும் பட்டியல்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான காலவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.100, நிதி (சம்பளம்) துறை, நாள் 29-8-2000-ல் குறிப்பிட்டுள்ள நோய்கள் மற்றும் சிகிச்சை



பெறுவதற்கான மருத்துவமனைகள் ஆகியவற்றின் அடிப்படையில், சுழற்சி நிதியின் வரம்பிற்குள் பற்பல நோய்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், தமிழ்நாடு

### புள்ளி விவரங்கள்

1. திட்டம் செயல்படத் தொடங்கிய நாள் : 23-1-1955

2. 1-3-2003 அன்றுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் : 187

**மண்டல வாரியாக மருந்தகங்களின் எண்ணிக்கை மற்றும் தன்மை**

| வ.எண் | மண்டலம் | நிலையான மருந்தகங்கள் | நடமாடும் மருந்தகங்கள் | நிறுவனத்தாரால் நடத்தப்படும் மருந்தகங்கள் | மொத்தம் | சொந்தக் கட்டடத்தில் இயங்குபவை | வாடகைக் கட்டடத்தில் இயங்குபவை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 39 | - | - | 39 | 27 | 12 |
| 2. | மதுரை | 54 | 1 | - | 55 | 15 | 40 |
| 3. | கோயம்புத்தூர் | 37 | 2 | - | 39 | 14 | 25 |
| 4. | சேலம் | 50 | 2 | 2 | 54 | 10+2 | 42 |
| | மொத்தம் | 180 | 5 | 2* | 187 | 66+2 | 119 |

*பயனீட்டாளர் மருந்தகம், டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட், டால்மியாபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

பயனீட்டாளர் மருந்தகம், ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்.

3. 1-1-2003 அன்றுள்ள மொத்த காப்பீட்டாளர்கள் : 10,56,820

4. 1-1-2003 அன்றுள்ள மொத்த பயனாளிகள் : 41,00,162

5. மொத்த தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் : 9

6. அனுமதிக்கப்பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை : 2,363

**படுக்கைகள்-மருத்துவமனை வாரியாக**

| வ. எண் | மருத்துவமனை | படுக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தொ.அ.ஈ. மருத்துவமனை, அயனாவரம், சென்னை. | 616 |
| 2. | தொ.அ.ஈ. மருத்துவமனை, கோயம்புத்தூர். | 506 |
| 3. | தொ.அ.ஈ. மருத்துவமனை, மதுரை. | 209 |
| 4. | தொ.அ.ஈ. மருத்துவமனை, வேலூர். | 50 |
| 5. | தொ.அ.ஈ. மருத்துவமனை, சேலம். | 50 |
| 6. | தொ.அ.ஈ. மருத்துவமனை, சிவகாசி. | 100 |
| 7. | தொ.அ.ஈ. மருத்துவமனை, ஓசூர். | 50 |
| 8. | தொ.அ.ஈ. மருத்துவமனை, திருச்சி. | 50 |
| 9. | தொ.அ.ஈ. கழக மருத்துவமனை, கே.கே. நகர், சென்னை. (புதுடெல்லி தொ.அ.ஈ. கழகத்தால் நிர்வகிக்கப்படுகிறது.) | 330 |
| 10. | தொ.அ.ஈ. மருத்துவமனை இணைப்புகளில் | 136 |
| 11. | அரசு மருத்துவமனைகளில் ஒதுக்கப்பட்டவை | 266 |
| | மொத்தம் | 2363 |

7. **சிகிச்சை பெற்றோர் விவரம்.**

| வ. எண். | விவரம் | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|
| 1. | சிகிச்சை பெற்ற வெளிநோயாளிகள் | 69,46,690 | 73,44,038 |
| 2. | சிகிச்சை பெற்ற உள்நோயாளிகள் | 3,26,057 | 3,14,413 |
| | மொத்தம் | 72,72,747 | 76,58,451 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 185894

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.